# பெரியோர் ஓய்வுநாட் பள்ளிப் பாடங்கள்

மூன்றாம் காலாண்டு, 2026

# கொரிந்தியர்

## ஒன்றாம், இரண்டாம் நிருபங்கள்


1 கொரிந்துவில் பவுலின் ஊழியம் (ஜூன் 27-ஜூலை 3)....5

2 சிலுவையின் செய்தி (ஜூலை 4–10)....13

3 கிறிஸ்துவில் ஒற்றுமை (ஜூலை 11-17)....21

4 திருச்சபையில் பாவம் (ஜூலை 18-24)....29

5 எல்லாம் தேவ மகிமைக்காக (ஜூலை 25-31)....37

6 ஆவிக்குரிய வரங்கள் (ஆகஸ்ட் 1-7)....45

7 அன்பின் உருவப்படம் (ஆகஸ்ட் 8-14)....53

8 கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வல்லமை (ஆகஸ்ட் 15-21)....61

9 அன்பால் உந்தப்பட்ட ஊழியம் (ஆகஸ்ட் 22-28)....69

10 உண்மையான கிறிஸ்தவ ஊழியம் (ஆகஸ்ட் 29-செப்டம்பர் 4)....77

11 உக்கிராணத்துவமும் ஊழியமும் (செப்டம்பர் 5-11)....85

12 கள்ளப்போதகர்களை எதிர்கொள்ளுதல் (செப்டம்பர் 12-18)....93

13 கிருபை, அன்பு, ஐக்கியம் (செப்டம்பர் 19-25)....101



பாட ஆசிரியர்

அடெனில்டன் தவாரஸ் டி அகுயார்

தமிழாக்கம்: மார்சல் ஐசக், எஸ்றா டேவிட்



**தென்கிழக்கு இந்திய ஒன்றியம்**

**செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை**

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர்,

**சென்னை – 600 048**

# கிறிஸ்தவ வாழ்க்கை, சாட்சியின் சாராம்சம்



கடிதங்கள் எழுதுவது பழங்கால ஒரு வழக்கம், இப்போதும்கூட அது வழக்கொழிந்து போகவில்லை. நாம் கடிதங்கள் எழுதுகிற முறையைத்தான் மாற்றியிருக்கிறோம். ஆம், காகிதத்தின் இடத்தை சமூக ஊடகங்கள் பிடித்துக் கொண்டன. ஆனாலும், மின்னஞ்சல்களும் பிற மின்னணு கடித வடிவங்களும் அடிப்படையில் அதே வேலையைத்தான் செய்கின்றன; அதாவது, தகவல்கள், உணர்வுகள், எண்ணங்களைப் பகிர்வதன்மூலம் மக்களை இணைக்கின்றன.

ஏன் கடிதங்களை எழுதுகிறோம்? ஏதோ ஒன்றைச் சொல்ல விரும்புவதால் எழுதுகிறோம். அப்போஸ்தலனாகிய பவுலும் சொல்ல விரும்பினார். அவர் சொல்வதற்கு நிறைய விஷயங்கள் இருந்தன; ஆனால் அவர் பேச விரும்பினவர்களை நேருக்கு நேர் சந்திப்பதற்கான வாய்ப்பு எப்போதும் அவருக்குக் கிடைக்கவில்லை.

அதற்குப் பதிலாக கடிதங்களை எழுதினார். உதாரணத்திற்கு கொரிந்தியர்களுக்கு அவர் எழுதின கடிதங்கள் மிக ஆழமான வேதாகம சத்தியங்கள் அடங்கியவை. அவற்றுள் சில: 'இயேசு கிறிஸ்துவையும், சிலுவையில் அறையப்பட்ட அவரையும் தவிர, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்தேன்'. 1 கொரி 2:2. 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே'. 2 கொரி 8:9. 1கொரிந்தியர் 13-ல் உள்ள அன்பைப்பற்றிய அந்த அற்புதப் பாடலை நாம் விடமுடியுமா?

மறுபுறம், கொரிந்தியர்களுக்கு பவுல் எழுதிய கடிதங்களை வாசிக்கிற எவரும் நிச்சயம் திகைப்படையலாம். ஏனென்றால், சபைக்குள் பாலியல் ஒழுக்கக்கேடு போன்ற சில கடுமையான பிரச்சினைகள் இருந்தன. அதுபோக, மலிவான கட்சிப்பிரிவினைகளால் அங்கிருந்த உறுப்பினர்களிடையே தேவையற்ற வாக்குவாதங்களும் காணப்பட்டன. உங்கள் சபையில் சவாலான பிரச்சினைகள் இருப்பதாக நீங்கள் நினைத்தால், கொரிந்துவில் பவுலே ஏராளமான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்ததை நினைவில் வையுங்கள்.

கொரிந்துவின் பிரச்சினைகளுக்காக அல்ல; பவுல் அவற்றை அற்புதமாக எதிர்கொண்ட விதத்திற்காகவே அந்த நிருபங்கள் நம் கவனத்தை ஈர்க்கின்றன. சபை உறுப்பினர்கள் தங்களையும், தங்களது நடத்தையையும், தங்களைச் சுற்றி

யுள்ள கலாச்சாரத்தையும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் வெளிச்சத்தில் சீர்தூக்கிப் பார்க்கும்படி அறிவுறுத்தி, சிலுவையின் செய்தியை உயர்த்துகிறார். சுவிசேஷத்திற்கு குறைவான எந்தவொரு தரமும் 'சாபத்திற்குரியதாகவே' கருதப்படவேண்டும் என்கிறார். கலா 1:8,9.

பவுலின் காலத்தில், கொரிந்து பட்டணம் செல்வச்செழிப்பிற்கும் வணிகத்திற்கும் புகழ்பெற்றிருந்தது. இதற்கு அங்குள்ள துறைமுகம், கட்டடக்கலை, கப்பல்கட்டும் தொழில், மண்பாண்டத் தொழில் ஆகியவையே முக்கிய காரணங்களாக இருந்தன. அந்த நகரம் ஒரு முக்கியமான நிதிமையமாகவும் திகழ்ந்தது. ஆனாலும், பாலியல் ஒழுக்கக்கேடு, மார்க்கச் சீர்கேடுகள், பல்வேறு தெய்வங்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட வழிபாட்டுத் தலங்கள் போன்றவை அங்கு அதிகம் இருந்தன. கொரிந்துவின் அன்றாட வாழ்க்கையானது விக்கிரக ஆராதனையின் வெளிப்பாடாக இருந்தது. இந்த வரலாறும் கலாச்சாரப் பின்னணியும் அந்த நகரத்திலிருந்த கிறிஸ்தவர்கள்குறித்து பவுல் அடைந்த கவலைகளையும், அதன் விளைவாக அவர்களுக்கு வழங்கிய அறிவுரைகளையும் நாம் புரிந்துகொள்ள உதவுகிறது.

இந்தக் காலாண்டில், கொரிந்தியருக்கு பவுல் எழுதிய கடிதங்களை ஆராய்வோம். புதிய ஏற்பாட்டின் இந்த இரண்டு முக்கியப் புத்தகங்களில், அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷத்தையும், கிறிஸ்தவ வாழ்க்கை-சாட்சியின் சாராம்சத்தையும் கண்ணாடிகளாக வைத்து, மற்ற அனைத்தையும் மதிப்பிடுமாறு கூறுகிறார். பரலோகம் நோக்கிய நமது பயணத்தில் தனிமனிதர்களோ திருச்சபையோ எதிர்கொள்ளும் சவால்களில், கிறிஸ்தவப் பணிகளில் எழுகிற குழப்பமான சிக்கல்களுக்கு இந்நிருபங்களில் பவுல் கொடுத்த அதே பதில்தான் நமக்கும் பதிலாக உள்ளது: 'இயேசு கிறிஸ்துவையும், சிலுவையில் அறையப்பட்ட அவரையும் தவிர வேறொன்றையும் நான் அறியாதிருக்கத் தீர்மானித்தேன்'! 1கொரி 2:2.

இயேசு சீக்கிரமாக வருகிறார். கிறிஸ்துவுக்குள் அதிக ஒற்றுமையுடன் வாழவும், பரிசுத்த ஆவியானவருக்கு நம்மை ஒப்புக்கொடுக்கவும், நமது ஆவிக்குரிய வரங்களை விடா முயற்சியுடன் பயன்படுத்தவும், உயிர்த்தெழுந்த நமது கர்த்தருடன் ஆழமான அனுபவத்தைப் பெறவும் இது ஏற்ற காலமாகும். உண்மையான கிறிஸ்தவ ஊழியத்திற்கும், உக்கிராணத்துவத்திலும் ஊழியப்பணியிலும் ஈடுபடுவதற்கும், பொய்ப்போதனைகளுக்கு எதிரான ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபடுவதற்கும், கிருபை-அன்பு-ஐக்கியம் ஆரியவற்றில் வளருவதற்கும் இதுவே தருணமாகும். சிலுவையின் செய்தியை உறுதியாகப் பற்றிக்கொண்டு அதற்கு உண்மையுடன் இருக்கவேண்டிய காலம் இது. கொரிந்தியருக்கு எழுதிய நிருபங்கள் அதைக் கற்றுக்கொடுக்கின்றன.

**சிலுவையின் செய்தியை உறுதியாகப் பற்றிக்கொண்டு அதற்கு உண்மையுடன் இருக்கவேண்டிய காலம் இது. கொரிந்தியருக்கு எழுதிய நிருபங்கள் அதைக் கற்றுக்கொடுக்கின்றன.**

**முனைவர் அடெனில்டன் தவாரஸ் டி அகுயார்**, பிரேசிலின் பாகியாவில் உள்ள கச்சோயிரா எனுமிடத்திலுள்ள பாகியா அட்வென்டிஸ்ட் கல்லூரியில் புதிய ஏற்பாட்டுப் பேராசிரியராக உள் ளார். 2010 முதல் அங்குப் பணியாற்றிவருகிறார்.

# மனன வசனங்கள்

1 இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார். அப் 18:9,10.

2 சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. 1கொரி 1:18.

3 சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும்வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். 1கொரி 1:10.

4 உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். 1கொரி 6:19,20.

5 ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். 1கொரி 10:31.

6 அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள். 1கொரிந்தியர் 14:1.

7 இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது. 1கொரிந்தியர் 13:13.

8 கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். 1கொரி 15:14-17.

9 அன்றியும், நீங்கள் துக்கப்படும்படிக்கு எழுதாமல், உங்கள்மேல் நான் வைத்த அன்பின் மிகுதியை நீங்கள் அறியும்படிக்கே, மிகுந்த வியாகுலமும் மன இடுக்கமும் அடைந்தவனாய் அதிகக் கண்ணீரோடே உங்களுக்கு எழுதினேன். 2கொரி 2:4.


10 நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். 2கொரி 4:8-10.

11 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே. 2கொரிந்தியர் 8:9.

12 எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. 2கொரி 10:4.

13 கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். 2கொரிந்தியர் 13:14.

பாடம் 1 ஜூன் 27—ஜூலை 3



# கொரிந்துவில் பவுலின் ஊழியம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1கொரி 1:1; கலா 1:1; அப் 17:16–34; 1கொரி 5:9–11; அப் 18:4–10; 2கொரி 2:4.

**மனன வசனம்:** இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார். அப் 18:9,10.

இங்கிலாந்தின் தலைசிறந்த ஊழியரான வில்லியம் கேரி தன் செலவுக்காக செருப்புதைக்கும் தொழில் செய்ததாகச் சொல்லுவார், ஆனாலும், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதே அவரது உண்மையான தொழிலாக இருந்தது.

அதேபோல், பவுலும் பிழைப்புக்காக கூடாரம் அமைக்கும் வேலையைச் செய்தார். அப் 18:1-3. ஆனால் அவரது உண்மையான தொழில் கிறிஸ்துவிடம் மக்களை வழிநடத்துவதாக இருந்தது.

கொரிந்து சபையில் பவுல் செய்த ஊழியம்பற்றி இந்த வாரம் பார்ப்போம். அங்கு பிரச்சனைகள் நிறைந்திருந்தன. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தாலும், இன்று நமது சபைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் அங்கிருந்த பிரச்சினைகளுக்கும் பெரிய வேறுபாடு ஏதுமில்லை. நீண்டகாலக் கிறிஸ்தவர்களுக்கும் ஊழியர்களுக்கும் ஒன்று தெரியும்; பிரச்சினைகளே இல்லாத கிறிஸ்தவ சபை ஒன்று எங்குமே இல்லை. ஆம், இல்லை.

கொரிந்துவில் பவுல் பல சவால்களை எதிர்கொண்டார்; ஆனால் சிலுவை பற்றிய செய்தியை வைத்தே அவற்றை மேற்கொண்டார். 1கொரி 2:2. அந்தச் செய்திக்கு உண்மையாக இருப்பதுதான் இன்று நாம் எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிப்பதற்கான வழி. கொரிந்தியர் நிருபங்களின் செய்தி நம் வாழ்க்கைக்கும் பொருந்தும் என்பதையே இந்தக் காலாண்டில் பார்க்கப் போகிறோம்.

*2026, ஜூலை 4 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தேவனால் அழைக்கப்பட்ட அப்போஸ்தலன் பவுல்

கொரிந்தியருக்கு நிருபம் எழுதியபோது, ' தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுல்' என்று தொடங்குகிறார். 1கொரி 1:1; 2கொரி 1:1. இயேசுவோடு தனக்குள்ள உறவுகுறித்து மிகவும் உறுதியாக இருந்ததால், ஒரு சில நிருபங்களைத் தவிர மற்ற எல்லா நிருபங்களையும் அவ்வாறே தொடங்குகிறார்.

**பவுல் எவ்வாறு அழைக்கப்பட்டார்? எதற்காக அழைக்கப்பட்டார்? 1கொரி 1:1; ரோமர் 1:1; கலா 1:1.**

பவுல் தனது அழைப்பையும் அப்போஸ்தலப் பணியையும் **தேவ சித்தத்தின் நிறைவேறுதல்** என்று குறிப்பிடுகிறார். தனது அழைப்பு மனிதர்களிடமிருந்து வந்ததல்ல, தேவனிடமிருந்தே வந்தது என்பதில் உறுதியாக இருக்கிறார். எரேமியாவைப்போல பவுலும் தனது தாயின் வயிற்றிலிருந்தபோதே தேவகிருபையினால் அழைக்கப்பட்டார். எரே 1:5; கலா 1:15. புறஜாதிகளுக்கு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதற்காக அழைக்கப்பட்டார்.

கிறிஸ்து தமது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு யாருக்கெல்லாம் தரிசனமானாரோ அவர்களது வரிசையில் பவுல் தன்னையும் இணைத்துக் கொள்கிறார். 1கொரி 15:5-8. இயேசுவுடனான அந்தச் சந்திப்பின் விளைவாகவே அவர் அப்போஸ்தலன் ஆனார். 1கொரி 15:9-11.

**'இயேசுவின் அப்போஸ்தலன்'** என்கிற பட்டம் பல கருத்துகளை உள்ளடக்கியது. முக்கியமாக, **இயேசுவினால் அனுப்பப்பட்டவர்** என்கிற கருத்தை இது வெளிப்படுத்துகிறது. ஆனாலும், கிறிஸ்துவின் ஊழியக்காரன், ஒரு பிரசங்கி, ஓர் ஆசிரியன் என்று தன்னை அடையாளப்படுத்த பவுல் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்துகிறார். ரோமர் 1:1; தீத்து 1:1; கலா 1:10; 1தீமோ 2:7; 2தீமோ 1:11. பவுலின் பிரசங்கத்திலும் போதகத்திலும் கிறிஸ்து வெளிப்படுகிறார். அதாவது, பவுல் இயேசுவின் அப்போஸ்தலன்.

அவரது அப்போஸ்தலப்பணியின் மையமாகமட்டுமல்ல, அவரது வாழ்க்கையின் மையமாகவும் இயேசுவே இருந்தார். பவுலின் எண்ணங்களும் உணர்வுகளும் இயேசுவின் பிரசன்னத்தால் நிறைந்திருந்தன. அதற்கு அத்தாட்சியாக, 1கொரிந்தியரின் தொடக்கத்திலும் நன்றிசொல்லும் பகுதியிலும் (ஒன்பது வசனங்களில் ஒன்பது முறை) அவர் இயேசுவை மீண்டும்மீண்டும் குறிப்பிடுகிறார். பவுல் இயேசுவை அவ்வளவு நேசித்தார்; அவரால் இயேசுவைப்பற்றி நினைக்காமலோ, பேசாமலோ இருக்கமுடியவில்லை. தனது பராமரிப்பில் இருந்தவர்களின் வாழ்க்கையிலும் கிறிஸ்துவே மையமாக இருப்பதற்காகவே, அவர்களுடன் இயேசுவைப் பகிர்ந்துகொண்டார். பவுல் ஓர் அப்போஸ்தலனாக அழைக்கப்பட்டார்; அதேசமயம், எந்த நிலையிலும் இயேசுவை உண்மையுடன் பின்பற்றுமாறு தனது பராமரிப்பில் இருந்தவர்களை அழைத்தார்.

---

**உங்களுடைய அழைப்பு என்ன? அதுதான் உங்கள் அழைப்பு என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? உங்களுக்கென்று ஓர் அழைப்பு இருப்பதாக நீங்கள் நினைக்கவில்லை என்றால், இப்போதே அவரிடம் நீங்கள் ஏன் அதைக் கேட்கக்கூடாது?**

# அத்தேனேயிலிருந்து கொரிந்துவரை

**கொரிந்துவிற்குச் செல்வதற்குமுன் பவுல் எங்கே இருந்தார்? அங்கே அவர் என்ன செய்தார்? அப் 17:16-34.**

---

பவுல் கொரிந்துவிற்குச் செல்வதற்குமுன் அத்தேனே பட்டணத்தில் பிரசங்கித்தார். அப் 17:16-34. முதலில் அத்தேனேக்குச் செல்வது அவரது திட்டமல்ல; ஆனால் பெரோயாவில் எதிர்ப்பு கிளம்பியதால், சில நண்பர்களின் உதவியுடன் பெரோயாவிலிருந்து அத்தேனே சென்றார். அப் 17:13-15.

தீமோத்தேயுவையும் சீலாவையும் சீக்கிரத்தில் அழைத்துவரும்படி அவரிடமிருந்து கட்டளை பெற்று, அந்த நண்பர்கள் பெரோயாவிற்குத் திரும்பினர். அப் 17:15. தீமோத்தேயு-சீலாவுக்காக பவுல் காத்திருந்தபோது, பவுல் என்ன செய்தார் என்பதை அப் 17:16-34 சொல்கிறது. அவர் ஜெப ஆலயத்திலும், சந்தை வெளியிலும், மார்ஸ் மேடையிலும் இயேசுவைப் பிரசங்கிக்கிறார். அவரால் இயேசுவைப்பற்றிப் பேசாமல் இருக்கவே முடியவில்லை; அதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக்கொண்டார்.

**பவுல் கொரிந்துவிற்கு வந்தபோதும், அந்த நகரத்தில் அவர் தங்கியிருந்த நாட்கள் முழுவதிலும் என்ன செய்தார்? அப் 18:1-11.**

---

பவுல் தனது இரண்டாவது ஊழியப்பயணத்தின்போது கொரிந்துவிற்குச் சென்றார். பவுல் அங்கு ஒன்றரை ஆண்டுகள் தங்கியிருந்ததாக லூக்கா தெரிவிக்கிறார்.

வழக்கம்போல, பவுல் தனது ஊழியப்பணியை ஜெப ஆலயத்தில் தொடங்குகிறார். அப் 18:4-6. இதுவே அவரது வழக்கமாக இருந்தது. அப் 17:1,2. இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டபடியே **'முதலில் யூதர்களுக்கு'** என்கிற உத்தியைப் பின்பற்றினார். அப் 1:8; ரோமர் 1:16; அப் 13:46.

இறுதியாக சீலாவும் தீமோத்தேயும் கொரிந்துவில் அவரோடு வந்து சேர்ந்தபோது, 'ஆவியில் வைராக்கியங்கொண்டு, **இயேசுவே கிறிஸ்து** என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான்'. அப் 18:5. கொரிந்துவில் தங்கியிருந்த காலத்தில், அவர் 'தேவ வசனத்தை உபதேசிப்பதில்' மும்முரமாக இருந்தார். அப் 18:11. இந்தச் சூழலில்தான், கொரிந்திய விசுவாசிகள் 'இயேசு கிறிஸ்துவையும், சிலுவையில் அறையப்பட்ட அவரையும் தவிர வேறொன்றையும் நான் அறியாதிருக்கத்தீர்மானித்தேன்' என்கிற பிரபல வார்த்தைகளைச் சொன்னார். 1கொரி 2:2.

---

**அத்தேனேயிலும் கொரிந்துவிலும் பவுல் செய்த ஊழியப்பணியிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? இன்று நமது நகரங்களிலும் சமூகங்களிலும் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்வதை எது சவாலானதாக மாற்றுகிறது? இத்தகைய கடினமான இடங்களில் நாம் எவ்வாறு வெற்றிகரமாக நற்செய்தியைப் பகிரமுடியும்? அதைச் சிறப்பாகச் செய்வதற்கு, பவுலின் ஊழியச்செயல்பாடுகளிலிருந்து என்ன உத்திகளைக் கற்றுக்கொள்ளலாம்?**

# கொரிந்து பட்டணம்

**கொரிந்துவின் பொருளாதாரம், ஒழுக்கம், மதவாழ்க்கைபற்றி என்ன தெரிகிறது? அப் 18:1–3; 1கொரி 5:9 –11; 1கொரி 8:4.**

பண்டைய உலகின் மிகமுக்கியமான மையமாக விளங்கிய கொரிந்து, அதன் செழிப்பான வணிகத்திற்காகப் புகழ்பெற்றது. கி.மு. 146 ல் ரோமரால் அழிக்கப்பட்ட இந்தப் பட்டணம், கி.மு. 44 ல் ஜூலியஸ் சீசரால் ஒரு ரோமக் குடியிருப்பாக மீண்டும் கட்டப்பட்டது. ரோமக் காலத்துக் கொரிந்து பட்டணத் தைத்தான் புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். பவுலின் காலத்தில், அத்தேனே நகருக்குப் போட்டியாகவும், பல விஷயங்களில் அதை மிஞ்சியதாகவும் கொரிந்து இருந்தது. கொரிந்துவில் இரண்டு முக்கியத்துறைமுகங்கள் இருந்தன; சரக்குப் பரிமாற்றத்திற்கும், வணிக மேம்பாட்டிற்கும் அவை உதவிசெய்தன.

உண்மையில், கொரிந்துவின் முக்கியத்துவம், சாதகமான புவியியல் அமைப்பை முன்னிட்டு பவுல் அதைத் தேர்ந்தெடுத்தார். 'சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு அதன்மூலம் ஒரு வாய்ப்பு கிடைத்தது. கொரிந்துவில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுவிட்டால், உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் எளிதாக அதை அறிவிக்கமுடியும்.'[1]

கொரிந்துவின் செழிப்பான வணிக நிலையால், அங்கே கூடாரம் செய்து, விற்று, பவுல் தன் பிழைப்பை நடத்த வாய்ப்பிருந்தது; அதே சமயம் சுவிசேஷம் அறிவிப்பதும் எளிதாக இருந்தது. அப் 18:2,3. செல்வச்செழிப்புள்ள ஒரு நகரத்தில் ஊழியப்பணியைச் செய்வதில் சவால்கள் இல்லாமல் இருக்காது. கொரிந்து பட்டணத்தில் மக்கள் வெளிப்படையாகவே பல்வேறு மதங்களைப் பின்பற்றிவந்தார்கள். 1கொரி 8:5. அதற்கு ஆதாரமாக அப்பொல்லோ, அத்தீனா, அப்ரோடைட் போன்ற தெய்வங்களுக்கு வழிபாட்டுத் தலங்கள் அங்கு இருந்தன. செராபிஸ், ஐசிஸ் போன்ற எகிப்திய கடவுள்களுக்கும் இருந்தன.

இத்தகைய மார்க்கக் குழப்பங்களுடன் சேர்ந்து, பாலியல் ஒழுக்கக்கேட்டிற்கும் கொரிந்து பெயர்பெற்றிருந்தது. கிரேக்கப் புவியியலாளரும், வரலாற்றாசிரியருமான ஸ்ட்ராபோ ஒன்று சொல்கிறார்: கொரிந்துவில் இருந்த அப்ரோடைட் வழிபாட்டிற்காக அக்கோவிலில் 1,000 புனித விலைமாதர்கள் அர்ப்பணிக்கப்பட்டிருந்ததார்களாம். இது சந்தேகத்திற்குரிய கருத்து; இது கொரிந்துவிற்கு எதிராக அத்தேனியர் பரப்பின பொய்ப்பிரச்சாரம் என்று பல அறிஞர்கள் கருதினாலும், பண்டைய உலகில் சடங்குரீதியான வேசித்தனம் காணப்பட்டது. பிற இடங்களைப்போல, கொரிந்துவிலும் பாலியல் ஒழுக்கக்கேடு ஒரு பிரச்சினையாக இருந்தது. விக்கிரக ஆராதனையும் ஒழுக்கக்கேடும் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக இருந்தன; இந்த வருத்தமான நிலையை வைத்தே, கொரிந்தியர் நிருபங்களின் செய்திகள் உள்ளன.

---

**கொரிந்துவில் பவுல் ஊழியப்பணி செய்தபோது, அங்கே காணப்பட்ட விக்கிரகாராதனையும் காமவிகாரமும் பெரும் சவாலாக இருந்தன. இன்றைய கலாச்சாரத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைக் கடினமாக்கும் சவால்கள் எவை? அவற்றை நாம் எப்படி முறியடிக்கலாம்? கொரிந்து நகரத்திற்கும் இன்றைய நமது நகரங்களுக்கும் இடையே ஏதேனும் வித்தியாசம் இருக்கிறதா?**

[1] Ellen G. White, Sketches From the Life of Paul, p. 99.

# ‘கொரிந்துவில் அநேகர்’

**பவுலின் பிரசங்கத்தால் ஏற்பட்ட விளைவுகள் என்ன? அப் 18:4–8.**

---

கொரிந்துவிலிருந்த யூதர்கள் மத்தியில் பவுல் செய்த ஊழியப்பணி அவர் எதிர்பார்த்த அளவுக்குப் பலன் கொடுக்கவில்லை. பகையையும் வெறுப்பையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ‘அவர்கள் எதிர்த்துநின்று தூஷித்தபோது’ என்று வேதாகமம் கூறுகிறது. அப் 18:6. **தூஷித்தல்** என்பதற்கான கிரேக்கச்சொல்லானது **‘நிந்தித்தல்’, ‘அவதூறு கூறுதல்’** என்று அர்த்தங்களை உடையது. அதாவது, பவுலின் நற்பெயரைக் கெடுக்கவும், அவருடைய ஊழியமுயற்சி வெற்றியடையாமல் தடுக்கவும் அவர்கள் திட்டமிட்டார்கள்.

நல்லவேளையாக, கொரிந்து ஜெபாலயத்தில் பவுல் செய்த பணி வீணாகவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, தேவன் அந்த ஊழியத்திற்குப் பொறுப்பாளராக இருந்தார். ‘என் வசனம் வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாது’ என்று அவர் வாக்குறுதி அளித்துள்ளார். ஏசாயா 55:11. ஜெபாலயத் தலைவனான கிறிஸ்புவும் அவனுடைய வீட்டார் அனைவரும் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெறுவார்களென சில யூதர்கள் எதிர்பார்க்கவில்லை. அப் 18:8. மேலும், ‘கொரிந்தியரில் அநேகரும் வசனத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்’ அப் 18:8. இது அநேகமாக கிறிஸ்புவின் செல்வாக்கினால் நடந்திருக்கலாம்.

**கொரிந்துவில் தான் எதிர்கொண்ட சவால்களால் பவுல் எத்தகைய உணர்வுகளுக்கு ஆளாகியிருப்பார்? அப் 18:9,10. தேவன் தமது ஊழியரை எவ்வாறு ஊக்கப்படுத்தினார்?**

---

பவுல் ஜெபாலயத்தைவிட்டு வெளியேறிய உடனேயே, அவருக்கு ஊக்கமளிக்கும் ஓர் அனுபவம் கிடைத்தது. அன்று இரவு கிறிஸ்துதாமே அவருக்குத் தரிசனமாகி, ஏசாயா 41:10 ஐ நினைவுபடுத்தும் விதமாக, ‘நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்’ என்று சொன்னார். தான் கொரிந்துவில் ‘பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும்’ இருந்ததாக பவுல் ஒப்புக்கொள்கிறார். 1கொரி 2:3. கடுமையான எதிர்ப்பின் காரணமாக அவர் பெரோயாவிலிருந்து அத்தேனேக்குச் செல்ல வேண்டியிருந்தது. அதேபோன்ற கடுமையான எதிர்ப்பினால், கொரிந்துவைவிட்டும் தான் வெளியேற வேண்டியிருக்கும் என்று அவர் நினைத்திருக்கலாம். ஆனால் இந்த முறை அப்படி நடக்கவில்லை. இயேசு அவரிடம், ‘இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு’ என்று சொன்னார். அப் 18:10. அவர்களுக்கு இரட்சிப்பின் செய்தியைக் கொண்டுசெல்ல பவுல் தேவனின் கருவியாக இருந்தார்.

---

**ஏசாயா 41:10 இல் தேவன் உங்களுக்குக் கொடுக்கிற அற்புதமான வாக்குறுதிகள் என்ன? அவை தற்போது உங்கள் வாழ்க்கையில் என்ன நம்பிக்கையைத் தருகின்றன?**

---

# கொரிந்தியருக்கு, பவுலின் நிருபங்கள்

**கொரிந்தியருக்கு பவுல் நிருபங்களை எழுதினதற்கான காரணத்தைப் புரிந்து கொள்ள, பின்வரும் வேதப்பகுதிகள் எவ்வாறு உதவுகின்றன? 1கொரி 1:11–13; 4:14; 5:11; 7:1; 14:37,40; 2கொரி 1:12, 2:9, 11:3, 13:10.**

கொரிந்தியருக்கு பவுல் முதலாம் நிருபத்தை எழுதினபோது எபேசுவில் இருந்தார். 1கொரி 16:5-9. குலோவேயாளின் வீட்டார் அவரைச் சந்தித்து, கொரிந்துவில் நிலைமை அவ்வளவு சீராக இல்லை என்று கூறுகிறார்கள். 1கொரி 1:11. அந்தப் பிரச்சினைகளைத்தான் 1கொரி 1-6 அதிகாரங்களில் பவுல் கையாளுகிறார். அதில் பிரிவினைவாதம், பாலியல் ஒழுக்கக்கேடு, வழக்குகள், வேசித்தனம் உள்ளிட்டவை அடங்கும். மேலும் சில கேள்விகள் அடங்கிய ஒரு கடிதத்தையும் பவுல் பெற்றார். 1கொரி 7:1. அதற்கு அவர் சொன்ன பதில் 7ஆம் அதிகாரத்திலிருந்து தொடர்கிறது. திருமண வாழ்க்கை, விவாகரத்து, பிரம்மச்சரியம், விக் கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவுகள், ஆராதனையில் ஒழுக்கம், ஆவிக்குரிய வரங்களின் பயன்பாடு, உயிர்த்தெழுதல்பற்றிய தவறான புரிதல் போன்ற கேள்விகள் அதில் இருந்தன. கொரிந்து சபையானது பிரச்சினைகளுடன் முதிர்ச்சியின்றி காணப்பட்டது. ஒருவேளை உங்கள் உள்ளூர்ச் சபையில் பிரச்சினைகள் இருக்கலாம். கொரிந்து சபையில் அதைவிட மோசமாக இருந்தது.

கொரிந்தியர்களுக்கு பவுல் எழுதிய முதல் நிருபம் நம் காலத்திற்கும் பொருந்தும். இன்று நமது சபைகள் பலவற்றிலும் இதேபோன்ற பிரச்சினைகள் இல்லையா? இந்த நிருபம் அதிகமாக நம்மிடம் பேசுகிறது. இது ‘அவரது நிருபங்களிலேயே அதிக வளமான, போதனைகள் அதிகமுள்ள, ஆற்றல்மிக்க ஒன்றாக உள்ளது’[1].

பவுல் கொரிந்தியர்களுக்கு மூன்று அல்லது நான்கு நிருபங்களை எழுதியிருக்கலாம். 2கொரி 10:9. அவர் 1கொரிந்தியர் நிருபத்திற்கு முன்பே ஒரு நிருபத்தை எழுதியிருக்கிறார். 1கொரி 5:9. அது தொலைந்துவிட்டது. 2கொரிந்தியர் நிருபத்திற்கு முன்னதாக, அறிஞர்களால் ‘கண்டிப்புமிக்க நிருபம்’ என்று குறிப்பிடப்படும் ஒரு நிருபத்தையும் எழுதியிருக்கிறார். 2கொரி 2:3,4,9; 7:8. அதுவும் தொலைந்துவிட்டது. சிலர் அவர் 1கொரிந்தியர் நிருபத்தையே குறிப்பிடுவதாக நினைக்கிறார்கள்; 2கொரிந்தியர் நிருபத்தில் அந்த நிருபத்தின் ஒரு பகுதி பாதுகாக்கப்பட்டிருப்பதாக சிலர் கருதுகிறார்கள்.

கொரிந்து சபை உறுப்பினர்கள் தங்களைச் சுற்றியிருந்த கலாச்சாரத்தால் பாதிக்கப்பட்டிருந்ததை 2கொரிந்தியர் நிருபத்திலிருந்து அறிகிறோம். போட்டி, அதிகாரம், செல்வம் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள்; இவை அனைத்தும் இன்று நமது சபைக்கும் சவாலாக இருக்கிறவையே. இதற்கு நேர்மாறாக, கிறிஸ்துவை மையமாகக்கொண்ட ஒரு கலாச்சாரத்தை, உருவாக்க பவுல் முயன்றார்; அதாவது சுவிசேஷத்தின் கண்ணோட்டத்தில் உலகத்தைப் பார்க்கிற ஒரு மார்க்கத்தை உருவாக்க முயன்றார். நாமும் நமது தற்போதைய உலகத்தை சுவிசேஷத்தின் கண்ணோட்டத்தில் பார்ப்பது எவ்வளவு முக்கியமானது!

[1] Ellen G. White, The Acts of the Apostles, p. 301.

**பவுல் இந்த மக்கள்மீது எவ்வளவு அக்கறை கொண்டிருந்தார் என்பதுபற்றி 2கொரி 2:4 என்ன சொல்கிறது? மற்றவர்கள்மீது உங்கள் இருதயத்தில் எவ்வளவு அன்பு இருக்கிறது?**

# மேலும் படிக்க:

'கொரிந்துவில் நற்செய்தியைப் பிரசங்கித்தபோது, அத்தேனேயில் மேற்கொண்ட பிரயாசங்களிலிருந்து வேறுபட்ட ஒரு முறையை அப்போஸ்தலன் பின்பற்றினார். விரிவான விவாதங்களையும் தர்க்கங்களையும் தவிர்க்கத் தீர்மானித்தார், மேலும் கொரிந்தியர்கள் "இயேசு கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையுமேயன்றி வேறொன்றையும் அறியாதிருக்கத்" தீர்மானித்தார்'.[1]

'பவுல் ஓரளவுக்கு வெற்றியடைந்தார்.' ஆனால் அவர் 'அங்கிருந்த மக்களை வைத்து ஒரு சபையை உருவாக்குவது ஞானமாக இருக்குமா என்று சந்தேகித்தார். அவர் கொரிந்துவை கேள்விக்குறியான ஊழியக்களமாகக் கருதினார். மேலும் அதைவிட்டு வெளியேறத் தீர்மானித்தார்... அந்த நகரத்தைவிட்டு, அதிக நம்பிக்கையூட்டும் மற்றொரு ஊழியக்களத்திற்குச் செல்லத் திட்டமிட்டபோது, கர்த்தர் அன்று இரவு ஒரு தரிசனத்தில் அவருக்குத் தோன்றி, "நீ பயப்படாமல் பேசு, இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு" என்றுகூறினார். இது கொரிந்துவிலேயே தங்குவதற்கான ஓர் உத்தரவு என்றும், விதைக்கப்பட்ட விதைக்கு கர்த்தர் பலன் தருவார் என்பதற்கான உத்தரவாதம் என்றும் பவுல் புரிந்துகொண்டார். இயேசு கிறிஸ்துவின் கொடியின்கீழ் ஒரு பெரிய சபை உருவாக்கப்பட்டது'.[2]

'கொரிந்துவில் ஒரு வருடம் ஆறு மாதங்கள் பவுல் ஊழியம்செய்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், அவரது பிரயாசங்கள் அந்த நகரத்தோடுமட்டும் நின்றுவிடவில்லை. அவர் கொரிந்துவை வைத்து ஊழியம்செய்தார். அதன் மூலம் பல சபைகள் எழுப்பப்பட்டன. பவுல் கவனித்து வந்த சபைகளை அவர் நேரில் சென்று சந்திக்கமுடியாத குறையை, கனமும் வல்லமையுமிக்க அவரது நிருபங்கள் ஓரளவுக்கு ஈடுகட்டின; அவை தேவவார்த்தையாகவே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்த நிருபங்கள் சபைகளில் வாசிக்கப்பட்டன'.[3]

[1] Ellen G. White, The Acts of the Apostles, p. 244.

[2] Ellen G. White, Sketches From the Life of Paul, pp. 106, 107.

[3] Ellen G. White, Sketches From the Life of Paul, p. 109.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *தான் இயேசுவின் அப்போஸ்தலன் என்றும், அந்த அழைப்பு தேவனிடமிருந்து வந்தது என்றும் பவுல் உறுதியாக நம்பினார். நாம் யார் என்பதையும், நம்முடைய அழைப்பு என்ன என்பதையும் அறிந்துகொள்வது ஏன் அவ்வளவு முக்கியம்?*

2. *ஒரு கணம், கொரிந்துவில் தனது ஊழியப்பணியைக் கைவிட்டு அந்த நகரத்தை விட்டு வெளியேற பவுல் நினைத்தார். அவரது எண்ணத்தை மாற்றியது எது? ஒரு ஊழியத்திட்டத்தைக் கைவிடவேண்டும் என்று உணரும்போது இது நமக்கு எவ்வாறு உதவும்? நாம் ஒரு பணியை விட்டுவிடவேண்டிய நேரமும் இருக்கக்கூடுமா?*

3. *கொரிந்து சபை உறுப்பினர்கள் தங்களைச் சுற்றியிருந்த கலாச்சாரத்தால் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தனர். இது இன்று நம்மத்தியிலும் ஒரு நிதர்சனமான உண்மையாக இருக்கிறது. நாம் இவ்வுலகத்தில் இருந்துகொண்டே 'மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமான' உலகக் காரியங்களால் எவ்வாறு பாதிக்கப்படாமல் இருக்கலாம்? யோவான் 17:11,15. நம்முடைய சபை, சுற்றியுள்ள கலாச்சாரத்தால் எந்தெந்த வழிகளில் பாதிக்கப்படலாம்?*

# முன்னோடியின் வருகை

**ரிக் காஜியுரா**

ஒரு உலகளாவிய ஊழிய முன்னோடியைச் சந்திப்பதில் கிடைக்கிற மகிழ்ச்சிக்கு ஈடு இணை ஏதுமில்லை. அதைவிட உற்சாகமான விஷயம், புதிதாக விசுவாசத்திற்குள் வந்திருக்கும் விசுவாசிகளின் சிறிய குழுவினருடன் அவர்களும் இருப்பதைப் பார்ப்பதுதான். இந்தோனேசியாவின் ஒரு மலைக்கிராமத்தில், புழுதி படிந்த சாலையோரத்திலிருந்த ஒரு வீட்டுச்சபையில் அவர்களைச் சந்தித்ததும், கிழக்கு ஐரோப்பிய நாடு ஒன்றில் சிமெண்ட் கட்டிடத்திலிருந்த ஒரு சிறிய அடுக்குமாடி குடியிருப்புக்குள் ரகசியமாகச் சென்றதும் எனக்கு நினைவிருக்கிறது. தென்கிழக்கு ஆசியாவில் எங்கள் தலைக்கு மேலேயும் கால்களுக்குக் கீழேயும் இருந்த ஒரு நீல நிற தார்ப்பாய் எழுப்பிய சலசலப்புச் சத்தமும், ஆப்பிரிக்காவின் கிராமப்புறப் பகுதிகளில் மரங்களின் நிழலில் அமர்ந்து ஒரு முன்னோடி ஓய்வு நாள் பள்ளிப் பாடத்தை நடத்திக்கொண்டிருந்ததைப் பார்த்ததும் இப்போதும் நினைவிருக்கிறது.

ஆனாலும், நான் சமீபத்தில் பார்வையிட்ட சபை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. முன்னோடிகள் பல ஆண்டுகளுக்கு முன்பே அங்கிருந்து சென்றுவிட்டனர். இந்த முறை, அங்கே ஒரு சபை கட்டிடத்தையும், அதன் பக்கத்திலேயே ஒரு பள்ளிக்கூடத்தையும் கண்டேன். அந்தச் சபையில் 125 உறுப்பினர்கள் உள்ளனர், மேலும் அப்பள்ளி அந்த நகரத்திலேயேசிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

முன்னோடிகள் அங்கு வந்தபோது, அந்த நகரத்தில் அட்வெண்டிஸ்டுகள் எவருமே இல்லை. அவர்கள் வீடு வீடாகச் சென்று புத்தகங்களை விற்கவும், கூட்டங்களை நடத்துவதற்காக ஓரிடத்தை வாடகைக்கு எடுக்கவும் முயன்றனர்; ஆனால் மக்கள் அவர்களுக்கு இடம் கொடுக்க மறுத்துவிட்டனர். அந்த நகரத்தில் தங்களுக்கு வரவேற்பு இல்லை என்பதை முன்னோடிகள் புரிந்துகொண்டனர்.

அதற்குப் பதிலாக, அருகிலிருந்த ஒரு நகரத்திற்குச் செல்ல அவர்களுக்கு அழைப்பு வந்தது. அங்கே அவர்கள் ஒரு மண்டபத்தை வாடகைக்கு எடுத்து பணியைத் தொடங்கினார்கள். வெகு காலத்திற்கு முன்பே ஞானஸ்நானம் பெற்றிருந்த ஐந்து உறுப்பினர்களுடன் ஒரு சிறு குழுவை ஆரம்பித்தனர். பின்னர் அவர்கள் மற்றொரு நகரத்திற்கு அழைக்கப்பட்டனர், அங்கும் விரைவிலேயே 37 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்கினர்.

பல ஆண்டுகள் கழித்து இறுதியாக அந்த முக்கிய நகரத்தில் கூட்டம் நடத்த ஓர் இடத்தைக் கண்டுபிடித்தார்கள். ஒரு சிறு குழுவைத் தொடங்கினார்கள், விரைவில் அதில் 30 உறுப்பினர்கள் இணைந்தனர். அதன்பிறகு, அந்தச் சபை நான்கு 'கிளைச் சபைகளை' உருவாக்கியுள்ளது. அருகிலிருந்த நகரங்களில் இருந்த அந்தச் சிறு குழுக்களும் இப்போது சபைகளாக வளர்ந்துள்ளன, அந்தச் சபைகள் ஒவ்வொன்றும் தலா ஒரு கிளைச்சபையைத் தொடங்கியுள்ளன. இந்தச் சபைகளைத் தொடங்க உதவிய ஆரம்பகால முன்னோடிகளில் ஒருவர், என்னுடன் அந்தப் பகுதியைச் சுற்றிப்பார்க்க வந்திருந்தார். அவர் இப்போது அந்தப் பிராந்தியத்தின் 'அட்வெண்டிஸ்ட் மிஷன்' இயக்குநராக உள்ளார், மேலும் பல ஆண்டுகளாக தேவன் தனது முயற்சிகளை ஆசீர்வதித்த விதத்தை எனக்குக் காண்பித்தார்.

இன்றும் சுவிசேஷம் சென்றடையாத பகுதிகளுக்கு முன்னோடிகள் சென்றுகொண்டிருக்கிறார்கள். தாகுஹி மற்றும் அகவன் போன்ற முன்னோடிகள், மிகக்குறைந்த எண்ணிக்கையிலான அட்வெண்டிஸ்டுகள் உள்ள ஒரு பகுதியில் பணியாற்றி வருகிறார்கள்.

வட ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஆசியாவின் பெரும் பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகள், உலகின் பெரிய நகரங்கள் மற்றும் கிறிஸ்தவப் பகுதிகளாக இருந்து இப்போது கிறிஸ்துவை மறந்திருக்கும் பகுதிகள் ஆகியவற்றில் புதிய ஊழியப்பணிகளைத் தொடங்குவதற்காகவும், உலகளாவிய ஊழிய முன்னோடிகளுக்காகவும் தயவுசெய்து ஜெபியுங்கள். தேவன் அவர்கள் பணியை ஆசீர்வதிப்பாராக.

**பாடம் 2** **ஜூலை 4–10**

# சிலுவையின் செய்தி



**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1கொரி 1:17–31; கொலோ 1:20; 1பேதுரு 2:24; அப் 13:16–47; 1கொரி 2:1–5.

**மனன வசனம்:** சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. 1கொரி 1:18.

பண்டைய ரோம எழுத்தாளரும் பேச்சாளருமான சிசரோ, ''சிலுவை மரணம் மிகவும் அருவருப்பானது என்பதால், சிலுவையை ரோம மக்கள் நினைத்துக்கூடப் பார்க்கக்கூடாது'' என்று கூறியிருந்தார். இயேசு பிறப்பதற்கு சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பே சிசரோ இறந்துவிட்டாலும், சிலுவையை ரோமர்கள் எவ்வளவு அவமானமாகக் கருதினார்கள் என்பதற்கு அவரது கூற்று சிறந்த எடுத்துக்காட்டு. அதைப்பற்றி நினைக்கவேகூடாது என்று கருதுமளவுக்கு அதை மோசமானதாகப் பார்த்தார்கள்.

இதற்கு நேர்மாறாக, பவுல் எழுதும்போது, 'சிலுவையைப் பற்றிய செய்தி தேவனுடைய வல்லமையாயிருக்கிறது' என்கிறார். 1கொரி 1:18. பவுலைப் பொறுத்தவரை, சிலுவை என்பது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான ஒப்புரவாக்குதலின் கருவியாகவும், இயேசுவின் தாழ்மைக்கு ஒப்பற்ற அடையாளமாகவும், நம்முடைய மிகப்பெரிய கடன் தீர்க்கப்பட்ட இடமாகவும் இருக்கிறது. எபே 2:16; கொலோ 1:20; பிலி 2:8; கொலோ 2:14.

கொரிந்து சபையிலிருந்த பிரச்சினைகளுக்கு சிலுவையே பவுலின் பதிலாக அமைந்தது. 1கொரிந்தியர் நிருபத்தை மேலோட்டமாக வாசித்தாலே, சபைப் பிரிவினைதான் பவுல் எதிர்கொள்ள வேண்டியிருந்த மிகமுக்கியப் பிரச்சினை என்பது புரியும். வாழ்த்துரை, ஸ்தோத்திரப் பகுதிக்கு அடுத்து உடனடியாக இந்த விஷயத்தைப்பற்றிதான் பேசுகிறார். 1கொரி 1:1-3; 1:4-9; 1:10-17. இந்தப் பிரச்சினைகளுக்கும் கொரிந்துவிலிருந்த பிற சவால்களுக்கும் தீர்வாக இருந்த சிலுவையின் வல்லமையான செய்தியை இந்த வாரம் ஆராய்வோம்.

***2026, ஜூலை 11 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# சிலுவையைப்பற்றிய சுவிசேஷம்

சிலுவையைப்பற்றியசெய்திநமக்குதேவனுடையவல்லமையாயிருக்கிறது என்று பவுல் கூறுகிறார். எனவேதான், 'இயேசு கிறிஸ்துவையும், சிலுவையில் அறையப்பட்ட அவரையும்' தனது பிரசங்கத்தின் மையமாக வைத்ததில் ஆச்சரிய மில்லை. 1கொரி 2:2.

**1கொரி 1:17–31 இல் பவுல் வலியுறுத்தும் முக்கியமான விஷயம் என்ன?**

1கொரி 1:18-31இல், மனித மூடத்தனத்திற்கும் தேவ ஞானத்திற்கும் இடையிலான வேறுபாட்டை பவுல் பேசுகிறார். மனிதனின் மோசமான நிலையையும், தேவனுடைய மிகச்சிறந்த அன்பையும் சிலுவை வெளிப்படுத்துகிறது. 1கொரிந்தியரின் இந்தப் பகுதி, 17ஆம் வசனத்திலிருந்து தொடங்குகிறது. கிறிஸ்துவின் சிலுவையின் வல்லமை வீணாய்ப்போகாதபடிக்கு சிலுவையைப்பற்றிய செய்தியே நமது பிரசங்கத்தின் மையமாக இருக்கவேண்டும். 1கொரி 1:17; 2:2.

ஞானஸ்நானம் கொடுப்பதற்காக அல்ல, சிலுவையைப்பற்றிய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே தான் அனுப்பப்பட்டதாக பவுல் கூறுகிறார். இதில் கவனிக்கவேண்டிய இரண்டு முக்கியமான விஷயங்கள் உள்ளன: **முதலாவது**, **'அனுப்புதல்'** என்பதற்கான கிரேக்கச் சொல் **'அப்போஸ்டெல்லோ'** ஆகும். இது **'அப்போஸ்தலன்'** என்கிற சொல்லுக்கான அதே மூலவார்த்தையிலிருந்து உருவானது. எனவே, பவுலின் அடிப்படை அப்போஸ்தலப் பணி சுவிசேஷத்தை அறிவிப்பதே ஆகும். இரண்டாவதாக, ஞானஸ்நானம்பற்றி பவுல் பேசுவதை வைத்து, அது முக்கியமற்றது, அல்லது பிரசங்கத்தைவிட குறைவான முக்கியத்துவமுள்ளது என்று புரிந்துகொள்ளக்கூடாது. மாறாக, இயேசுவின் நாமத்தால் ஞானஸ்நானம் பெறுவதைவிட, ஞானஸ்நானம் கொடுப்பவரை அதிகமாக முக்கியப்படுத்தியதையே அவர் கடிந்துகொள்கிறார்.

'ஞானத்தின் அடிப்படையிலான வார்த்தைகள்' பற்றி பவுல் பேசும்போது, சொற்பொழிவுத் திறன் இயல்பிலேயே மோசமானது என்று பவுல் குறிப்பிடவில்லை. 1கொரி 1:17, சமகால மொழிபெயர்ப்பு. மனித ஞானம் சிலுவையின் செய்தியை மறைத்துவிடக்கூடாது என்பதே அவரது கருத்தாகும். இந்தச் சொற்றொடர் கிரேக்க-ரோம சொல்லாட்சி கலையைக் குறிக்கிறது. பவுல் அத்தேனேயில் தர்க்கம், அறிவியல், தத்துவத்தை வைத்து பேசினார், ஆனால் அது மிகக் குறைந்த பலனையே கொடுத்தது. எனவே, 'கொரிந்துவில் கவனக் குறைவாகவும் அலட்சியமாகவும் இருந்தவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு, மற்றொரு பணித்திட்டத்தைப் பின்பற்ற முடிவுசெய்தார். விரிவான வாதங்களையும் விவாதங்களையும் தவிர்த்து, கொரிந்தியர்களிடையே "இயேசு கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் தவிர வேறொன்றையும் அறிவிக்காதிருக்க" அவர் தீர்மானித்தார்.'[1]

---

**விரிவான சொற்பொழிவுகள் எந்தெந்த வழிகளில் சிலுவையின் செய்தியை மறைக்கக்கூடும்? அத்தேனேயில் பயன்படுத்தப்பட்ட தர்க்கம், அறிவியல், தத்துவத்தைவிட கொரிந்துவில் 'இயேசு கிறிஸ்துவும் அவர் சிலுவையில் அறையப்பட்டதும்' பற்றிப் பிரசங்கித்தது ஏன் அதிக பலனைத் தந்தது? ஆனாலும், சுவிசேஷத்தை அறிவிப்பதில் தர்க்கமும் தத்துவமும் அறிவியலும் பயனுள்ளதாக இருக்கிற நேரங்களும் இருக்குமா?**

[1] Ellen G. White, The Acts of the Apostles, p. 244.

# கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாய்

தேவனுடைய ஞானத்திற்கு மனிதனுடைய மூடத்தனம் நிகரில்லை என்பதால், 'சிலுவையைப்பற்றிய செய்தி கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது' என்று பவுல் கூறுகிறார். 1கொரி 1:18. **'பைத்தியம்'** என்கிற வார்த்தை 1கொரி 1:18-31 வரையில் ஆறு முறை வருகிறது; அதில் இதுவே முதலாவதாகும்.

**சிலுவையைப்பற்றிய செய்தி கெட்டுப்போகிறவர்களுக்கு ஏன் பைத்தியமாகத் தோன்றுகிறது என்பதைப் புரிந்துகொள்ள, 1கொரி 1:20,21,23,25,27 எவ்வாறு உதவுகின்றன?**

1கொரி 1:18 ல் வரும் 'பைத்தியம்' என்பதற்கான கிரேக்க வார்த்தை **'மோரியா'.** புதிய ஏற்பாட்டில் இந்தச் சொல் ஐந்து முறை மட்டுமே வருகிறது; அந்த ஐந்தும் 1கொரிந்தியரில்தான் உள்ளது. 1கொரி 1:18,21,23; 2:14; 3:19. இந்த வார்த்தை குடும்பத்திலிருந்து உருவான இந்த வார்த்தையும் பிற வார்த்தைகளும் புதிய ஏற்பாட்டில் பலமுறை வருகின்றன. அவற்றில் பாதிக்கும் மேற்பட்டவை பவுல் எழுதிய நிருபங்களிலேயே உள்ளன. குறிப்பாக, 1 கொரிந்தியர் நிருபத்தில் இந்த வார்த்தை குடும்பம் அதிக அளவில் காணப்படுகிறது.

1கொரி 1:18,23 ல் பவுல் குறிப்பிடுகிற 'பைத்தியம்' என்கிற சொல்லானது, அறிவு சார்ந்த குறைபாட்டைவிட ஒழுக்கமற்ற நடத்தை, சிந்தை, பகுத்தறிவு இல்லாமை, தேவனுக்கு எதிரான கலக மனப்பான்மை ஆகியவற்றுடன் தொடர்புடையதாக உள்ளது. இதனால்தான் 1கொரிந்தியர் நிருபம் முழுவதும் அவர் இந்தத் தலைப்பைப் பற்றி இவ்வளவு விரிவாகப் பேசியுள்ளார்.

இந்தப் பட்டணத்தில் பவுல் இருந்த சூழ்நிலையைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அறிவு, ஞானம் என்று பெயர்பெற்றிருந்தவைகள்பற்றியும், கலாச்சார மேம்பாடுபற்றியும் பெருமையடித்து வந்த இடம் அது. அப்படிப்பட்ட சூழலில், ரோமர்களால் சிலுவையில் அறையப்பட்டு, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த நசரேயனாகிய இயேசு என்கிற ஒரு கலிலேய யூதரைப்பற்றி அவர் பேசுகிறார். அந்த மக்களின் பாவத்திற்காக மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகத்தின் பாவத்திற்காகவும் அவற்றை எல்லாம் செய்ததாகச் சொல்கிறார். அவர் சொல்வது உண்மைதானா? ஏமாற்றப் பார்க்கிறாரா? இது தத்துவரீதியான வழிகளில் பகுப்பாய்வு செய்யக்கூடிய ஆழமான புதிய தத்துவக் கருத்து அல்ல; மாறாக, இது பைத்தியக்காரத்தனமும், அர்த்தமற்ற பேச்சும், புத்தியும் கல்வியறிவுமிக்க எந்தவொரு கொரிந்தியனும் தீவிரமாக எடுத்துக்கொள்ள முடியாத ஒரு விஷயமுமாகவே தோன்றியது.

அஞ்ஞானிகளுக்கு பவுலின் செய்தி எவ்வளவு பைத்தியமாகத் தோன்றியதோ, அதைவிட மோசமாக பல யூதர்களுக்கு சிலுவையின் செய்தி இருந்தது. ரோமர்களால் மேசியா கொல்லப்படுவார் என்று எந்த யூதராவது எதிர்பார்த்தாரா? ரோமர்களை மேசியா வீழ்த்துவார் என்றுதான் எதிர்பார்த்தார்களே தவிர, அவர்களால் சிலுவையில் அறையப்படுவார் என்று எதிர்பார்க்கவில்லை.

---

**பவுலுக்கு எதிராக பல சவால்கள் கொரிந்துவில் இருந்தன. ஆனாலும், யூதர்கள், புறஜாதியார் என்று பல ஆத்துமாக்கள் சுவிசேஷத்தால் ஆதாயப்படுத்தப்பட்டனர். இதிலுள்ள செய்தி என்ன? நாம் எவ்வளவு எதிர்ப்புகளைச் சந்தித்தாலும், சத்தியத்தைக் கேட்க விரும்புகிற மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் எங்கிருந்தாலும், இன்றைய கொரிந்து போன்ற மோசமான இடங்களிலேயே இருந்தாலும், அவர்களைச் சென்றடைவதற்கு தேவன் நம்மைப் பயன்படுத்த, நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும்.**

# இரட்சிக்கப்படுகிறவர்களுக்குத் தேவபெலன்

1கொரி 1:18 ன் செய்தி மிகத்தெளிவானது, அதை எவரும் தவறவிடமுடியாது. சிலுவையை ஒருவர் பார்க்கிற கண்ணோட்டத்தில்தான் அதன் அர்த்தம் விளங்கும். தேவனுக்கு எதிராகக் கலகம் செய்பவர்களுக்கு அது பைத்தியமாகத் தோன்றுகிறது, ஆனால் அவருடைய இரட்சிப்பிற்காக ஏங்குகிறவர்களுக்கு அது தேவபெலனாய் இருக்கிறது.

**சிலுவையில் இயேசு நமக்காகச் சாதித்தது என்ன? கொலோ 1:20; 1பேதுரு 2:24.**

---

---

நாம் ஏற்கனவே பார்த்தபடி, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது, 'கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல்' அதைப் பிரசங்கிக்கவேண்டும். 1கொரி 1:17. பைத்தியத்திற்கு எதிரானது மனித ஞானம் அல்ல, தேவ பெலன் என்பதும் இவ்வசனத்தின் வெளிச்சத்தில் புரிகிறது. 1கொரி 1:18. மனித ஞானத்திற்கு முற்றிலும் முரணான சிலுவையானது மனித ஞானம் உண்மையில் எவ்வளவு பைத்தியமானது என்பதை வெளிப்படுத்துகிறது.

1கொரி 1:18 ன் கிரேக்க மூலஉரையின்படி, 'கெட்டுப்போகிறவர்கள்' என்பவர்கள் தங்களது செயல்களின் விளைவை அறுவடை செய்கிறவர்கள். அந்த வசனத்தை இவ்வாறு வாசிக்கலாம்: 'தங்களைத் தாங்களே அழித்துக்கொள்பவர்களுக்கு சிலுவையைப்பற்றிய செய்தி பைத்தியமாயிருக்கிறது.' 'கெட்டுப்போதல்' என்பதற்கான கிரேக்க வினைச்சொல் **'அப்பொலுமி'**; இதற்கு 'அழித்தல்' என்றும் அர்த்தமுண்டு. யோவான் 10:10. 'அப்பொலுமி' என்பது 1கொரி 1:19 ல் 'அழித்தல்' என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தங்களையே அழிக்கிறவர்கள்குறித்து 18 ஆம் வசனத்தில் சொல்வதை, வேதாகம அடிப்படையில் நிரூபிப்பதற்கு, ஏசாயா 29:14 இன் தேவ வார்த்தைகளை 19 ஆம் வசனத்தில் மேற்கோள் காட்டுகிறார். 19 ஆம் வசனத்தில், தேவனே அழிப்பவராக வருகிறார். தங்களை அழிப்பவர்களை, பிறகு தேவன் ஏன் அழிக்கவேண்டும் என்று யோசிக்கலாம். இதில் முரண்பாடு ஏதுமில்லை. தங்களையே அழிப்பவர்களை தேவன் அழிப்பார் என்பதே இதிலுள்ள கருத்தாகும்.

அழிக்கப்படுகிறவர்களுக்கு நேர்மாறானது, 'இரட்சிக்கப்படுகிற நமக்கோ' என்கிற சொற்றொடர். 1கொரி 1:18. இரட்சிப்பு தேவனிடமிருந்துமட்டுமே வருவதை இது குறிக்கிறது. 'நாம் இரட்சிக்கப்பட்டு வருறோம்; நம்மை நாமே இரட்சிப்பதில்லை' என்று பவுல் கூறுகிறார். நிச்சயமாக நம்மால் அதைச் செய்யவே முடியாது; நமது இரட்சிப்பு வெளியேயிருந்து வரவேண்டும். நம்மை நாமே நாம் அழிக்கலாம், ஆனால், இரட்சிப்பு என்பது பாவிகளுக்கு வழங்கப்படவேண்டிய கிருபையின் ஓர் ஈவு. 1கொரி 1:21 கூறுகிறபடி, விசுவாசிக்கிறவர்களை தேவனே இரட்சிக்கிறார். எனவே, கிறிஸ்துவின் சிலுவையின்மூலம் தேவன் மனுக்குலத்திற்கு வழங்கியுள்ளதை நிராகரிப்பதுதான் பைத்தியம் ஆகும். 1கொரி 1:30. அது தன்னைத்தானே அழித்துக்கொள்ளச் செய்கிறது.

---

**'பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்'. ரோமர் 6:23; 1கொரிந்தியர் 1:18,19 ல் பவுல் கூறியவற்றை இந்த வசனம் எவ்வாறு மீண்டும் உறுதிப்படுத்துகிறது?**

# சிலுவையில் அறையப்பட்ட மேசியா

'யூதர்கள் அடையாளங்களைக் கேட்கிறார்கள், கிரேக்கர்கள் ஞானத்தைத் தேடுகிறார்கள்.' 1கொரி 1:22. யூதர்கள் எதிர்பார்த்த அடையாளம் சிலுவை அல்ல; தேவனாகிய மேசியா சிலுவையில் அறையப்பட்டதை அவர்கள் ஒத்துக்கொள்ள வில்லை. அது கிரேக்கர்கள் விரும்பிய வகை ஞானமாகவும் இருக்கவில்லை. அது அனைவரது எதிர்பார்ப்புகளுக்கும் முற்றிலும் முரணாக இருந்தது.

இயேசு சிலுவையில் அறையப்படவிருந்த கருத்துக்கு சீஷர்களின் எதிர் வினை என்னவென்பதை வாசித்தாலே, இந்த ஒட்டுமொத்த கருத்தும் குறிப்பாக யூதர்களுக்கு எவ்வளவு அந்நியமாக, அருவருப்பாக இருந்தது என்பதை உணர லாம். மாற்கு 8:31,32; 9:30-32; 10:32-34. ரோமர்களை மேசியா மேற்கொள்வார் என்று யூதர்கள் எதிர்பார்த்தனர்; ஆனால் அப்படி நடக்கவில்லை, குறைந்தபட்சம் உலகப்பிரகாரமான ராணுவரீதியிலான 'வெற்றி'யாக அது இருக்கவில்லை.

பல நூற்றாண்டுகளாக, கிறிஸ்தவர்களுக்கு விசுவாசத்தின் அடையாள மாக சிலுவை இருந்துவருகிறது. ஆனால், தேவன் சிலுவையில் அறையப்பட்டார் என்கிற கருத்து முதலாம் நூற்றாண்டு மனநிலைக்கு, எவ்வளவு பைத்தியக்காரத் தனமாகத் தோன்றியது என்பதை இருபத்தியோராம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்வது கடினம்.

இது மிகவும் அதிர்ச்சிகரமான செய்தியாக இருந்ததால்தான், நமது மிக ஆழமான சிந்தனைக்கு உரியதாகிறது. ஒரு மேசியா சிலுவையில் அறையப்பட்ட காட்சியானது, மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற தேவன் எவ்வளவு தூரம் செல் லத்தயாராக இருந்தார் என்பதை முழுபிரபஞ்சத்திற்கும் மிகத்தெளிவாக உணர்த்து கிறது. சிலுவையும், கர்த்தர் சிலுவையில் மரித்ததும், பூமியிலுள்ள பாவிகளாகிய நமக்கு மிகுந்த வியப்பூட்டுகிற விஷயமாக இருக்கிறது. (அப்படியென்றால், பரலோகத்தில் கர்த்தராகிய இயேசுவை அறிந்து, அவரைத் தொழுதுகொண்ட பாவமற்ற தூதர்களுக்கு இது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று கற்பனைசெய்து பாருங்கள்!)

**சிலுவையின் அர்த்தத்தைப்பற்றி பின்வரும் பகுதி நமக்கு என்ன போதிக்கிறது? அப் 13:16–47; குறிப்பாக 26,38,47 வசனங்கள்.**

பிரசங்கிக்கவே கிறிஸ்து தன்னை அனுப்பினதாக பவுல் கூறுகிறார். எனவே, சிலுவையில் அறையப்பட்ட மேசியாவைப்பற்றிய செய்தியை பவுல் பிரசங்கிக்கிறார். 1கொரி 1:23. அந்தக் கருத்துக்களையே 1கொரி 2:1-5 இல் மீண்டும் தொடர்கிறார். அந்த அப்போஸ்தலர் கிறிஸ்துவின் கட்டளைக்கு உண் மையாக இருந்தார். சுவிசேஷத்தை அறிவிப்பதில், அவர் 'சிறந்த வசனிப்போ டும் ஞானத்தோடும்' வரவில்லை. 1கொரி 2:1. அதற்குப் பதிலாக, அவர் 'இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரை'மட்டுமே பிரசங்கித்தார். 1கொரி 2:2. அவருடைய பேச்சும் பிரசங்கமும் 'மனுஷஞானத்திற்குரிய நயவச னமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதா யிருந்தது'. 1கொரி 2:4. ஏனெனில், உண்மையில் 'மனுஷருடைய ஞானம்' என் பது 'தேவனுடைய பெலத்திற்கு' முற்றிலும் முரணானது. 1கொரி 2:5.

**சிலுவையில் அறையப்பட்ட மேசியாவை யூதர்களும் கிரேக்கர்களும் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தேவன் எப்போதும் நாம் எதிர்பார்க்கும் விதத்தில் செயல்படுவதில்லை என்பதைப்பற்றி இதி லிருந்து என்ன தெரிந்துகொள்கிறோம்? குறிப்பாக, காரியங்கள் நாம் எதிர்பார்த்தபடி நடக்காத போது, இந்தக் கருத்தைப் புரிந்துகொள்வது ஏன் முக்கியமானது?**

# கிறிஸ்து, தேவனுடைய வல்லமையும் ஞானமும்

தேவனுடைய ஞானமும் மனித ஞானமும் முற்றிலும் வேறுபட்டவை, இரண்டும் எதிரெதிர் துருவம் என்பதைப்பற்றி பவுல் பேசுகிறார். 1கொரி 1:19, 20,30,31. ஞானமே அவசியமில்லை என்று பவுல் நிராகரிக்கவில்லை; மாறாக, தேவனுக்குப் போட்டியாக நிற்கிற மனித ஞானத்தையே நிராகரிக்கிறார். மனித ஞானத்தால் மனிதர்களை பாவத்திலிருந்து விடுவிக்கமுடியாது. தேவனுடைய ஞானமாகிய கிறிஸ்துவால்மட்டுமே இந்தக் கிரியையைச் செய்யமுடியும். கீழே உள்ள அட்டவணையைப் பார்க்கவும்:

| | | |
|---|---|---|
| இரட்சிக்கப்படுகிற நமக்கோ | (சிலுவையின் உபதேசம்) தேவ பெலனாயிருக்கிறது. | 1கொரி 1:18. |
| அழைக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்களுக்கு | கிறிஸ்து தேவ பெலனும் (தேவ ஞானமுமாயிருக்கிறார்). | 1கொரி 1:24. |

1கொரி 1:18; 1கொரி 1:24 ஆகிய இரண்டு வசனங்களுமே, கிறிஸ்துவே தேவனுடைய பெலன் என்பதைக் காட்டுகின்றன; அதாவது, மக்களை அவர்களது பாவங்களிலிருந்து இரட்சிக்கிற வல்லமை அவரிடம் உள்ளது. உண்மையில், 'பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று.' 1கொரி 1:21. 'இரட்சிக்கப்படுகிற நமக்கோ,' 'விசுவாசிக்கிறவர்கள்', 'அழைக்கப்பட்டவர்கள்' ஆகிய சொற்றொடர்கள் விசுவாசத்தின்மூலம் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்று வாழுகிற குழுவினரையே சுட்டிக்காட்டுகின்றன. 1கொரி 1:18,21,24. 'கிறிஸ்துவின் சுவிசேஷம்... விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்புண்டாவதற்குத் தேவபெலனாயிருக்கிறது'. ரோமர் 1:16.

கிறிஸ்து தேவ பெலனாக மட்டுமல்ல, தேவஞானமாகவும் இருக்கிறார். அதாவது, மனித ஞானத்தால் தீர்க்கமுடியாத பாவப்பிரச்சினையை, கிறிஸ்துவின்மூலமாக தேவன் எதிர்கொண்டு, அதற்குத் தீர்வும் கண்டார். மனிதர்கள் தேவனை அறிந்துகொள்வதற்கு இந்த உலகத்தின் ஞானத்தால் உதவமுடியாது. 1கொரி 1:21. மாறாக, கிறிஸ்துவின்மூலமாக நாம் இரட்சிப்புக்கேதுவான ஞானமுள்ளவர்களாகிறோம். 2தீமோ 3:15.

**1கொரி 1:24–29 இல், 'பைத்தியம்', 'பலவீனம்', 'பெலன்', 'ஞானம்' போன்ற வார்த்தைகள்மூலம் அவர் எதைச் சுட்டிக்காட்டுகிறார்?**

1கொரி 1:24-29 இல் வருகிற பைத்தியம், பலவீனம் என்கிற சொற்கள், சிலுவையின்செய்தியைமானிடஞானமானதுபைத்தியமாகவும்பலவீனமாகவும் கருதக்கூடும் என்பதைச்சுட்டிக்காட்டுகின்றன. ஆனாலும், 'தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது.' 1கொரி 1:25. அதனால் தேவன் பலவீனமானவர் அல்லது பைத்தியமானவர் என்று அர்த்தமல்ல; மாறாக, தேவவல்லமையும் ஞானமும் மனிதர்களின் எந்த மேன்மையைவிடவும் மேலானது.

**'நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை' எனும் வார்த்தைகளைத் தியானியுங்கள். 1கொரி 1:26. இதில் நமக்கு என்ன செய்தி உள்ளது?**

# மேலும் படிக்க:

'தற்போதைய காலக்கட்டத்தில் வாழும் எண்ணற்றவர்களின் உள்ளங்களில், கல்வாரி சிலுவையைப்பற்றி பரிசுத்தமான நினைவுகள் சூழ்ந்துள்ளன. சிலுவையில் அறையப்பட்ட நிகழ்வுகளோடு பரிசுத்தமான கருத்துகள் பிணைக்கப்பட்டுள்ளன. ஆனால் பவுலின் காலத்தில், அருவருப்பும் திகிலும் கலந்த உணர்வுகளோடு சிலுவை பார்க்கப்பட்டது. சிலுவையில் மரணத்தைச் சந்தித்த ஒருவரை மனுக்குலத்தின் இரட்சகராக உயர்த்துவது, இயல்பாகவே கேலிக்கும் எதிர்ப்பிற்கும் வழிவகுப்பதாக இருந்தது.

'கொரிந்துவிலிருந்த யூதர்களும் கிரேக்கர்களும் தன்னுடைய செய்தியை எவ்வாறு பார்ப்பார்கள் என்பதை பவுல் நன்றாகவே அறிந்திருந்தார். அவர் அறிவிக்கவிருந்த செய்தியைக் கேட்டு, யூத மக்களில் பலர் கோபமடையவிருந்தார்கள். கிரேக்கர்களின் மதிப்பீட்டின்படி, அவரது வார்த்தைகள் அர்த்தமற்ற முட்டாள்தனமாகத் தோன்றவிருந்தன. சிலுவைக்கும் மனித இனத்தின் மேன்மைக்கும் அல்லது மனுகுலத்தின் இரட்சிப்புக்கும் தொடர்பிருப்பதாக அவர் நிரூபிக்க முயன்றதைப் பார்த்து, அவரை புத்திபேதலித்தவராகக் கருதவிருந்தார்கள்.

'ஆனால், பவுலின் மேலான ஆர்வத்திற்குரிய ஒரே விஷயமாக சிலுவை இருந்தது. சிலுவையில் அறையப்பட்ட நசரேயனின் சீடர்களைத் துன்புறுத்தி வந்த அவரது வாழ்க்கைப் பயணம் தடுத்து நிறுத்தப்பட்ட அந்த நிமிடம் முதல், சிலுவையைக்குறித்து மேன்மைபாராட்டுவதை அவர் ஒருபோதும் நிறுத்தியதில்லை. அந்த நேரத்தில், கிறிஸ்துவின் மரணத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய எல்லையற்ற அன்பைப்பற்றிய ஒரு வெளிப்பாட்டைப் பெற்றார்; அது அவரது வாழ்க்கையில் அற்புதமான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, அவரது எல்லா திட்டங்களையும் நோக்கங்களையும் பரலோகத்திற்கு இசைவாக மாற்றியது. ஒரு பாவி, தேவ குமாரனின் தியாகபலியில் வெளிப்படும் பிதாவின் அன்பைக் கண்டு, அந்தத் தெய்வீகத் தூண்டுதலுக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கும்போது, அவனது இருதயத்தில் மாற்றம் ஏற்படுகிறது என்பதையும், அதன் பிறகு கிறிஸ்துவே எல்லாவற்றிலும் எல்லாமுமாக இருக்கிறார் என்பதையும் அவர் தனது சொந்த அனுபவத்தின் மூலம் அறிந்திருந்தார்.'[1]

[1] Ellen G. White, The Acts of the Apostles, pp. 245, 246.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *'என் பிதாவே, இந்தப்பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்'. மத் 26:39. இயேசு சிலுவையில் செலுத்திய மிகப்பெரிய விலை என்ன?*

2. *'தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது'. 1கொரி 1:25. தேவனுடைய ஞானம் எந்தெந்த வழிகளில் மனித ஞானத்திலிருந்து அவ்வளவு வித்தியாசமாக இருக்கிறது?*

3. *சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்பற்றிய செய்தி யூதர்களுக்கு இடறலாகவும் கிரேக்கர்களுக்குப் பைத்தியமாகவும் இருந்தது. இன்று நாம் பிரசங்கிக்கிற எந்தெந்த வேதாகமக் கருத்துகள் நவீன கால மக்களிடையே அதே போன்ற தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்? ஏன்? 'ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்'. 1கொரி 2:14. அப்படிப்பட்டவர்களுடைய இருதயம் தொடும்படி நாம் இயேசுவைப்பற்றி எவ்வாறு பேசமுடியும்? அல்லது நம்முடைய செயல்களால்மட்டுமே அவர்களை அணுகிவிடமுடியுமா?*

# மாற்றத்தை உருவாக்குகிற ஒரு தொடுதல்

**வியாச்செஸ்லாவ் டெம்யான்**

பிரேசிலின் அமைதியான பெலோ ஹொரிசொன்டே பகுதியில் வசித்து வந்தார் ஃபேபியோலா; ஆனாலும் அவருக்குள் அமைதி இல்லை. மார்பகப் புற்றுநோய் பாதிப்பால் மனமுடைந்துபோனார், மேலும் நாடு முழுவதும் பரவி வந்த கோவிட்–19 அச்சத்தினால், தான் சீக்கிரத்தில் மரிக்கப்போவதாக நினைத்தார்.

அதே நேரத்தில், சால்வடார் நகரில் லூயிசாவும் பெரும் இக்கட்டில் இருந்தார். 23 வருட திருமண வாழ்க்கை துரோகத்தால் சிதைந்தது, மேலும் அவரது கணவர் மூலமாக அவருக்கு கிரந்தி நோய் தொற்றியிருந்தது. அதோடு, அவரது தாயாருக்கு அல்சைமர் பாதிப்பு ஏற்பட்டது; மேலும் அவரது அண்டை வீட்டார் ஒருவர் தற்கொலை செய்ததையும் பார்த்தார். வேதனையடைந்தார், தன்னுடைய வாழ்க்கையையும் முடித்துக்கொள்ளலாமா என்று யோசித்தார்.

இந்த இரண்டு பெண்களுமே வேதனையில் மூழ்கிப்போயிருந்தனர். மாற்கு 5 இல் 12 ஆண்டுகளாக இரத்தப்போக்கினால் அவதிப்பட்ட அந்தப் பெண்ணைப்போல, ஃபேபியோலாவும் லூயிசாவும் உடல், உணர்ச்சி மற்றும் ஆன்மீக ரீதியான சுகத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு நம்பிக்கையின் ஒரு தொடுதல் தேவையாக இருந்தது.

இரண்டு தனித்தனி மாலை வேளைகளில், தேவன் ஆச்சரியமான வகையில் ஒரே மாதிரியாகத் தலையிட்டார். ஃபேபியோலா தனது கவலையைப் போக்குவதற்கு தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தபோது, அவரது சிறிய நாய் அவர் மடியில் ஏறி குதித்தது. அப்போது தற்செயலாக ரிமோட் பட்டனை அழுத்தியதில், வேறொரு நிகழ்ச்சி மாறி, பிரேசிலின் ஹோப் சேனலான நோவோ டெம்போவின் ஒளிபரப்பு நிகழ்ச்சி வந்தது.

சுமார் 800 மைல்களுக்கு அப்பால், லூயிசாவின் நாயும் சரியாக இதையே செய்தது. ஃபேபியோலா மற்றும் லூயிசாவின் இருண்ட தருணங்களில், ரிமோட்டின்மீது வைக்கப்பட்ட ஒரு தெய்வீகப் பாதம், வாழ்க்கையை மாற்றுகிற இரட்சகரின் அன்பை அவர்களுக்கு வெளிப்படுத்தியது.

இரு பெண்களும் தங்களுக்குள் ஒரு புதிய நம்பிக்கை அலை பரவுவதை உணர்ந்தார்கள். இன்று, ஃபேபியோலா ஒரு புதிய நோக்கத்தைக் கண்டடைந்துள்ளார்; தான் பெற்ற அதே ஆறுதல் செய்தியை தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் பகிர்ந்து அவர்களை உற்சாகப்படுத்துகிறார். நோவோ டெம்போவின் செய்திகள் அவரது நோயைப்பற்றிய பார்வையை மாற்றியமைத்தன. அவர் இப்போது புற்றுநோயைத் தண்டனையாகப் பார்க்காமல், தன்னை மாற்றியமைக்க தேவன் அனுமதித்த ஒன்றாகப் பார்க்கிறார். இப்போது, மருத்துவ பரிசோதனைகளுக்காகக் காத்திருக்கும் நேரங்களில், கிறிஸ்தவப் புத்தகங்களைப் பகிர்ந்தும், இயேசுவைப்பற்றிப் பேசியும், தான் பெற்ற நம்பிக்கையின் மூலம் மற்றவர்களை ஊக்கப்படுத்தியும் வருகிறார்.

லூயிசாவைப்பொறுத்தவரை, அவர் மன அழுத்தத்தோடு போராடிக்கொண்டிருந்ததை உணர அவர் பார்த்த நிகழ்ச்சிகள் உதவின. அவரது வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைந்த சிகிச்சையை அவரால் பெறமுடிந்தது; இது இருளிலிருந்து தேவனுடைய அன்பெனும் ஒளிக்கு வருவதற்கு உதவியது. "நான் தொலைந்துபோன, அழுக்கான, வெறுமையான மகளாக இருந்தேன், ஆனால் அவரது தொடுதலுக்குப் பிறகு, ஒருபோதும் அவரது சமுகத்தை விட்டு விலக விரும்பவில்லை" என்று நினைவு கூர்கிறார்.



# கிறிஸ்துவில் ஒற்றுமை

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1கொரி 1:12–17; ரோமர் 1:29; 1கொரி 1:10; 3:1–4; பிலி 2:5–8; 2கொரி 11:23–28; கொலோ 1:24.

**மனன வசனம்:** சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும்வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். 1கொரி 1:10.

வனவிலங்குகளை ஆராய்ந்தால், சில உயிரினங்கள் கூட்டமாகவோ, மந்தையாகவோ, குழுக்களாகவோ வாழ்வது தெரியும். ஓநாய்கள், டால்பின்கள், வேட்டை எறும்புகள் எப்போதும் கூடிவாழ்கின்றன. சிம்பன்சி குரங்குகள் நெருக்கமான சமூகப்பிணைப்புகள் உடையவை; சில நேரங்களில் 15-150 வரையிலான சிம்பன்சிகள்கூட ஒரே கூட்டமாக வாழும். ஆனாலும், இந்த உறவு எப்போதும் இணக்கமானதாக இருப்பதில்லை; சில சமயங்களில் சிம்பன்சிகள் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொள்கின்றன.

மக்களும் ஓரளவிற்கு அப்படித்தான்; அவர்கள் குழுக்களாக வாழ விரும்பினாலும்கூட, சில நேரங்களில் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். இது நமது சபைகளிலும் காணப்படுகிற கசப்பான ஓர் உண்மை! பெரும்பாலும் ஏதாவது ஒருவகை வசீகரமான தலைவரை மையமாக வைத்து கும்பல்கள் உருவாகின்றன. ஒரு கும்பல் மற்றொரு கும்பலுடன் ஒத்துப்போவது இல்லை.

உங்கள் சபையில் நீங்கள் எப்போதாவது இதைப் பார்த்திருக்கிறீர்களா? அப்படியானால், கொரிந்து பட்டண சபையில் பவுல் எதிர்கொண்ட பிரச்சினையை நீங்கள் ஓரளவுக்குப் புரிந்துகொள்ள முடியும். இந்த வாரம் நாம் 1கொரிந்தியர் 1-4 அதிகாரங்களை ஆராய்வோம். சபையில் ஏற்படும் சண்டைகள்பற்றியும், அவற்றை முறியடிக்கிற விதம்பற்றியும் அங்கே பவுல் விளக்குகிறார்; அதாவது, கிறிஸ்துவுக்குள் ஒற்றுமையாய் இருப்பதே அதற்குத் தீர்வு என்று கூறுகிறார்.

*2026, ஜூலை 18 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# சபைக்குள் உருவாகும் பிரிவினை கும்பல்கள்

'உங்களுக்குள்ளே பிரிவினைகள் இல்லாமல், ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும்' என்று பவுல் வைக்கிற வேண்டுகோள், 1கொரிந்தியர் புத்தகத்தின் முதல் நான்கு அதிகாரங்களில் மேலோங்கி நிற்கிறது. 1கொரி 1:10. உண்மையில், இந்த நிருபத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஒற்றுமையே மையக்கருத்தாக இருகிறது.

**உள்ளூர்த் தலைவர்களைச்சுற்றி கும்பல்களை உருவாக்குவது எவ்வளவு அபத்தமானது என்பதைப் புரிந்துகொள்ள 1கொரி 1:12-17 எவ்வாறு உதவுகிறது? பவுல் முன்வைக்கிற தீர்வு என்ன?**

கொரிந்துசபையினரின்ஒற்றுமையின்மையைசிலவலுவானவார்த்தைகளால் பவுல் சித்திரிக்கிறார். **ஸ்கிஸ்மா** (பிரிவினை 1கொரி 1:10), **எரிஸ்** (வாக்குவாதம் 1கொரி 1:11) ஆகிய கிரேக்க சொற்களைப் பயன்படுத்துகிறார். **ஸ்கிஸ்மா** என்கிற பெயர்ச்சொல் சம்பந்தப்பட்ட ஸ்கிசோ எனும் வினைச்சொல்லுக்கு 'பிளத்தல்' என்று அர்த்தம்; கருத்து வேறுபாடுகளால் ஏற்படும் குழுப்பிரிவினைகளை விவரிக்க புதிய ஏற்பாட்டில் மற்ற இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல், **எரிஸ்** (வாக்குவாதம்) என்கிற பெயர்ச்சொல், கிறிஸ்தவர்கள் செய்யக்கூடாத தீயசெயல்களின் பட்டியல்களில் அடிக்கடி இடம் பெறுகிறது.

**எரிஸ் ('வாக்குவாதம்', 'சண்டை') என்கிற சொல்லுடன் பட்டியலிடப்பட்டுள்ள மற்ற பாவங்கள் எவை? ரோமர் 1:29; 13:13; 1கொரி 3:3; 2கொரி 12:20; கலா 5:20. இது அந்தப் பாவத்தின் தீவிரத்தைப்பற்றி நமக்கு என்ன சொல்கிறது?**

கொரிந்து சபையில் இருந்த கருத்து வேறுபாடுகள் வெளிப்படையாகத் தெரிந்தன; அவை ஒருவருக்கொருவர் எதிராக வழக்குத் தொடரும் அளவிற்குச் சென்றன. 1கொரி 6:1-3. சபை உறுப்பினர்களுக்கு இடையே நிலவிய இந்த வழக்குகளைப்பற்றி, 'உங்களுக்கு வெட்கமுண்டாகச் சொல்லுகிறேன்' என்று பவுல் கூறினார். 1கொரி 6:5. அதாவது, அவர்கள் கர்த்தருடைய திருவிருந்தில் பங்கேற்கும்போதுகூட தங்கள் கருத்து வேறுபாடுகளைக் களைந்துவிடவில்லை. 1கொரி 11:17-22.

சபை உறுப்பினர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மை தன்னை கலங்கச் செய்ததாலும், அதைக்குறித்து மிகுந்த கவலை அடைந்ததாலும், கொரிந்தியருக்கு எழுதிய இந்த நிருபத்தில் முதலாவது இதைப்பற்றித்தான் பேசுகிறார்.

**இந்தக் கும்பல் பிரிவினைகள் சபையின் ஒற்றுமைக்கு மிகவும் ஆபத்தானவை என்பதைப் புரிந்துகொள்ள 1கொரி 1:12-27 எவ்வாறு உதவுகிறது. இந்தப் பிரச்சினையைத் தவிர்க்க உங்கள் உள்ளூர்ச் சபை என்ன செய்யலாம்?**

# இயேசுவை மையமாகக் கொண்டு

**‘ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும்’ என்று பவுல் குறிப்பிட்டதன் அர்த்தம் என்ன? 1கொரி 1:10-.**

கும்பல்கள் உருவாவது, கிறிஸ்துவுக்கு நம்மை விசுவாசத்தோடு அர்ப்பணிக்க மறுப்பதற்குச் சமம். 1கொரி 1:10. தேவன் நம்மை ‘தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு’ அழைத்தார். 1கொரி 1:9. கிறிஸ்துவே நம் கர்த்தர், நாம் அவரைமட்டுமே மையமாகக்கொண்டு வாழவேண்டும். எனவே, ‘கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டான்? அல்லது பவுலின் நாமத்தினாலோ ஞானஸ்நானம் பெற்றீர்கள்?’ என்கிற கேள்விகளுக்கு ‘இல்லை!’ என்பதே உரத்த பதிலாகும். 1கொரி 1:13. கிறிஸ்து பிரிந்திருக்கவில்லை. நமக்காக சிலுவையில் அறையப்பட்டது கிறிஸ்துவே. நாம் ‘பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே’ ஞானஸ்நானம் பெற்றோம். மத் 28:19.

நாம் ‘கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறோம்.’ 1கொரி 12:27. சரீரத்தில் பல உறுப்புகள் இருந்தாலும், ஒவ்வொன்றும் தனித்தனி செயல்பாட்டைக் கொண்டிருந்தாலும், அது இன்னும் ஒரே சரீரமாகவே இருக்கிறது. சரீரம் சரியாக இயங்குவதற்கு, ஒவ்வோர் உறுப்பும் தன் திறனுக்கேற்ப தன் பணியைச் செய்யவேண்டும். பவுல் ஒரே மாதிரியான தன்மையை அல்ல, ஒற்றுமையாகச் செயல்படுவதை எதிர்பார்ப்பதை இந்த உருவகம் சுட்டிக்காட்டுகிறது. அவர் வேற்றுமையில் ஒற்றுமையைத் தேடுகிறார். பன்முகத்தன்மை இருந்தாலும், அதற்குள் ஒற்றுமை நிலவவேண்டுமென எதிர்பார்க்கிறார்.

எல்லா எண்ணங்களும் கருத்துகளும் நம் கர்த்தராகிய கிறிஸ்துவுக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டும். கிறிஸ்துவே நம் கர்த்தர் என்பது பவுல் வலியுறுத்துகிற மிகமுக்கியமான ஒரு கருத்து; அதனால்தான் 1கொரிந்தியர் நிருபத்தின் துவக்கத்திலேயே இதை மீண்டும்மீண்டும் வலியுறுத்துகிறார். 1கொரி 1:2,7,8,9, 10. கும்பல்கள், தலைவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையை அணுகுவதற்கு முன்பாக, நம் அனைவருக்கும் இயேசுவே கர்த்தராக இருக்கிறார் என்பதை முதலில் உறுதிப்படுத்துகிறார். திருச்சபை என்பது மனிதத்தலைவர்களை மையமாகக் கொண்டது அல்ல, இயேசுவையே மையமாகக் கொண்டது.

1கொரிந்தியர் நிருபத்தின் ஆரம்ப வசனங்களில் இயேசுவின் கர்த்தத்துவத்தை பவுல் வலியுறுத்துகிறார்; அதன் அடிப்படையிலேயே, ‘ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் சீர்பொருந்தியிருக்கவேண்டும்’ என்று கூறுகிறார். 1கொரி 1:10. ‘சீர்பொருந்தியிருத்தல்’ என்பதற்கான கிரேக்கச் சொல் **கதார்டிசோ;** ஒரு விஷயத்தை சரியான நிலைக்கு மீண்டும் கொண்டுவருவதை அது குறிக்கிறது. மனித தலைவர்களைச் சுற்றி கும்பல்கள் உருவாகினால், சபைக்குள் உறவுகளை மீண்டும் சரியான நிலைக்குக் கொண்டுவரவேண்டும்; இது கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒற்றுமையின் மூலமாகவும், சுயத்தை வெறுப்பது மூலமாகவும்மட்டுமே சாத்தியமாகும்.

---

**கடந்த சில தசாப்தங்களாக, செவன்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் சில பகுதிகள் சிறுகுழு வேத ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றன. உட்கும்பல்களுக்கும் சிறுகுழுக்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன? சிறுகுழுக்கள் உட்கும்பல்களாக மாறிவிடாதபடி எப்படி எச்சரிக்கையாக இருக்கலாம்?**

# ஞானமும் முதிர்ச்சியும்

மனிதத்தலைவர்களை மிக உயர்வாகக் கருதுவதாலேயே உட்கும்பல்கள் உருவாகின்றன. இது சபையின் ஒற்றுமைக்கும், உறுப்பினர்களின் ஆவிக்குரிய நலனுக்கும் அச்சுறுத்தலாக அமைகிறது; சபையில் கிறிஸ்தவ ஊழியம்பற்றிய சரியான புரிதல் இல்லாவிட்டால், சில தலைவர்களுக்கு அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கவும், மற்றவர்களை மதிக்காமல் இருக்கவும் வழிவகுக்கிறது. இதனால் போட்டிச் சூழல் உருவாகி, சபையைப் பிளவுபடுத்துகிறது. மனித தலைவர்களை கிறிஸ்தவ அடையாளத்தின் மையமாக கருதினால், நம் வாழ்வில் கிறிஸ்துவுக்குக் கொடுக்கவேண்டிய இடத்தைக் கொடுக்கமாட்டோம்.

**கொரிந்தியர்களின் ஆவிக்குரிய முதிர்ச்சியின்மையை 1கொரி 3:1– 4 இல் பவுல் எவ்வாறு விவரிக்கிறார்?**

ஆவிக்குரிய முதிர்ச்சியால் தேவனுடைய ஞானத்தை விசுவாசிகள் புரிந்து வாழமுடியுமென பவுல் கூறுகிறார். 1கொரி 2:6,7. இந்த ஞானத்தை ஆவியானவர் நமக்குத் தெரிவிக்கிறார். 1கொரி 2:13. இது இப்பிரபஞ்சத்தின் ஞானத்திற்கும் மனித ஞானத்திற்கும் முரணானது. 1கொரி 2:6; 2:13. தேவனுடைய ஞானம் கிறிஸ்துவின் சிலுவையில் வெளியரங்கமானது. 1கொரி 2:1-4. அதாவது, கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்த்தெழுதலில் தேவ ஞானம் வெளிப்படுகிறது. எனவே, ஒற்றுமையாக இருக்கும்படி மீண்டும் வேண்டிகொள்வதற்குமுன், கிறிஸ்துவுக்குள் இருக்கும் மெய்ஞானத்தையும் முதிர்ச்சியையும் பெற்றிருக்கவேண்டிய அவசியத்தை விசுவாசிகள் புரிந்துகொள்ள விரும்புகிறார். 1கொரி 3:1-17.

ஞானமும் முதிர்ச்சியுமுள்ள கிறிஸ்தவர்கள் ஆவிக்குரியவர்கள்; அவர்கள் மாம்சத்திற்குரியவர்களோ குழந்தைகளைப் போன்றவர்களோ அல்ல. 1கொரி 3:1. அவர்கள் ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள், ஏனென்றால் 'ஆவிக்குரியவைகள், ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படும்.' 1கொரி 2:13,14. ஞானமும் முதிர்ச்சியுமுள்ள கிறிஸ்தவர்கள் பாலையல்ல, பலமான ஆகாரத்தை உட்கொள்ளுகிறார்கள். 1கொரி 3:2; எபி 5:12. 'பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.' எபி 5:13,14. ஞானமும் முதிர்ச்சியுமுள்ள கிறிஸ்தவர்கள் வெவ்வேறு மனிதர்களைக் குறிப்பிட்டு, 'நான் பவுலைச் சேர்ந்தவன்', 'நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன் என்று சொல்லமாட்டார்கள். 1கொரி 3:4.

ஏனென்றால் இவர்களைப்போல அவர்கள் அனைவருமே 'தேவனுக்கு உடன்வேலையாட்களாய்' இருக்கிறார்கள். 1கொரி 3:9. ஒரு சபையாக நாம் தேவனுடைய பண்ணையும், மாளிகையும், ஆலயமுமாகவும் இருக்கிறோம். 1கொரி 3:9,16,17. நாம் அனைவரும் கிறிஸ்துவின்மூலமாக தேவனுக்கு சொந்தமானவர்களாக இருக்கிறோம். 1கொரி 3:11.

---

**நீங்கள் மிகவும் மதித்துப்போற்றிய ஒருவரால் நீங்கள் ஏமாந்த அனுபவம் உண்டா? அப்படி ஒரு அனுபவம் ஏற்பட்டிருந்தால், அதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் என்ன?**

# கிறிஸ்துவைப்போன்ற தாழ்மை ஊழியம்

**மனித தலைவர்களைப்பற்றி ஒருவரிடம் காணப்படவேண்டிய சரியான பார்வையைக் குறித்து 1கொரி 4:1,2 என்ன சொல்கிறது?**

---

---

ஆவிக்குரிய முதிர்ச்சியின்மையால்தான் உட்கும்பல்கள் உருவாவதாக பவுல் உணர்த்துகிறார். 1கொரி 3:1-4. ஆனாலும், இந்த விஷயத்தைப்பற்றிப் பேசுவதற்கு முன்பாக, 'எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது' என்று உறுதிப்படுத்துகிறார். 1கொரி 2:16. இந்தச் சொற்றொடர் கிறிஸ்துபோல சிந்திப்பதையும் செயல்படுவதையும் குறிக்கிறது. அதாவது, கிறிஸ்துவைப்போல ஒரு விசுவாசி சிந்தித்துச் செயல்படும்போது, அவர் 'கிறிஸ்துவின் சிந் தையை' கொண்டிருக்கிறார். ஆனால், வாழ்வின் எல்லாக் காரியங்களிலும் இந்தச் சிந்தையை நடைமுறைப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல. கிரேக்க -ரோம உலகில் அரசியல் பிரமுகர்கள், தத்துவவாதிகள், சிந்தனையாளர்கள், மதத் தலைவர்களிடையே பெரும் போட்டி நிலவியது. கலாச்சார அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்கிற ஏக்கம், கொரிந்து சபையை உலகப்பிரகாரமான தரநிலைகளைப் பின்பற்றத் தூண்டியது. இது இன்றைய சபைக்கும்கூட ஓர் ஆபத்தே.

**1கொரி 2:16இல் வருகிற 'கிறிஸ்துவின் சிந்தை' என்கிற சொற்றொடரைப் புரிந்து கொள்ள பிலி 2:5–8 எவ்வாறு உதவுகிறது?**

கொரிந்து பட்டணத்தைப்போல, பிலிப்பி பட்டணத்து சபையிலும் பிரிவினைகள் ஏற்பட்டன. பிலி 2:1-4. ஒருவேளை அங்குச் சற்றுக் குறைவாக இருந்திருக்கலாம். கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையான ஊழியம்செய்ய, சுயத்திற்கு மரிப்பதும், சுயநல ஆசைகளைத் துறப்பதும் அவசியம். பிலி 2:1-8. மேலும் இயேசு செய்ததைப்போல, மற்றவர்களை நம்மைவிட உயர்வாக எண்ணி அவர்களை ஆசீர்வதிக்க முற்படவும் அது போதிக்கிறது.

'கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள்' என்று பவுல் குறிப்பிடுகிற சொற்றொடர், கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையான ஊழியத்துவத்தையே குறிக்கிறது. 1கொரி 4:1. அவர்கள் கிறிஸ்துவுக்கு உதவியாளர்கள், அல்லது அவருக்குப் பணிந்து சேவைசெய்பவர்களாக இருப்பார்கள். கிறிஸ்துவின் தலைமைத்துவ முன்மாதிரியை அடிப்படையாகவைத்துப் பார்ப்பதே, மனிததலைவர்களைப்பற்றிய சரியான பார்வையாக இருக்கும் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. மேலும், இந்த ஊழியர்கள் 'உக்கிராணக்காரர்கள்' என்றும் சித்திரிக்கப்படுகிறார்கள். 1கொரி 4:1,2. உக்கிராணக்காரர் என்பவர் வேறொருவருடைய சொத்தை நிர்வகிக்கிற பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட நபர். நமக்கு எது இருந்தாலும், இறுதியில் அது கிறிஸ்துவுக்கே உரியது.

**பிலி 2:5–8 இன் செய்தியை ஜெபத்தோடு தியானியுங்கள். நம்மேல் தேவன் வைத்துள்ள சுயத்தை மறுக்கிற அன்பைப்பற்றி இது நமக்கு என்ன சொல்கிறது? மேலும், நம்முடைய சூழலில் இந்த அன்பைப் பிரதிபலிக்க, நாம் ஏன் சுயத்திற்கு மரிக்கவேண்டும்?**

# சிலுவையைப் பிரதிபலிக்கிற வாழ்க்கைமுறை

நாம் கும்பல்களாகப் பிரிந்து செயல்படக்கூடாது. குறிப்பாக மனித தலைவர்களைச் சுற்றி அணிதிரளக்கூடாது என்றால், நமது தலைவர்களுக்கு ஆதரவு அளிக்கக்கூடாது என்று அர்த்தமல்ல. திருச்சபைப் பணிகளில் முன்னின்று வழி நடத்துபவர்களை நாம் மதித்து, அவர்களுக்கு உதவவேண்டும். பூமியில் தமது ஊழியத்தைச் செய்ய தேவன் மனிதர்களை நியமிக்கிறார். சிலுவை வெளிப் படுத்துகிற கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கையை வாழுகிற திருச்சபை தலைவர்கள், நாம் செவிகொடுக்கவும் பின்பற்றவும் தகுதியானவர்கள்.

ஏனென்றால், தந்திரமான எந்தவொரு போக்கையும் மாற்றி, தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படியச்செய்கிற வல்லமை சிலுவைக்குமட்டுமே உண்டு. கிறிஸ்துவைப்போன்ற தலைவர்கள் தங்கள் ஊழியத்தின் வெற்றிக்கு தேவனைமட்டுமே காரணராகக் கருதுகின்றனர். இயேசு கிறிஸ்து மனிதராகப் பூமியில் ஊழியஞ் செய்தபோதுகூட, தேவனுக்கே மகிமையைச் செலுத்தினார். யோவான் 17:4.

பவுல் சொல்கிறபடி, உண்மையான கிறிஸ்தவ ஊழியமானது நாம் சிலுவையின் இறையியலின்மேல் கட்டப்படவேண்டும். சிலுவையானது தேவ ஞானம், இரட்சண்ய வல்லமையின் வெளிப்பாடாகும். அதே சமயம், மனித ஞானம் முட்டாள்த்தனம் என்பதை அது காட்டுகிறது. 1கொரி 4:1-13 இல், சிலுவையினுடைய இறையியல் தன்மைபற்றி பவுல் தெளிவுபடுத்துகிறார். **முதலாவதாக,** கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கான தரநிலையை தேவனே நிர்ணயிப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். 1கொரி 4:1-5. **இரண்டாவதாக,** பாடனுபவிப்பது உண்மையான கிறிஸ்தவ ஊழியத்தின் அடையாளம் என்று காட்டுகிறார். 1கொரி 4:9, 11-13. இந்த இரண்டாவது கருத்தை விரிவாக விளக்கவேண்டியது அவசியம்.

**கிறிஸ்துவுக்காகப் பாடுபடுவதுபற்றி 2கொரி 11:23–28; கொலோ 1:24 சொல்வது என்ன?**

கிறிஸ்தவத் தலைவர்கள் தங்கள் சகோதர சகோதரிகளுக்காகப் பாடுபடவும், தேவைப்பட்டால் தங்கள் ஊழியத்திற்காக மரிக்கவும் ஆயத்தமாக இருப்பதன்மூலம், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறார்கள். பவுல் தன்னையும் அப்பொல்லோவையும் ‘மரணத்திற்கு நியமிக்கப்பட்டவர்கள்’ என்று குறிப்பிடுகிறார். 1கொரி 4:9. அவர்கள் பசியிலும், தாகத்திலும், ஆடையில்லாமலும், ‘குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாக’ இருந்தார்கள். 1கொரி 4:11. அதுமட்டுமல்லாமல், நிந்திக்கப்பட்டார்கள்; துன்புறுத்தப்பட்டார்கள்; அவதூறு செய்யப்பட்டார்கள்; ‘உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவும்’ எண்ணப்பட்டார்கள். 1கொரி 4:12,13. மேலும், கொரிந்தியர்களை செல்வந்தர்கள், ராஜாக்கள், ஞானிகள், கனத்திற்குரியவர்கள் என்று முரண்பாடாகக் குறிப்பிடுவதன்மூலம் உண்மையான கிறிஸ்தவத் தலைமைதுவத்தில் பெருமைக்கு இடமே இருக்கக் கூடாது என்பதை பவுல் காட்டுகிறார். 1கொரி 4:8,10. ஏனெனில் அந்தப் பெருமையே சபையில் பிரிவினைக்கு வேராக இருக்கிறது. 1கொரி 4:6.

---

**சபையில் உங்கள் பொறுப்பு எதுவாக இருந்தாலும், கிறிஸ்துவுக்காக நீங்கள் எவ்வளவு பாடுபட்டிருக்கிறீர்கள்? உங்கள் பதிலிலிருந்து என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?**

# மேலும் படிக்க:

'தேவனுடைய சத்தியத்தை நம்புகிற மீதமான மக்களின் ஒருமைப்பாடும் ஐக்கியமும் தான், அவர்கள் சத்தியத்தைப் பெற்றிருப்பதையும், தேவன் தெரிந்துகொண்ட தனித்துவ மக்களாக இருப்பதையும் உலகத்திற்குக் காட்டுகிற வலிமையான சாட்சியாக உள்ளன. இந்த ஒருமைப்பாடும் ஒற்றுமையும் சத்துருவைக் கலக்கமடையச் செய்கின்றன; அது காணப் படவே கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறான். தற்கால சத்தியத்தை இருதயத்தில் விசுவாசித்து, அதை வாழ்க்கையில் வெளிப்படுத்தும்போது, அது தேவனுடைய மக்களை ஒன்றிணைக்கிறது, மேலும் அவர்களுக்கு ஒரு வல்லமையான செல்வாக்கைக் கொடுக்கிறது.'[1]

'நித்திய சத்தியம் என்னும் தளத்தின்மீது முற்றிலும் ஒற்றுமையுடன் நிற்பதற்கு தேவன் ஒருகூட்டமக்களை வழிநடத்திவருகிறார். "நற்கிரியைகளைச்செய்யபக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி" கிறிஸ்து தம்மையே உலகத்திற்காக ஒப்புக்கொடுத்தார். சபையை சகல அநீதியிலிருந்தும், பிரிவினை மற்றும் வாக்குவாத ஆவியிலிருந்தும் சுத்திகரிப்பதற்கே இந்தச் சுத்திகரிப்பு செயல்முறை திட்டமிடப்பட்டுள்ளது; இதன் மூலம் அவர்கள் ஒருவரை ஒருவர் வீழ்த்துவதற்குப் பதிலாகக் கட்டியெழுப்பவும், தங்களுக்கு முன்னாலுள்ள மாபெரும் பணியில் தங்கள் ஆற்றலை ஒருமுகப்படுத்தவும் முடியும். தேவனுடைய மக்கள் அனைவரும் விசுவாசத்தின் ஒருமைப்பாட்டிற்குள் வரவேண்டும் என்பதே தேவ திட்டம். தாம் பிதாவோடு ஒன்றாயிருந்ததுபோல, தம்முடைய சீடர்களும் ஒன்றாயிருக்கவும், அதன் மூலம் பிதா தம்மை அனுப்பினதை உலகம் நம்பவும் வேண்டுமென்று தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு சற்றுமுன்பாக இயேசு வேண்டிக்கொண்டார். மிகவும் உருக்கமும் அற்புதமுமான இந்த ஜெபம், பல தலைமுறைகளைக் கடந்து நம் காலம்வரை வந்தடைகிறது; ஏனெனில், "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்பதே அவருடைய வார்த்தைகளாக இருந்தது'.[2]

[1] Ellen G. White, Testimonies for the Church, vol. 1, p. 327.

[2] Ellen G. White, Testimonies for the Church, vol. 4, p. 17.

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *இயேசு தமது பூலோக ஊழியத்தின் இறுதிக்கட்டத்தில், 'அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கவும்' வேண்டும் என்று ஒற்றுமைக்காக ஜெபித்தார். யோவான் 17:21–23. கிறிஸ்துவுக்குள் காணப்படுகிற ஒற்றுமையானது தேவன் உலகத்தை இரட்சிக்கத் தம் குமாரனை அனுப்பினார் என்கிற சத்தியத்திற்கு ஏன் வலிமையான சான்றாக அமைகிறது? ஒற்றுமையின்மை திருச்சபையின் ஊழியத்திற்கு ஏன் ஒரு தடையாக இருக்கிறது?*

2. *1கொரி 4:9–13 இல், அப்போஸ்தலர்களைப்பற்றிச் சொல்லப்படுவது, இன்றைய உலகம் மதிக்கிற தலைமைத்துவப் பண்புகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? தேவனுடைய தரநிலைகளும் இந்த உலகத்தின் தரநிலைகளும் வித்தியாசமானவை என்பதைப்பற்றி இந்தப் பகுதி நமக்கு என்ன கற்பிக்கிறது?*

3. *1கொரி 4:16 ல், தன்னைப் பின்பற்றுமாறு கொரிந்தியர்களை பவுல் அறிவுறுத்துகிறார். நீங்கள் ஒரு மனித தலைவரைப் பின்பற்ற ஆயத்தமாக இருப்பீர்களா? ஒரு தலைவரைப் பின்பற்றுவதற்கும், அதே சமயம் அந்தத் தலைவரைத் தேவையற்ற, ஆபத்தான வகையில் உயர்த்துவதற்கும் இடையே வேறுபாடு என்ன?*

# இரண்டு கனவுகள்

டான்டே ஹெர்மனுக்கு இரண்டு கனவுகள் இருந்தன: ஒன்று கோடீஸ்வரராவது, அல்லது பச்சை குத்தும் கலைஞராவது. 12 வயதில் தனது முதல் கனவை ஆவலுடன் மற்றவர்களிடம் சொன்னபோது, அனைவரும் சிரித்தனர். "நீ பணக்காரனாவதற்கு, கடினமாக உழைக்கவேண்டும்" என்று சொன்னார்கள்.

"இல்லை, உழைக்காமலேயே என்னால் கோடீஸ்வரன் ஆகமுடியும்" என்று டான்டே பதிலளித்தார். அவரது கனவு நனவாக ஓர் அற்புதம் தேவைப்பட்டது.

உண்மையில் டான்டே ஒரு அதிசயமான குழந்தைதான். அவரது தாய்க்கு பல ஆண்டுகளாக குழந்தை இல்லை, இறுதியில் மருத்துவர்களும் அவரிடம் முயற்சியைக் கைவிடுமாறு கூறிவிட்டனர். அதன்பிறகுதான் டான்டே பிறந்தார். ஆனால் அவர் மிகவும் பெலவீனமாக இருந்ததால், உயிர்ப்பிழைக்க வெப்பமண்டல காலநிலைக்குச் செல்லவேண்டும் என்று மருத்துவர்கள் கூறினர். எனவே, அவரது பெற்றோர் ஜெர்மனியிலிருந்த தங்கள் வீட்டை விட்டு வெளியேறி, வடமேற்கு ஆப்பிரிக்காவின் கடற்கரையிலிருந்த ஸ்பானிஷ் தீவுக்கூட்டமான கேனரி தீவுகளில் குடியேறினார்கள்.

16 வயதாகியும், கோடீஸ்வரனாக அல்லது பச்சை குத்தும் கலைஞனாக எந்த அறிகுறியும் தெரியவில்லை. அதிக சுறுசுறுப்பான இளைஞனாக இருந்த டான்டே, ஆசிரியர்களின் அறிவுரைப்படி உயர்நிலைப்பள்ளியிலிருந்து விலகி, கைவினைஞராக வேலைசெய்யத் தொடங்கினார். ஆனால் அந்த வேலை கடினமாகவும், ஊதியம் குறைவாகவும் இருந்தது. இதனால் அவர் போதைப்பொருள் விற்கத் தொடங்கினார். ஒரு வருடம் கழித்து, அவர் பிசாசுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்; போதைப்பொருள், கட்டுக்கடங்காத வாழ்க்கை மற்றும் ராக் இசைக்காக தனது ஆத்துமாவையே கொடுக்க முன்வந்தார். தனது கையில் பச்சை குத்திக்கொண்டதன் மூலம் அந்த ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தினார்.

சிறிது காலம், டான்டே மகிழ்ச்சியாகவே உணர்ந்தார். அவர் கோடீஸ்வரராகவில்லை என்றாலும், பணத்திற்கும் இன்பத்திற்கும் குறைவே இல்லை என்பதுபோலத் தோன்றியது. ஆனாலும், தன் இதயத்தில் ஒரு வெறுமையை உணர்ந்தார். தான் விற்கும் போதைப்பொருள் மற்றவர்களின் வாழ்க்கையைச் சீரழிப்பதைக் கண்டவர், 'மற்றவர்களின் அழிவில் நீ பணக்காரனாவது சரி என்று நினைக்கிறாயா?' என்று தன்னுள் ஒரு குரல் கேட்பதை உணர்ந்தார்.

காவல்துறையினரால் அவருக்குப் பிரச்சினைகள் வந்தன, அதனால் ஜெர்மனிக்குத் தப்பி ஓடினார். தனது 25 வது வயதில் டான்டே மீண்டும் கேனரி தீவுகளுக்கேத் திரும்பினார். அவர் போதைப்பொருள் பழக்கத்தைக் கைவிட்டார், அவருடைய நண்பர் ஒருவர் அவருக்குப் பச்சை குத்தும் கலையைக் கற்றுக்கொடுத்தார். அதில் அவருக்கு நல்ல வருமானம் கிடைத்தது, இருப்பினும் அது அவரை ஒரு பெரிய செல்வந்தராக மாற்றப் போதுமானதாக இல்லை.

பிறகு, அவரது அப்பாவும் அவரை பணக்காரனாக்க ஒரு திட்டத்தைச் சொன்னார்.

அதே நேரத்தில், டான்டேவின் நண்பர் அவருக்கு ஒரு வேதாகமத்தைக் கொடுத்தார், 'கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்' என்கிற வசனத்தை வாசித்தார். நீதி 10:22. 'நான் என் இருதயத்தை தேவனிடம் கொடுத்தால், அவர் என்னை ஆசீர்வதித்து செல்வந்தனாக்குவார்' என்று நினைத்தார். இன்று, டான்டே ஒரு செல்வந்தராக இருக்கிறார், ஆனால் உலகத் தரத்தின்படியான செல்வத்தால் அல்ல. ஜெர்மனியில் செவன்த்–டே அட்வென்டிஸ்ட் போதகராக இருக்கிறார் டான்டே.

பாடம் 4 ஜூலை 18-24



# திருச்சபையில் பாவம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1கொரி 5:1–13; 2கொரி 2:5–10; 1கொரி 6:1–13; 1தெச 4:1–8; 1கொரி 6:19–7:9.

**மனன வசனம்:** உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிறபரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். 1கொரி 6:19,20.

நமது மூளை பஞ்சு போன்றது: நமது புலன்கள்வழியாக எதை உள்ளே கொண்டு வந்தாலும், அது அதற்குள்ளேயே தங்கிவிடும். உள்ளே வரும் பெரும்பாலான விஷயங்களை நாம் உணராமல் இருக்கலாம்; அனைத்தையும் நாம் நினைவில் வைத்திருந்தால், நம்மால் தெளிவாகச் சிந்திக்கமுடியாது. ஆனால் அவை அனைத்தும் அங்கேயே இருந்து, குறிப்பிட்ட அளவிற்கு நம் சிந்தையிலும் உணர்ச்சியிலும் செயலிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

அதனால்தான் கிறிஸ்தவர்களாக இருந்தாலும்கூட, நம்மைச் சுற்றியுள்ள தீய விஷயங்கள் நம்மை எளிதில் பாதிக்கின்றன. கிறிஸ்தவத் திருச்சபை ஆரம்பத்திலிருந்தே இந்தப் பிரச்சனையுடன் போராடி வருகிறது. உதாரணமாக, ஞாயிறு ஆராதனை எங்கிருந்து வந்தது? திருச்சபை அதைத் தானாகவே உருவாக்கியதா? நிச்சயமாக இல்லை. சுற்றியிருந்த கலாச்சாரத்திலிருந்து வந்தது.

இதே நியதி கொரிந்துவில் வெளிப்படுவதைக் காணலாம். முதலில் கோஷ்டிப்பூசல்கள் வேண்டாம் என்று எச்சரித்தார். 1கொரி 1-4. தொடர்ந்து, பாலியல் ஒழுக்கக்கேடு, வழக்குகள், விபசாரம், திருமண வாழ்க்கை, பிரம்மச்சரியம் தொடர்பான பிரச்சினைகளைப்பற்றிப் பேசுகிறார். 1கொரி 5-7. உலகத்தின் தரநிலைகள் அவர்களைப் பெருமளவில் பாதித்திருந்தன. 1கொரி 1-4 இல் சித்திரிக்கப்பட்ட கோஷ்டிப் பூசல்கள், ஒழுக்கக்கேடான நடத்தைகளுக்கு வழி வகுத்தன; அதுபற்றியே அடுத்தடுத்த அதிகாரங்களில் கண்டிக்கிறார். திருச்சபையிலுள்ள இந்தப் பாவத்தை பவுல் எவ்வாறு கையாள முயலுகிறார்? அவரது எழுத்துகளிலிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?

*2026, ஜூலை 25 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# விசுவாசத்திற்கும் செயலுக்கும் இடையே முரண்பாடு

சபை இருக்கவேண்டிய விதத்தைத் தீர்மானிக்க இறையியலாளர்களும், போதகர்களும், சாதாரண மக்களும் புதிய ஏற்பாட்டை கிறிஸ்தவ வரலாறு முழுவதும், ஆராய்ந்துள்ளனர். உதாரணமாக, அப்போஸ்தலர் நடபடியில் சொல்லப்படுகிற சபை நம்மை ஆச்சரியப்படுத்தலாம். ஆனால் மனிதர்கள் என்றாலே பிரச்சினைகள் இருக்கும். சபை எப்படி இருக்கக்கூடாது என்பதைப்பற்றி வேதாகமம் சொல்வதைக் கண்டறிய நாம் புதிய ஏற்பாட்டைப் படிக்கலாம். இதற்குக் கொரிந்தியர்களுக்கு பவுல் எழுதிய நிருபங்கள் ஒரு சிறந்த துவக்கப்புள்ளியாகும்.

**1கொரி 5:1-13 இல், பவுல் விவரிக்கிற அதிர்ச்சியூட்டுகிற சூழ்நிலை என்ன? அது ஏன் அவ்வளவு வேதனைக்குரியதாக இருக்கிறது?**

---

'தன் தகப்பனுடைய மனைவியை' என்று, ஒருவனுக்கும், அவனது மாற்றாந்தாய்க்கும் இடையிலான முறையற்ற உறவை பவுல் குறிப்பிடுகிறார். 1கொரி 5:1. இந்தப் பிரச்சினையைப்பற்றி அநேகமாக 'குலோவேயாள் வீட்டார்' தெரிவித்திருக்கலாம். 1கொரி 1:11. இத்தகைய முறையற்ற உறவு 'அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத' ஒரு பயங்கரமான பாவம். 1கொரி 5:1. ஆரம்பக்காலக்கிறிஸ்தவச் சபை ஒன்றிலேயே இது நடக்கிறதா? சபை உறுப்பினர் ஒருவர் அவ்வாறு செய்தாரென்கிற அறிக்கையைக் கேட்டு, பவுல் அதிர்ச்சியடைந்தார். 1கொரி 5:1,2.

அதைவிட மோசம் என்னவென்றால், அந்தச் சூழ்நிலைக்காக வருந்துவதற்குப் பதிலாக, கொரிந்தியர்கள் அத்தகையப் பாவத்தைப் பொறுத்துக்கொண்டு, அதில் பெருமையும் அடைந்தார்கள். அது பவுலுக்கு மேலும் அதிர்ச்சியாக இருந்தது. 1கொரி 5:1,2. எனவே, ஒழுக்கக்கேடாக நடந்துகொண்ட அந்த மனிதனை மட்டுமல்ல, விசுவாசத்திற்கும் செயல்பாட்டிற்கும் இடையே வெளிப்படையாகவே முரண்பட்ட அந்தச் சபையையும் திருத்த முற்படுகிறார். அந்தத் தவறான உறவிலிருந்த மனிதனிடம் சபை காட்டிய மெத்தனமான அணுகுமுறையைத் திருத்த முற்படுகிறார். அவர்கள் அத்தகையப் பாலியல் ஊழலைப்பற்றிப் பெருமைப்பட்டதையும், அதைப்பற்றி மேட்டிமையாகப் பேசியதையும் பவுலால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த மக்களுக்கு என்னதான் ஆயிற்று?

முறையற்ற உறவிலிருந்த அந்த மனிதனிடம் கொரிந்து சபை அவ்வளவு சகிப்புத்தன்மையுடன் நடந்துகொண்டதற்கான விளக்கம் நம்மிடம் இல்லை. ஒருவேளை, சபைக்கு ஆதாயமான ஒரு செல்வந்தராக இருந்தாரோ? 'எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு' என்கிற எண்ணத்தால், அவர்கள் அதை ஒரு பெரிய விஷயமாகக் கருதவில்லையோ? நமக்குத் தெரியவில்லை. 1கொரி 6:12.

உண்மையான காரணங்கள் எதுவாக இருந்தாலும், வேதவசனங்களை நேரடியாகவே மீறியதைக்கண்டும் காணாத குருடர்கள் போலானார்கள். அதுமட்டுமின்றி, அதைப்பற்றிப் பெருமையும் கொண்டனர்.

---

**வேதவசனங்கள் தெளிவாகக் கண்டிக்கிற எந்தெந்த விஷயங்களை 'அன்பு', 'ஏற்றுக்கொள்ளுதல்' என்கிற பெயரில் சபையாகிய நாம் சகித்துக்கொள்ளும்கிற அபாயத்தில் இருக்கிறோம்?**

# ஊழல்களை எவ்வாறு கையாளுவது

பாலியல் தொடர்பான விஷயங்களைக் கையாளுவது எப்போதும் கடினமானது. அது பவுலுக்கும் கடினமாக இருந்தது, நமக்கும் அப்படியே. இத்தகையச் சூழல்களில், நாம் வேதவசனங்கள் சொல்கிறபடி நடக்கவேண்டும், ஜெபத்தோடும் அன்போடும் இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும். நம் நோக்கம் ஒருவரைச் சீர்ப்படுத்துவது என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

**இந்தச் சூழ்நிலையை எவ்வாறு கையாளும்படி கூறுகிறார்? 1கொரி 5:1–13.**

பாலியல் ஊழல்களில் சபை ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்; அதை 1கொரி 5 இல் தெளிவுபடுத்துகிறார். முறையற்ற உறவிலிருந்த அந்த மனிதனைச் சபையிலிருந்து நீக்கவேண்டும்; நியாயந்தீர்க்கவேண்டும்; சாத்தானிடம் ஒப்புக் கொடுக்கவேண்டும்; அவனை ‘தள்ளிப்போட’ வேண்டும். 1கொரி 5:2,5,13. சபை உறுப்பினர்கள் அவனோடு ‘கலந்திருக்கக்கூடாது’. 1கொரி 5:9, 11. ‘அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது’ 1கொரி 5:11. பவுல் பயன்படுத்தும் கடுமையான வார்த்தைகள் நவீனக்காலத்தவருக்கு தர்மசங்கடமாகத் தோன்றலாம், ஆனால் அந்தக் கால வரலாற்றுச் சூழலோடு பொருத்தி, அவரது வார்த்தைகளைப் பார்க்கவேண்டும். பகிரங்கமான, பாவமான வாழ்க்கைமுறையைக் கையாளும்போது அவ்வாறு பேசுகிறார். பொதுவாக, இத்தகையத் தீவிரமான சூழல்களில், கடுமையான வார்த்தைகள் அவசியமாகின்றன. அவர் பயன்படுத்திய சில வார்த்தைகளுக்கான சுருக்கமான விளக் கம் உதவியாக இருக்கும்.

**‘உங்களைவிட்டுத் தள்ளிப்போடுங்கள்’** 1கொரி 5:2; 5:13. இது சபை ஒழுங்கு நடவடிக்கையைக் குறிக்கிறது.

**‘அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்’** 1கொரி 5:5. அந்த மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அவரது பாதுகாப்பின்கீழ் இருக்க விரும்பாததால், சாத்தானின் தாக்குதல்களுக்கு ஆளாகிறான். எனவே, இது ‘தனது முடிவுகளின் பலனை அவனே அறுவடை செய்யட்டும்’ என்கிற அர்த்தத்தைக் கொடுக்கிறது.

**‘கலந்திருக்கக்கூடாது’**. 1கொரி 5:9,11. ‘அப்படிப்பட்டவனுடனே புசிக்கவுங் கூடாது’ 1கொரி 5:11. பாலியல் ஒழுக்கக்கேட்டில் ஈடுபடுபவர்களுடன் நெருங்கியத் தொடர்புவைத்திருப்பது ஆபத்தானது, ஏனெனில் அவர்கள் மற்றவர்களையும் தங்கள் நடத்தையைப் பின்பற்றத் தூண்டக்கூடும். பண்டையக் காலங்களில், ஒருவருடன் சேர்ந்து உணவருந்துவது அவர்களின் விழுமியங்களைப் பகிர்ந்து கொள்வதாகவும் கருதப்பட்டது. நம்மைச் சுற்றியுள்ள செல்வாக்குகளால் நாம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது, எனவே இதுபோன்ற விஷயங்களைக் கையாளும்போது நம்மால் முடிந்தவரை நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

**‘அப்படிப்பட்டவனுடைய ஆவி இரட்சிக்கப்படும்படி’**. 1கொரி 5:5. சபை ஒழுங்கு நடவடிக்கை ஒருவரைச் சீர்ப்படுத்தவே எடுக்கப்படுகிறது. பாவிகள் தங்களை நிதானித்து அறிந்துகொள்ளச் செய்வதும், பாவமான வாழ்க்கைமுறையைக் கைவிடச் செய்வதுமே நோக்கமாகும். இதையே ‘மாம்சத்தின் அழிவு’ என்று என்கிறார். 1கொரி 5:5. மேலும், 1கொரி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள அந்த நபர், பின்னர் மனந்திரும்பியதாகச் சொல்லப்படும் நபராக இருக்கவும் வாய்ப்புள்ளது. 2கொரி 2:5-10. தவறு செய்த உறுப்பினரை மீண்டும் சபையின் ஐக்கியத் தில் சேர்க்கும்போது, சபை ஒழுங்கு நடவடிக்கையின் நோக்கம் முழுமையடைகிறது.

# சபையின் அடையாளத்தைப் பாதுகாத்தல்

சபை மக்களிடையே ஏற்படும் பிரச்சினைகளை கிறிஸ்தவர்கள் அணுக வேண்டியவிதம்குறித்து 1கொரி 6:1-11 இல் பவுல் தொடர்கிறார்.

**கொரிந்தியர்களுக்கும் நமக்கும் பவுல் கற்றுக்கொடுக்க விரும்புவது என்ன? 1கொரி 5:3,12,13; 6:1-13.**

1கொரி 6:1 இலுள்ள 'வழக்கு' என்பதற்கான கிரேக்க வார்த்தை **பிராக்மா**; இதற்கு 'விஷயம்' என்று அர்த்தம். இங்கே, சட்டரீதியான ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகிறார். 1கொரி 6:1-11 வசனங்கள் குற்றவியல் வழக்கைக் குறிக்க வில்லை. குற்றவியல் விவகாரங்களில் உரிமையியல் நீதிமன்றங்களுக்கே அதி காரம் உண்டு. ரோமர் 13:1-5. பாலியல் ஒழுக்கக்கேட்டை சட்டரீதியாகக் கையாள வேண்டியதை உபாகமம் 22:22-24 இல் மோசேயும், இங்கே பவுலும் வலியுறுத்து கிறார்கள். சபையிலுள்ள பிரச்சினைகளை பவுல் கையாண்ட முறை வேதவசனங் களை அடிப்படையாகக் கொண்டிருந்ததை இது காட்டுகிறது.

1கொரி 6:1-11 இலுள்ள இந்த வழக்கு, பாலியல் ஒழுக்கக்கேடு தொடர் பான பகுதிகளுக்கு இடையே வருகிறது. 1கொரி 5; 1கொரி 6:12-20. எனவே, 1கொரி 6:1 இல் சொல்லப்பட்டுள்ள அந்த 'விஷயமும்' பாலியல் ஒழுக்கக்கேடு குறித்ததாக இருக்கலாம். அந்த வழக்கு சொத்துத் தகராறு போன்ற சிறிய உரிமை யியல் பிரச்சினையா, பாலியல் தொடர்பான பிரச்சினையா என்பதுகுறித்து துல்லியமாகத் தெரியவில்லை. அந்தப் **பிராக்மா** எதுவாக இருந்தாலும், சபை உறுப்பினர்கள் அதை உலக நீதிமன்றத்திற்கு எடுத்துச்சென்றது பவுலுக்குப் பிடிக்கவில்லை. 'அநீதியுள்ளவர்களுக்கு' முன்பாக இந்தப் பிரச்சினையைக் கொண்டு செல்வதைவிட, கிறிஸ்தவச் சகோதர சகோதரிகளாக அவர்களுக்குள் ளேயே அதைத் தீர்த்திருக்க முடியாதா? 1கொரி 6:1.

சிலர் கருதுவதுபோல, 1கொரி 6:1 இல் வழக்குத் தொடுத்தவர்கள், 1கொரி 5:1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தந்தையும் மகனுமாக இருக்கவும் வாய்ப்புள்ளது. எப்படியிருந்தாலும், பவுல் சொல்லவரும் கருத்தைப் புரிந்துகொள்ள அந்தப் பிரச்சினையின் பின்னணியைத் துல்லியமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் இல்லை. சபை என்பது ஒரு கிறிஸ்தவ சமூகம்; அதை வெளியே இருப் பவர்கள் எவ்வாறு அடையாளம் காண்கிறார்கள் என்பதில் பவுல் அக்கறை காட்டினார். கிறிஸ்தவர்கள் தங்கள் அழுக்குத் துணிகளைப் பொதுவெளியில் துவைக்கக்கூடாது. 1கொரி 6:6. அதேபோல, சபைக்குள்ளிருக்கும் விவகாரங் களைத் தீர்க்க உலகரீதியான வழிகளைப் பயன்படுத்தக்கூடாது. ரோம உலகில், செல்வம் அல்லது அரசியல் செல்வாக்கு அதிகமுள்ள நபர்களுக்கு நீதிமன்றங் களில் முன்னுரிமை அளிக்கப்படுகிற போக்கு இருந்தது. அதற்கு நேர்மாறாக, கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப்போல் நீதியான தீர்ப்பைச் செய்யவேண்டும், உலகத்தரங்களிலிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டவேண்டும்.

---

**1கொரி 5:10,11; 6:9,10 இல் பவுல் பட்டியலிட்டுள்ள தீமைகளைப்பற்றிச் சிந்தியுங்கள். விக்கிரக ஆராதனை, திருட்டு, பேராசை மற்றும் பிறரிடமிருந்து பிடுங்கிக்கொள்ளுதல் போன்ற பிற பாவங் களோடு சேர்த்து, பாலியல் பாவங்களை அவர் ஏன் பட்டியலிடுகிறார்?**

# பாலியல் ஒழுக்கக்கேட்டிற்கு மாற்று மருந்து

**பரிசுத்தமாக்கப்படுதலுக்கும், பாலியல் ஒழுக்கக்கேட்டிலிருந்து விலகியிருப்பதற்கும் இடையேயுள்ள தொடர்பு என்ன? 1தெச 4:1-8.**

மேற்கண்ட வசனங்களை பவுல் வேறொருவருக்கு எழுதினாலும், அதிலுள்ள நியதி அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும். கொரிந்து பட்டணத்தில் என்னதான் நடந்துகொண்டிருந்தது? ஏன் இத்தனைப் பிரச்சினைகள்?

சுவிசேஷத்தால் தங்களுக்கு விடுதலை கிடைத்ததால், தாங்கள் எதையும் செய்யலாம் என்று கொரிந்து சபையிலிருந்த சிலர் நம்பினார்கள். உணவுக்காக வயிறு படைக்கப்பட்டதுபோல, பாலியல் உறவுக்காக உடலும், உடலுக்காக பாலியல் உறவும் படைக்கப்பட்டதாக வாதிட்டார்கள். 1கொரி 6:13. இது கிறிஸ்தவ விடுதலையை தவறாகச் சித்தரிப்பதென்று பவுல் பதிலளிக்கிறார். பாலியல் விஷயங்களில் நேர்மையின்றி இருப்பது கிறிஸ்தவ அடையாளத்திற்கு முரணானது; மேலும் இது சுவிசேஷத்தின்மூலம் மனிதனுக்கு வழங்கப்பட்ட விடுதலையை தவறாகப் பயன்படுத்துவதாகும். ரோமர் 8:2; கலா 5:13. நாம் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டோமே தவிர, பாவம் செய்வதற்கு 'விடுதலை' கொடுக்கப்படவில்லை. ரோமர் 8:2; 6:18, 22. உண்மையில், 'சரீரம் நம் கர்த்தருக்கே உரியது, கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்.' 1கொரி 6:13. நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள். 1கொரி 6:15. எனவே நாம் யார் என்பது நம் செயல்களில் வெளிப்பட வேண்டும். இரண்டும் பிரிக்கமுடியாத வகையில் பிணைக்கப்பட்டுள்ளது. இது 1கொரி 6 இல் மூன்று வெவ்வேறு வழிகளில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

**முதலாவதாக,** நாம் 'கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவ னுடைய ஆவியினாலும்' கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டவர்கள். 1கொரி 6:11. அப்படிப்பட்டவர்களின் வாழ்க்கையில் 1கொரி 6:9,10 சொல்கிற பாவங்களும், 1கொரி 6:12-20 கண்டிக்கிற பாலியல் ஒழுக்கக்கேடுகளும், இடம்பிடிக்கக் கூடாது.

**இரண்டாவதாக,** நாம் கிறிஸ்துவின் அவயவங்கள். 1கொரி 6:15. எனவே கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்க வேண்டும். 1கொரி 6:17. பாலியல் ஒழுக்கக்கேடு அந்த இணைப்பை மீறுகிற செயலாகும். 1கொரி 6:13,15. திருமணத்திற்குப் புறம்பான பாலியல் உறவில் ஒருவரோடு இணைகிறவர், அவரோடு 'ஒரே சரீரமாக' மாறிவிடுகிறார். 1கொரி 6:16. பரிசுத்த ஆவியின்மூலம் கிறிஸ்துவுடன் நாம் கொண்டுள்ள இணைப்பே, பாலியல் விஷயங்களில் ஒரு கிறிஸ்தவனின் ஒழுக்க நெறிமுறைகளைத் தீர்மானிக்கவேண்டும்.

**மூன்றாவதாக,** நம் சரீரம் 'பரிசுத்த ஆவியானவர் தங்கும் ஆலயமாக' இருக்கிறது. 1கொரி 6:19,20. பாலியல் விஷயங்களில் பரிசுத்தமாக வாழ்வதற்கு, பரிசுத்த ஆவியின்மூலம் கிறிஸ்துவுடன் நெருங்கிய உறவு வைத்திருப்பதே ஒரே வழி. ஆவியானவர் தங்கும் ஆலயம் என்பதின் அடிப்படையில், நம்முடைய சரீரத்தைப் 'பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க' வேண்டும் என்று கூறுகிறார். ரோமர் 12:1.

---

**பாலியல் பாவங்கள் மனித குலத்திற்கு ஏற்படுத்தியுள்ள பேரழிவுகளைப்பற்றிச் சிந்தியுங்கள். இது ஒரு கிறிஸ்தவர் தீவிரமாக எடுக்கவேண்டிய விவகாரம் என்பதை எவ்வாறு உணர்த்துகிறது?**

# திருமணமானவரும் திருமணமாகாதவரும்

பாலியல் ஒழுக்கக்கேட்டிற்கு எதிராக எச்சரிக்கவே சரீரமானது 'பரிசுத்த ஆவியானவருடைய ஆலயமாயிருக்கிறது' என்று பவுல் கூறுகிறார். பரிசுத்த ஆவியின் ஆலயமாக இருப்பதுமட்டுமே பரிசுத்தமான வாழ்க்கையை வாழ் வதற்கான ஒரே வழி. திருச்சபை என்பது தன்னைச் சுற்றியுள்ள சூழலிலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டுகிற ஒரு கிறிஸ்தவ சமூகம் ஆகும். பரிசுத்த ஆவி யானவரின் பிரசன்னமே இதைச் சாத்தியமாக்குகிறது.

**'வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள்' என்கிற கட்டளையை நடைமுறைப்படுத் தும் விதத்தை 1கொரி 6:19–7:9 எவ்வாறு விளக்கிக் காட்டுகிறது? 1கொரி 6:18.**

---

1கொரி 7 இல் பாலியல்குறித்து முக்கியமான பாடங்கள் உள்ளன. அதா வது, இந்த அதிகாரத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்:

**1) திருமணமானவருக்கான அறிரைகள். 1கொரி 7:1-24.**

**2) திருமணமாகாதவருக்கான அறிவுரைகள். 1கொரி 7:25-40.**

பாலியல்பற்றிப் பேசுவது முக்கியமானது, அவசியமானது என்பதைப் புரிந்துகொள்ள 1கொரி 7 நமக்கு உதவுகிறது.

ஆனாலும், கொரிந்து சபையிலிருந்த பிரச்சினைகள் தொடர்பான கேள்வி களுக்குத்தான் 1கொரி 7 இல் பவுல் பதிலளிக்கிறார். இல்லையெனில், திருமணத் தைப்பற்றி தாழ்வாகக் கருதுவதுபோன்ற எண்ணத்தை அங்குள்ள சில கூற்றுகள் ஏற்படுத்தக்கூடும்; ஆனால் உண்மை அதுவல்ல. 1தீமோ 4:1-3; 5:14; எபி 13:4.

1கொரி 6:18 இல் 'வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள்' என்கிற கட்டளை, கிறிஸ்துவுடன் இணைந்திருப்பது, ஆவியானவரின் ஆலயமாக இருப்பது ஆகிய கருத்துகளுக்கு இடையே வைக்கப்பட்டுள்ளது. 1கொரி 6:17,19. பாலியல் ஒழுக்கக்கேட்டிலிருந்து தப்பிக்க இதைவிடச் சிறந்த வழி ஏதேனும் உண்டா? நிச்சயமாக இல்லை. மேலும், பாலியல் உறவை தேவனே உருவாக்கினார், ஆனால் அது திருமணத்திற்குள்மட்டுமே அனுபவிக்கப்படவேண்டிய ஒன்று. பாலியல் உறவு என்பது திருமண உறவில் உள்ள ஆண்-பெண்ணுக்குமட்டுமே வழங்கப் பட்ட ஒரு சிலாக்கியம்; இதைமட்டுமே வேதாகமம் அங்கீகரித்துள்ளது.

'வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள்' என்று பவுல் கூறும்போது, யோசேப் பின் கதையை அவர் மனதில் வைத்திருக்கலாம். ஆதி 39:6-18. போத்திபாரின் மனைவி இச்சையோடு அணுகியபோது, யோசேப்பு 'வெளியே ஓடிப்போனான்' என்று வேதாகமம் கூறுகிறது. ஆதி 39:18. ஆதி 39:6-18-ல் இது நான்கு முறைக் கும் குறையாமல் குறிப்பிடப்பட்டுள்ளது. வேதாகமம் நேரடியாகச் சொல்லாவிட் டாலும், யோசேப்பு திருமணப்பந்தப் பாலியல் உறவுக்காகக் காத்திருந்தார் என் பது இதிலிருந்து உணர்த்தப்படுகிறது. ஆதி 41:45. அவர் பரிசுத்த ஆவியினால் நிறைந்த ஒரு மனுஷனாக இருந்தார். ஆதி 41:38. மேலும் தேவனுடைய பார் வைக்குச் சரியானதைச் செய்ய விரும்பினார்.

---

**சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகிற பாலியல்குறித்த தவறான பார்வைகளிலிருந்து, ஒரு சபையாக நாம் நம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளமுடியும்?**

# மேலும் படிக்க:

1கொரி 5:10,11; 6:9,10 ஆகிய வசனங்களில் உள்ள தீயப்பழக்கங்களின் பட்டியலில், விக்கிரகாராதனையும் குடிவெறியும் பாலியல் ஒழுக்கக்கேட்டோடு சேர்த்துப் பட்டியலிடப் பட்டுள்ளன. 1கொரி 10:7 இல் பவுல் சொல்வதுபோல, விக்கிரகாராதனைப் பண்டிகைகளில் அதிகப்படியான உணவும் குடியும் இடம்பெறுவது வழக்கமாக இருந்தது. அது பாலியல் ஒழுக் கக்கேட்டிற்கு வழிவகுத்தது. 1கொரி 10:8. எலன் ஒய்ட் இவ்வாறு கூறுகிறார்:

'சுயநலமும் பெருந்தீனிப் பழக்கமும் உடைய எவரும் பரிசுத்தமாக்கப்படுதல் எனும் ஆசீர்வாதத்தை அனுபவிப்பது சாத்தியமற்றது. மனித உடல் தன்மேல் திணிக்கப்படும் துஷ்பிரயோகங்களை அற்புதமாக எதிர்க்கிற ஆற்றலுடையது, ஆனால் அதிகப்படியான உணவுமற்றும் குடிபோன்ற விடாப்படியான தவறான பழக்கங்கள் உடலின் ஒவ்வொரு செயல் பாட்டையும் பலவீனப்படுத்தும். வக்கிரமான இச்சைகளைத் திருப்திப்படுத்த முயன்று, கிறிஸ்தவர்கள் என்று சொல்பவர்கள்கூட இயற்கையான உடல் செயல்பாடுகளை முடக்கி, உடல், மனம், தார்மீக ஆற்றலைக் குறைக்கிறார்கள்.'[1]

'ஒருவர் சுயத்திலிருந்து முழுமையாக விடுபடும்போது, ஒவ்வொரு பொய்த் தெய்வமும் ஆத்துமாவிலிருந்து வெளியேற்றப்படும்போது, அந்த வெற்றிடம் கிறிஸ்துவின் ஆவியின் வருகையால் நிரப்பப்படுகிறது. அப்படிப்பட்டவர் அன்பினால் கிரியை செய்கிற விசுவாசத்தைக் கொண்டிருக்கிறார், அது ஆத்துமாவை ஒவ்வொரு தார்மீக, ஆவிக்குரிய அசுத்தத்திலிருந் தும் சுத்திகரிக்கிறது.'[2] 'தேவன் நம்மைத் தம்முடைய உன்னதமான, தூய்மையான, பரலோகத் தரத்திற்கு உயர்த்த விரும்புகிறார். அதற்காகவே அவருடைய ஆவியானவர் இடைவிடாமல் நமக்குள் கிரியை செய்கிறார். பரிசுத்த ஆவியினால் திருத்தப்படாவிட்டால், நமது இயல்பான போக்குகள் ஒழுக்கத்தைச் சாகடிக்கிற விதைகளைப் பெற்றிருக்கும்.'[3]

[1] The Sanctified Life, pp. 25, 26. [2] Ellen G. White, The Home Missionary, November 1889.
[3] Ellen G. White, Manuscript 12, 1888.

---

## கலந்துரையாடக் கேள்விகள்

1 *கொரிந்துவிலிருந்த விசுவாசிகள் பலர், கலாச்சாரரீதியான அங்கீகாரத்தைப் பெற விரும்பினார்கள். இது ஏன் கிறிஸ்தவ அடையாளத்திற்கு மிகவும் ஆபத்தானது? நாம் அதே தவறைச் செய்யாமல் நம்மைத் தற்காத்துக்கொள்ள என்ன செய்யலாம்?*

2 *'உங்கள் சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறதென்று அறியீர்களா?' என்று பவுல் எழுப்பிய கேள்வி, 1கொரி 5–6 அதிகாரங்களில் 'அறியீர்களா?' என்று முடிகிற ஏழு கேள்விகளின் வரிசையை நிறைவு செய்கிறது. 1கொரி 6:19; 1கொரி 5:6; 6:2,3,9,15, 16,19. இவை அனைத்தும் 'நிச்சயமாக அறிவோம்' என்கிற உறுதியான பதிலை எதிர் பார்க்கின்றன. சபையைக்குறித்து பவுல் கொண்டிருந்த கவலைகளைப் புரிந்துகொள்ள இந்தக் கேள்விகள் எவ்வாறு உதவுகின்றன? இன்று நாமும் ஏன் இந்த விஷயங் களைப்பற்றிக் கவலைப்படவேண்டும்?*

3 *திருமணம் தேவனிடமிருந்து வந்தது. ஆதி 1:27,28; 2:18–24. அது கனத்திற்குரியது. எபி 13:4. பலர் இதை ஒரு பழங்காலப் பழக்கம் என்று கருதுகிற இந்தக் காலத்தில், திருமணம் என்பது உண்மையாகவே தேவனிடமிருந்து, அதுவும் ஏதேன் தோட்டத் திலிருந்தே நேரடியாக வந்த ஒரு பரிசு என்பதை உலகிற்கு எப்படிக் காட்டமுடியும்?*

# கிறிஸ்துவுக்கான உயர் ஆடை அலங்காரம்

**சாண்ட்ரா டோம்ப்ரோவ்ஸ்கி**

நிழற்படக் கருவிகள் படம்பிடிக்கத் தயாராக இருந்தன. ஈர்ப்பு விசைக்கே சவால்விடுகிற சிகை அலங்காரங்களுடனும், புதிய டிரெண்டுகளை உருவாக்கும் ஆடைகளுடனும் மாடல்கள் மேடையில் நடக்கக் காத்திருந்தார்கள். நியூயார்க் நகரத்தில் ஒரு உயர்தர ஆடை அலங்கார அணிவகுப்பு தொடங்க இருந்தது. நீங்கள் மேடையின் பின்புறம் எட்டிப் பார்த்தால், அந்த நிகழ்ச்சியை நடத்தும் இசபெல் என்கிற பெண்மணி, ஒவ்வொரு மாடலையும் மேடைக்கு அனுப்பும்முன் அவர்களுடன் இணைந்து ஜெபம் செய்வதைக் காண்பீர்கள்.

இசபெல் உலகப்புகழ்பெற்ற ஆடை வடிவமைப்பாளர்கள்; பிரபலங்களுடன் நெருங்கிப் பழகியவர். ஆனால், அவரது இதயத்தை மிகவும் நெகிழச்செய்வது எதுவென்றால், பிரையண்ட் பார்க் லைஃப் நம்பிக்கை மையத்தில் நடக்கிற ஊழியமே; இது அட்வென்டிஸ்டுகள் கிறிஸ்துவுக்காக மக்களை அணுகுவதற்கு உதவுகிற நகர்ப்புற நல்செல்வாக்கு மையமாகும்.

ஒரு அட்வென்டிஸ்டாக வளர்க்கப்பட்ட இசபெல், இவ்வுலகம் தேவனுக்காக அறுவடைக்குத் தயாராக இருக்கிற ஆத்துமாக்களின் களம் என்று போதிக்கப்பட்டிருந்தார். பாலே நடனம், மாடலிங், பனிசறுக்கு மற்றும் இப்போது ஆடை வடிவமைப்பு என அவர் எதைச் செய்தாலும், அதை கிறிஸ்துவுக்காகவே செய்கிறார். முடக்குகிற ஒரு காயத்திலிருந்து தேவன் அவரைக் குணப்படுத்தியபிறகு, சேவை செய்யவேண்டும் என்கிற ஆசை அவருக்குள் இன்னும் தீவிரமடைந்தது.

2021இல் லைஃப் நம்பிக்கை மையம் தொடங்கப்பட்ட சமயத்தில்தான் குணமடைந்திருந்தார். "அந்தக் தருணத்தில், எனது வாழ்க்கையில் பல அற்புதங்களை அனுபவித்திருந்தேன், அதை அனைவரும் அறியவேண்டும் என்று விரும்பினேன். தன்னார்வலர்கள் தேவைப்படுவதாக லைஃப் நம்பிக்கை மையத்தின் தலைவர்கள் சொன்னபோது முன்வந்தேன்" என்று இசபெல் கூறினார்.

ஆனால் இசபெல்லின் தாக்கம் அந்த மையத்திற்கு அப்பாலும் பரவியுள்ளது. ஆடை அலங்கார உலகில் தேவன் அவருக்கு வெற்றியைக் கொடுத்திருப்பதால், அட்வென்டிஸ்டுகள் மிகக்குறைவாக அல்லது யாருமே இல்லாத ஒரு துறையில் தாக்கத்தை ஏற்படுத்துகிற வாய்ப்பு அவருக்குக் கிடைத்துள்ளது. அவர் தனது வடிவமைப்பு கருத்துக்கள், அலங்கார அணிவகுப்பு கருப்பொருள்கள் மற்றும் தனிப்பட்ட உரையாடல்கள் மூலம் மக்களை கிறிஸ்துவிடம் வழிநடத்துகிறார்.

அந்தச்செய்தி எவரையும் சென்றடையாமல் போய்விடக்கூடாது என்பதற்காக, அலங்கார அணிவகுப்புகளுக்கு ஊக்கமூட்டின கருத்துகளை செய்தி வெளியீடுகளாக வெளியிடுகிறார். "என்னுடைய ஒவ்வொரு ஆடைதொகுப்பு அணிவகுப்பிலும், இறுதியில் ஒரே கருத்தையே வலியுறுத்துகிறேன்; பார்வையாளர்கள் தங்கள் இதயங்களைச் சோதித்துப் பார்க்கவும், தங்கள் சொந்த செயல்களையும் நோக்கங்களையும் ஆராயவும், 'தேவன் ஒருவர் இருக்கிறாரா? நான் மாறவேண்டுமா? எனக்கு ஏதேனும் நம்பிக்கை இருக்கிறதா?' என்று தங்களுக்குள்ளாகக் கேட்கவும் தூண்டுகிறேன்" என்று இசபெல் விளக்குகிறார்.

இசபெல் தேவனுடைய அன்பையும் சமாதானத்தையும் பகிர்ந்துகொள்ள தனது கனிவான தனிப்பட்ட அணுகுமுறையையும் பயன்படுத்துகிறார்.

பாடம் 5

ஜூலை 25-31



# எல்லாம் தேவமகிமைக்காக

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1கொரி 8; அப் 15:20; 1கொரி 9:1–6; 1கொரி 10:5–22; உபா 6:4,5; மாற்கு 12:28–31.

**மனன வசனம்:** ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். 1கொரி 10:31.

1கொரி 5-6 இலுள்ள பாலுறவுகுறித்த விவாதத்தை 8-10 அதிகாரங்கள் முடிவுக்குக் கொண்டு வருவதோடு, கொரிந்தியர்களிடமிருந்து வந்த கடிதம் வழியாகக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பவுல் சொன்ன பதில்களையும் அறிமுகப்படுத்துகின்றன. 1கொரி 7:1. இந்தப் பதில்களே 1கொரிந்தியர் புத்தகத்தின் மீதமுள்ள பகுதிகளில் முதன்மையாக இடம்பெறுகின்றன.

இருபகுதிகளையும் இணைப்பதாக அமைந்துள்ள 1கொரிந்தியர் 7 ஆம் அதிகாரம், பாலியல் ஒழுக்கக்கேடும் (அதிகாரங்கள் 5-7), விக்கிரக ஆராதனையும் (அதிகாரங்கள் 8-10) தொடர்புடைய தலைப்புகள் என்பதைக் காட்டுகிறது. உண்மையில், இவை இரண்டும் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி ஒன்றாகவே குறிப்பிடப்படுகின்றன. அப் 15:20,29; 21:25; 1கொரி 6:9; எபே 5:5; கொலோ 3:5; வெளி 21:8; 22:15.

1கொரி 5-7 அதிகாரங்களில் பாலியல் ஒழுக்கக்கேடு தொடர்பான பிரச்சினைகளை பவுல் கையாளுகிறார்; ஆனால் 1கொரி 8-10 அதிகாரங்களில் விக்கிரக ஆராதனைகுறித்து வருத்தத்துடன் பேசுகிறார். இவை இரண்டையும் விட்டு கிறிஸ்தவர்கள் ஓடவேண்டும் என்று கூறுகிறார். 1கொரி 6:18; 10:14.

பரிசுத்த ஆவியின் ஆலயமாக இருக்கத் தீர்மானிப்பதன்மூலம் ஒருவர் பாலியல் ஒழுக்கக்கேட்டிலிருந்து தப்பிக்கமுடியும் என்று கடந்த வாரம் பார்த்தோம். 1கொரி 6:19,20. 'எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்வதன்'மூலம் விக்கிரக வழிபாட்டிலிருந்து விலகி ஓடமுடியும் என்பதை இந்த வாரம் பார்ப்போம். 1கொரி 10:31.

*2026, ஆகஸ்ட் 1 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# அறிவா, அன்பா?

**அறிவையும் அன்பையும் பவுல் எந்தச் சூழலில், எதற்காக ஒப்பிடுகிறார்? அவர் வலியுறுத்துகிற கருத்து என்ன? 1கொரி 8:1–13.**

மற்றவர்கள்மீது அன்பில்லாத தீவிரப்பிரச்சினைக்கான தீர்வை, சிலைக்குப் படைக்கப்பட்ட உணவை கருப்பொருளாக வைத்து பவுல் பேசுகிறார். 1கொரி 8. சிலைக்குப் படைக்கப்பட்ட உணவு தொடர்பான விவகாரம் கொரிந்து சபையை இரண்டு குழுக்களாகப் பிரித்தது. வேறு தெய்வங்கள் இல்லை என்கிற அறிவு, எதையும் உண்பதற்கான உரிமையைத் தங்களுக்கு வழங்குவதாக சிலர் நம்பினர். 1கொரி 8:4. இவர்கள் 'பலவான்கள்'. 1கொரி 4:10. இத்தகைய நடத்தையை எதிர்த்தவர்கள் 'பலவீனர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள். 1கொரி 8:9-12. இவர்கள் தாங்கள் அஞ்ஞானிகளாக இருந்தபோது பின்பற்றின சில மூடநம்பிக்கைகளிலிருந்து இன்னும் விடுபடாததால், பவுல் அவர்களை இவ்வாறு அழைக்கிறார். சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவை 'பலவான்கள்' உண்பதை இவர்கள் பார்க்கும்போது, கிறிஸ்தவமும் விக்கிரக ஆராதனையும் முரணானது அல்ல என்ற முடிவுக்கு வரக்கூடும். எனவே, 'பலவான்கள்' பலவீனர்களுக்குத் தடைக்கல்லாக மாறிவிடக்கூடாது என்று பவுல் விரும்பினார்.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்பதை வேதாகமம் எதிர்மறையாகவே பார்க்கிறது. அப் 15:20,29; 21:25; வெளி 2:14,20. ஆனாலும், பவுல் இங்கு அவ்வளவு தீவிரமாகப் பேசவில்லை. அறிவைத் தவறாகப் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய ஒற்றுமையின்மையைமட்டுமே இங்கு வலியுறுத்துகிறார். அறிவை தீமையான ஒன்றாக பவுல் விமர்சிக்கவில்லை; மாறாக, சபையில் அகந்தையுண்டாக்கி, பிரிவினையை உருவாக்கும் அறிவையே எதிர்க்கிறார். அன்பில்லாத அறிவு உண்மையான அறிவே அல்ல. 1கொரி 8:2. ஒருவர் தேவனிடத்தில் அன்பு செலுத்தி, அவரால் அறியப்பட்டிருக்கும்போதுமட்டுமே உண்மையான அறிவு பிறக்கிறது. 1கொரி 8:3.

உபாகமம் 6:4 ஐ மேற்கோள் காட்டி, ஒரே தேவன் உண்டென்பதை விசுவாசிகள் அறிந்திருக்க வலியுறுத்துகிறார். 1கொரி 8:4-6. தேவன் ஒருவரே என்றும், 'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூருவாயாக' என்றும் உபா 6:4,5 கட்டளையிடுகிறது. மோசேயைப்போல பவுலும் இங்கு அன்பு இல்லாத அறிவு பயனற்றது என்று சொல்கிறார்.

தங்களது அறிவில் உறுதியாக இருந்த 'பலவான்கள்', விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்பது தீங்கற்றது என்று நம்பினார்கள். புதன், வியாழன் பாடங்களில் நாம் பார்க்க இருப்பதுபோல, சில நிபந்தனைகளின் கீழ் அந்த உரிமையை பவுல் அவர்களுக்கு வழங்கினார். ஆனாலும், அது 'பலவீனர்களுக்கு' ஒரு தடைக்கல்லாக மாறுமானால், அதைத் தவிர்க்கவேண்டும். 1கொரி 8:9. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துமீதும் பிறர்மீதும் கொண்ட அன்பின்நிமித்தம் சுயமறுப்புடன் வாழவேண்டும்.

---

**அன்பு இல்லாத அறிவு மோசமான விஷயமாக மாறக்கூடும் என்று பவுல் வாதிடுகிறார். 1கொரி 8. எந்தச் சூழ்நிலைகளில் அன்பு இல்லாத அறிவு உண்மையில் தீமையாக முடியும்?**

# சுயநலமற்ற அன்பு

**அன்பு தூண்டுகிற சுயமறுப்புள்ள வாழ்க்கை வாழ்வதற்குப் பின்வரும் பகுதி எவ்வாறு ஒரு நடைமுறை உதாரணமாக விளங்குகிறது? 1கொரி 9:1–6.**

1கொரி 9 இல் பவுல் தனது அப்போஸ்தல அந்தஸ்துபற்றி அளிக்கிற விளக்கமானது, அறிவையும் அன்பையும்குறித்து முன்னர் அவர் விவாதித்த விஷயங்களுடன் தொடர்பே இல்லாததுபோலத் தெரியலாம். ஆனால், வேதாகமத்தை முதலில் எழுதியபோது, அதிகாரங்களாகப் பிரித்து எழுதவில்லை. 1கொரி 9 இல் பவுல் போதிப்பவை முந்தையக் கருத்துகளிலிருந்து பிரிக்கப்பட்ட பகுதி அல்ல. கிறிஸ்துவின்மீதும், சகோதரர்கள்மீதும் சுயநலமற்ற அன்பைக் காட்டுவதற்கு 1கொரி 9 ஒரு நடைமுறை உதாரணத்தை வழங்குகிறது. அன்பின்நிமித்தம், பவுல் தனது உரிமைகள் சிலவற்றை விட்டுக்கொடுக்கிறார்.

**'புசிக்கவும் குடிக்கவும்'** 1கொரி 9:4. உணவும் பானமும் என்பது நிதி உதவியைச் சுட்டிக்காட்டுகிற அடையாளம். ஓர் அப்போஸ்தலனாக, தான் ஊழியம் செய்தவர்களிடமிருந்து பொருள் உதவியைப் பெறுவதற்கு பவுலுக்கு உரிமை இருந்தது. அக்காலத்திலிருந்த மற்ற சமயத்தலைவர்கள் அவ்வாறே செய்து வந்தனர். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை; மாறாக, கூடாரங்கள்பண்ணுகிற தொழிலைச் செய்து தன் செலவைப் பார்த்துக்கொண்டார். அப் 18:3.

**'அவனவன் விசுவாசியான தன்தன் மனைவியைக் கூட்டிக்கொண்டுபோகிறதுபோல்'** 1கொரி 9:5. (சமகால மொழிபெயர்ப்பு). திருமணமான ஓர் அப்போஸ்தலர் தனது சபைச்செலவில் மனைவியுடன் ஊழியப்பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டார். பிரிஸ்கில்லா - ஆக்கில்லா, அன்றோனிக் - யூனியா ஆகியோர் அத்தகைய ஊழியத்தம்பதிகளுக்கு உதாரணங்கள். ரோமர் 16:3,7. ஆனால் பவுல் திருமணம் ஆகாதவர். 1கொரி 7:8. அவர் திருமணம் செய்து, நிதி உதவிபெற்று, தனது மனைவியையும் உடன் அழைத்துச் சென்றிருக்கமுடியும்.

பிழைப்புக்காக **'கைத்தொழில் செய்யாதிருக்கிறதற்கு'** 1கொரி 9:6. பவுலுக்கும் பர்னபாவிற்கும் ஊழியப்பணிக்கு ஊதியம்பெற உரிமை இருந்தது. 1கொரி 9:4-6. பவுல் பிழைப்புக்காகக் கூடாரங்கள்பண்ணுகிற தொழில் செய்தார். அப் 18:3. பர்னபா என்ன தொழில் செய்தாரெனத் தெரியவில்லை. அவர் தாராளகுணமுடையவர்; அவர் தன் பிழைப்புக்காக, தானே சம்பாதித்தார். அப் 4:36,37.

1கொரி 9:6 இல் சொன்ன கருத்தை 1கொரி 9:7-11 இல் பவுல் மேலும் விளக்குகிறார்; தானும் பர்னபாவும் தங்கள் வாழ்வாதாரத்திற்கு சபையிடமிருந்து உதவி பெறுவது நியாயமானது என்று சொல்கிறார். 1கொரி 9:11,12. கர்த்தர்தாமே, 'சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் சுவிசேஷத்தினாலே பிழைக்கவேண்டும்' என்று கட்டளையிட்டிருக்கிறார். 1கொரி 9:14; 1தீமோ 5:18. ஆனாலும் பவுல், 'நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தவில்லை' என்கிறார். 1கொரி 9:12. இவ்வாறு, பவுல் சுயமறுப்பான வாழ்க்கைக்கு தன்னை ஓர் உதாரணமாக முன்வைக்கிறார். 1கொரி 9:1-18 மேலும் இது கொரிந்துவில் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதற்கு பயனுள்ளதாக அமையும் என்றும் வாதிடுகிறார். 1கொரி 9:19-23.

---

**உங்களுக்குரிய உரிமைகளாக இருந்தாலும் சரி, நீங்கள் பெறத் தகுதியுள்ள உரிமைகளாக இருந்தாலும் சரி, கர்த்தருக்காக ஒரு சிறந்த சாட்சியாக விளங்கும்பொருட்டு, எவற்றை விட்டுக் கொடுப்பது நல்லது என்று நினைக்கிறீர்கள்?**

# கடந்தகாலத்திலிருந்து கற்றுக்கொள்ளுதல்

சுயமறுப்பிற்கு தன் சொந்த அனுபவத்திலிருந்து உதாரணத்தைக் காட்டிய பிறகு, விக்கிரகாராதனைக்குறித்துப் பேசுகிறார். 1கொரி 9:27 இன் கருத்தையே 1கொரி 10 ஆம் அதிகாரம் விளக்கமாகப் பேசுகிறது; அங்கே, தான் தகுதியற்றவனாகப் போகாதபடிக்கு தன்னைத்தானே ஒடுக்கிக் கட்டுப்படுத்துவதாகக் குறிப்பிடுகிறார். கொரிந்தியர்கள் தன்னைப் பின்பற்றவேண்டும் என்று விரும்புகிறார், ஆனால் இயேசுவே எல்லாவற்றிற்கும் மேலான முன்மாதிரி என்றும் குறிப்பிடுகிறார். 1கொரி 11:1.

**வனாந்தரத்தில் இஸ்ரவேலர்கள் செய்த பாவங்கள் என்ன? 1கொரி 10:7–11. அவர்களுக்கு வழங்கப்பட்ட சிலாக்கியங்கள், அவர்கள் செய்த பாவங்களை ஏன் இன்னும் மோசமாக்குகின்றன?**

வனாந்தரத்தில் தேவ மக்கள் அடைந்த அனுபவத்தை 1கொரி 10:1-5 இல் குறிப்பிடுகிறார். மேகம், சமுத்திரம் ஆகிய வார்த்தைகள் தேவனுடைய வழிநடத்துதல், பிரசன்னம், பாதுகாப்பை நினைவூட்டுகின்றன. அதேபோல், போஜனமும் பானமும் தேவனுடைய பராமரிப்பை நினைவூட்டுகின்றன. மேகத்தின் கீழும் சமுத்திரத்தினாலும் இஸ்ரவேலர் பெற்ற அனுபவத்தை, கிறிஸ்தவ ஞானஸ்நானத்திற்கு ஒப்பான ஒரு ஞானஸ்நானமாக பவுல் குறிப்பிடுகிறார். அதேபோன்று, போஜனம்-பானம்மூலம் திருவிருந்தைச் சுட்டிக்காட்டுகிறார்.

அன்றைய இஸ்ரவேலர்களின் அதே அனுபவங்களின் ஊடே இன்றைய கிறிஸ்தவர்களும் செல்வதாக 1கொரி 10 போதிக்கிறது. இருப்பினும், அதே வரலாறு மீண்டும் திரும்புவதை பவுல் விரும்பாததால், இஸ்ரவேலின் வரலாற்றை நினைவுபடுத்துகிறார். இஸ்ரவேலர்கள் அனைத்துச் சிலாக்கியங்களையும் பெற்றிருந்தபோதிலும், பலர் விக்கிரகாராதனை, வேசித்தனம் போன்ற பொல்லாங்கானவைகளை இச்சித்தார்கள். 1கொரி 10:7; 10:8; 10:6. அதனால், 'அவர்களில் அநேகரிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை'. 1கொரி 10:5.

பண்டைய இஸ்ரவேலர்கள் பெரும் பாவங்களைச் செய்ததாகச் சொல்வது எளிது. ஆனாலும், கிறிஸ்துவின் வரலாற்றை அறிந்திருக்கிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிற கிறிஸ்தவர்களும் அத்தகைய பாவங்களைச் செய்யக்கூடிய வாய்ப்புள்ளது. இதையே, 'தான் நிற்கிறேனென்று நினைக்கிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்' என்று எச்சரிக்கிறார். 1கொரி 10:12. 'நினைக்கிறவன்' என்திற சொற்றொடர், சபையிலிருந்த சிலர் தாங்கள் அத்தகைய பாவங்களில் விழுகிற அபாயத்தில் இருந்ததை உணரவில்லை என்பதைக் காட்டுகிறது. இன்று நாமும் அதே அபாயத்தில் இருக்கிறோமா? 'தான் நிற்கிறேனென்று நினைக்கிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்'. இந்த எச்சரிக்கையின் யதார்த்தத்தை நம்மில் அனுபவிக்காதவர் யார்?

---

**நாம் தாங்கக்கூடியதற்கு மேலாக சோதிக்கப்பட தேவன் அனுமதிக்கமாட்டார் என்றும், 'சோதனையோடுகூட அதைத் தாங்கத்தக்கதாகப் போக்கையும் உண்டாக்குவார்' என்றும் வேதாகமம் கூறுகிறது. 1கொரி 10:13. அப்படியானால், நாம் ஏன் இன்னும் அவ்வளவு எளிதாகப் பாவத்தில் விழுகிறோம்?**

# விக்கிரகாராதனைக்கு எதிராக எச்சரிக்கை

**நாம் ஏன் விக்கிரகாராதனைக்கு விலகி ஓடவேண்டும்? 1கொரி 10:5–22.**

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவைப்பற்றிய பிரச்சினையை 1கொரி 10:14-22 இல் பவுல் மீண்டும் தொடர்கிறார். இன்று பல கலாச்சாரங்களில் விக்கிரகங்களுக்கு உணவுபடைக்கிற வழக்கம் அதிகம் இல்லை, ஆனால் வேதாகமக் காலங்களில் சாதாரணமாகக் காணப்பட்டது. அஞ்ஞானக் கோவில்களில் தெய்வங்களுக்கு மிருகங்கள் பலியிடப்படும்போது, அந்த மிருகத்தின் ஒரு பகுதியைப் பூசாரிகளுக்குக் கொடுத்தார்கள்; அவர்கள் அந்த இறைச்சியை விற்றார்கள். அவற்றில் சில பொதுச் சந்தைகளுக்கு வந்தன. சந்தையில் விற்கப்பட்ட மற்ற இறைச்சிகளிலிருந்து அவற்றை தனியே வைக்கமாட்டார்கள்; அதனால், ஒரு கிறிஸ்தவர் தெரியாமலேயே விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட இறைச்சியை வாங்க நேரிடலாம். அத்தகைய இறைச்சியை கிறிஸ்தவர்கள் தாராளமாக வாங்கலாம் என்பதே அப்போஸ்தலரின் ஆலோசனையாக இருக்கிறது.

ஆனாலும், கோவில்களில் பலியிடப்பட்டு, விற்பனைக்கு வந்த இறைச்சியை கிறிஸ்தவர்கள் வீட்டில் உண்ணலாம் என்றாலும், அஞ்ஞானிகளின் கோவில்களுக்குச் செல்வதும், அவர்களுடைய பண்டிகைகளில் பங்கேற்பதும் கிறிஸ்தவர்களுக்கு தடைசெய்யப்பட்டிருந்தது. 1கொரி 8:1-13. விக்கிரகங்கள் ஒன்றுமில்லை என்பதால், அத்தகைய இறைச்சியை கிறிஸ்தவர்கள் வீட்டில் உண்ண அனுமதிக்கப்படுகிறது. 1கொரி 8:4. ஆனால், புறஜாதிகளின் சடங்குகளில் பங்கேற்பது பிசாசுகளை வழிபடுவதற்குச் சமம்; அது கிறிஸ்தவர்களுக்குத் தடைசெய்யப்பட்டது. 1கொரி 10:20,21. கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பது கிறிஸ்துவுடனான ஐக்கியத்தைக் குறிப்பதுபோல, புறஜாதிகளின் சடங்குகளில் பங்கெடுப்பது பிசாசுகளுடனான ஐக்கியத்தைக் குறிக்கிறது. 1கொரி 10:16; 10:20.

எனவேதான், 'நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே' என்கிறார். 1கொரி 10:21. இயேசு சொன்னதுபோல, 'இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது'. மத் 6:24.

முழுமனதுடனான விசுவாசத்தையே தேவன் எதிர்பார்க்கிறார். விக்கிரகாராதனை 'கர்த்தருக்கு எரிச்சலை உண்டாக்கும்'. 1கொரி 10:22. அப்படி நடக்காமல் இருக்கும்படி, உபா 6:4,5 ஐச் சுட்டிக்காட்டி, விக்கிரகாராதனைக்கு எதிரான மாறாத ஒரு விதியை பவுல் முன்வைக்கிறார்: 'இஸ்ரவேலே கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்புகூருவாயாக'. 1கொரி 8:4-6. எல்லாவற்றிற்கும் மேலாக தேவனிடத்தில் அன்புகூரவேண்டும் என்று உபா 6:5 சொல்கிற கருத்தோடு, 'உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக' என்கிற கருத்தையும் இயேசு இணைத்துக் கூறினார். மாற்கு 12:31; லேவி 19:18.

---

**விக்கிரகம் என்பது கல்லால் செய்யப்பட்ட சிலையாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. நாம் எதை வேண்டுமானாலும் ஒரு விக்கிரகமாக மாற்றிக்கொள்ள முடியும். உங்கள் சொந்த வாழ்க்கையில் நீங்கள் எத்தகைய விக்கிரகங்களிலிருந்து (ஏதேனும் இருப்பின்) விலகி ஓடவேண்டியிருக்கிறது?**

# விக்கிரகாராதனையை மேற்கொள்ளுதல்

அன்பு இருந்தால் விக்கிரகாராதனையிலிருந்து பாதுகாக்கப்படலாம் என்று 1கொரி 8:1-3 இல் பவுல் வாதிடுகிறார். இதை 1கொரி 10:23-11:1 இல் மீண்டும் விரிவாகத் தொடர்கிறார். 1கொரி 8:3 இல், தேவனில் அன்புகூரச் சொல்கிறார். 1கொரி 10:24இல், 'ஒவ்வொருவனும் தன் சுயநலத்தைத் தேடாமல், பிறருடைய நன்மையைத் தேடக்கடவன்' என்கிறார். இது பிறர்மீதான அன்பாகும்.

**மாற்கு 10:17–22; மாற்கு 12:28–31 ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் பொது வானது என்ன? அவை 1கொரி 10 இன் சூழலுக்கு எவ்வாறு பொருந்தும்?**

---

---

மாற்கு 12:28-31 இல் இயேசு செய்ததையே 1கொரி 10 இல் பவுல் செய் கிறார்; அதாவது, எல்லாவற்றிற்கும் மேலாக தேவன்மீது அன்புசெலுத்துதல், பிறர்மீது அன்புசெலுத்துதல் ஆகிய இரண்டு பெரிய கட்டளைகளை ஒன்றாக இணைக்கிறார். ஐசுவரியவானான இளம் அதிகாரி சம்பவத்தில், இயேசு இந்த இரண்டு வகையான அன்பையும் ஒன்றிணைக்கிறார். மாற்கு 10:17- 22. அவர் உபாகமம் 6:4 ஐயும், அதைத் தொடர்ந்து, பத்துக்கட்டளைகளின் இரண்டாம் பகுதியையும் சுட்டிக்காட்டுவதில் அது தெளிவாகிறது. மாற்கு 10:18; 10:19. ஐசுவரியவானான அந்த இளம் அதிகாரி, தேவனையும், தன் அயலானையும் விட தன் சொத்துக்களையே அதிகம் நேசித்தான். மாற்கு 10:22. அவன் பரலோகப் பொக்கிஷங்களைவிட பூமியிலுள்ள பொக்கிஷங்களை உயர்வாகக் கருதினான். ஏழைகளைவிட தன் பணத்தையே பெரிதாக மதித்தான். மாற்கு 10:21. அவன் விக்கிரகாராதனைக்காரனாக இருந்தான்.

இயேசு போதித்தபடியே, எல்லாவற்றிற்கும் மேலாக தேவனிடத்திலும், நம்மைப்போல மற்றவர்களிடத்திலும் அன்புகூரவேண்டும் என்கிற நியதி யைத்தான், 1கொரி 10:27,28 இல் கற்பனையான ஒரு சூழலைச் சொல்லி, பவுல் அறிவுறுத்துகிறார். அதாவது, சட்டப்பூர்வமான விஷயங்கள்கூட மற்றவர்களு டைய மனச்சாட்சிக்குத் தடையாக இருந்தால், அவற்றால் பயனோ பக்திவிருத் தியோ உண்டாகாது. 1கொரி 10:23. இந்த நியதியை 'எல்லாவற்றையும் தேவ னுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்' என்று சுருக்கிக் கூறுகிறார். 1கொரி 10:31. பல்வேறு வடிவங்களில் விக்கிரகாராதனை வெளிப்படக்கூடும் என்பதை பவுல் சுட்டிக்காட்டுகிறார்; ஏனெனில் தேவனுக்குமட்டுமே உரிய மகிமையைப் பறிக்கிற எதுவுமே ஒரு வகையான விக்கிரகாராதனைதான். ஏசா 42:8.

1கொரி 10:31-11:1 இல் பவுல் சொல்லுகிற வார்த்தைகள், 8 முதல் 10 வரை யிலான அதிகாரங்களுக்கு முடிவாக அமைகின்றன. அவர் தனது சொந்த நல னைத் தேடாமல், 'அநேகர் இரட்சிக்கப்படும்படிக்கு அவர்களுடைய பிரயோ ஜனத்தைத்' தேடினார். 1கொரி 10:33. இவ்விதத்தில்தான் அவர் கிறிஸ்துவைப் பின்பற்றினார். 1கொரி 11:1.

---

**உங்களைப்போல் உங்கள் அயலானிடத்திலும் இன்னும் சிறப்பாக அன்புகூருவதற்கு நீங்கள் என்ன செய்யலாம்?**

# மேலும் படிக்க:

'பரலோக ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிற ஒவ்வொருவரும், மற்றவர்களின் பாதையில் அந்த ஒளியைச் சிதறச்செய்யக் கடமையுள்ளவர்கள். அப்போது, தேவனை உண்மையிலேயே நேசிக்கிற அனைவரும், தங்கள் சுயத்தை ஒரு விக்கிரகமாகத் தொழு வதை நிறுத்துவார்கள்'.[1]

'தங்கள் வார்த்தைகளும் செயல்களும் மற்றவர்கள்மீது என்ன தாக்கத்தை ஏற்படுத் தும் என்று தங்களுக்குள்ளேயே கேட்கும்படி பவுல் தன் சகோதரர்களை வலியுறுத்தினார். ஒரு செயல் குற்றமற்றதாக இருந்தாலும், அது விக்கிரகாராதனையை அங்கீகரிப்பதாக, விசுவாசத்தில் பலவீனர்களின் மனச்சாட்சியைப் புண்படுத்துவதுவதாக இருந்தால், அதைச் செய்யவேண்டாம் என்று கூறினார்.

கொரிந்து சபைக்கு அப்போஸ்தலர் கொடுத்த இந்த எச்சரிக்கை எல்லாக் காலத்திற் கும் பொருந்தும், குறிப்பாக நமது காலத்திற்கு மிகவும் பொருந்தும். விக்கிரகாராதனை என்பது சிலைகளை வணங்குவது மட்டுமல்ல, சுயநலம், சுகபோக நாட்டம், இச்சை மற்றும் உணர்ச்சிகளுக்கு அடிமையாதல் ஆகியவற்றையும்குறிக்கும் என்று விளக்கினார்'.[2]

'நீங்கள் ஒரு காரியத்தைச் செய்வதற்கு உங்களுக்கு முழு உரிமை இருந்தாலும், அந்தச் செயலைச் செய்வதன் மூலம் தேவனுடைய பணி தொடர்ந்து நடைபெறுவது தடைபடும் என்று கண்டால், அவற்றைச் செய்யாமல் விலகியிருங்கள். சத்தியத்திற்கு எதிராக மற்றவர்களின் மனதை அடைக்கச்செய்கிற எதையும் செய்யாதீர்கள். எல்லாவற்றையும் செய்ய எனக்கு அதிகாரமுண்டு, ஆனாலும் எல்லாம் தகுதியாயிராது'.[3]

[1] Ellen G. White, in The Advent Review and Sabbath Herald, November 18, 1884, p. 730.
[2] Ellen G. White, The Acts of the Apostles, pp. 316, 317.
[3] Ellen G. White, Testimonies for the Church, vol. 9, p. 215.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *முதிர்ச்சியடைந்த ஒரு கிறிஸ்தவரின் நடத்தை சில நேரங்களில் முதிர்ச்சியடையாத கிறிஸ்தவரின் வளர்ச்சியைத் தடுக்கலாம். இதுபோன்ற சூழல்கள் எப்போது ஏற் படுகின்றன என்று சிந்தித்துப்பாருங்கள். இந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு, எல்லாவற்றிற்கும் மேலாக தேவனிடத்திலும், தன்னைப்போல் பிறனிடத்திலும் அன்புகூரவேண்டும் என்கிற நியதியே ஏன் ஒரே வழியாக இருக்கிறது?*

2. *கிறிஸ்தவர்கள்கூட எத்தகைய விக்கிரகங்களை வணங்கநேரிடும்? நாம் விக்கிரகங் களாக மாற்றக்கூடிய சில நல்ல விஷயங்கள் எவை? நீங்கள் மிகவும் நேசிக்கிற ஒன்று விக்கிரகமாக மாறிவிட்டதை எவ்வாறு அறிந்துகொள்வீர்கள்?*

3. *சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற தான் தகுதியற்றவனாகப் போகாதபடிக்கு, தன் சரீரத் தை ஒடுக்கி, தன்னைப் பாதுகாப்பதாகப் பவுல் கூறுகிறார். 1கொரி 9:27. இந்த வாரப் பாடத்தின் அடிப்படையில், ஒருவரை சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க தகுதியற்றவராக் குகிற காரியங்கள் எவை என்று சிந்தித்துப்பாருங்கள்.*

4. *1கொரி 10 இல், விக்கிரகாராதனையின் ஆபத்துகளைப்பற்றிப் பவுல் பேசுகிறார், மேலும் 'விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள்' என்றும் கூறுகிறார். 1கொரி 10:14. விக்கிரகாராதனை ஏன் அவ்வளவு மோசமானது?*

# தி டேவிஸ் இந்தியன்ஸ்: பகுதி 1

**மைக்கேல் டபிள்யூ. காம்ப்பெல்**

ஏப்ரல் 3, 1868 அன்று மிச்சிகனில் பிறந்தார் ஓவிட் எல்பர்ட் டேவிஸ். 1902 இல் எலன் ஒய்ட் அவர்களின் ஆலோசனையால் ஈர்க்கப்பட்டு ஒரு நற்செய்தியாளராக மாற முடிவுசெய்தார். எனவே, போதகர் படிப்பை முடித்துவிட்டு, அலாஸ்கா மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியாவின் பழங்குடியின மக்களிடையே பணியாற்றுவதற்கான அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

ஜனவரி 19, 1906 அன்று, அப்போதுதான் அட்வென்டிஸ்ட் ஊழியங்கள் தொடங்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் கயானாவிற்கு டேவிஸை அனுப்ப ஜெனரல் கான்ஃபரன்ஸ் ஓட்டெடுத்து தீர்மானித்தது. அவர் ஏப்ரல் மாதத்தில் கேரி ரோஸ்லியை மணந்தார், அதன்பின் அந்தத் தம்பதியினர் அடுத்த மாதமே தங்களுடைய புதிய நற்செய்தி களத்திற்குச் சென்றனர்.

பிரிட்டிஷ்கயானாவில் இருந்த முதல் இரண்டு ஆண்டுகளில் டேவிஸ் புத்தகங்களையும் துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்தார். பின்னர், 1910 ஆம் ஆண்டில், பரமா ஆற்றின் கரையோரம் 160 மைல் தொலைவில் ஒரு புதிய சபையை உருவாக்கியதாக அறிவித்தார். அதுவே 'ரியோ பாருயிம் மிஷன்' என்று அழைக்கப்பட்டது. அதே 1910 ஆம் ஆண்டில்தான், இதற்கு முன்பு வெள்ளைக்காரர்கள் எவருமே சென்றிராத உட்பகுதிகளில் வாழ்ந்த பழங்குடியினரிடமிருந்து, தங்களுக்கு இரட்சிப்பின் செய்தியைப் போதிக்க வருமாறு டேவிஸுக்கு ஒரு கோரிக்கை வந்தது.

தாபக்ருமா க்ரீக்கின் ஊழியக்களத்தில் மற்ற பழங்குடியின மக்களுடன் ஏற்பட்ட தொடர்பின் மூலம், இந்தப்பழங்குடியினர் அட்வென்டிஸ்ட் ஊழியங்களைப்பற்றி அறிந்துகொண்டனர். வயதான பழங்குடியின தலைவர் ஒருரவருக்கு 'பிரகாசமான ஓர் உருவம்' தோன்றி, சிருஷ்டிப்பு, பாவத்தின் நுழைவு, வாக்களிக்கப்பட்ட மீட்பரின் சம்பவம் மற்றும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஆகியவைபற்றி போதித்ததாகப் பேசிக்கொண்டார்கள். மேலும், ஏழாம் நாள் ஓய்வுநாளில் ஆராதனை செய்வது மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதுபற்றியும் அவர் அவர்களுக்குப் போதித்தாராம். ஒரு கருப்பு நிற புத்தகத்துடன் ஒரு மனிதர் வந்து அவர்களுக்கு இன்னும் அதிகமாகக் கற்றுக்கொடுப்பாரென அந்தத் தலைவரிடம் கூறினாராம்.

அங்குசெல்ல டேவிஸுக்கு இரண்டு மாதங்கள் ஆயின. 29 நாட்கள் படகிலும், அதைத் தொடர்ந்து 10 நாட்கள் அடர்ந்த காடுகளின் வழியாகவும் பயணம் செய்ததாக ஒரு அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருந்தார். டேவிஸ் தனது 'கருப்பு புத்தகத்தைக்' கொண்டு பழங்குடியினருக்கு தேவவார்த்தையைப் போதித்தார், மேலும் அவர்களுக்கிடையே மூன்று ஊழியத்தளங்களை நிறுவியதாகத் தெரிவித்தார். 187 பேர் 'தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் கைக்கொள்ளத் தீர்மானித்தனர்' என்று குறிப்பிட்டார். மூன்று சபை கட்டிடங்களைக் கட்டி, புதிய விசுவாசிகளுக்கு 'நமது விசுவாசத்தின் கோட்பாடுகள்' குறித்துப் போதிக்கத்தொடங்கினார். மேலும், 'தாழ்மையுள்ள இயேசுவைப்போல ஒரு நண்பர் இல்லை' என்கிற ஆங்கிலப்பாடலைப் பாடவும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார்.

அவர் தன் கைப்பட எழுதிய நாட்குறிப்பின் கடைசிப்பதிவு இதுவே: 'திங்கள், ஜூலை 17 – இந்த நாள் மக்களுக்கு மேலும் அதிக போதனைகளை வழங்குவதிலும், அவர்களுக்குப் பெயரிடுவதிலும் செலவிடப்பட்டது'. மக்களுக்குப் பெயரிடுவது என்பது, கிறிஸ்தவ தேவனைப் பின்பற்றவும் அவரது வழிகளைக் கற்கவும் தீர்மானித்த புதிய விசுவாசிகள், தங்கள் உறுதிப்பாட்டிற்கு அடையாளமாக ஒரு புதிய பெயரைப் பெற விரும்பியதைக் குறிக்கிறது.



# ஆவிக்குரிய வரங்கள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1கொரி 12; எபே 4:11–13; 1கொரி13; 1பேதுரு 4:8–11; 1கொரி 14:27; ஆமோஸ் 3:7.

**மனன வசனம்:** அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்.' 1கொரிந்தியர் 14:1.

ஒரே உடலில் பல உறுப்புகள் இருப்பதுபோலவே திருச்சபையும் இருக்கிறது. ஒவ்வோர் உறுப்பினருக்கும் வெவ்வேறு பொறுப்புகள், செயல்பாடுகள் மற்றும் வரங்கள் உள்ளன. அவற்றை அன்புடன் பயன்படுத்தும்போது, இந்த ஆவிக்குரிய வரங்கள் திரித்தவ தேவனின் தன்மையை வெளிப்படுத்துகிற ஓர் ஒற்றுமை உணர்வை வளர்க்கின்றன.

இந்த வாரம் 1கொரிந்தியர் 12-14 வரையிலான அதிகாரங்களையும், ஆவிக்குரிய வரங்கள்குறித்து அவற்றின் போதனைகளையும் ஆராய்வோம். இந்தப் பகுதியில், ஆராதனை சூழல்களில் ஒரு கிறிஸ்தவரின் நடத்தை எவ்வாறு இருக்க வேண்டும்என்பதுபற்றி பவுல்விளக்குகிறார். 1கொரி 11-14. சபைக்கூட்டங்களில் நிலவும் ஒழுங்கற்ற நிலையை மையமாக வைத்து பவுல் இங்கு பேசுகிறார். 'கிறிஸ்துவின் சரீரமாகிய சபை' ஒரு சரீரம் என்பதும், அது 'பக்திவிருத்தி அடைவதற்கு' வெவ்வேறு அங்கங்களின் செயல்பாடுகள் அவசியம் என்பதும்தான் இந்தப் பிரச்சினைக்கு அவர் கூறுகிற தீர்வாகும். அதாவது, பன்முகத்தன்மையின் மூலம் ஒற்றுமையை வளர்க்கவே சபைக்கு ஆவிக்குரிய வரங்களை தேவன் வழங்கியுள்ளார். எபே 4:12.

1கொரிந்தியரின் முதல் நான்கு அதிகாரங்களில் பேசப்படுகிற பிரிவினைவாதம் தொடர்பான பிரச்சினையை மனதில் வைத்தே பவுல் இங்கும் பேசுகிறார். சபை உறுப்பினர்களுக்கு இடையேயான கருத்து வேறுபாட்டிற்கு கிறிஸ்துவுக்குள் நிலவும் ஒற்றுமையே தீர்வு. அந்த ஒற்றுமைக்கு ஆவிக்குரிய வரங்கள் பங்களிக்கின்றன. கிறிஸ்துவிலும் ஆவியிலும் நிலைத்திருக்கிற ஒற்றுமைமட்டுமே பிரிவினைகளைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி.

*2026, ஆகஸ்ட் 8 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# பல்வேறு ஆவிக்குரிய வரங்கள்

1கொரி 12:1 இல் பவுல், 'இப்பொழுது... குறித்து' என்று ஆரம்பித்து, ஒரு புதிய தலைப்பை அறிமுகப்படுத்துகிறார். அவர் 'ஆவிக்குரிய வரங்கள்' பற்றிப் பேசுவதாக சிலரும், 'ஆவிக்குரிய மனிதர்கள்' பற்றிப் பேசுவதாக சிலரும் வாதிடுகிறார்கள். ஏனெனில், அங்குள்ள **டான் நியுமேடிகான்** என்கிற கிரேக்கச் சொற்றொடர் இந்த இரண்டு விளக்கங்களுக்கும் இடமளிக்கிறது. ஆனாலும், 1கொரி 12:4 இல் பவுல் ஆவிக்குரிய வரங்களைக் குறிப்பிடுவதால், 'ஆவிக்குரிய வரங்கள்' பற்றிப் பேசுகிறார். 'இயேசுவே கர்த்தர்' என்று தைரியமாக அறிக்கையிடுவதே ஆவியானவரின் முதல் வரம் என்று சுட்டிக்காட்டுகிறார். 1கொரி 12:2,3. புதிய ஏற்பாட்டு காலங்களில், 'இயேசுவே கர்த்தர்' என்று சொல்வது, ராயன் கர்த்தர் அல்ல என்று சொல்வதற்குச் சமமாகும். அப் 17:7; யோவான் 19:12,15. இது ஏகாதிபத்திய அதிகாரத்திற்கு எதிரான கிளர்ச்சியாகக் கருதப்பட்டது, எனவே மரண தண்டனைக்குரிய குற்றமாகவும் இருந்தது.

உபத்திரவம் மற்றும் மரண அச்சுறுத்தலுக்கு மத்தியிலும், தேவன்மீது விசுவாசம் வைப்பது ஆவியானவரின் ஒரு வரம் என்பதை இயேசுவும் பவுலும் வலியுறுத்தினர். உண்மையில், விசுவாசமே மிகவும் அடிப்படையான வரம். 1கொரி 13:13 இலுள்ள பட்டியலில் விசுவாசமே முதலிடத்தில் உள்ளது. விசுவாசம் என்பது ஓர் ஆவிக்குரிய வரம் என்பதை 1கொரி 12:9 இல் பவுல் தெளிவுபடுத்துகிறார். ஆனாலும், இன்னும் பல வரங்கள் உள்ளன. பரிசுத்த ஆவியானவர் பல்வேறு வகையான வரங்களை 'தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார்' என்கிற உண்மை, அனைத்து வரங்களும் அவசியம் என்பதை நிரூபிக்கிறது. 1கொரி 12:11.

**1கொரிந்தியர் 12:1-6 வலியுறுத்துகிற முக்கியக்கருத்து என்ன?**

'வித்தியாசங்கள்' என்று மீண்டும் மீண்டும் அவர் சொல்வது, வரங்களில் 'பல்வேறு வகைகள்' இருப்பதை வலியுறுத்துகிறது. 'ஆவிக்குரிய வரங்கள்' என்று 1கொரி 12:1 இல் குறிப்பிடுவதை, 4-6 வசனங்களில் மூன்று வெவ்வேறு கோணங்களில் விளக்குகிறார்: 'வரங்கள்' **(கரிஷ்மா)**, 'சேவைகள்' அல்லது 'ஊழியங்கள்' **(டயகோனியா)**, மற்றும் 'கிரியைகள்' **(எனர்ஜிமா)**. இந்த வார்த்தைகளுக்கு வெவ்வேறு அர்த்தங்கள் இருந்தாலும், அந்தப் பகுதியின் இணைத்தன்மை காரணமாக, அவற்றுக்கிடையே மிகநுணுக்கமான வேறுபாடுகளைக் காணவேண்டிய அவசியமில்லை. மேலும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரித்துவ தேவனுடைய குணத்தின் அடிப்படையில் ஒற்றுமையை வளர்க்கவே ஆவிக்குரிய வரங்கள் உள்ளன. எபே 4:8-11. ஆவியானவர் விசுவாசிகளுக்கு வரங்களை வழங்கினாலும், கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய அவர்களுக்கு ஆற்றலை வழங்குவது தேவனே. 1கொரி 12:5,6. ஒவ்வொரு விசுவாசிக்கும் தனித்தனியாக வரங்கள் வழங்கப்படுகின்றன. 1கொரி 12:11. ஆனால் அவை அனைத்தும் ஒட்டுமொத்த விசுவாசிகளுடைய சமூகத்தின் நலனுக்காகவே வழங்கப்படுகின்றன.

---

**ஒற்றுமையைக்குறித்து பவுல் வலியுறுத்துவதை மீண்டும் கவனியுங்கள். இது திருச்சபைக்கு ஏன் மிகவும் முக்கியமானது?**

# பல்வகைத்தன்மையில் ஒற்றுமை

'ஆவியானவர் ஒருவரே', 'கர்த்தர் ஒருவரே', 'தேவன் ஒருவரே' என்று தேவதுவத்தின் ஐக்கியம்பற்றி 1கொரி 12:4-6 அறிமுகப்படுத்துகிற கருத்து, 1கொரி 12 இன் மீதமுள்ள பகுதிகளில் விளக்கப்படுகிறது. பவுல் பயன்படுத்தியுள்ள 'அந்த ஒரே ஆவியானவர்', 'சரீரம் ஒன்றாயிருக்கிறது', 'ஒரே சரீரம்', 'ஒரே ஆவி' மற்றும் 'ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு' போன்ற சொற்றொடர்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன. 1கொரி 12:11; 12:12; 12:12,13,20; 1கொரி 12:13 (இருமுறை); 1கொரி 12:25.

ஒற்றுமை என்கிற கருத்துடன்கூட, கிறிஸ்துவின் சரீரத்தில் பலவகையான உறுப்புகள் உண்டு என்கிற கருத்தையும் பவுல் வலியுறுத்துகிறார்: 'அவயவங்கள் அநேகம்', 'எல்லாரும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு', 'ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது', 'சரீரம் முழுவதும்', 'அவயவங்கள் ஒவ்வொன்றையும்', 'சரீர அவயவங்கள்' மற்றும் 'எல்லா அவயவங்களும்'. 1கொரி 12:26; 12:12,20; 12:13; 12:14; 12:17; 12:18; 12:22,23; 12:26. இவ்வாறு ஒற்றுமை மற்றும் பல்வகைத்தன்மை ஆகிய இரண்டும் வலியுறுத்தப்படுவது, பல்வகைத் தன்மையின் மூலம் ஒற்றுமையை மேம்படுத்துவதே ஆவிக்குரிய வரங்களின் நோக்கம் என்பதைக் காட்டுகிறது.

பல்வகைத்தன்மையின் மத்தியில் ஒற்றுமையாக வாழ்ந்து, தேவகுணத்தைப் பிரதிபலிக்கவேண்டும். பிதா ஒரு நபர், குமாரன் மற்றொருவர், பரிசுத்த ஆவியானவர் மற்றொருவர். மூவரும் சபையை பக்திவிருத்தியடையச் செய்யவும், ஊழியத்திற்காக அதைப் பலப்படுத்தவும் இணைந்து செயல்படுகிற அதேவேளையில், தங்களுடைய தனித்துவத்துடன் உள்ளனர். 1கொரி 12:4-6; எபே 4:11-13.

**பல்வேறு உறுப்புகளுடைய சரீரமானது எவ்வாறு சபையையும் அதன் உறுப்பினர்களையும் சுட்டிக்காட்ட பொருத்தமான ஒப்புமை? 1கொரி 12:12-31.**

சரீரத்தின் அவயவங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று வேறுபட்டாலும், அவை அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து இருக்கின்றன. 1கொரி 12:15-20; 1கொரி 12:21-26. கால்கள் தாங்கள் நடக்கவேண்டிய இடத்தைப் பார்ப்பதற்கு கண்களைச் சார்ந்துள்ளன; அதேபோல், கண்களால் எதையும் தொடமுடியாது, கைகளால்மட்டுமே முடியும். மேலும், சில அவயவங்கள் பலவீனமானவை அல்லது மற்றவற்றைவிடக் கனம் குறைந்தவை என்பது வெறும் எண்ணமே தவிர, உண்மையில் அவை அனைத்தும் அவசியமானவை. 1கொரி 12:22; 12:23; 12:22.

மற்ற வரங்களைப் புறக்கணித்துவிட்டு, ஒரு சில வரங்களைமட்டும் உயர்வாக மதிக்கிற போக்கு கொரிந்தியர்களிடையே காணப்பட்டது. கொரிந்தியர்களின் இந்தத் தவற்றைத் திருத்துவதற்காக, பவுல் அவர்களுடைய கவனத்தை 'இன்னும் அதிக மேன்மையான வழியான' அன்பின் பக்கம் திருப்பினார். 1கொரி 12:31. அதாவது, வரம் எதுவாக இருந்தாலும், அதை ஞானத்தோடும் அன்போடும் பயன்படுத்தினால், அது தேவனுக்குப் பிரியமானதாக இருக்கும்.

---

**1கொரி 12:8-10,28; ரோமர் 12:6-8; எபேசியர் 4:11 ஆகிய வசனங்களிலுள்ள வரங்களின் பட்டியலைப் பாருங்கள். உங்கள் வரம் என்ன? கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பக்திவிருத்திகாக அதை நீங்கள் எவ்வாறு பயன்படுத்தலாம்?**

**செவ்வாய்க்கிழமை** **ஆகஸ்ட் 4**

## ‘அதிக மேன்மையான வழி’

‘அன்பு என்பது அநேக வரங்களில் ஒன்றல்ல. அது எல்லா வரங்களும் அவற்றின் இறுதி இலக்கை அடைவதற்கான ஒரு கருவியாகும்’.[1]

**ஆவிக்குரிய வரங்களில் அன்பின் பங்கு என்ன? 1கொரி 13:1–7; 1பேதுரு 4:8–11.**

---

ஆவிக்குரிய வரங்களை அன்பினால்மட்டுமே சரியான முறையில் பயன்படுத்த முடியும். 1கொரி 13. 1கொரி 13-ஐத் தொடங்கும்போது, 1கொரி 12 இல் குறிப்பிடப்பட்டுள்ள வரங்களைச் சுட்டிக்காட்டி, அவை அன்பினால் வழிநடத்தப்படாவிட்டால் அவற்றுக்கு மதிப்பில்லை என்பதை பவுல் வலியுறுத்துகிறார். எனவே, அறிவும் விசுவாசமும் அது ‘மலைகளைப் பெயர்க்கத்தக்க’ விசுவாசமாக இருந்தாலும், அன்பு இல்லாவிட்டால் அவை ஒன்றுமில்லை. 1கொரி 12:8; 12:9; 13:2; 13:2. அன்பு இல்லாமல், அந்நிய பாஷைகளைப் பேசுகிற வரமானது, வெறுமனே ‘சத்தமிடுகிற வெண்கலம்போலவும், ஓசையிடுகிற கைத்தாளம்போலவும்’ ஆகிவிடுகிறது. 1கொரி 12:10,28,30; 13:1. அதேபோல், தீர்க்கதரிசனம் சொல்லுகிற முக்கியமான வரமும்கூட அன்பு இல்லாவிட்டால் ஒன்றுமில்லை. 1கொரி 13:2.

1கொரி 13:4-7-ல், அன்பு என்பது என்ன, அது என்னவல்ல என்றும், குறிப்பாக, அன்பு எதைச் செய்கிறது, எதைச் செய்வதில்லை என்றும் பவுல் வலியுறுத்துகிறார். அன்பை விவரிப்பதற்கு அவர் பயன்படுத்துகிற வினைச்சொற்கள், அன்பு என்பது நாம் உணருகிற வெறும் உணர்வு அல்ல, அது நாம் செயல்படுத்தவேண்டிய ஒரு செயல் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. அதன்படி அன்புபற்றி பவுல் இவ்வாறு குறிப்பிடுகிறார்: (1) நீடிய சாந்தமுள்ளது; (2) தயவுள்ளது; (3) சத்தியத்தில் சந்தோஷப்படும்; (4) சகலத்தையும் தாங்கும்; (5) சகலத்தையும் விசுவாசிக்கும்; (6) சகலத்தையும் நம்பும்; (7) சகலத்தையும் சகிக்கும். மாறாக அன்பு: (1) பொறாமைப்படாது; (2) தன்னைப் புகழாது; (3) இறுமாப்பாயிராது; (4) அயோக்கியமானதைச் செய்யாது; (5) தற்பொழிவை நாடாது; (6) எளிதில் சினமடையாது; (7) தீங்கு நினையாது; (8) அநீதியில் சந்தோஷப்படாது.

மொத்தமுள்ள இந்த 15 வினைச்சொற்களும், ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்தவேண்டிய சரியான முறைகுறித்த உறுதியான வழிகாட்டலை வழங்குகின்றன. ஆவிக்குரிய வரங்கள்குறித்த முரண்பாடுகளை 1கொரி 12 மற்றும் 14 அதிகாரங்களில் பவுல் கையாளுகிறார். இந்த இரு அதிகாரங்களுக்கும் இடையே, அன்பின் மெய்தன்மைபற்றிய இந்த விவாதம் சரியாக அமைந்துள்ளது. உண்மையாகவே, ஆவிக்குரிய வரங்களை ஞானத்துடன் பயன்படுத்துவதற்கு அன்பே திறவுகோலாகும். மேலும், அன்பு விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் இணைத்துக்கூறப்படுகிறது, ‘இவைகளில் அன்பே பெரியது’. 1கொரி 13:13.

[1] Carl P. Cosaert, “1 Corinthians,” Andrews Bible Commentary: New Testament (Berrien Springs, MI: Andrews University Press, 2022), p. 1643.

---

**நமது விசுவாசத்தில் அன்பு ஏன் இவ்வளவு மையமாக உள்ளது? தேவனுடைய அன்பை மற்றவர்களிடம் காட்டவேண்டும் என்று ஜெபத்தோடு நாடுவதைவிட, அந்த அன்பின் எதார்த்தத்தை அனுபவிக்க வேறு சிறந்த வழி என்ன இருக்கமுடியும்?**

# அந்நிய பாஷை வரம்

அந்நிய பாஷை வரம் என்றால் என்ன? அந்தியபாஷைபற்றி வேதாகமத்தின் பிற பகுதிகள் வெளிப்படுத்துகிறபடி, 1கொரிந்தியரில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய பாஷை வரமும், வேற்று மொழிகளில் பேசுவதற்கு பரிசுத்த ஆவியானவர் அருளின திறன் என்பது புரிகிறது. மாற்கு 16:17; அப் 2:1-13; 10:44-48; 19:6.

1கொரி 12:8-10 இலுள்ள வரங்களின் பட்டியலில் அந்நிய பாஷை வரத்தை பவுல் குறிப்பிடுகிறார். 1கொரி 12:28,30; 13:1,8. ஆனாலும், 1கொரி 14 இல் இதைத் திரும்பத் திரும்பக் குறிப்பிடுகிறார். 'பாஷை' எனும் அர்த்தமுடைய **குளோஸா** என்கிற கிரேக்கச் சொல் 1கொரி 12-14 அதிகாரங்களில் இருபதுக்கும் மேற்பட்ட முறை வருகிறது; இதில் 1கொரி 14 இல் மட்டும் பதினைந்து முறை வருகிறது. இவைதவிர, 'அந்நியமொழி' எனும் அர்த்தமுடைய **ஹெட்டோரோகுளோஸோஸ்** என்கிற கிரேக்கச் சொல்லும் 1கொரி 14:21 இல் வரு கிறது. அந்நிய பாஷை வரம்குறித்துஇத்தனைஅதிகமானகுறிப்புகள்இருப்பது, இதைமுக்கியமானதாக பவுல் கருதியிருந்தது தெரிகிறது. கொரிந்து சபையில் இந்த வரம் தவறாக, முறைதவறி பயன்படுத்தப்பட்டதே பொது ஆராதனையில் ஒழுங்கீனத்திற்கும் குழப்பத்திற்கும் காரணமாக அமைந்தது. 1கொரி 14:23,27, 33,40.

**அந்நிய பாஷை வரம்குறித்து பவுல் கொடுத்த குறிப்பிட்ட அறிவுரை என்ன? 1கொரி 14:5,13,26,27; 1கொரி 12:10,30.**

அந்நிய பாஷை பேசுகிற வரம், அந்தப் பாஷையை வியாக்கியானம் செய்கிற வரத்தோடு இணைந்தே செயல்படவேண்டும். ஏனெனில், அந்நிய பாஷையில் பேசுவது மற்றவர்களுக்குப் புரியும்படி இருக்கவேண்டும். 1கொரி 14:9. இல்லையெனில், அந்த வரத்தைப் பயன்படுத்துவதில் எந்தப் பயனும் இல்லை. 1கொரி 14:6. இதனால்தான் புரிந்துகொள்ளும்படி, அதற்கு விளக்கமளிப்பது முக்கியமென பவுல் அதிகம் வலியுறுத்துகிறார். பவுல் அந்நிய பாஷை வரத்தையே குறைகூறவில்லை. மாறாக, கொரிந்து சபையினர் அந்த வரத்திற்கு அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து, தீர்க்கதரிசனம் சொல்லும் வரத்தை அலட்சியப்படுத்தியதையே அவர் கண்டிக்கிறார். இதைப்பற்றி நாளை விரிவாகப் பார்ப்போம்.

இந்த இடத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்கவேண்டும்: கொரிந்தியர் அனைவரும் அந்நியபாஷை பேசவேண்டும் என்று பவுல் விரும்பியபோதிலும், அது நடக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. 1கொரி 14:5; 12:10. எனவே, 'பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றதின் அடையாளமாக அனைவரும் அந்நிய பாஷை பேசவேண்டும் என்கிற கருத்து, 1கொரி 12, 14 ஆம் அதிகாரங்களில் பவுல் போதிப்பவற்றை தவறாகப் புரிந்துகொள்வதாகும்'.[1]

[1] Raoul Dederen, Handbook of Seventh-day Adventist Theology, Commentary Reference Series, vol. 12 (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 2001), p. 620.

**உங்கள் சபையில் வேற்று மொழிகளைப் பேசும் மக்கள் இருக்கிறார்களா? கிறிஸ்துவுக்காக மற்றவர்களைச் சென்றடைய அவர்கள் இந்தத் திறனை எவ்வாறு பயன்படுத்தலாம்? பவுல் குறிப்பிடும் அந்நிய பாஷைகுறித்த உண்மையைப் புரிந்துகொள்ள இது எவ்வாறு உதவக்கூடும்?**

# தீர்க்கதரிசன வரம்

ஆவிக்குரிய வரங்களில், தீர்க்கதரிசனம் சொல்லுகிற வரத்திற்கும் பவுல் முக்கியமான ஓர் இடத்தைக் கொடுக்கிறார். அந்நியபாஷை வரத்திற்கு முன்பாகவே தீர்க்கதரிசன வரம் குறிப்பிடப்படுகிறது. 1கொரி 12:10,28; 13:8. சில இடங்களில் அந்நிய பாஷை வரம் முதலில் குறிப்பிடப்பட்டாலும், தீர்க்கதரிசன வரத்தோடு ஒப்பிடும்போது அது அவ்வளவு முக்கியமானதல்ல என்பதை வலியுறுத்தவே அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. 1கொரி 14:4,5,6,22.

**ஆவிக்குரிய வரங்களின் நோக்கம்குறித்து பொதுவாகவும், தீர்க்கதரிசன வரத்தின் நோக்கம்குறித்து குறிப்பிட்டும் எபே 4:11-13; 1கொரி 14:3,4 என்ன சொல்கின்றன?**

தீர்க்கதரிசன வரமானது சபையின் பக்திவிருத்திக்கும், எச்சரிப்புக்கும், ஆறுதலுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. 1கொரி 14:3; அப் 15:32. தீர்க்கதரிசனம் என்பது எதிர்காலத்தைக் கணிப்பதைக் காட்டிலும், நிகழ்காலத்தில் எப்படி வாழ வேண்டும் என்பதைச் சொல்லுவதை இது உணர்த்துகிறது. தீர்க்கதரிசனம் என்பதற்கான **புரோபிட்யூவோ** என்கிற கிரேக்க வினைச்சொல்லுக்கு 'முன்கூட்டியே ஒன்றைச் சொல்லுதல்' அல்லது 'மற்றொருவரின் சார்பாக ஒன்றைச் சொல்லுதல்' ஆகிய இரு அர்த்தங்கள் உண்டு. முதலாவது அர்த்தம், அப் 2:29-31 இல் காணப்படுகிறது. ஆமோஸ் 3:7. இங்கே தாவீது ஒரு தீர்க்கதரிசி என்பது அவர் 'முன்னறிந்தார்' என்கிற அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது. இரண்டாவது அர்த்தம், அப் 15:32 இல் உள்ளது. இங்கே யூதாவும் சீலாவும் தீர்க்கதரிசிகளாக அடையாளம் காட்டப்படுகிறார்கள். ஆனாலும், அவர்களுடைய 'தீர்க்கதரிசனம்', 'அநேக வார்த்தைகளினாலே சகோதரர்களுக்குத் தைரியம் சொல்லி, அவர்களைத் திடப்படுத்துவதாக' அமைந்திருந்தது.

ஆவிக்குரிய வரங்கள் அப்போஸ்தலர்களின் காலத்தோடு முடிந்துவிடவில்லை. எபே 4:11-13. அவை இறுதிவரை தொடரவேண்டும். அப் 2:39. ஆனாலும், யாராவது ஒருவர் தன்னை ஒரு தீர்க்கதரிசி என்று சொன்னால், அவரை வேதாகமத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படவேண்டும். நான்கு விதிகளின் அடிப்படையில் மதிப்பிடவேண்டும்: முதலாவதாக, அந்தத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறவேண்டும். உபா 18:22; எரே 28:8,9. இரண்டாவதாக, அந்தச் செய்தி முந்தைய தீர்க்கதரிசிகளின் செய்தியோடு ஒத்துப்போகவேண்டும். உபா 13:1-3; ஏசா 8:20. மூன்றாவதாக, அவரது அன்றாட வாழ்க்கை கிறிஸ்துவின்மீதான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தவேண்டும். 1யோவான் 4:1-3. நான்காவதாக, கள்ளத்தீர்க்கதரிசிகளை அவர்களுடைய கனிகளினால் அறியலாம் என்று இயேசு கூறினார். மத் 7:15-20. இது உண்மையான தீர்க்கதரிசிகளுக்கும் பொருந்தும்.

தீர்க்கதரிசன வரம் மீதமான சபையின் ஒரு தனித்துவமான அடையாளம். வெளி 12:17; 19:10. செவந்த்-டே அட்வென்டிஸ்டுகள், எலன் ஜி. ஒய்ட் அம்மையாருக்கு தீர்க்கதரிசன வரம் வழங்கப்பட்டது என்றும், அது அவருடைய எழுத்துக்களில் பிரதிபலிக்கிறது என்றும் நம்புகிறோம்.

---

**எலன் ஒய்ட் அவர்களின் தீர்க்கதரிசன வரத்தை நாம் நம்புவதற்கான காரணங்கள் என்னென்ன? அவருடைய பணி மற்றும் அதிகாரம்குறித்து இன்னும் என்ன கேள்விகள் எஞ்சியுள்ளன?**

# மேலும் படிக்க:

'மனிதர்கள் கர்த்தரை நம்பி ஊழியத்திற்குப் புறப்பட்டுச் செல்லட்டும், அப்பொழுது அவர் அவர்களோடு கூடச்சென்று, ஆத்துமாக்களை உணர்த்தி, மனந்திரும்பச் செய்கிறார். ஓர் ஊழியர் சரளமாகப் பேசுகிறவராகவும், மற்றொருவர் திறம்பட எழுதுகிறவராகவும் இருக்கலாம்; வேறொருவர் உண்மையாக, உருக்கமாக, வைராக்கியமாக ஜெபிக்கிற வரத்தைப் பெற்றிருக்கலாம்; மற்றொருவர் பாடல்பாடுகிற வரத்தைப் பெற்றிருக்கலாம். இன்னொருவர் தேவ வார்த்தையைத் தெளிவாக விளக்குகிற விசேஷித்த வல்லமையைப் பெற்றிருக்கலாம். ஒவ்வொரு ஊழியருடனும் தேவன் இணைந்து செயல்படுவதால், ஒவ்வொரு வரமும் தேவனுக்கான ஒரு வல்லமையாக மாறவேண்டும். தேவன் ஒருவருக்கு ஞானத்தைப் போதிக்கும் வசனத்தையும், மற்றொருவருக்கு அறிவை உணர்த்தும் வசனத்தையும், வேறொருவருக்கு விசுவாசத்தையும் அளிக்கிறார். ஆனால் அனைவரும் ஒரே தலைவரின்கீழ் பணியாற்றவேண்டும். பல்வகை வரங்கள் பல்வகை செயல்பாடுகளுக்கு வழிவகுக்கின்றன, ஆனால் "எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே". 1கொரி 12:6.

'சிறிய வரங்கள் என்பவற்றை யாரும் அற்பமாக எண்ணவேண்டாம். அனைவரும் செயலில் இறங்குங்கள். தங்களால் பெரிய காரியம் எதையும் செய்யமுடியாது என்று நினைத்து, அவிசுவாசத்தில் யாரும் கைகளைக் கட்டிக்கொண்டு இருக்கவேண்டாம். உங்களையே பார்ப்பதை நிறுத்துங்கள். உங்கள் தலைவரை நோக்கிப்பாருங்கள். சாந்தத்தோடும், உண்மையோடும், அன்போடும் உங்களால் இயன்றதைச் செய்யுங்கள்'.[1]

'பிறர் அறிவால் கிடைக்கிற உதவியும் நமக்குத் தேவை. தேவன் நம்முடைய சிந்தனையில் மட்டுமல்லாது, பிறர் சிந்தனைகளிலும் கிரியைசெய்கிறார். வெவ்வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு வரங்கள் ஒன்றிணைந்து செயல்படவேண்டும். எபே 4:12. எப்பொழுதும் நமக்கு முன்பாகத் தடைகள் இருக்கும், ஆனால் நாம் நம் தலைவரைப் பின்பற்றி, நம்முடைய சிரமங்களை ஒருமனப்பட்டு, கைகோர்த்து எதிர்கொள்ள வேண்டும்'.[2]

[1] Ellen G. White, in The Advent Review and Sabbath Herald, April 12, 1906.
[2] Ellen G. White, The Upward Look, p. 141.

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *அந்நிய பாஷை பேசுகிறவர் அதற்கு அர்த்தம் சொல்லவில்லை என்றால், அந்நிய பாஷைகளைவிட தீர்க்கதரிசனம் ஏன் மிகமுக்கியமானது? 1கொரி 14.*
2. *எலன் ஒய்ட்டின் வாழ்க்கை-ஊழியத்தைப்பற்றியும், அவரிடம் தீர்க்கதரிசன வரம் காணப்பட்டதைபற்றியும் வகுப்பில் கலந்துரையாடுங்கள். இந்த வரத்தின்மூலம் சபைக்குக் கிடைக்கிற பெரும் ஆசீர்வாதங்கள் யாவை? மேலும், இந்த வரத்தை சிறப்பான முறையில் பயன் படுத்துவதை அறிவதிலுள்ள சவால்கள் என்னென்ன?*
3. *உங்களை உண்மையாக நேசிக்கிறவர்கள் உங்கள்மீது காட்டுகிற அன்பு உண்மையானது என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? ஆவிக்குரிய வரங்கள்குறித்த விவாதத்தில் பவுல் அன்பைப் பற்றி இவ்வளவு அதிகமாகப் பேசியிருப்பது என்ன உணர்த்துகிறது?*
4. *அன்பு எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும், ஒருவர் சத்தியத்தைப் பேசுகிறாரா, அவர் சொல்வதைக் கேட்கலாமா என்பதைத் தீர்மானிப்பதில் அதுமட்டுமே ஏன் ஒரே அளவுகோலாக இருக்கக்கூடாது?*

# டேவிஸ் இந்தியர்கள்: பகுதி 2

**மைக்கேல் டபிள்யூ. கேம்ப்பெல்**

டேவிஸால் தனது நாட்குறிப்பின் இறுதிப்பதிவை தானாகவே எழுத முடியவில்லை. அவர் அதை தன் வழிகாட்டியிடம் சொல்ல, அவர் அதை அவருக்காக எழுதினார்: 'இந்த பயணத்தில் தேவன் என்னை விசேஷமாக ஆசீர்வதித்துள்ளார். பருய்மா நதிப்பகுதியில் ஓர் ஊழியத்தையும், துலாமெங் மலையில் மற்றொன்றையும் செய்துமுடித்தேன், அதன்பிறகு நாங்கள் ரொரைமா மலைக்கு வந்தோம். இங்கு ஒரு ஊழியத்தைத் தொடங்கி முடித்த உடனேயே எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது'. இந்த ஊழியத் தளம் அதிகாரப்பூர்வமாக ஜூன் 25, 1911 அன்று நிறுவப்பட்டது; இதுவே இப்பகுதியில் தொடங்கப்பட்ட முதல் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் ஊழியமாகும். டேவிஸ் மரண படுக்கையில் இருந்தபோது, மக்களுக்குப் போதிப்பதற்கு யாராவது ஒருவர் நிச்சயமாக வருவார்கள் என்று வாக்குறுதி அளித்தார். அவர் ஜூலை 31, 1911 அன்று கருநீர் காய்ச்சலால் இறந்து, ரொரைமா மலையில் பழங்குடித் தலைவர் எரேமியாவால் அடக்கம் செய்யப்பட்டார். அவருடைய மனைவி கேரி அமெரிக்காவிலிருந்த தனது சொந்த வீட்டிற்குத் திரும்பினார்.

டேவிஸின் மரணத்திற்குப் பிறகு, பழங்குடி இந்தியர்கள் ஒவ்வொரு ஓய்வுநாளிலும் அவருடைய கல்லறையருகே கூடிப்பாடினார்கள். வேறொரு போதகரை அனுப்பும்படி அவர்கள் பலமுறை வேண்டுகோள் விடுத்தபோதிலும், டேவிஸின் ஊழியத்தைத் தொடர அட்வென்டிஸ்ட் மிஷனரிகள் வந்து சேர 14 ஆண்டுகள் ஆனது.

சுமார் 1918 ஆம் ஆண்டில், ஆய்வாளர் ஒருவர், ஒரு குறிப்பிட்ட இந்தியப் பழங்குடியினர் குழுவினர் 'தாழ்மையுள்ள இயேசுவைப்போல் வேறு நண்பர் இல்லை' என்கிற பாடலை ஆங்கிலத்தில் பாடிக்கொண்டிருந்ததைக் கண்டார். அவர் அதைப்பற்றி விசாரித்தபோது, அவர்கள் சகோதரர் டேவிஸின் தனிப்பட்ட பொருட்களை வெளியே எடுத்து வைத்து, ஒரு எளிய ஆராதனையை நடத்திவந்ததைக் கண்டுபிடித்தார்.

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருந்த பிறகு, 1922 ஆம் ஆண்டில், தங்களுக்கு ஒரு போதகரை அனுப்பும்படி கெஞ்சிக் கேட்டுக்கொள்வதற்காக, பழங்குடித் தலைவரான எரேமியா என்பவர், ஜார்ஜ்டவுனில் இருந்த அட்வென்டிஸ்ட் ஊழிய அலுவலகத்திற்கு நான்கு வாரங்கள் கால்நடையாகவே நடந்துசென்றார். 1924 ஆம் ஆண்டில், நிதி நெருக்கடிகள் இருந்தபோதிலும், இன்னொரு வருடம் காத்திருக்க முடியாது என்று டிவிஷன் கமிட்டி முடிவு செய்தது. அடுத்த ஆண்டு டபிள்யூ. இ. பாக்ஸ்டர் மற்றும் சி. பி. சட்டன் ஆகிய இருவரும் ரொரைமா மலைக்குச் சென்றனர். டேவிஸ் இந்தியர்களைக் கண்டறியும் நோக்கில் நீண்ட பயணத்தை மேற்கொண்டு, அக்டோபர் 25, 1925 அன்று டேவிஸின் கல்லறையை வந்தடைந்தனர். பழங்குடித் தலைவர் எரேமியாவும் அவரது மகனும் அவர்களிடம் சில ஆவணங்களின் தொகுப்பைக் கொண்டுவந்து கொடுத்தனர். அதில் ஜூலை 17, 1911 தேதியிட்ட டேவிஸின் கடிதம் ஒன்று இருந்தது. ரொரைமா மலையில் வாழும் 130 பேர், 'கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும், செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளுக்கும் உண்மையும் உத்தமுமாக வாழப்போவதாகப் பயபக்தியுடன் உறுதிமொழி எடுத்துள்ளனர்' என்று அதில் சான்றளிக்கப்பட்டிருந்தது. இந்த ஊழியத்தளத்தை நோக்கிய கடினமான பயணத்தின் விளைவாக பாக்ஸ்டர் மற்றும் சட்டன் ஆகிய இருவருமே மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர்.

**பாடம் 7** **ஆகஸ்ட் 8-14**



# அன்பின் உருவப்படம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1கொரி 13; மத் 24:12; கலா 5:22,23; 1தீமோ 1:14; 1யோவான் 4:8.

**மனன வசனம்:** இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது. 1கொரிந்தியர் 13:13.

அன்பினால் எல்லாவற்றையும் வெல்லமுடியும். அதனால்தான் பவுல் அன்பைப்பற்றி அதிகமாகப் பேசினார். புதிய ஏற்பாட்டில் அன்பைச் சுட்டிக் காட்டப் பயன்படுத்தப்படும் **'அகாபே'** என்கிற கிரேக்கச் சொல்லின் குடும்பச் சொற்கள், அவரது நிருபங்களில் 135 க்கும் மேற்பட்ட முறை இடம்பெற்றுள்ளன. புதிய ஏற்பாட்டில் அந்தச் சொல் வரும் மொத்த எண்ணிக்கையில் இது கிட்டத்தட்ட பாதியாகும். கொரிந்து சபைக்கு பவுல் எழுதிய நிருபங்களின் மையக் கருத்துபற்றி நிச்சயமாக இது ஓர் உண்மையை உணர்த்தவேண்டும்.

புதிய ஏற்பாட்டில் அன்பைப்பற்றிப் பேசுகிற பகுதிகள் பல உள்ளன. ரோமர் 8:35-39; 1கொரி 2:9;8:3; கலா 2:20; கொலோ 1:13; 1தெச 3:12; மேலும் பல. ஆனால் எதையும் 1கொரி 13 ஆம் அதிகாரத்திற்கு இணையாக ஒப்பிட முடியாது.

அன்பு இல்லையேல் எதற்கும், ஏன் ஆவிக்குரிய வரங்களுக்கும்கூட எந்த மதிப்பும் இல்லை என்பதை கடந்த வாரம் பார்த்தோம். இந்த வாரம், 1கொரிந்தியர் 13 ஆம் அதிகாரத்தையும், அதிலுள்ள அன்பின் அற்புத உருவத்தையும் இன்னும் ஆழமாகப் பார்க்கப்போகிறோம்.

அன்பு என்பது வெறுமனே ஓர் உணர்ச்சி அல்ல; அது ஒரு மனப்பான்மை. அந்த மனப்பான்மை நம் வாழ்வில், செயல்களில், வார்த்தைகளில் வெளிப்பட வேண்டும்; இல்லையேல், அதற்கு எந்த அர்த்தமும் இல்லை. அதுபற்றிப் பார்ப்போம்.

அன்பு என்றால் என்ன? அது என்ன செய்கிறது? இது இயேசுவின் வாழ்வில் முழுமையாக வெளிப்பட்டுள்ளது.

***2026, ஆகஸ்ட் 18 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# அன்பு அத்தியாவசியம்

அன்பின் மையக்கருத்து என்னவென 1கொரி 13 இலிருந்து கடந்த வாரம் சுருக்கமாகப் பார்த்தோம். பவுல் அங்குச் சொல்பவற்றை இன்னும் ஆழமாக ஆராயவேண்டும்.

**1கொரி இல், அன்பைப்பற்றி பவுல் சொல்வதைச் சுருக்கமாகக் கூறுங்கள்.**

---

அந்நிய பாஷைகள், தீர்க்கதரிசனம், அறிவு, விசுவாசம், அன்னதானம் பண்ணுதல் ஆகியவை பயனற்றவை என்று பவுல் கூறவில்லை. 1கொரி 13:1,2,3. அவை அன்பினால் செய்யப்படாதபோது பயனற்றவையாக மாறுகின்றன.

பவுல் இங்கே குறிப்பிடுகின்ற அன்பு, 'எனக்கு ஸ்ட்ராபெர்ரி பழங்கள் பிடிக்கும்'; 'நான் என் நண்பர்களை நேசிக்கிறேன்'; 'நான் என் மனைவியையும் பிள்ளைகளையும் நேசிக்கிறேன்' போன்றவற்றில் வெளிப்படுகிற அன்பு அல்ல. திரைப்படங்களில் காட்டப்படும் அன்பைப்பற்றியும் அவர் பேச வில்லை. இந்த வேதப்பகுதி பொதுவாக திருமணப் பிரசங்கங்களில் பயன் படுத்தப்பட்டாலும்கூட, இது சிற்றின்ப அன்பைப்பற்றியது அல்ல.

இந்த அன்பை வெறும் பாசம், தர்மம், நற்பண்பு, நற்சிந்தனை என்று மட்டும் சுருக்கிவிடமுடியாது. ஆனாலும், அவை அனைத்தும் பெரிய அள விலோ, சிறிய அளவிலோ ஏதோ ஒரு விதத்தில் இந்த அன்பையே பிரதி பலிக்கின்றன. இந்த அன்பு பரிசுத்த ஆவியானவரால் நமக்கு அருளப்பட்ட ஒரு விசேஷித்த கிருபையாகும். 1கொரி 13 இல் சொல்லப்படுகிற அன்பானது பாசம், தர்மம், நற்பண்பு மற்றும் நற்சிந்தனையுடன் நம்மைச் செயல்படவைக்கிற ஆவியானவரின் தூண்டுதலாகும். இது நம் செயல்கள், உணர்வுகள், எண்ணங் கள் அனைத்தையும் கிறிஸ்துவுக்கும் மற்றவர்களுக்கும் முழுமையாக அர்ப்பணிப் பதாகும்.

**மத்தேயு 24:12 இல் இயேசு நமக்குக் கொடுக்கிற எச்சரிக்கை என்ன?**

---

அதனால்தான் **'அகாபே'** அன்பு மிகவும் அவசியமாக, தேவையாக இருக் கிறது. நம் வீடுகளிலும், சபைகளிலும், அக்கம்பக் கத்தினரிடமும் அந்த அன்பு தணிந்துபோக கிறிஸ்துவின் வல்லமையால் நாம் அனுமதிக்கக்கூடாது. சிலுவை யில் நமக்காக மரித்த கிறிஸ்துவின் முன்மாதிரி நமக்கு இருக்கிறது. இந்த வகை யான அன்பிற்கு இதைவிட சிறந்த, வல்லமையான வெளிப்பாடு வேறு என்ன இருக்கமுடியும்? அவர் காண்பித்த அன்பை அதே அளவிற்கு முழுமையாக நம் மால் ஒருபோதும் வெளிப்படுத்தமுடியாது; ஆனாலும்கூட, தேவகிருபையால் நம்மால் இயன்ற அளவிற்கு அதை நம் சொந்த வாழ்க்கையில் வெளிப்படுத்தப் பிரயாசப்படவேண்டும்.

---

**இந்த வகையான அன்பு யாருக்கு அதிகம் தேவைப்பட்டதோ, அவரிடம் இந்த அன்பை வெளிப் படுத்தியிருந்தால், அவரிடம் எப்படிப்பட்ட மிகஆழமான நேர்மறையான தாக்கம் ஏற்பட் டிருக்கும்?**

# அன்பு என்ன செய்யும்

1கொரி 13 இன் மையப்பகுதி 1கொரி 13:4-7. அன்பில் என்ன காணப்படும், என்ன காணப்படாது, அன்பு என்ன செய்யும், என்ன செய்யாது என்பதைக் காட்டுகிறார். ஆவியின் வழிநடத்துதலும், அன்பின் நிறைவுமுள்ள ஒருவர் நடந்துகொள்கிற விதத்தை தொடர்ச்சியான வினைச்சொற்களால் விவரிக்கிறார். அன்பு என்பது வெறும் உணர்வு அல்ல, செயல்களைப் பற்றியது. அன்பு என்ன செய்கிறது?

**1. நீடிய சாந்தம் உடையது** (**மக்ரோதிமியோ**): மக்ரோதிமியோ என்றால் சவாலான சூழ்நிலைகளிலும்கூட பொறுமையைக் காட்டுவது. இந்த பொறுமை ஒருவரையொருவர் சகித்துக்கொள்ளும். எபே 4:2.

**2. தயவுள்ளது** (**க்ரெஸ்டியோமாய்**): க்ரெஸ்டியோமாய் என்கிற சொல் புதிய ஏற்பாட்டில் இங்குமட்டுமே வருகிறது; ஆனால் இதே வேர்ச்சொல்லிலிருந்து வந்த பிற சொற்கள் மற்ற இடங்களில் வருகின்றன. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பான செப்டுவஜின்ட் பதிப்பில், தேவன் தம் இரக்கத்தால் காட்டுகிற அவரது தயவைக் குறிப்பிட இந்த வேர்ச்சொல்லிலிருந்து வந்த சொற்கள் சங்கீதப்புத்தகத்தில்அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளன. சங் 145:9. அன்பு தயவுள்ளது; எனவே, மற்றவர்கள்மீதான நம் அன்பானது நம்மீது தேவன் காட்டுகிற இரக்கத்தையும்தயவையும்பிரதிபலிக்கவேண்டும்என்று பவுல் குறிப்பிடுகிறார்.

**3. சத்தியத்தில் சந்தோஷப்படுகிறது** (**சின்கைரோ**): சின்கைரோ என்பது மற்றொருநபருடன் இணைந்து மகிழ்ச்சியைப் பகிர்கிற திறனைக் குறிக்கிறது. லூக் 1:58; 15:6,9; 1கொரி 12:26; பிலி 2:17,18.

**4. சகலத்தையும் தாங்குகிறது** (**ஸ்டெகோ**): ஸ்டெகோ என்கிற சொல்லுக்கு 'மறைப்பது,' அதாவது ஒன்றை இரகசியமாக வைத்திருப்பது அல்லது பாதுகாப்பது என்றும், அல்லது 'சகித்துக்கொண்டு' இயல்பு நிலைக்குத் திரும்புவது என்றும் அர்த்தம் கூறலாம். சகித்துக்கொள்வது என்கிற கருத்து 1கொரி 9:12 இல் தெளிவாகக் காணப்படுவதால் (சமகால மொழிபெயர்ப்பு), இரண்டாவது கருத்தே அதிக சாத்தியமானது.

**5. சகலத்தையும் விசுவாசிக்கும்** (**பிஸ்துவோ**): பிஸ்துவோ என்கிற சொல், விசுவாசம் என்கிற அர்த்தமுடைய பிஸ்திஸ் எனும் கிரேக்க வேர்ச்சொல்லிலிருந்து வந்ததாகும். 1கொரி 13 இன் பின்னணியில், 'சகலத்தையும் விசுவாசிக்கும்' என்பது ஒருவர்மீது சந்தேகம் கொள்ளாமல், அவரிடமுள்ள நன்மையை நம்புவது.

**6. சகலத்தையும் நம்பும்** (**எல்பிஸோ**): புதிய ஏற்பாட்டில், எல்பிஸோ என்கிற வினைச்சொல், நல்லது நடக்கும் என்கிற எதிர்பார்ப்பைக் குறிக்கிறது.

**7. சகலத்தையும் சகிக்கும்** (**ஹிப்போமெனோ**): 1கொரி 13:7 இல் வரும் ஸ்டெகோ மற்றும் ஹிப்போமெனோ ஆகிய இரண்டு வினைச்சொற்களும் ஒரே அர்த்தமுடையவை; கடினமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் சகித்துக்கொள்வதைக் குறிக்கின்றன. ஸ்டெகோ என்கிற சொல்லை மீண்டும் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு, இந்த வசனத்தின் இறுதியில் 'ஹிப்போமெனோ' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். விசுவாசம், நம்பிக்கை இரண்டையும் வலியுறுத்துகிறார். அன்பானது விசுவாசம், நம்பிக்கைமூலம் எல்லாவற்றையும் சகிக்கிறது.

**1கொரி 13:4–7; கலா 5:22,23 ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் இடையே காணப்படுகிற பொதுவான கருத்துகள் யாவை? இந்த அன்பை நம் வாழ்க்கையில் எவ்வாறு வெளிப்படுத்தமுடியும்?**

# அன்பு எதைச் செய்யாது

**பவுல் ஏன் அன்பின் நேர்மறையான தன்மைகளைமட்டும் குறிப்பிடாமல், எதிர்மறையான தன்மைகளையும் குறிப்பிடுகிறார்? 1கொரி 13:4-7.**

அன்பு செய்கிற ஏழு காரியங்களை நேற்று நாம் பார்த்தோம்; அன்பு செய்யாத எட்டு காரியங்களை இன்று பார்ப்போம். அன்புக்கு...

**1. பொறாமையில்லை** (ஷிலூ). 'ஷிலூ' என்கிற சொல்லை, 'முக்கியமான வரங்களை நாடுங்கள் (ஷிலூ)', 'ஞானவரங்களையும் விரும்புங்கள் (ஷிலூ)', 'தீர்க்கதரிசனம் சொல்ல நாடுங்கள் (ஷிலூ)' என்று நேர்மறையான அர்த்தத்திலும் பயன்படுத்தலாம். 1கொரி 12:31; 14:1; 14:39. ஆனால் இங்கு, அப் 7:9 இல் உள்ளது போல, எதிர்மறையான அர்த்தத்தில் வந்துள்ளது. ஆவிக்குரிய வரங்களை வாஞ்சிப்பது நல்லது; ஆனால் வரங்களைப் பெற்ற நபர்கள்மீது பொறாமைப்படுவது தவறானது. இது பிரிவினையை உண்டாக்குகிறது. 1கொரி 3:3.

**2. தன்னைப் புகழாது** (*பெர்பெரியோமை*). 'பெர்பெரியோமை' என்கிற வினைச்சொல் அகந்தையையும், மற்றவர்களிடமிருந்து புகழை எதிர்பார்க்கிற ஆசையையும் குறிக்கிறது. ஆனால், அன்பு சுயநலம் சார்ந்தது அல்ல. இதற்கு அடுத்து வரும் தன்மைகளில் இது இன்னும் தெளிவாகப் புரியும்.

**3. இறுமாப்பாய் இராது** (*ஃபியூஸியோவோ*). ஃபியூஸியோவோ என்கிற வினைச்சொல், 'அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்' என்கிற வசனத்தில் வருகிறது. 1கொரி 8:1. இது தன்னைத்தானே உயர்வாக எண்ணி மதமதப்பாக இருக்கிறதைக் குறிக்கிறது.

**4. அயோக்கியமானதைச் செய்யாது** (அஸ்கேமோனியோ). அஸ்கேமோனியோ என்கிற வினைச்சொல் சமூக, ஒழுக்க நெறிமுறைகளுக்கு மாறாக, அவமரியாதையான, வெட்கக்கேடான, அநாகரீகமான அல்லது முறையற்ற முறையில் செயல்படுவதைக் குறிக்கிறது. கொரிந்து சபையிலிருந்த 'பலவான்களான' உறுப்பினர்கள், 'பலவீனர்களான' உறுப்பினர்களிடம் காட்டிய அகந்தையான, முரட்டுத்தனமான நடத்தையைத்தான் பவுல் இங்கு குறிப்பிடுகிறார். 1கொரி 4:10; 1கொரி 8.

**5. தற்பொழிவை (உரிமைகளை) நாடாது** (ஸீதேயோ). 1கொரி 10:24 இல் கூறுவதும் இதுவும் ஒன்றுதான்: 'ஒவ்வொருவனும் தன் உரிமையைத் தேடாமல், பிறனுடைய உரிமைகளைத் தேடக்கடவன் (ஆசிரியரின் மொழிபெயர்ப்பு)'. அன்பு பிறருக்காகத் தன் சொந்த உரிமைகளை விட்டுக்கொடுக்கிறது (பாடம் 5). மற்றவர்களின் நலனைத் தேடும்போது, அனைவரும் நன்மையடைகிறார்கள்.

**6. சினமடையாது** (பராக்ஸினோ). இது, ஒருவர் எளிதில் கோபமடைவதற்கு வழிநடத்துகிற உள்ளார்ந்த உணர்ச்சித் தூண்டுதலைக் குறிக்கிறது. அதாவது, அன்பு குறுகிய மனப்பான்மையுடன் இருக்காது, எளிதில் எரிச்சலடையாது.

**7. மற்றவர்கள் தனக்குச் செய்த பிழைகளை நினைவில் வைக்காது** (லோகிஸோமை). இந்த வினைச்சொல் இங்கே கணக்கு வைக்கிற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, அன்பு மற்றவர்கள் செய்த தீமைகளைக் கணக்கில் வைப்பதில்லை. அதாவது, அன்பு மன்னிக்கிறது.

**8. அநியாயத்தில் சந்தோஷப்படாது** (கைரோ). அன்பு மற்றவர்களின் தவறுகளைக் கணக்கு வைக்காதது மட்டுமல்லாமல், அவற்றில் மகிழ்ச்சியடைவதும் இல்லை. நாம் மற்றவர்களை உண்மையாக நேசிக்கும்போது, அவர்களுடைய தவறுகளைப் பார்த்து சந்தோஷப்படமாட்டோம்; அவர்களுக்கு உதவ முயற்சிப்போம்.

# இயேசுகுறித்த சித்திரிப்பு

1கொரி 13:4-7 ஐ வாசித்ததும், அன்பின் அந்தத் தன்மைகள் நம்மிடம் காணப்படுவதில்லை என்று நாம் சோர்வடையலாம். இயேசுவை மனதில் வைத்து 1கொரி 13 ஐ பவுல் எழுதியிருக்கவேண்டும். கிறிஸ்து ஒருவரே அன்பின் இந்த அனைத்துத் தன்மைகளையும் பரிபூரணமாக வெளிப்படுத்தினார். எனவே, இறுதியில், பவுல் சித்திரிக்கிற அன்பு இயேசுகுறித்த ஒரு சித்திரிப்பு ஆகும்.

**பின்வரும் வேதபகுதிகளிலிருந்து அன்பைப்பற்றி என்ன கற்றுக்கொள்ளலாம்? யோவான் 13:1,34; 15:9,12; 1தீமோ 1:14; 2தீமோ 1:7, 13; 1யோவான் 3:16; 4:7-12, 19-21.**

தேவன் அன்பாகவே இருக்கிறார். 1யோவான் 4:8. அவர் தமது ஒரே பேறான குமாரனையே கொடுக்கிற அளவுக்கு நம்மை மிகவும் நேசித்தார். யோவான் 3:16. இந்த அன்பின் முழுமையான வெளிப்பாடு இயேசு. எபி 1:3. அன்பு தன்னை வெளிப்படுத்துகிற விதத்தை அறிய விரும்பினால், இயேசுவை உற்றுநோக்கவேண்டும். புதிய ஏற்பாட்டில் இயேசு சித்திரிக்கப்படுகிற விதத்தைக் கூர்ந்து கவனித்தால், 1கொரி 13 இல் சொல்லப்படும் அன்பின் நேர்மறையான தன்மைகள் அனைத்தும் அவரில் காணப்படும்.

**இயேசு நீடிய சாந்தமுள்ளவர்.** 'அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும்பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் ங்மாக்ரோதூமியாசி காண்பிக்கும்படிக்கு இரக்கம்பெற்றேன்'. 1தீமோ 1:16.

**இயேசு தயவுள்ளவர்.** 'கர்த்தர் தயவுள்ளவர்'. 1பேதுரு 2:1. 'கர்த்தர்' என்பது இங்கு இயேசுவைக் குறிக்கிறது. 'தயவுள்ளவர்' என்கிற பதத்திற்கான கிரேக்க வார்த்தை, **க்ரேஸ்தோஸ்.** இது 1கொரி 13:4 இல் வரும் தயவுள்ளவர் என்கிற பதத்தின் க்ரேஸ்தியூவோமை என்கிற வினைச்சொல்லுக்கான அதே வேர்ச்சொல்லில் இருந்து வந்ததாகும்.

**இயேசு சத்தியத்தில் சந்தோஷப்படுகிறார்.** இயேசு பிதாவின் சித்தத்தின்படி செய்தபோதும், தம்மீது பிதா வைத்திருந்த அன்பை உணர்ந்தபோதும் மிகுந்த சந்தோஷமடைந்தார். யோவான் 15:9-11; 17:12-14. இயேசு சகலத்தையும் தாங்குகிறார்/சகிக்கிறார். இயேசு ' சிலுவையைச் சகித்தார். தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்தார்.' எபிரெயர் 12:2,3. இயேசுவைப்போல வேறு யாரும் இவ்வளவு துன்பங்களைச் சகித்ததில்லை. பிலி 2:8. தமக்கு முன்னிருந்த சந்தோஷத்தின் பொருட்டே அவர் இதைச் செய்தார்!

**இயேசு அனைத்தையும் நம்புகிறார்.** பவுலின் மனமாற்றம் உண்மையானதா என்று அனனியா சந்தேகித்தபோது 'அவன் நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்' என்று இயேசு சொன்னார். அப் 9:13-15. இயேசு மனிதர்களை அவர்கள் இப்போது இருக்கிற நிலையின்படி பார்க்காமல், தம்முடைய வல்லமையால் அவர்கள் எதிர்காலத்தில் எப்படி மாறுவார்கள் என்பதைப் பார்த்து நம்புகிறார்.

---

**உண்மையான அன்பு என்னவென்பதை, இயேசு வேறு எந்த வழிகளில் வெளிப்படுத்துகிறார்?**

# விசுவாசம், நம்பிக்கை, அன்பு

அன்பு என்பது நீடிய சாந்தம், தயவு, சந்தோஷம், மீள்திறன், விசுவாசம், நம்பிக்கை, சகிப்புத்தன்மை, விடாமுயற்சி என்று பார்த்தோம். இயேசுவிடம் இந்தத் தன்மைகள் அனைத்தையும் கண்டபிறகு, அடுத்ததாக அவரைப் பின்பற்றவேண்டும். அதைத்தான் கொரிந்தியர்களிடம் பவுல் எதிர்பார்த்தார். ஆனாலும், அன்பின் எட்டு எதிர்மறைப் பண்புகளில் உள்ள 'செய்யாது' என்கிற பதத்தை நீக்கிவிட்டால், 'கொரிந்தியர்கள் தங்கள் சபைக்குள் நடந்துகொண்ட விதம் பற்றிய துல்லியமான விவரிப்பைப் பெறலாம்: பொறாமை, வீண்புகழ்ச்சி, இறுமாப்பு, அயோக்கியம், சுயநலம், எளிதில் எரிச்சலடைதல், பிறர் செய்கிற தவறுகளைக் கவனித்தல் போன்றவைக் காணப்பட்டன. கொரிந்து சபையின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பவுல் இங்கு வினைச்சொற்களைப் பயன்படுத்துகிறார்'.[1]

அன்பு எதைச் செய்யும், எதைச் செய்யாது என்பதை விவரித்த பிறகு, உண்மையான அன்பைக் காட்டும்படி ஊக்குவிக்கிற வகையில், அன்பின் அழியாதன்மையை வலியுறுத்தி இந்தப் பகுதியை முடிக்கிறார்.

ஒருநாள், தீர்க்கதரிசனங்கள் தேவைப்படாமல் போகும்; நாம் ஒரே ஒரு மொழியைமட்டுமே பேசுவோம்; குறைபாடுள்ள மனித அறிவு மறைந்து, தேவனைப்பற்றிய புத்தம் புதிய அறிவைப் பெறுவோம். 1கொரி 13:12. ஆவியின் வரங்கள் கொடுக்கப்பட்ட நோக்கம் நிறைவேறும்போது அவை முடிவுக்கு வரும். 1கொரி 13:10. ஆனால், 'அன்பு ஒருக்காலும் ஒழியாது!' 1கொரி 13:8.

அதேபோல, கிறிஸ்து திரும்ப வரும்போது, விசுவாசமானது தரிசித்தலாக மாறும். 2கொரி 5:6. மேலும் நாம் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த காரியம் நிஜமாகும். ரோமர் 8:24. நம் திரித்துவ தேவனின் சுபாவத்திற்கு ஓர் அடையாளமாக அன்பு நிலைத்திருக்கும். விசுவாசமும் நம்பிக்கையும்கூட ஒருவிதத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும். விசுவாசமானது இரட்சிப்பின் அனுபவமாகவும், நம்பிக்கையானது புதிய பூமியில் புதிய ஆனந்தத்தையும் அறிவையும் பெறுவதற்கான வாஞ்சையாகவும் எதிர்பார்ப்பாகவும் மீட்கப்பட்டவர்களின் அனுபவத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும். ரோமர் 4:3. எனினும் அன்பு, அதாவது தேவனுடைய அன்பு, நித்தியத்திற்கும் மேலோங்கி நிற்கும்.

மிகவிரைவில், நாம் நம்முடைய கர்த்தரை முகம்முகமாகத் தரிசிப்போம். 1கொரி 13:12. அந்த நாள் வரும் வரை, நம் வாழ்க்கையில் விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு ஆகிய மூன்று நற்தன்மைகளும் காணப்படவேண்டும்; இந்த மூன்றும் சேர்ந்ததுதான், பரிசுத்த ஆவியானவர்மூலமாக உருவாகிற கிறிஸ்தவ வாழ்க்கை. அதனால்தான் கிறிஸ்தவர்களிடம் இது காணப்படவேண்டும். ரோமர் 5:1-5; கலா 5:5,6; எபே 1:15,18; 4:1-5. ஆனாலும், அன்பு எல்லாவற்றிலும் பெரியது; எல்லாவற்றிற்கும் மேலாக, தேவனுடைய சுபாவத்தை விவரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒரே நற்பண்பு இது மட்டுமே. 1யோவான் 4:8.

---

**'தேவன் அன்பாகவே இருக்கிறார்' என்பதன் உண்மையான அர்த்தம் என்ன? இந்தக் கருத்தை ஓரளவுக்குமட்டுமே புரிந்துகொள்ள முடிந்தாலும், இந்த வாக்கியம் நமக்கு ஏன் ஒரு சிறந்த நற்செய்தி?**

[1] Verlyn D. Verbrugge, "1 Corinthians," in The Expositor's Bible Commentary: Romans–Galatians, revised edition (Grand Rapids, MI: Zondervan, 2008), p. 372.

# மேலும் படிக்க:

'ஒருவரது விசுவாசப் பிரகடனம் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், அவரது இருதயம் தேவன்மீதும் சகமனிதர்கள்மீதும் உள்ள அன்பினால் நிறைந்திருக்கவில்லை என்றால், அவர் கிறிஸ்துவின் உண்மையான சீடர் அல்ல. அவர் அதிக விசுவாசமுடையவராக, அற்புதங்களைச் செய்கிற வல்லமையைப் பெற்றிருந்தாலும், அன்பு இல்லையேல் அவரது விசுவாசம் பயனற்றதாக இருக்கும். அவர் தாராள குணத்தைக் காண்பிக்கலாம்; ஆனால் உண்மையான அன்பின்றி, வேறு ஏதேனும் நோக்கத்திற்காக தன் சொத்துக்களையெல்லாம் ஏழைகளுக்கு உணவளிக்கக் கொடுத்தாலும், அந்தச் செயல் அவரை தேவனுடைய தயவுக்குப் பாத்திரமாக்காது. வைராக்கியத்தோடு இரத்தசாட்சியாக மரித்தாலும்கூட, அன்பினால் தூண்டப்பட்டு அதைச் செய்யவில்லை எனில், அவர் மாயையான நம்பிக்கையுடைய ஆர்வலராகவோ, முன்னேற்றத் துடிப்புள்ள போலி வேடதாரிகவோதான் தேவனால் கருதப்படுவார்'.[1]

'நம்மிடம் பிரசங்கங்கள் ஏராளமாக உள்ளன. மிகமுக்கியத் தேவை: அழிந்துபோகும் ஆத்துமாக்கள்மீது காட்டுகிற அன்பாகும்; அது தேவனுடைய சிங்காசனத்திலிருந்து பெருக்கெடுத்து வருகிற அன்பாகும். உண்மையான கிறிஸ்தவம் ஒரு மனிதனின் ஒட்டுமொத்த அம்சங்களிலும் அன்பைப் பரவச்செய்கிறது. அது மனிதனின் மூளை, இருதயம், உதவுகிற கரங்கள் மற்றும் கால்கள் என ஒவ்வொரு முக்கியப் பகுதியையும் தொட்டு, அவர்கள் எங்கு நிற்க தேவன் விரும்புகிறாரோ அங்கு உறுதியாக நிற்கச் செய்கிறது; அப்போது முடவர்கள் வழிதவறிப் போகாதபடிக்கு, தங்கள் வழிகளை அவர்கள் கோணலாக்காமல் இருப்பார்கள். அழிந்துபோகும் ஆத்துமாக்கள்மீது கிறிஸ்துவுக்குள்ள மிகத்தீவிரமான பற்றியெரிகிற அன்பே ஒட்டுமொத்த கிறிஸ்தவ அமைப்பின் ஜீவநாடியாக இருக்கிறது'.[2] 'கிறிஸ்துவின் இருதயத்திலிருந்து பெருக்கெடுத்து வருகிற அன்புமட்டுமே குணமாக்கமுடியும். மரத்தில் சாறு பாய்வதுபோல அல்லது உடலில் இரத்தம் ஓடுவதுபோல, யாருடைய இருதயத்தில் அந்த அன்பு பாய்கிறதோ அவர்மட்டுமே காயப்பட்ட ஆத்துமாவைக் குணப்படுத்தமுடியும்'.[3]

[1] Ellen G. White, The Acts of the Apostles, pp. 318, 319.

[2] Ellen G. White, Lift Him Up, p. 134.

[3] Ellen G. White, Education, p. 114.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *அன்பின் நேர்மறையான பண்புகளை எல்லாம் பவுல் பட்டியலிட்டு விட்டாரா? இந்தப் பட்டியலில் வேறு எதையெல்லாம் சேர்ப்பீர்கள்?*

2. *1கொரி 14:1 இல், 'அன்பை நாடுங்கள்' என்ற கட்டளையின்மூலம் பவுல் குறிப்பிடுவது என்ன? 1கொரி 13:4-7 ல் அவர் சொல்வதற்கும் இதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது?*

3. *உங்கள் அன்றாட வாழ்க்கையில் அன்பின் எந்தத் தன்மையை நீங்கள் அதிகம் செயல்படுத்தவேண்டும்? உங்கள் உள்ளூர் சபையில் எந்தத் தன்மைகள் மிகவும் அவசியமாக உள்ளன? தீர்க்கதரிசனம், அந்நிய பாஷைகள், அறிவு போன்ற வரங்களோடு அன்பை பவுல் ஏன் ஒப்பிடுகிறார்? 1கொரி 13:8.*

4. *கொரிந்து சபையினர் மத்தியில் காணப்பட்ட ஒற்றுமையின்மைக்கு அன்பே தீர்வு என்று பவுல் சுட்டிக்காட்டுகிறார். ஏன்? இது இன்று நம்முடைய சபைகளுக்கு எவ்வாறு பொருந்தும்?*

# தலைமை அதிகாரியை சந்தித்தல்

**ஆசிரியர், கதாபாத்திரங்கள் மற்றும் இடத்தின் பெயர்கள் மறைக்கப்பட்டுள்ளன**

அன்று காலையில் வழக்கத்தைவிட மிகநீண்டநேரம் ஜெபித்தேன். பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு நாட்டில், குடியுரிமை பெற விண்ணப்பிப்பதில் பல சிரமங்களை எதிர்கொண்டோம். பிறகு, உடனடியாக குடிவரவு அலுவலகத்திற்குச் சென்றால் ஆறு மாத கால தற்காலிக குடியுரிமை அட்டைக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு இருப்பதாகக் எனக்கும் என் மனைவிக்கும் கூறப்பட்டது. மிகவும் சிக்கலான நிலையில் இருந்தோம். எனது மனைவியின் பாஸ்போர்ட்டில் இருந்த ஒரு தொழில்நுட்பக் கோளாறு பிழையால், குடியுரிமைக்கான கோரிக்கை நிராகரிக்கப்பட வாய்ப்பிருந்தது. அந்த நாட்டில் நாங்கள் தங்குவதே ஆபத்தாக இருந்தது. தேவன் நேரடியாகத் தலையிட்டால் ஒழிய, வேறு எவரும் உதவிசெய்யமுடியாத நிலையில் இருந்தோம்.

குடிவரவு அலுவலகத்தில், அனைத்துபடிவங்களையும்கவனமாகப்பூர்த்திசெய்துவிட்டு மிகவும் பதற்றத்துடன் காத்திருந்தோம். இறுதியாக அழைக்கப்பட்டோம், சாளரத்தின் பின்னாலிருந்த பெண்மணி எனது கோரிக்கையை விரைவாகச் செயல்படுத்தினார், ஆனால் என் மனைவியின் பாஸ்போர்ட்டை கையில் எடுத்ததும் தயங்கினார். நாங்கள் பயந்ததுபோல, நான் சொன்ன எந்த விளக்கமும் அவருக்கு திருப்தியாக இல்லை. அவர், ‘நீங்கள் போய் தலைமை அதிகாரியைப் பாருங்கள்’ என்று முணுமுணுத்தபடி எங்களை அனுப்பி வைத்தார்.

இதயம் வேகமாகத் துடிக்க, ஒரு சிறிய ஜெபத்தை ஏறெடுத்தேன். ஒரு நீண்ட நடைபாதையின் முடிவிலிருந்த ஓர் அலுவலகத்திற்கு எங்களை ஒருவர் அழைத்துச்சென்றார்; அங்கே ஒரு பெரிய மேசைக்குப் பின்னால் ஒரு இளைஞர் அமர்ந்திருந்தார். அவர் புன்னகையுடன், ‘நான்தான் தலைமை அதிகாரி’ என்றார். அவர் எங்கள் பாஸ்போர்ட்டுகளை வாங்கிக்கொண்டு, தான் ஆங்கிலம் படித்து வருவதாகவும், விரைவில் ஐக்கிய நாடுகள் சபையில் பணியாற்ற விரும்புவதாகவும் மகிழ்ச்சியுடன் கூறினார். நாங்கள் அவரிடம் அனுப்பப்பட்டதற்கான காரணத்தை அவர் கேட்கவே இல்லை.

சில நிமிட ஆவண வேலைகளுக்குப் பிறகு, அவர் எழுந்து நின்று, ‘எல்லாம் முடிந்துவிட்டது. நாளைக்கு வந்து உங்கள் குடியுரிமை அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்’ என்று சொன்னார். ஆச்சரியத்தில் உறைந்தேன்; நிம்மதியாக இருந்தது; பரிசுத்த ஆவியானவர் என்னை ஏவுவதை உணர்ந்தேன். நான் உடனடியாக ஒரு காகிதத்தில் எனது தொலைபேசி எண்ணை எழுதி அவரிடம் கொடுத்தேன்; ஆங்கிலம் கற்றுக்கொள்ள அவர் எப்போது வேண்டுமானாலும் என்னை அழைக்கலாம் என்று கூறினேன்.

அன்று பிற்பகலில், எங்கள் குடியுரிமை அட்டைகளை முன்னதாகவே ஆயத்தம் செய்துவிட்டதாகவும், அவற்றை வாங்கிச்செல்லுமாறும் எனக்குச் செய்தி அனுப்பினார். ஏமாற்றமும் கவலையையும் மாறி, இப்போது பெரும் வியப்பு வந்தது. தேவன் எங்களுக்கு எவ்வளவு சீக்கிரத்தில் பாதையைச் சீராக்கிக் கொடுத்தார்! அதுமட்டுமல்லாமல், எங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதைக் காட்டிலும் மேலான ஒன்று அவரது திட்டத்தில் இருந்ததை விரைவில் புரிந்துகொண்டோம்.

நானும் அந்தத் தளபதியும் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம். அடிக்கடி பேசுகிறோம், பலமுறை நேரில் சந்தித்தும் இருக்கிறோம். வாழ்க்கை மற்றும் விழுமியங்கள்பற்றிப் பேசிக்கொள்கிறோம். அவரது ஆங்கில அறிவு வளருவதோடுகூட, எங்கள் நட்பும் வளர்கிறது, தேவன் எனக்கு முன்பாக பல வாய்ப்புகளையும் திறந்து வைக்கிறார்.

பாடம் **8** ஆகஸ்ட் 15-21



# கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வல்லமை

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1கொரி 15; லூக் 24:44–47; வெளி 20:5,6; கொலோ 2:12; 2தீமோ 1:12; 1தெச 4:13–17.

**மனன வசனம்:** கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணா யிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். 1கொரி 15:14–17.

மரித்தோரின் உயிர்த்தெழுதலை மறுத்தவர்கள் பவுலின் காலத்திலேயே இருந்தார்கள்! ஏனென்றால், மரித்தபிறகு மனித உடல் என்னவாகிறது என்பதை அக்கால மக்களும் அறிந்திருந்தனர். அதாவது, உடல் சிதைந்து, பின்னர் உலர்ந்து தூசியாகி, இறுதியில் ஒன்றுமில்லாமல் போய்விடும். மேலும், மரித்தவர்கள் மிக நீண்டகாலத்திற்கு மரித்த நிலையிலேயே இருப்பதையும் கண்டிருந்தார்கள். உண்மையில், பெரும்பாலானவர்கள் உயிரோடு வாழ்ந்த காலத்தைவிட, மரித்த நிலையில் இருந்த காலமே மிகஅதிகமாக இருந்தது.

மனித கண்ணோட்டத்தின்படி, உயிர்த்தெழுதல் இன்று நமக்கு எவ்வளவு சாத்தியமற்றதாகத் தோன்றுகிறதோ, அப்படித்தான் அன்றைய மக்களுக்கும் இருந்திருக்கும். பவுல் எதிர்கொண்ட முக்கியப் பிரச்சினையும் இதுதான்.

இது முக்கியத்துவமிக்க விஷயமும்கூட. இயேசு உயிர்த்தெழவில்லை என்றால், அவர் தம்மைப்பற்றி என்ன சொன்னாரோ அது உண்மையாக இருக் காது; சிலுவையால் எந்தப் பலனும் இருக்காது, நம் பாவங்களுக்கான பரிகார மும் செய்யப்பட்டிருக்காது. நம்பிக்கை இல்லாத நிலைமட்டுமே எஞ்சியிருக்கும். ஆனால், நம் ஆண்டவர் உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்கு ஏறிச்சென்று, நம் மைத் தம்முடன் அழைத்துச்செல்ல மீண்டும் வருவார்!

1கொரி 15 ஆம் அதிகாரத்தையும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றிச் சொல்லப்படுகிற சத்தியங்களையும் இந்த வாரம் ஆராய்வோம். தங்களைச்சுற்றி யிருந்த அஞ்ஞான உலகக் கண்ணோட்டத்தின் தாக்கத்தால், கொரிந்து சபையிலி ருந்த சிலர் உயிர்த்தெழுதல் என்று எதுவுமில்லை என்று கூறி வந்தனர். இதற்குப் பதிலாக, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே நமது இரட்சிப்பின் ஒரே நம்பிக்கை என்பதை பவுல் உறுதிப்படுத்துகிறார்.

*2026, ஆகஸ்ட் 22 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அறிவித்தல்

சுவிசேஷத்தை மனதில்வைத்தே 1கொரி 15 ஆம் அதிகாரத்தை பவுல் தொடங்குகிறார். சுவிசேஷத்தைப்பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார்:

**1) அதை கொரிந்தியர்களுக்குப் பிரசங்கித்தேன்.**

**2) அதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.**

**3) அதிலே நிலைத்திருக்கிறார்கள்.**

**4) அதன்மூலமாகவே அவர்கள் இரட் சிக்கப்பட்டார்கள். 1கொரி 15:1,2.**

தொடக்கத்திலேயே இதைக் குறிப்பிடுவதால், தொடர்ந்து சொல்லப் போவதை வாசகர்கள் புரிந்துகொள்ள முடிகிறது, மேலும், நம் இரட்சிப்புக்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் எவ்வளவு இன்றியமையாதது என்பதையும் காட்டுகிறது. ரோமர் 10:9,10. கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் இன்றியமையாத பகுதியாக உயிர்த்தெழுதல் இருப்பதால், அதை மறுப்பது கிறிஸ்துவின்மீது ஒருவருக்கு இருக்கும் விசுவாசத்திற்கே முரணானதாகும்.

**1கொரி 15:1–4; லூக் 24:44–47; ரோமர் 1:1–4 ஆகிய அனைத்திலும் பொதுவாகக் காணப்படுகிற அம்சம் என்ன? .**

பவுல் சொல்கிற செய்தியின் சுருக்கத்தை 1கொரி 15:1-4 இல் காணலாம். 'வேதவாக்கியங்களின்படி' என்கிற சொற்றொடர் பழைய ஏற்பாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளையோ, ஒட்டுமொத்த பழைய ஏற்பாட்டையோ குறிக்கலாம். முக்கியம் என்னவென்றால், இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் பழைய ஏற்பாட்டில் சொல்லப்படும் தேவவாக்குறுதிகளின் நிறைவேறுதலாக உள்ளன.

**1கொரி 15:2,11 ஆகிய வசனங்கள், விசுவாசிப்பதையும் பிரசங்கிப்பதையும் ஏன் சேர்த்தே சொல்கின்றன? இவ்விரண்டிற்கும் இடையே உள்ள தொடர்பு என்ன?**

---

கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்று அறிவிக்கிற அனைவரும், அவரது உயிர்த்தெழுதல் மெய்யாகவே ஒரு வரலாற்று நிகழ்வு என்பதை முதலில் நம்பவேண்டும். இதன் அடிப்படையில், 1கொரி 15:5-8 புதிய ஏற்பாட்டில் மிகமுக்கியமான பகுதியாக உள்ளது. கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு பலர் அவரைப் பார்த்ததற்கான உறுதியான வேத பூர்வமான ஆதாரத்தை இப்பகுதி வழங்குகிறது; பவுல் இந்த நிருபத்தை எழுதிய காலத்தில் அவர்களில் பலர் அப்போதும் உயிரோடுதான் இருந்தனர். 1கொரி 15:6.

அதாவது, அவர்கள் என்ன பார்த்தார்களென நீங்களே நேரடியாகச் சென்று அவர்களிடம் கேளுங்கள் என்பதுபோல பவுல் கூறுகிறார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் உண்மை என்பதில் அந்த அளவிற்கு உறுதியான நம்பிக்கையுடன் இருந்தார். இவர்கள் நேரில் கண்ட சாட்சிகளாக இருந்தனர். இயேசு குறிப்பிட்டபடியே, அவர்கள் 'இவைகளுக்குச் சாட்சிகளாய்' இருந்தார்கள். லூக் 24:48.

---

**கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நாம் நம்புவதற்கு என்னென்ன காரணங்கள் உள்ளன? மேலும், நாம் நேரில் பார்க்காவிட்டாலும், இவ்வுலகரீதியில் அல்லது ஆவிக்குரியரீதியில் நாம் நம்புகிற பிற விஷயங்கள் என்னென்ன?**

# உயிர்த்தெழுந்த கிறிஸ்து, நம் ஒரே நம்பிக்கை!

உயிர்த்தெழுதல் இல்லையானால், விசுவாசிகளுக்கு நிகழ்காலத்தில் எந்த நம்பிக்கையும் இல்லை, எதிர்காலம்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. 1கொரி 15:9-19.

**கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால் எவற்றை இழக்கிறோம்? 1கொரி 15:9–19.**

பண்டைய கால அஞ்ஞான மார்க்கத்தார் உயிர்த்தெழுதலை நம்பவில்லை. குறிப்பாக, மரித்தபிறகும் ஆத்துமா உயிரோடு இருக்கும் என்று கிரேக்கர்கள் நம்பினார்கள். உடல்-ஆத்துமா இருமை வாதத்தின்படி, மரணத்தின்போது ஆத்துமா பிரிந்து, மரித்தோரின் ஆத்துமாக்கள் செல்லவேண்டிய இடத்திற்குப் பறந்து போவதாக நம்பப்பட்டது. 1கொரி 15:12-19 இலுள்ள பகுதியை 'என்ன? மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்று ஒன்றுமே இல்லை என்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்?' என்று வியப்பான ஒரு கேள்வியுடன் பவுல் துவங்குகிறார். 1கொரி 15:12. (ஆசிரியரின் மொழிபெயர்ப்பு) உயிர்த்தெழுதலை நம்பாமல் இருப்பதை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத ஒன்றாக பவுல் கருதினார்; ஏனெனில், அதை நேரில் கண்ட சாட்சிகள் பலர் இருந்தனர். 1கொரி 15:5-8. ஆனால், உயிர்த்தெழுதல் இல்லையென்றால், அவர்களது நம்பிக்கை ஒரு பொய்யின்மீது கட்டப்பட்டதாகிவிடும்; மேலும் அவர்கள் இன்னும் தங்களது பாவங்களிலேயே இருப்பார்கள்.

**மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லை என்றால், அதன் விளைவுகள் என்ன?**

1. **கிறிஸ்துவும் உயிர்த்தெழுந்திருக்கவில்லை. 1கொரி 15:13,16.**
2. **எங்கள் பிரசங்கம் விருதாவாயிருக்கும். 1கொரி 15:14.**
3. **உங்கள் விசுவாசமும் வீணாயிருக்கும். 1கொரி 15:14.**
4. **நாங்கள் பொய்ச்சாட்சிகளாக இருப்போம். 1கொரி 15:15.**
5. **உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும். 1கொரி 15:17.**
6. **இன்னும் உங்கள் பாவங்களிலேயே இருப்பீர்கள். 1கொரி 15:17.**
7. **கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் அழிந்துபோயிருப்பார்கள். 1கொரி 15:18.**

உயிர்த்தெழுதல் இல்லையென்றால், பிரசங்கமும் விசுவாசமும் வீணானவை. 1கொரி 15:14. 'வீண்' என்பதற்கான கிரேக்க வார்த்தை **'கெனோஸ்.'** என்பதற்கு உண்மையற்றது (பொய்), பலனற்றது (விருதாவானது), நோக்கமற்றது (வீணானது) போன்ற அர்த்தங்கள் உண்டு.

உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், விசுவாசம் **பயனற்ற** ஒன்று. இதற்கு **'மத்தாயோஸ்'** என்கிற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. 1கொரி 15:17. 'மத்தாயோஸ்' என்கிற சொல்லுக்கும், 'கெனோஸ்' என்கிற சொல்லுக்கும் பெரிய வித்தியாசம் இல்லாவிட்டாலும், இயேசு உயிரோடு இல்லை என்றால், நம் பாவங்கள் மன்னிக்கப்படாமல் நம் விசுவாசம் பலனற்ற, மாயையான ஒன்றாக இருக்கும். 1கொரி 15:17. அப்படியானால், நாம் மற்றவர்களை ஏமாற்றுகிற, ஏமாற்றப்படுகிற பொய்யான சாட்சிகளாகவே இருப்போம். 1கொரி 15:15.

---

**ஒருவர் மரித்தவுடனேயே பரலோகத்திற்கோ நரகத்திற்கோ செல்கிறார் என்றால், 1கொரி 15 ஆம் அதிகாரத்தைப் புரிந்துகொள்ள முடியுமா? அப்படியென்றால், மரித்தவர்கள் மரண நித்திரையில் இருக்கிறார்கள் என்பது ஏன் மிகமுக்கியமான ஒரு போதனையாக இருக்கிறது?**

# நித்திரையடைந்தவர்களில் முதற்பலன் கிறிஸ்து

இயேசு உயிரோடு இல்லாதிருந்தால், எதிர்காலத்தைப்பற்றிய எந்தவொரு எதிர்பார்ப்பும் வெறும் மாயையாகவே இருக்கும். 1கொரி 15:12-19. ஆனால், 'கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்தார்'. 1கொரி 15:20. அவரது உயிர்த்தெழுதல் ஒரு வரலாற்று நிகழ்வாகும். எனவே, கிறிஸ்துவுக்குள் மரித்த அனைவரும் அவர் வரும்போது உயிர்த்தெழுப்பப்படுவார்கள் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். 1கொரி 15:20-23.

**1கொரி 15:20–23-ல் இயேசு 'முதற்பலன்' என்பதின் அர்த்தம் என்ன?**

தற்போதுள்ள பொல்லாத யுகத்தின் முடிவாக, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் சரீர உயிர்த்தெழுதல் நடைபெறும். 1கொரி 15:22,23; வெளி 20:5,6. கடைசி ஆதாமாகிய கிறிஸ்து, இவ்வுலகத்தின் ஆளுகையை மீண்டும் பிதாவினிடத்திற்குத் திருப்பி, ராஜ்யத்தை அவரிடத்தில் ஒப்படைப்பார். 1கொரி 15:25-28. கிறிஸ்து தம்மைத்தாமே தேவனுக்குக் கீழ்ப்படுத்தினதை, ஆதாமும் கிறிஸ்துவும் சித்திரிக்கப்படுவதின் அடிப்படையில் புரிந்துகொள்ளவேண்டும். மீட்பின் திட்டத்தில் உன்னதமான பங்குவகிக்கிற ஆதாமாகிய இயேசு தமது பிதாவின் சித்தத்திற்கு முற்றிலும் தம்மைக் கீழ்ப்படுத்துகிறார்; ஆனால் முதல் ஆதாம் இதைச் செய்யத் தவறி விட்டார். 1கொரி 15:45.

**முதலாவதாக,** கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை மறுப்பது முட்டாள்த்தனமானது. 1கொரி 15:29-34. ஞானஸ்நானத்தை ஓர் உதாரணமாகப் பயன்படுத்துகிறார்; ஏனெனில் ஞானஸ்நானமானது ஒரு விசுவாசி கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் அவரோடு இணைந்திருப்பதைக் குறிக்கிற அடையாளம். ரோமர் 6:3,4; கொலோ 2:12. எனவே, உயிர்த்தெழுதலின் நிஜத்தை மறுப்பது எந்த வகையிலும் அர்த்தமற்றதாகும். ஆனாலும், 'மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம்பெறுகிறவர்கள்' என்கிற சொற்றொடரின்மூலம் பவுல் குறிப்பிடுவதைப் புரிந்துகொள்வது கடினமாக உள்ளது.

'இதற்கு பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனாலும், மரணமடைந்த தங்களுக்குப் பிரியமானவர்களோடு உயிர்த்தெழுதலின்போது மீண்டும் ஒன்றிணையவேண்டும் என்ற நோக்கத்தில், சிலர் ஞானஸ்நானம் பெற முடிவெடுத்ததை இச்சொற்றொடர் குறிக்கிறது. அல்லது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் முன்மாதிரியான வாழ்க்கைக்குப் பிரதிபலிப்பாக அவர்கள் ஞானஸ்நானம் பெறத் தீர்மானித்ததையும் இது குறிக்கலாம். எனவே, மரித்தவர்களுக்கு பதிலாக ஞானஸ்நானம் பெறாமல், மரித்தவர்களின் நிமித்தமாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் என்பதை இது குறிக்கிறது'. Carl P. Cosaert, "1 Corinthians," Andrews Bible Commentary: New Testament (Berrien Springs, MI: Andrews University Press, 2022), p. 1652.

**இரண்டாவதாக,** உயிர்த்தெழுதல் இல்லையென்றால், மரணத்தைத் தைரியமாக எதிர்கொள்ள இயலாது. 1கொரி 15:30-32. மாறாக, இவ்வுலகத்தின் சிற்றின்பங்களில் மகிழ்ச்சியாக இருந்தாலே போதும் என்று தோன்றும். 1கொரி 15:32.

---

**எதிர்காலத்தைப்பற்றி, பவுலால் எப்படி அவ்வளவு உறுதியாக இருக்க முடிந்தது? 2தீமோ 1:12. நாம் எப்படி அவ்வாறு உறுதியாக இருக்கமுடியும்?**

# உயிர்த்தெழுந்த சரீரம்

1கொரி 15:35-39 இல், உயிர்த்தெழுந்த சரீரத்தைப்பற்றி, பவுல் பேசுகிறார். இரண்டு கேள்விகளை முன்வைத்து ஆரம்பிக்கிறார்: 'மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள்? எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்கள்?' 1கொரி 15:35. இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் 1கொரி 15:36-49 வசனங்களில் உள்ளன.

**1கொரி 15:35 இலுள்ள கேள்விகளுக்கு 1கொரி 15:36-41 இன் பதில் என்ன?**

உயிர்த்தெழுதலில் நடப்பதை வாசகர்கள் புரிந்துகொள்ள பவுல் மூன்று ஒப்புமைகளைப் பயன்படுத்துகிறார்.

1. சரீரத்தை ஒரு விதைக்கு ஒப்பிடுகிறார். 1கொரி **15:36–38.** விதை அற்புதமாக ஒரு செடியாக மாறுவதற்கு முதலில் அது சாகவேண்டும். (விதையாக இருப்பதை நிறுத்தவேண்டும்). இது போதிப்பது என்ன? உயிர்த்தெழுதல் என்பது தேவனுடைய ஓர் அற்புதம்.
2. எல்லாச் சரீரங்களையும் ஒப்புமையாகக் காட்டுகிறார். 1கொரி **15:39, 40.** இவ்வுலகில் தற்போதையச் சூழலுக்கு ஏற்றவாறு விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் வெவ்வேறு வகையான சரீரங்களை தேவன் வழங்கியுள்ளார். அதே போல், நமது சரீரங்களும் பரலோக உலகின் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அமையும்.
3. மகிமையுள்ள சரீரம் என்கிற ஒப்புமை. 1கொரி **15:40, 41.** உயிர்த்தெழுந்த சரீரத்தின் மகிமை அதற்குமுன் இருந்த விழுந்துபோன சரீரத்தின் மகிமையைவிட அதிக மேன்மையாது.

தற்போதுள்ள நமது பூமிக்குரிய சரீரத்திற்கும் உயிர்த் தெழுந்த சரீரத்திற்கும் இடையிலான 4 வேறுபாடுகள் மூலமாகவும் இந்தக் கருத்தை புரிந்துகொள்ளலாம். **முந்தையது பூமிக்குரியது, அழியக்கூடியது, பலவீனமானது, இயற்கைரீதியானது (ஜென்மசரீரம்).** மாறாக, **பிந்தையது பரலோகத்திற்குரியது, அழியாதது, பலமுள்ளது, ஆவிக்குரியது**. 1கொரி 15:40-44. அதனால் இவ்விரண்டிற்கும் இடையே தொடர்பே இருக்காது என்று அர்த்தமல்ல. சரீரம் என்பதற்கு **ஷோமா** என்கிற கிரேக்க வார்த்தையை பவுல் பயன்படுத்துகிறார்; உயிர்த் தெழுந்த சரீரம் அடக்கம் செய்யப்பட்ட சரீரத்தின் தொடர்ச்சி என்பதை அது காட்டுகிறது. எந்தெந்த அம்சங்களில் அந்தத் தொடர்ச்சி இருக்காது என்பதை மேலுள்ள நான்கு வேறுபாடுகள் காட்டுகின்றன. இப்போது நம்மிடமுள்ள அழியக்கூடிய சரீரங்களைப்போல நம் புதிய சரீரங்கள் இருக்காது; கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

'ஆவிக்குரிய' என்று, **சரீரம் இல்லாத ஆவி போன்ற நிலையை பவுல் சுட்டிக்காட்டவில்லை.** இயேசு 'நமது அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்' என்று வேறொரு இடத்தில் கூறுகிறார். பிலி 3:21. நமக்கு உண்மையான சரீரங்கள் இருக்கும், ஆனால் அவை முதுமை அடையாது, அழியாது. தற்போது நமக்குத் தெரிந்ததெல்லாம் அழிவு, நோய், மரணம் மட்டுமே என்பதால், இவை இல்லாத ஒரு வாழ்க்கையைக் கற்பனைசெய்து பார்ப்பது கடினம்; ஆனால் இயேசுவில் நமக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டிருப்பது அதுவே.

---

**நமது சரீரங்கள் பரிபூரணமாக மாற்றப்படும் என்கிற உறுதிமொழி, இன்று நாம் எதிர்கொள்ளுகிற உடல்ரீதியான வரம்புகள், பலவீனங்களுக்குமத்தியில் மன உறுதியுடன் இருக்க எப்படி உதவுகிறது?**

# மரணத்தின்மீது இறுதி வெற்றி

**மரணத்தின் மீதான நமது இறுதி வெற்றிபற்றி 1கொரி 15:54-57 என்ன சொல்கிறது?**

---

'மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது'. 1கொரி 15:50. சுவாரஸ்யமான கூற்று! பரலோகத்தில் நாம் இந்தச் சரீரங்களுடன் வாழப்போவதில்லை என்பதையே பவுல் குப்பிடுகிறார். ஆனால் பவுல் சொல்கிற கருத்து முற்றிலும் வித்தியாசமானது. 1கொரி 15:50 இன் இணைச்சொல் அமைப்பு, 'மாம்சமும் இரத்தமும்' என்பது, ''அழிவுள்ளது' என்பதையும், 'தேவனுடைய ராஜ்யம்' என்பது 'அழியாமை' என்பதையும் குறிக்கிற இணைச்சொற்களாக உள்ளன. 1கொரி 15:42-49 இல் சொன்னதுபோல, இங்கேயும் பவுல் இப்போதுள்ள சரீரத்தை (சடலத்தை) உயிர்த்தெழுந்த சரீரத்தோடு ஒப்பிடுகிறார். அடக்கம் செய்யப்பட்ட சரீரம் அழிவுக்கும் மரணத்திற்கும் உட்பட்டது; ஆனால் உயிர்த்தெழுந்த சரீரம் அழிவற்ற தன்மையையும் சாவாமையையும் உடையது. 1கொரி 15:50,53,54. அதாவது, 'பரலோகத்தைச் சுதந்தரிப்பதற்கு நமது சரீரங்கள் முழுதளவிலான மாற்றத்திற்கு உள்ளாக வேண்டும்' என்று பவுல் கூறுகிறார்.

அழிவுள்ளது, சாவுக்கேதுவானது ஆகிய வார்த்தைகள்மூலம் நம் பாவ சுபாவத்தைக் குறிப்பிடுகிறார். யூத எழுத்துக்களில், 'மாம்சமும் இரத்தமும்' என்பது விழுந்துபோன மனுக்குலத்தைக் குறிக்கிற ஒரு சொற்றொடராகும்; அதனால்தான் அவர் மீண்டும் வரும்போது நமது சரீரங்கள் மாற்றப்பட்டு, எல்லாக் குறைபாடுகளிலிருந்தும் சுத்திகரிக்கப்பட வேண்டும்.

நமது பாவ சுபாவம் நீக்கப்பட்டு, மகிமையடைகிற அனுபவத்தை பெறும்போதுமட்டுமே 'மரணம் வெற்றியாக விழுங்கப்பட்டது' என்கிற அறிவிப்பு நிறைவேறும். 1கொரி 15:54; 15:51-53; 1தெச 4:13-17; 1கொரி 15:54. அப்போது, 'மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?' என்று தைரியமாகப் பாடமுடியும். 1கொரி 15:55. இவை அனைத்தும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நடைபெறும். 1கொரி 15:51,52.

நாம் மரணத்தில் கண்களை மூடுகிறோம், அடுத்த கணம் நாம் அனுபவிக்கப்போவது இயேசுவின் இரண்டாம் வருகைதான்; அப்போது அவர் நம்மை மரித்தோரிலிருந்து எழுப்புவார். ஒரு விசுவாசி எப்போது மரித்திருந்தாலும், அது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன்பாக இருந்தாலும் சரி, 'கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே' உயிர்ப்பிக்கப்படுவார். 'எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்'. 1கொரி 15:52.

---

**வாழ்க்கை எவ்வளவு சீக்கிரம் கடந்துபோகிறது என்று புலம்பாதவர் யார்? நமது சொந்த அனுபவத்தில், இயேசுவின் இரண்டாம் வருகையும் அவ்வளவு விரைவாகவே தோன்றும். அவர் திரும்ப வரும்போது நமது முதல் எண்ணம், 'ஆச்சரியம் ஆண்டவரே, உம்முடைய வருகை உண்மையிலேயே மிகவிரைவில் நிகழ்ந்துவிட்டது!' என்பதாகத்தான் இருக்கும். இந்தச் சிந்தனை, கிறிஸ்துவின் வருகை 'தாமதமாவதாகக்' கருதப்படுவதைப் புரிந்துகொள்ள எவ்வாறு உதவுகிறது?**

# மேலும் படிக்க:

கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையே விசுவாசிக்கு நித்திய ஜீவன்குறித்த நிச்சயமாக இருக்கிறது. இயேசு, 'என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் என்றென்றாலும் மரியாமலிருப்பான். இதை விசுவாசிக் கிறாயா?' என்று கேட்டார். இங்கே கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின் காலத்தை கருத் தில்கொண்டு பேசுகிறார். அப்போது மரித்த நீதிமான்கள் அழிவில்லாதவர்களாய் எழுப்பப் படுவார்கள், உயிரோடிருக்கும் நீதிமான்கள் மரணத்தைக் காணாமல் பரலோகத்திற்கு எடுத் துக்கொள்ளப்படுவார்கள். லாசருவை மரித்தோரிலிருந்து எழுப்புவதன் மூலம் கிறிஸ்து செய்யவிருந்த அந்த அற்புதம், மரித்த அனைத்து நீதிமான்களின் உயிர்த்தெழுதலுக்கும் அடையாளமாக இருந்தது'. Ellen G. White, The Desire of Ages, p. 530.

'நித்திரையிலிருந்த பரிசுத்தவான்களை தேவகுமாரனுடைய சத்தம் அழைத்தபோது, பூமி பயங்கரமாக அதிர்ந்தது. அந்த அழைப்பிற்குச் செவிகொடுத்து, அவர்கள் மகிமையான அழியாமையைத் தரித்தவர்களாய் வெளியே வந்து, "மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயம் எங்கே? வெற்றி! மரணத்தின் மீதும் கல்லறையின் மீதும் வெற்றி!" என்று ஆர்ப் பரித்தார்கள். 1கொரி 15:55. பின்னர், உயிரோடிருந்த பரிசுத்தவான்களும் உயிர்த்தெழுந்தவர் களும் இணைந்து, வெற்றிக் களிப்பில் நீண்டநேரம் ஆர்ப்பரித்தனர். வியாதி மற்றும் மரணத் தின் வடுக்களுடன் கல்லறைக்குள் சென்ற சரீரங்கள், அழியாத ஆரோக்கியத்தோடும் பலத் தோடும் வெளியே வந்தன. உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே மறுரூபமாக்கப்பட்டு, உயிர்த்தெழுந்தவர்களோடுகூட ஆகாயத்தில் தங்கள் கர்த்தரைச் சந்திக்க எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். ஓ, எவ்வளவு மகிமையான சந்திப்பு! மரணத்தால்பிரிக்கப்பட்ட நண்பர்கள், இனிஒருபோதும்பிரியாதபடி ஒன்றுசேர்க்கப்பட்டனர்'. Ellen G. White, The Story of Redemption, pp. 411, 412.

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நேரில் கண்ட சாட்சிகளை யோசித்துப் பாருங்கள். அப் 1:22; 2:32; 3:15; 4:33; 5:30–32). அது நடந்து சுமார் 2000 ஆண்டுகளுக்குப் பிறகு, நாம் எப்படி அவரது உயிர்த்தெழுதலுக்குச் 'சாட்சிகளாக' இருக்கமுடியும்?*

2. *கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் சுவிசேஷ செய்தியின் ஒருங்கிணைந்த ஒரு பகுதி யாகும். 1கொரி 15:1–4. உயிர்த்தெழுதல் இல்லையென்றால், கிறிஸ்துவின் மரணத் தைப்பற்றி அறிவிப்பது அர்த்தமற்றதாகிவிடும். 1கொரி 15:14. கிறிஸ்துவின் மரணமும் கூட முக்கியத்துவமற்றதாகிவிடும். ஏன்? கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்ல மையைப்பற்றி உங்களுடைய பதில் கூறுவது என்ன?*

3. *'மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே?' என்று பவுல் சொல்வதுபற்றிச் சிந்தியுங்கள். 1கொரி 15:32. இதன் கருத்து என்ன? வகுப்பில், மரித்தோரின் நிலைகுறித்துக் கலந்துரையாடுங்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் மரித்த உடனே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படு கிறார்கள் என்றால், 1கொரி 15 ஆம் அதிகாரம் ஏன் அர்த்தமற்றதாகிவிடும்?*

# ஆவியானவரால் நடத்தப்பட்ட சந்திப்புகள்

**ஆசிரியர், கதாபாத்திரங்கள் மற்றும் இடத்தின் பெயர்கள் மறைக்கப்பட்டுள்ளன**

நான் சாட்சி பகிர்ந்துவருகிற பெயர் சொல்ல விரும்பாத அந்தத் தேசத்தில், ஒரு வீட்டுச் சபையை நிறுவ தேவன் எங்களுக்கு உதவும்படி நானும் என் மனைவியும் ஊக்கமாய் ஜெபித்தோம். ஆரம்பத்தில் வெளிநாட்டவர்கள் மட்டுமே வருவார்கள் என்று எதிர்பார்த்தோம், ஆனால் அந்த இடத்தைச் சேர்ந்தவர்களிலும் தேவன் ஏற்கனவே யாருடைய இருதயங்களில் கிரியை செய்துகொண்டிருந்தாரோ, அவர்களை எங்களிடம் அனுப்புவார் என்று விசுவாசித்தோம். அதற்குச் சிறிது காலம் ஆனது, ஆனால் தேவன் அதை நிறைவேற்றினார்!


ஒருமுறை நான் ஒரு வாடகை காரை முன்பதிவு செய்தபோது சல்மானைச் சந்தித்தேன். வாகனம் ஓட்டிக்கொண்டே என்னுடன் பேசிக்கொண்டிருந்தார், மெதுவாக மதரீதியான விஷயங்களில் எங்களது உரையாடல் சென்றது. தனது ஆவிக்குரிய தேடுதலின் முயற்சியாக, இணையத்தில் விடைதேடியபோது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தான் ஒரு கிறிஸ்தவராக மாறியதாக என்னிடம் சொன்னார்.

சல்மானுக்கும் எனக்கும் இடையே மெல்ல மெல்ல ஒரு நட்பு உருவானது. ஒருமுறை, அவர் ஏதேனும் ஏதாவது விசுவாசக் குழுவில் அங்கமாக இருக்கிறாரா அல்லது அவருக்கு கிறிஸ்தவ நண்பர்கள் யாராவது இருக்கிறார்களா என்று கேட்டேன். அவர் இதற்குமுன்பு ஒருகிறிஸ்தவரைக்கூட நேரில் சந்தித்ததில்லை என்று சொன்னபோது அதிர்ச்சியடைந்தேன்! நானும் என் மனைவியும் அவரை எங்கள் வீட்டு ஆராதனைக் கூட்டங்களுக்கு அழைக்க உந்தப்பட்டோம்; அவரும் வழக்கமாக வரத் தொடங்கினார். அவருக்குத் திருமணமானபோது, அவர் தனது மனைவியையும் அழைத்து வந்தார்; அவரும் இயேசுவின் அன்பில் ஈர்க்கப்பட்டதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தோம்.

ஒருநாள், சல்மான் கிறிஸ்துவிடம் மீதான தனது அன்பைப்பற்றி தனது சகோதரன் பைசலிடம் சொல்ல முடிவுசெய்தார். ஆச்சரியம் என்னவென்றால், தானும் ஏற்கனவே ஒரு கிறிஸ்தவனாக இருப்பதாக பைசல் அவரிடம் சொன்னாராம்! அவரும் இணையத்தில் ஆன்மீகக் கேள்விகளுக்கான பதில்களைத் தேடியதாகவும், தனது இருதயத்தை இயேசுவுக்குக் கொடுத்ததாகவும் சொல்லியிருக்கிறார்.

எங்கள் வீட்டுச் சபையைப்பற்றி பைசலிடம் சல்மான் சொன்னார், பைசலும் எங்கள் குழுவில் சேர்ந்துகொண்டார். தேவன்தாம் எங்களை ஒன்றிணைத்தார் என்பதில் அவருக்கு எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. சமீபத்தில் கிறிஸ்தவ ஐக்கியத்தைத் தேடி ஒரு சபைக்குச் சென்றிருக்கிறார், ஆனால் பைசல் பின்பற்றும் மதத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே வருவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்ததால், இனிமேல் வரவேண்டாம் என்று அங்கிருந்த தலைவர் அவரிடம் கூறிவிட்டாராம். பைசலுக்கு ஒரு விசுவாசக் குடும்பமாக இருக்க தேவன் எங்களுக்கு உதவியதற்காக நாங்கள் அவரைத் துதித்தோம். இரண்டு வருட அமைதியாக ஜெபித்து வந்த சல்மானும் பைசலும் தாங்கள் கண்டுகொண்ட புதிய விசுவாசத்தைப்பற்றி தங்கள் குடும்பத்தினரிடம் சொல்ல முடிவுசெய்தனர். தேவனுடைய கிருபையினால், அவர்களுடைய பெற்றோர்கள் அந்த முடிவை ஏற்றுக்கொண்டனர்; ஆனால் மற்ற குடும்ப உறுப்பினர்கள் அவர்களைப் புறக்கணித்தனர். பைசலும் சல்மானும் அவரது மனைவியும் இயேசுவுடனான உறவில் தொடர்ந்து வளர ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**பாடம் 9** **ஆகஸ்ட் 22-28**



# அன்பால் உந்தப்பட்ட ஊழியம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 2கொரி 1:3–14; 2:17; 4:2; 1கொரி 16:5–7; 2கொரி 7:5–13; 2:5–17.

**மனன வசனம்:** அன்றியும், நீங்கள் துக்கப்படும்படிக்கு எழுதாமல், உங்கள்மேல் நான் வைத்த அன்பின் மிகுதியை நீங்கள் அறியும்படிக்கே, மிகுந்த வியாகுலமும் மன இடுக்கமும் அடைந்தவனாய் அதிகக் கண்ணீரோடே உங்களுக்கு எழுதினேன். 2கொரிந்தியர் 2:4.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு வாழ்க்கை எளிதாக இருக்கவில்லை. சிறையில் அடைக்கப்பட்டார்; உயிருக்கு ஆபத்தான சூழ்நிலைகள் உண்டாயின; அந்நிலையில் பின்வருமாறு எழுதினார்: 'யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல் லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஓர் இராப் பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங் களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்கு கிறது.' 2கொரி 11:24–28.

கொரிந்து சபையின்மீது பவுலுக்கு 'ஆழ்ந்த கவலை' இருந்ததை அச்சபைக்கு எழுதிய நிருபங்களில் காண்கிறோம். அதன் மத்தியிலும், கிறிஸ்து நம்மீது வைத்துள்ள கைவிடாத அன்புபோல, அவர்கள்மீது குறைவின்றி அன்புகாட்டினார். இயேசு நம்மீது வைத்துள்ள அன்பைப் பிரதிபலிக்கிற வகையில் சபைகளை நேசிப்பதை இயேசுவிடமிருந்தே பவுல் கற்றுக்கொண்டார். 2கொரி 5:14; 1கொரி 11:1.

***2026, ஆகஸ்ட் 29 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# நன்றிசெலுத்துதல்

**2கொரி 1:3-7 இல், பவுல் நன்றியுணர்வுடன் பேசுவதற்கு என்ன காரணம்?**

---

பாடுபடுகிறவர்களுக்கு தேவன் ஆறுதல் அளிப்பதால் நன்றிசெலுத்து கிறார். இந்த வேதாகமப் பகுதியில், **பரகலியோ** (ஆறுதல் அளிப்பது) என்கிற கிரேக்க வினைச்சொல்லும், **பரக்லிசிஸ்** (ஆறுதல்) என்கிற பெயர்ச்சொல்லும் இணைந்து பத்து முறை வருகின்றன. 2கொரி நிருபம்முழுவதிலும் இந்த வார்த் தைகள் மொத்தம் 29 முறை வருகின்றன; எனவே மூன்றில் ஒரு பங்கு இந்தப் பகுதியில்மட்டுமே வருகிறது. தேவன், 'இரக்கங்களின் பிதாவும், சகலவித மான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறார்; அவரே எங்களுக்கு வரும் சகல உபத் திரவங்களிலேயும் எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்'. 2கொரி 1:3,4.

தேவனிடமிருந்து ஆறுதலைப் பெறுகிறவர் தான் மட்டும் அதை வைத்துக் கொள்ளக்கூடாது. 2கொரி 1:4,5. துயரமடைந்து, தேவ ஆறுதலைப் பெற்ற ஓர் இருதயம் மட்டுமே, உபத்திரவத்தில் இருப்பவர்களுக்கு திறம்பட ஆறுதல்தர முடியும்.

பவுல்தானே உபத்திரவங்களின்போது தேவனிடமிருந்து ஆறுதலைப் பெற்றதால், அவரால் மற்றவர்களையும் ஆறுதல்படுத்த முடிந்தது. 'நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் ஆறுதலடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்'. 2கொரி 1:6. இதுதான் அன்பு!

**2கொரி 1:8–11 இல், பவுல் எதற்காக நன்றிசெலுத்துகிறார்?**

'தங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம்' பற்றி பவுல் குறிப் பிடுகிறார்; இது அவரும் அவரது சக ஊழியர்களும் தங்கள் வாழ்க்கையே முடிந்து விட்டதாக அஞ்சும் அளவுக்கு இருந்தது. 2கொரி 1:8. உயிர்த்தெழுதல்மட்டுமே தங்களின் ஒரே நம்பிக்கை என்று நினைக்கிற நிலைக்குச் சென்றார்கள். ஆனா லும், தேவன் அவர்களைத் தப்புவித்தார், சூழ்நிலை மாறியது. 2கொரி 1:10. மரண பயத்திலிருந்தவர்கள், தேவன் தங்களை மீண்டும் தப்புவிப்பார் என்கிற முழுநம்பிக்கையை மீண்டும் பெறுகிறார்கள். 2கொரி 1:8; 1:10. கடந்த காலத்தில் தேவன் கொடுத்த வெற்றிகள், எதிர்காலத்திலும் அவர் வெற்றிகொடுப்பார் என் கிற நம்பிக்கையை நமக்குத் தருகின்றன. நாம் தேவன்மீது நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொடுப்பதற்கு அவர் உபத்திரவங்களைப் பயன்படுத்துகிறார். பாடுகள் நம்மை ஆவிக்குரிய முதிர்ச்சிக்கு வழிநடத்தும், நாம் தேவனோடு நெருங்கிச்சேரு வதற்கு நாம் அனுமதிக்கிற வரையிலும் அது நடக்கும். பிறருக்காகப் பரிந்து பேசுகிற ஜெபத்தின் வல்லமையையும், தேவனுடைய விடுதலையினால் நமக் குள் உருவாகிற நன்றியுணர்வையும் பவுலின் நன்றியறிதலிலிருந்து கற்றுக் கொள்ளமுடிகிறது. 2கொரி 1:11.

---

**நாம் அனைவருக்குமே ஏதோ ஒரு வழியில் பாடுகள் உண்டாகின்றன; அவற்றைக் கையாளு வதற்கு இன்று நீங்கள் கற்ற என்ன பாடம் பயனுள்ளதாக இருந்தது?**

# கபடின்மையும் திவ்விய உண்மையும்

கொரிந்தியர்கள்மீது பவுல் அன்பு வைத்திருந்தாரென நேற்றுப் பார்த்தோம். தேவனிடமிருந்து ஆறுதலைப் பெற்றவர், அவர்களது பாடுகளில் அவர்களுக்கு ஆறுதல் அளித்தார். 2கொரி 1:1-11. அவரும் அவரது சக ஊழியர்களும் கொரிந்து சபை உறுப்பினர்களிடம் நேர்மையாக நடந்துகொண்டதில் அந்த அன்பு வெளிப்பட்டதை இன்று பார்ப்போம்.

**கொரிந்தியர்களிடம் பவுல் நேர்மையாக நடந்துகொண்டது அவர்கள்மீது அவர் வைத்திருந்த அன்பை எவ்வாறு வெளிப்படுத்துகிறது? 2கொரி 2:17; 4:2 ஆகியவற்றின் வெளிச்சத்தில் 2கொரி 1:12-14 ஐ வாசியுங்கள்.**

பவுல் இந்த நிருபத்தின் மீதமுள்ள பகுதியில் விவரிக்கப்போகிற முக்கியக் கருத்துகளை 2கொரி 1:12-14 அறிமுகப்படுத்துகின்றன. கொரிந்துவிலிருந்த சிலர் பவுலின் நேர்மையையும், அவரது அப்போஸ்தலத்துவத்தையும் குறித்துக் கேள்வி எழுப்பினர். பவுல் உறுதியற்ற குணமும் தடுமாற்றமும் கொண்டவர் என்றும், அது அப்போஸ்தல ஊழியத்திற்கு ஏற்றதல்ல என்றும் கருதினர். இதற்குப் பதிலளிக்கும் விதமாக, தானும் தன் சக ஊழியர்களும் அவர்களிடம் மிகுந்த நேர்மையுடன் நடந்துகொண்டதை பவுல் வலியுறுத்துகிறார்.

பவுலும் அவரது சகஊழியர்களும் நடந்துகொண்ட விதங்களை இரண்டு வார்த்தைகள் சித்திரிக்கின்றன: **(1) கபடின்மை (2) திவ்விய உண்மை.** 2கொரி 1:12. 'கபடின்மை' என்பதற்கான கிரேக்க வார்த்தை **ஹப்லோட்டெஸ்.** இது பேச்சிலும் நடத்தையிலும் நேர்மையுடன் இருப்பதாகும்; சுருக்கமாக, நோக்கங்களில் தூய்மையாக இருப்பதாகும். எபே 6:5; கொலோ 3:22. அதேபோல், 'திவ்விய உண்மை' என்பதற்கான கிரேக்க வார்த்தை **எய்லிக்ரினியா**; இது நேர்மையையும் நோக்கங்களின் தூய்மையையும் சுட்டிக்காட்டுகிறது.

பவுலின் நோக்கங்கள் தூய்மையானவை என்பதில் கொரிந்தியர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கக்கூடாது. தேவனை ஆதாரமாக வைத்து கபடில்லாமலும் உண்மையோடும் தான் நடப்பதை தெளிவுபடுத்துகிறார். புதிய ஆங்கில மொழிபெயர்ப்பு வேதாகமத்தில் இது, 'தேவனிடத்திலிருந்து வருகிற தூய நோக்கங்கள், நேர்மை' என்று வருகிறது. 2கொரி 1:12. அதே வசனத்தில், இந்த ஊழியப் பண்புகள் 'தேவனுடைய கிருபையினால்' நமக்கு வழங்கப்படுவதாக பவுல் மேலும் உறுதியளிக்கிறார்.

பவுல் ஏற்கனவே அவர்களுக்கு எழுதியிருந்த வார்த்தைகளை அவரது எதிரிகள் தவறாகப் புரிந்துகொண்டார்கள். 2கொரி 1:13,14. தன் நோக்கங்கள் தெளிவானவை, புரிந்துகொள்ளக்கூடியவை என்று பவுல் உத்தரவாதம் அளிக்கிறார். தன் வார்த்தைகள், நோக்கங்கள் மற்றும் செயல்களின் நேர்மை 'கர்த்தராகிய இயேசுவின் நாளில்' தெளிவாக வெளிப்படும் என்று நம்பினார். 2கொரி 1:14.

---

**உங்களது நோக்கங்களும் எண்ணங்களும் நன்மையும் நேர்மையுமாக இருந்தபோதிலும், பிறரால் சந்தேகிக்கப்பட்ட அல்லது கேள்விக்குள்ளாக்கப்பட்ட அனுபவம் உங்களுக்கு எப்படி இருந்தது? மற்றவர்களுடைய நோக்கங்கள்பற்றி நாம் கேள்வி கேட்கும்போது, எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி இதிலிருந்து என்ன தெரிந்துகொள்ளவேண்டும்?**

# அன்பின்நிமித்தம் திட்டங்களில் மாற்றம்

பவுலின் நோக்கங்களையும் அன்பையும் கொரிந்துவிலிருந்த சிலர் சந்தேகித்தார்கள். அதற்கு ஒரு காரணம், தனது பயணத்திட்டங்களில் அவர் செய்த மாற்றங்கள் ஆகும். 2கொரி 1:15-2:4. அதுபற்றி இன்று ஆராய்வோம்.

**பவுலின் ஆரம்பப் பயணத்திட்டம் என்னவாக இருந்தது? 1கொரி 16:5-7.**

பவுல்முன்பு கொரிந்துவில் இருந்தார். இப்போது மீண்டும் கொரிந்துவுக்கு மக்கெதோனியா வழியாக வந்து, குளிர்காலத்தில் அங்கு தங்கத் திட்டமிட்டிருக்கலாம். 1கொரி 16:5,6. கொரிந்துவிலிருந்து எருசலேமிலிருந்த தரித்திரருக்காக மக்கெதோனியாவில் சேகரிக்கப்பட்ட காணிக்கையுடன் யூதேயாவுக்குச்செல்ல விருந்தார். ஆனாலும், கொரிந்துவிலிருந்து தீமோத்தேயு கொண்டு வந்த ஒரு மோசமான அறிக்கையால் திட்டங்களை மாற்றினார். 1கொரி 4:17; 16:10; 2கொரி 1:1.

எபேசுவிலிருந்து நேராக கொரிந்துவுக்குச் சென்று, தீமோத்தேயு தெரிவித்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண விரும்பினார். அவருடைய புதிய பயணத்திட்டம்: எபேசு-கொரிந்து-மக்கெதோனியா-கொரிந்து-யூதேயா என்பதாகும். 2கொரி 1:15,16. எபேசுவிலிருந்து கொரிந்துவுக்குச் சென்றார். மீண்டும் எபேசுவுக்கே திரும்பினார். பயணத்திட்டங்கள் மாறின. திட்டமிட்டபடி உடனடியாக கொரிந்துவுக்குச்செல்லவில்லை; ஏனெனில், அவரது முந்தைய வருகை சுமுகமாக இருக்கவில்லை. எனவே, எபேசுவுக்குத் திரும்பி, அங்கு இருந்தபடியே அவர்களுக்கு நிருபம் எழுதினார். மீண்டும் நேரில் சென்று, சூழ்நிலையை மோசமாக்குவதைவிட ஒரு நிருபத்தை அனுப்பிவைக்க விரும்பினார். 2கொரி 2:1,3.

பவுலின் முந்தைய வருகையின் நோக்கங்களைத் தவறாகப் புரிந்துகொண்டார்கள். அவர் நம்பகத்தன்மை இல்லாதவர், தங்கள்மீது போதிய அன்பில்லாதவர் என்று கொரிந்துவில் சிலர் கூறினர். 2கொரி 1:17. இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, கொரிந்தியர்களின் பார்வையை கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் பக்கம் திருப்பினார். கிறிஸ்துமூலம் தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் எவ்வாறு உண்மையாக இருந்தாரோ, அதேபோல சரியான தருணத்தில் கொரிந்தியர்களைச் சந்திப்பதில் தானும் உண்மையாக இருந்ததாகக் குறிப்பிடுகிறார். 2கொரி 1:18-22.

'எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே'. 2கொரி 1:20.

சூழ்நிலைகளுக்கேற்ப 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற மாறிமாறிப் பேசுகிற குழப்பமான பதிலாக அவரது பதில் இருக்கவில்லை. தேவனுடைய கிரியைகள் கிறிஸ்துவில் எவ்வாறு 'எப்போதும் 'ஆம்' என்று இருக்கிறதோ, அதேபோல அவரது பதிலும் 'எப்போதும் ஆம்' என்றே இருந்தது. 2கொரி 1:19.

ஆகவே, கொரிந்தியர்கள் மீதிருந்த உண்மையான அன்பால்தான் அவர்களை நேரில் சென்று சந்திப்பதற்குப் பதிலாக ஒரு நிருபத்தை எழுதினார். 2கொரி 2:4. வேதனை நிறைந்த முந்தைய வருகைக்குப் பிறகு உடனடியாக மற்றொரு வருகையை மேற்கொள்வது அவர்களுக்கு மேலும் வேதனையையே கொடுத்திருக்கும்; அவர் அங்கு நேரில் சென்று, கொடுக்க நினைத்த மகிழ்ச்சியை அது கொடுத்திருக்காது. 2கொரி 1:24; 2:3. அவரது நல்ல நோக்கங்களை எவ்வளவுக்குத் தவறாகப் புரிந்துகொண்டார்கள்!

# மன்னித்தலும் அன்பை உறுதிப்படுத்தலும்

கொரிந்தியர்களை இரண்டாவது முறை நேரில் சந்திப்பதற்குப் பதிலாக, பவுல் எபேசுவுக்குத் திரும்பிய பிறகு ஒரு நிருபத்தை எழுதி அனுப்பினார். அது 'கண்டிப்பான நிருபம்' என்று அழைக்கப்படுகிறது. 2கொரி 2:3,4; 7:8,12.

**அவர் அவர்களுக்கு எழுதிய நிருபத்தால் உண்டான விளைவு என்ன? அதற்கு பவுலின் எதிர்வினை எவ்வாறு இருந்தது? 2கொரி 7:5-13.**

பவுலும் தீத்துவும் பின்னர் மக்கெதோனியாவில் சந்தித்தனர். அங்கே பவுல் எழுதின கண்டிப்பான வார்த்தைகளால் நல்ல விளைவுகள் உண்டான நற்செய்தியை, தீத்துவின்மூலம் பவுல் அறிந்தார். இதைக் கேட்டு அந்த அப்போஸ்தலன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். இதற்குமுன்பு, கொரிந்துவிலிருந்த சிலர் பவுலுக்கு எதிராக நின்ற சூழலில், இப்போது சபையார் அவருடைய பக்கம் நின்றனர். நம் தலைவர்களை ஆதரிப்பது எவ்வளவு முக்கியமானது! சபை உறுப்பினர்களாகிய நாம் அவர்களது ஊழியப்பணியைத் தற்போதிருப்பதைவிட மிகவும் எளிதாக்க முடியும்.

**2கொரி 2:5-11 இன் மையக்கருத்து என்ன?**

இந்தப் பகுதி சபையின் ஒழுங்குமுறை நடவடிக்கையைப் பற்றியதாகும். இங்கு வருகிற குற்றவாளி யார்? 1கொரி 5:1-5 இல் கூறப்பட்டுள்ள முறைதவறிய உறவில் ஈடுபட்ட நபரா, வேறொருவரா என்று விவாதிக்கப்படுகிறது. பவுல் தனது பயணத்திட்டங்களில் நிலையில்லாமல், தங்கள்மீது அக்கறையில்லாமல் இருப்பதாக சபையிலிருந்த மற்றவர்களிடம் குற்றச்சாட்டைப் பரப்பிய நபராக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். பின்னணியை வைத்துப் பார்த்தால், இந்த இரண்டாவது கருத்தே மிகவும் பொருத்தமாகத் தோன்றுகிறது. எப்படியிருந்தாலும், பாவத்தில் விழுகிற ஒருவரை சபை நடத்தவேண்டிய விதத்தைவலியுறுத்துவதேஇந்தப்பகுதியின்மிகமுக்கியமானபோதனையாகும்.

பாவம் செய்தவரை மன்னித்து, அவர்மீதான அன்பை மீண்டும் உறுதிப்படுத்துவதன்மூலம் அந்த நபரைச் சீர்ப்படுத்துவதே சபையின் ஒழுங்குமுறை நடவடிக்கையின் நோக்கமாக இருக்கவேண்டும். 2கொரி 2:6-8,10. மேலும், சபையின் ஒழுங்குமுறை நடவடிக்கை வேதனையைக் கொடுக்கலாம்; ஆனால் அது தேவைதான் என்பதையும் இந்தப் பகுதி உணர்த்துகிறது. அதாவது, சில சபைகள் நல்ல எண்ணம் கொண்டவையாக, 'கிருபை' சார்ந்தவையாக இருந்தாலும்கூட, வெளிப்படையான, பகிரங்கமான பாவங்களை எதிர்த்துப் பேசுவதோ கையாளுவதோ இல்லை. மறுபுறம், சில சபைகள் மிகவும் கடினமாக, மன்னிக்காத குணமுடையவையாக, கொடூரமானவையாக இருக்கக்கூடும். பாவத்தைக் கையாளவேண்டும்; ஆனால், அதை அன்போடு செய்யவேண்டும். அதனால்தான், குற்றம்செய்தவரிடம் அன்பை மீண்டும் உறுதிப்படுத்துமாறு சபையை அறிவுறுத்தமுடிந்தது. 2கொரி 2:8. ஏனெனில் அவருக்குத்தானே அந்தச் சபை மீது அன்பு இருந்தது. 2கொரி 2:4!

---

**கொரிந்துவிலிருந்த சபை பவுல் வெளிப்படுத்திய அன்புமூலமாக தேவ அன்பைப் பெற்றிருந்ததால், குற்றம்செய்தவரை அதால் நேசிக்கமுடிந்தது. 2கொரி 2:8. இது அன்பைப்பற்றி நமக்கு என்ன போதிக்கிறது?**

# கிறிஸ்துவுக்குள் வெற்றி

**அவர்களுக்கு 'கண்டிப்பான நிருபத்தை' எழுதிய பிறகு பவுல் எங்கே போனார்? அங்கே என்ன செய்தார்? 2கொரி 2:12,13.**

தீத்துவுக்காகக் காத்திருந்தபோது பவுலின் இருதயம் அமைதியற்றிருந்தது. 2கொரி 7:5,6. அந்த அமைதியற்ற சூழ்நிலையிலும், அவரால் இயேசுவைப்பற்றிப் பேசாமல் இருக்கமுடியவில்லை. 2கொரி 2:12. இயேசுவை அவ்வளவாக நேசித்தார். அந்தச் சமயத்தில், தான் எழுதிய நிருபத்தின் விளைவு என்னவாக இருக்குமென அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. தீத்துவைக் கண்டு, கொரிந்தியர்களின் பதிலை அறிந்துகொள்ள ஆவலாய் இருந்தார்.

துரோவா பட்டணத்திற்குச் சென்றார்; அங்கே பவுலின் ஊழியம் வெற்றிகரமாக இருந்தது, ஆனால் 'அவரால் அங்கு அதிக நாட்கள் தங்கியிருக்க முடியவில்லை. 'எல்லாச் சபைகளைக்குறித்தும்', குறிப்பாகக் கொரிந்து சபையைக் குறித்தும் உண்டாயிருந்த கவலை அவருடைய இருதயத்தை மிகவும் பாரப்படுத்தியது. அவர் துரோவாவில் தீத்துவைச் சந்தித்து, கொரிந்து சகோதரர்களுக்கு அனுப்பிய ஆலோசனைகளையும் கண்டிப்புகளையும் அவர்கள் ஏற்றுக்கொண்ட விதம்பற்றி அவரிடமிருந்து அறிந்துகொள்ளக் காத்திருந்தார்; ஆனால் ஏமாற்றமடைந்தார். அந்த அனுபவத்தைக்குறித்து 'நான் என் சகோதரனாகிய தீத்துவைக் காணாததினாலே, என் ஆவிக்கு அமைதலில்லை. என்று எழுதினார். எனவே, அவர் துரோவாவை விட்டுப் புறப்பட்டு மக்கெதோனியாவுக்குச் சென்றார், அங்கே பிலிப்பி பட்டணத்தில் தீமோத்தேயுவைச் சந்தித்தார்'. Ellen G. White, The Acts of the Apostles, p. 323.

**மக்கெதோனியாவில் தீத்துவைச் சந்தித்து, கொரிந்தியர்களின் எதிர்வினை நல்ல விதமாக இருந்ததைக் கேட்டபோது, பவுலின் எதிர்வினை என்னவாக இருந்தது? 2கொரி 2:14-17.**

மகிழ்ச்சியின் மிகுதியால், தேவன் 'கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணுகிறார்' என்றார். 2கொரி 2:14. எவ்வளவு அற்புதமான வார்த்தைகள்! கிறிஸ்துவின் பிரசன்னத்தால் நிறைந்த ஓர் இருதயம், 'அவரை அறிகிற அறிவின் வாசனையை' எல்லா இடங்களிலும் பரப்புகிறது. 2கொரி 2:14.

வருத்தத்தோடு எழுதிய கடிதம் அவர் எதிர்பார்த்த விளைவை உண்டாக்கியதால், கிறிஸ்துவுக்குள் பவுல் மகிழ்கிறார். 2கொரி 7:5-9. அது ஒரு பெரிய வெற்றி. அதே வேளையில் கிறிஸ்துவின் அப்போஸ்தலனாக, தான் திவ்விய உண்மையுடன் நடந்ததை 2கொரி 2:17 இல் மீண்டும் உறுதிப்படுத்துகிறார். 2கொரி 2:17; 1:12. இந்த வேதபகுதியின்படி, கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியக்காரருக்கும் கள்ள ஊழியக்காரருக்கும் உள்ள வேறுபாடு உண்டு: கள்ள ஊழியக்காரர்கள் சுயநலத்திற்காக சுவிசேஷத்தை வியாபாரமாக்குகிறார்கள்; ஆனால் உண்மையுள்ள ஊழியக்காரர்கள் கிறிஸ்துவில் முழு இருதயத்தோடு அன்புகூர்ந்து, தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கிறார்கள்.

---

**நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும், இயேசுவின் நாமத்தில் அதைச் செய்யும்போது, எத்தகைய நோக்கத்தால் தூண்டப்படுகிறீர்கள்?**

# மேலும் படிக்க:

'மிகப்பெரிய துக்கங்களைச் சுமந்தவர்களே, பெரும்பாலும் மற்றவர்களுக்கு மிகப் பெரிய ஆறுதலைக் கொடுத்து, செல்லும் இடமெல்லாம் மகிழ்ச்சியைப் பரப்புகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு வந்த உபத்திரவங்களினால் சிட்சிக்கப்பட்டு, மென்மையான குணமுள்ளவர்களாக மாறுகிறார்கள்; துன்பங்கள் அவர்களைத் தாக்கியபோது தேவன்மீது வைத்த நம்பிக்கையை இழக்காமல், அவரது பாதுகாக்கும் அன்பை இன்னும் நெருக்கமாகப் பற்றிக்கொண்டார்கள். அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய கனிவான பராமரிப்பிற்கு உயிருள்ள சாட்சிகளாக விளங்குகிறார்கள்'. Ellen G. White, God's Amazing Grace, p. 122.

'அர்ப்பணிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை எப்பொழுதும் ஒளியையும் ஆறுதலையும் சமாதானத்தையும் வீசிக்கொண்டே இருக்கிறது. அதில் தூய்மையும் விவேகமும் கபடின்மையும் பயனுள்ளதன்மையும் காணப்படும். அது மற்றவர்களில் தாக்கத்தை உண்டாக்குகிற சுயநலமற்ற அன்பால் கட்டுப்படுத்தப்படுகிறது. அது கிறிஸ்துவினால் நிறைந்திருக்கிறது, மேலும் அத்தகைய வாழ்க்கையை வாழ்கிறவர் செல்லும் இடமெல்லாம் வெளிச்சமான பாதையை விட்டுச்செல்கிறார்'. God's Amazing Grace, p. 122.

'சபையிலிருந்த தவறுகளைக் கண்டிப்பது அவசியம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கருதினார், ஆனால் தவற்றைச் சுட்டிக்காட்டி கண்டிக்கும்போது தன் சுயக்கட்டுப்பாட்டை இழக்கவில்லை. தான் அவ்வாறு செய்ததற்கான காரணத்தைக் கவனமாக விளக்குகிறார். தவறு செய்தவர்களுக்குத் தான் ஒரு நண்பன் என்கிற எண்ணத்தை ஏற்படுத்த அவர் எவ்வளவு கவனமாகச் செயல்பட்டார்! அவர்களுக்கு விசனத்தை உண்டாக்குவது தனக்கும் வேதனையளிக்கிறது என்பதை அவர்களுக்குப் புரியவைத்தார். தன் நலனும் அவர்களது நலனும் ஒன்றே என்கிற ஆழமான எண்ணத்தை அவர்களுடைய மனதில் பதியவைத்தார்'. Ellen G. White Comments, The SDA Bible Commentary, vol. 6, p. 1094.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

**1** *தான் ஊழியத்தில் திவ்விய உண்மையுடன் நடந்துகொண்டதை 2கொரி 2:1-14 இல் பவுல் உறுதிப்படுத்துகிறார். ஊழியத்தில் இந்தத் தகுதி ஏன் அவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது? பவுல் தன் பயணத்திட்டத்தை மாற்றினார் என்கிற உண்மையானது கிறிஸ்தவ ஊழியத்தில் சூழலுக்கு ஏற்ப மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம்பற்றி நமக்கு என்ன சொல்கிறது? தேவைப்படும்போது மாற்றங்களுக்குத் தயாராக இருப்பது ஏன் முக்கியம்?*

**3** *பவுல் தன் ஊழியத்தில் மிகுந்த மனவேதனையையும் கவலையையும் சந்தித்தார். சபைத் தலைவர்களும் மற்ற மனிதர்களைப்போலவே துயரங்களுக்கு ஆளாகக்கூடிய மனிதர்கள்தான் என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. அவர்களுடைய பணியை எளிதாக்குவதற்கு சபை உறுப்பினர்கள் என்ன செய்யலாம்?*

**4** *பவுல் கிறிஸ்துவுக்குள் தனக்குக் கிடைத்த வெற்றியைப்பற்றிக் குறிப்பிடுவதற்குமுன், தன் அமைதியற்ற நிலையைப்பற்றிக் குறிப்பிடுகிறார். 2கொரி 2:13,14. அவரால் எவ்வாறு ஒரே நேரத்தில் தன் பலவீனத்தைப்பற்றியும், பலத்தைப்பற்றியும் பேச முடிந்தது? நாம் எவ்வாறு அதைச் செய்யலாம்?*

# இளமையிலேயே தொடங்கும் ஊழியம்

**காதி லிச்சென்வால்டர்**

லெபனானில் ஊழியராகப் பணியாற்றி வரும் மைரன் ஐசெமிங்கர், "நான் சிறுவனாக இருந்தபோது எரிக் பி. ஹேரின் கதைகள் அனைத்தையும் வாசித்திருக்கிறேன்; ஆனால், என்னாலும் ஒரு ஊழியனாகமுடியும் என்று எனக்கு ஒருபோதும் தோன்றியதில்லை" என்றார்.


1970 களின் பிற்பகுதியில், மைரனின் சகோதரி ஜப்பானில் ஆங்கில ஆசிரியையாக தன்னார்வத் தொண்டு செய்வதற்கு ஒரு வருடம் விடுப்பு எடுத்தார். கல்லூரியில் இறையியல் துறையில் ஒரு வருடம் படித்த பிறகு, மத்திய கிழக்கில் தான் தன்னார்வத் தொண்டு செய்ய விரும்புவதாக மைரன் தெரிவித்தார். அதுவே அவர் தன் வாழ்நாளின் எஞ்சிய பகுதிமுழுவதையும் செலவழிக்கவிருந்த ஒரு முடிவாக அமைந்தது.

"வேதாகம இடங்களை நேரில் சென்று பார்ப்பது மிகவும் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன். அதுமட்டுமல்லாமல், அது எனக்கு சில பயனுள்ள ஊழிய அனுபவங்களைத் தரும் என்றும் கருதினேன். ஆனால் நான் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே பெற்றேன். அந்த ஆண்டில், உலகத்தைப்பற்றிய என் பார்வை மாறத் தொடங்கியது. அங்கு மற்றொரு கலாச்சாரத்தையும், மற்றொரு சிந்தனை முறையையும்பற்றி அறிந்துகொண்டேன். நான் என் மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் கதைகளைக் கேட்டேன், அவர்களின் தனிப்பட்ட துயரங்களைக் கண்டேன். மற்றொரு நபரின் கோணத்தில் இருந்து வாழ்க்கையைப் புரிந்துகொள்ளத் தொடங்கினேன். மக்களை நேரில் சந்தித்து அவர்கள்மீது அன்பு செலுத்தும் வரை, ஒரு குறிப்பிட்ட குழுவினரைப்பற்றி தவறாக எடைபோடுவது எவ்வளவு எளிது என்பதை உணர்ந்துகொண்டேன்" என்று மைரன் கூறுகிறார். வெளிநாடுகளில் தேவனுக்காக நீண்டகாலம் ஊழியம்செய்ய தான் அழைக்கப்படுவதை உணரத்தொடங்கினார்.

அந்தச் சமயத்தில், மாற்று–கலாச்சார போதகர்களுக்கான தேவை அதிகமாக இல்லை; ஆனால் உலகளாவிய சபையானது ஊழியங்களுக்காகப் பணத்தை ஒதுக்கீடு செய்தால், அந்த நிதியை நிர்வகிக்க நிதி அதிகாரிகள் தேவைப்படுவார்கள் என்று மைரன் தீர்மானித்தார். அவர் மீண்டும் கல்லூரியில் சேர்ந்தபோது, வணிகவியலை இரண்டாவது பாடமாகப் படித்தார். இது அவரது வாழ்க்கையின் திசையைத் தீர்மானித்த மற்றொரு முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது.

ஒரு சபைத்தலைவர் மைரனுக்குச் சொன்ன ஆலோசனையும் அவரது மனதில் ஆழமாகப்பதிந்திருந்தது: "நீ ஒரு வெளிநாட்டில் ஊழியம் செய்ய விரும்பினால், நீ திருமணம் செய்துகொள்ளும் பெண்ணும் அதே தரிசனத்தைப் பெற்றிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்!" மைரனும் கேண்டஸும் திருமணம் செய்த சமயத்தில், அவரது மனைவியான கேண்டஸ் அமெரிக்காவை விட்டு வெளியேறியதே இல்லை. ஆனாலும் அவர் சம்மதித்தார். அவர்கள் இருவரும் சேர்ந்து வெளிநாட்டில் ஊழியம் செய்ய வாய்ப்பு கிடைப்பதற்காகக் காத்திருந்தனர்.

ஒருநாள், ஜெனரல் கான்ஃபரன்ஸ் அதிகாரி ஒருவர் மைரனிடம், மத்திய கிழக்கில் பொருளாளர் பதவி காலியாக இருப்பதாகக் கூறினார். விரைவில், மைரனும் கேண்டஸும் எகிப்து ஊழியக்கள அலுவலகத்தில் ஒரு குடியிருப்பில் குடியேறினர். "ஊழியத்தின் முன்னணியில் இருப்பதை ரசித்தேன், நிதி ஆதாரங்கள் குறைவாக இருந்த இடங்களில் என் பங்களிப்பை வழங்குவதை விரும்பினேன். சவாலாக இருந்தபோதிலும், என்னால் ஏற்படுத்த முடிந்த மாற்றத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன்" என்று மைரன் கூறுகிறார்.



# உண்மையான கிறிஸ்தவ ஊழியம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 2கொரி 3:1–9; 4:7–18; 5:11–15; கொலோ 1:19–23; எபே 2:13–16; 2கொரி 6:11–7:1; 2 கொரி 7.

**மனன வசனம்:** நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிற தில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். 2கொரி 4:8–10.

பவுல் தடுமாறுவதாகவும், கொரிந்தியர்கள்மீது அன்பில்லாமல் இருப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது; தான் கபடில்லாதவன், திவ்விய உண்மையுள்ளவன் என்று அப்போது பவுல் பேசினதை கடந்த வாரம் பார்த்தோம். அவர் எப்போதும் தனது ஆவிக்குரிய பிள்ளைகளின் நலனுக்காகவே பிரயாசப்பட்டார். 2கொரி 2:12-17 இல் தான் சொல்லத் துவங்குகிற ஒரு கருத்தை, 2கொரி 7 ஆம் அதிகாரம்வரை பேசுகிறார். கிறிஸ்துவுக்கான உண்மையான ஓர் ஊழியம் எப்படி இருக்கும் என்பதைச் சொல்லுகிறார். அந்த வகையில் பவுலின் சிந்தனைகளிலிருந்து பல பாடங்களை நாம் கற்றுக்கொள்ளலாம்

இந்த வாரம், 2கொரி 3-7 ஆம் அதிகாரங்களை ஆராய்வோம். அங்கு பவுல் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிற ஊழியத்தைப்பற்றி பேசுகிறார். ‘பாவிகள் மனமாறுவதும், சத்தியத்தின்மூலம் அவர்கள் பரிசுத்தமாக்கப்படுவதுமே ஓர் ஊழியரை தேவன் ஊழியத்திற்கு அழைத்திருப்பதற்கான வலுவான சான்று ஆகும். மனமாறியவர்களின் இருதயங்களில் அவரது அப்போஸ்தலத்துவத்தின் சான்று எழுதப்பட்டுள்ளது; மேலும் புதுப்பிக்கப்பட்ட அவர்களது வாழ்க்கையால் அது உறுதிப்படுகிறது. மகிமையின் நம்பிக்கையாகிய கிறிஸ்து அவர்களுக்குள் உருவாகிறார். ஓர் ஊழியர் தனது ஊழியத்தின் இந்த முத்திரைகளால் பெரிதும் பலப்படுத்தப்படுகிறார்.’ The Acts of the Apostles, p. 328.

*2026, செப்டம்பர் 5 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# உண்மையான ஊழியத்தின் கனிகள்

**நாம் எவ்விதத்தில் கிறிஸ்துவின் நிருபமாக இருக்கமுடியும்? 2கொரி 3:1–9.**

கிரேக்க-ரோம உலகில் பரிந்துரைக் கடிதங்கள் வழக்கத்தில் இருந்தன. ஆனாலும், பவுல் அத்தகைய கடிதங்களை எடுத்துக்கொண்டு செல்லவில்லை. கொரிந்தியர்களின் வாழ்க்கையை மாற்றிய பரிசுத்த ஆவியானவரின் வல்லமையே அவரது ஊழியத்தின் உண்மைக்கு சான்று. ஆனாலும் தன் புத்திசாலித்தனத்தாலோ, முயற்சிகளாலோ கொரிந்துவிலுள்ள சபை உருவாகவில்லை என்பதில் உறுதியாக இருந்தார். 2கொரி 3:4-6. தன்னைத்தானே விளம்பரப்படுத்த முயலவே இல்லை. 2கொரி 3:5; 1கொரி 2:2.

பவுல் இரண்டு உடன்படிக்கைகளைப்பற்றி சுருக்கமாக விளக்கி, தனது ஊழியத்தைக்குறித்துச் சொல்லுகிறார். ஒன்று, மோசே சுட்டிக்காட்டின பழைய உடன்படிக்கை; மற்றொன்று, பவுலும் அவரது சக ஊழியர்களும் சுட்டிக்காட்டின புதிய உடன்படிக்கை. மேலோட்டமாக, பழைய உடன்படிக்கையில், இரட்சிப்புக்கான நம்பிக்கை இல்லாதது போலத் தெரியும்; ஆனால் அது உண்மையல்ல. புதிய உடன்படிக்கையைப்போல பழைய உடன்படிக்கையிலும் இரட்சிப்பின் செய்தி இருந்தது. பழைய உடன்படிக்கை முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட நற்செய்தியாக இருந்தது. ‘மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது.’ கலா 3:8.

கீழ்ப்படிதலால் தேவனைப் பிரியப்படுத்தலாம் என்று கிரியைகளைச் சார்ந்திருந்தவர்களின் கிரியைத்துவ அனுபவத்தைச் சுட்டிக்காட்ட பழைய உடன்படிக்கை பயன்படுத்தப்படுகிறது. 2கொரி 3:1-4:6. புதிய உடன்படிக்கை, தேவன் தங்களுக்காகவும் தங்களுக்குள்ளும் செய்வதாக வாக்களித்த அனைத்தையும் நிறைவேற்றி முடிப்பதற்கு, அவரது கிருபையைமட்டுமே முற்றிலும் சார்ந்திருப்பவர்களின் அனுபவத்தைப் பிரதிபலிக்கிறது.

விசுவாசிகளும் அவிசுவாசிகளும் சுவிசேஷம்மீது காட்டுகிற மாறுபட்ட எதிர்வினைகளைப்பற்றி பவுல் பேசுகிறார். பழைய ஏற்பாட்டில் ஒன்று, புதிய ஏற்பாட்டில் ஒன்று என இரு வேறு சுவிசேஷங்கள் இருப்பதாகச் சொல்லவில்லை; ஏனெனில் தேவன் அருளிய சுவிசேஷம் ஒன்றுதான், ‘அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.’ 2தீமோ 1:9.

‘2கொரி 2:14-4:6 இல் வரலாற்று கூறுகள் சில இடம்பெற்றிருப்பதை இதனால் மறுத்துவிடமுடியாது’. ஆனால், அவர்களில் சிலர் ‘இரட்சிக்கப்படுகிறவர்களாகவும்,’ சிலர் ‘கெட்டுப்போகிறவர்களாகவும்’ இருப்பதை வலியுறுத்தவே அந்த வரலாற்றைப் பயன்படுத்துகிறார். 2கொரி 2:15. மோசேயின் ஊழியத்தை அவிசுவாசத்தோடும், விசுவாசக்குறைச்சலோடும் அணுகினவர்கள், அவரது ஊழியம் ஆக்கினைத்தீர்ப்பையும் மரணத்தையும் கொடுக்கிற ஊழியமெனக் கருதினார்கள். கொரிந்து சபை பவுல் செய்த ஊழியத்தை நம்பியதால், அது நீதியின் ஊழியமாக, ஜீவனைக்கொடுக்கிற ஆவியானவரின் ஊழியமாக நிரூபணமாகியது. கொரிந்து சபையினுடைய இந்த இரட்சிப்பின் அனுபவமே பவுலின் உண்மையான ஊழியத்திற்கு சான்றாகும்.

# உபத்திரவமும் மகிமையும்

**பவுல் அனுபவித்த பாடுகளைப் பட்டியலிடுங்கள். 2கொரி 4:7– 18. அவர் தனது உபத்திரவங்களை எவ்வாறு சகித்துக்கொண்டார்?**

முன்னாள் பொஹீமியாவின் பிரபலச் சீர்திருத்தவாதியான ஜான் ஹஸ் ஒருமுறை இயேசுவைப்பற்றி இவ்வாறு கூறினார்: ‘அவர் உலகத்தின் அதிபதி, நாமோ அழியக்கூடிய மனிதர்கள், இருப்பினும் அவர் பாடுபட்டார்! அப்படியிருக்க, நாமும் ஏன் பாடுபடக்கூடாது? குறிப்பாகப் பாடுபடுவது நம்மைப் புடமிட்டுத் தூய்மையாக்குவதாக இருக்கும்போது!’ EGW, The Great Controversy, p. 105.

அப்போஸ்தலனாகிய பவுல் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இதேபோல கிறிஸ்துவுக்காக பாடுபட தான் விரும்புவதாகச் சொன்னார். தான் களிமண்ணால் செய்யப்பட்ட ஒரு பலவீனமான மண்பாண்டமே அன்றி வேறொன்றுமில்லை என்பதை அறிந்திருந்தார். 2கொரி 4:7. தொடர்ந்து நெருக்கப்பட்டார்; கலக்கமடைந்தார்; துன்புறுத்தப்பட்டார்; மடிந்துபோகும் நிலைக்குத் தள்ளப்பட்டார்; ஆனாலும், ஒடுங்கிப்போகவில்லை. கலங்கவில்லை. கைவிடப்படவில்லை. அழிந்துபோகவில்லை. 2கொரி 4:8,9. ‘இயேசுவின் ஜீவன்’ தன்னுள் வெளிப்படும் பொருட்டு, ‘இயேசுவின் மரணத்தைத் தன் சரீரத்தில்’ சுமந்துசெல்ல ஆயத்தமாக இருந்தார். 2கொரி 4:10,11. முந்தைய வசனங்களில் குறிப்பிட்ட உபத்திரவங்களையே ‘இயேசுவின் மரணம்’ என்று பவுல் குறிப்பிட்டிருக்கலாம். அதே நேரத்தில், ‘இயேசுவின் ஜீவன்’ என்பது மரணத்திலிருந்து தப்புவிப்பதை அல்லது தற்போதைய வாழ்விற்கான ஆவிக்குரிய வல்லமையைக் குறிக்கலாம். இறுதியாக, இது உயிர்த்தெழுதலையே குறிக்கிறது. 2கொரி 4:12.

‘மரணம்-ஜீவன்’ எனும் வார்த்தைகள் 2கொரி 4:10-12 இல் மூன்று முறை வருகின்றன. இவ்வுலகவாழ்க்கையில், வாழ்க்கையும் மரணமும் கலந்திருக்கின்றன. ஆனாலும், வரவிருக்கும் மகிமையில், மரணமே இல்லாத வாழ்வை அனுபவிப்போம். வெளி 20:14; 21:4. 2கொரி 4:7-18 சொல்கிறபடி, தேவனுக்கு மட்டுமே மகிமை உண்டாகும்படி, பலவீனமான மனிதர்கள்மூலமாகவே நற் செய்தி பிரசங்கிக்கப்படுகிறது. 2கொரி 4:15. நற்செய்தி ஊழியர்கள் தங்கள் நற்செய்தி பயணத்தின்போது பெரும்பாலும் உபத்திரவங்களைச் சந்திக்கிறார்கள். ஆனாலும், நமக்காகக் காத்திருக்கிற நித்திய கனமகிமையுடன் ஒப்பிடும்போது, இங்கே நாம் அனுபவிக்கிற உபத்திரவம் இலேசானது; தற்காலிகமானது. 2கொரி 4:17. விசுவாசி தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறான். 2கொரி 4:18; 5:7.

எதிர்காலத்தில் இத்தகைய வாழ்க்கை இருப்பதுகுறித்த ஆழமான நம்பிக்கையால்தான், தொடர்ந்து அதைப்பற்றியே பேசுகிறார். 2கொரி 5:1-10. அவர் அழியக்கூடிய தனது சரீரத்தை பூமியிலுள்ள ஒரு கூடாரம் என்று உவமையாகக் குறிப்பிடுகிறார். நேர்மாறாக, ‘தேவனால் கட்டப்பட்ட கட்டடம்’ என்பது உயிர்த்தெழுப்பப்பட்ட சரீரத்திற்கான ஓர் உவமையாகும். 2கொரி 5:1. இதுவே அனைத்து காலங்களிலும் உள்ள விசுவாசிகளின் மிகப்பெரிய நம்பிக்கையாகும்.

---

**இப்போது நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும், நம் உயிர்த்தெழுதல்குறித்த நம்பிக்கையை எப்போதும் நமக்கு முன் வைத்திருப்பது ஏன் மிகமுக்கியமானது? 1கொரி 15:52.**

# கிறிஸ்துவை மையமாகக்கொண்ட ஒப்புரவாக்குதலின் ஊழியம்

**பவுலின் ஊழியம் கிறிஸ்துவை மையமாகக்கொண்டது என்பதை 2கொரி 5:11–15 எவ்வாறு நிரூபிக்கிறது?**

தனது ஊழியத்தைப்பற்றி கிறிஸ்துவிடம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்பதை பவுல் அறிந்திருந்தார். 2கொரி 5:10. அது 'கர்த்தருக்கு பயப்படத்தக்கதென்று அறிந்து', கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மனிதர்களுக்குப் போதித்து, அதற்கு அவர்களை இணங்கப்பண்ண முற்பட்டார். 2கொரி 5:11. இந்தப் பயம் கிறிஸ்துவின் மீதான மரியாதையையும் பக்தியையும் குறிக்கிறது. எனவே, இது கிறிஸ்துமீது பவுல் வைத்திருந்த அன்பையும், கிறிஸ்து தன்னை நேசிப்பதை பவுல் நம்பியதையும் சுட்டிக்காட்டுகிறது. பழைய ஏற்பாட்டில், **கர்த்தருக்குப் பயப்படுதல்** என்பது அவரது வழிகளில் நடப்பதும், அவரை நேசிப்பதும், முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் அவருக்குச் சேவைசெய்வதும் ஆகும். உபா 10:12.

பவுலின் ஊழியம் அவரை மையமாகக் கொண்டதல்ல; கிறிஸ்துவை மையமாகக் கொண்டது. அவர் தன்னைத்தானே மெச்சவில்லை. கிறிஸ்துவை முன்னிட்டே அவர் மேன்மைபாராட்ட முடிந்தது. 2கொரி 12:9. அவர், 'நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக்குறித்தே அல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக' என்றார். கலா 6:14. எனவே, கொரிந்தியர்கள் தன்னை மேன்மைபாராட்ட ஏதுவுண்டாயிற்று என்பது, அவரது ஊழியத்தின் மையமாக கிறிஸ்து இருந்ததைப்பற்றி மேன்மைபாராட்டுவதைக் குறிக்கிறது. 2கொரி 5:12. ஏனெனில் அவரது எதிரிகள் தங்களை மையமாக வைத்து ஊழியம்செய்தார்கள்.

**'ஒப்புரவாக்குதலின் ஊழியம்' என்று பவுல் குறிப்பிடுவது என்ன? 2கொரி 5:16–21; கொலோ 1:19–23; எபே 2:13-16.**

கிறிஸ்துவே ஒப்புரவாக்குதலின் மிகச்சிறந்த ஊழியர். அதன் அடிப்படையில் அவர் 'ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை (நமக்கு) ஒப்புக்கொடுத்தார்'. 2கொரி 5:18. **ஒப்புரவாக்குதல்** என்கிற கருத்து 2கொரி 5:16-21 முழுவதும் மீண்டும் மீண்டும் வருகிறது. இது பவுலுக்கு இன்றியமையாத ஒரு கருத்தாக இருந்தது, எனவே நமக்கும் அவ்வாறே இருக்கவேண்டும்.

தேவன் தம்முடைய குமாரனின் பாவநிவாரண மரணத்தின்மூலமாக மனிதகுலத்தை தம்மோடு ஒப்புரவாக்கினார். தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டவர்கள் புதுசிருஷ்டியாய் இருக்கிறார்கள். 2கொரி 5:17. பிறகு, கிறிஸ்துவின் அந்த நற்செய்தியை மற்றவர்களுக்குப் பிரசங்கித்து, அந்த 'ஒப்புரவாக்குதலின் வார்த்தையை' மற்றவர்களுக்கு அவர்கள் தெரிவிக்கவேண்டும். 2கொரி 5:19. இந்த வகையில், 'இறைவன், எங்கள் மூலமாகவே தமது வேண்டுகோளைத் தெரிவிக்கிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாக இருக்கிறோம்' என்கிறார். 2கொரி 5:20, சமகால மொழிபெயர்ப்பு.

---

**கிறிஸ்து உங்களுக்காகச் செய்திருப்பதைச் சிந்தித்துப்பாருங்கள். சிலுவையில் அவர் உங்களுக்காகச் செய்த தியாகங்கள் இல்லாவிட்டால், குற்ற உணர்விலும் பாவத்திலும் ஆக்கினைத்தீர்ப்பிலும் அகப்பட்டிருப்பீர்கள். நீங்கள் மற்றவர்களுடன், குறிப்பாக கர்த்தரை அறியாதவர்களுடன் பழகுகிற விதத்தில் இந்த உண்மை எத்தகைய தாக்கத்தை உண்டாக்கவேண்டும்?**

# பரிசுத்தத்திற்கு அழைப்பு

தேவனுடன் ஒப்புரவாகும்படி பவுல் கொரிந்தியர்களை ஊக்குவிக்கிறார். 2கொரி 6:3-10. கிறிஸ்துவைப் பின்பற்றுவதும், தேவனுடைய ஊழியக்காரராக இருப்பதும் என்னவென்பதைக் காட்ட, கஷ்டங்கள்-வெற்றிகளின் நீண்ட பட்டியலை முன்வைக்கிறார். சுருக்கமாக, கடினமான சூழ்நிலைகள், நற்பண்புகள், ஊழியத்திற்கான ஆயுதங்கள் மற்றும் ஊழியத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றைப் பட்டியலிடுகிறார். 2கொரி 6:4,5; 6:6;7; 6:8-10. கொரிந்து விசுவாசிகளை தேவனுடன் ஒப்புரவாகும்படி அறிவுறுத்திய பிறகு, அவர்கள் பரிசுத்தமான ஒரு வாழ்க்கையை வாழவேண்டும் என்றும், அவிசுவாசிகளின் தீங்கான செல்வாக்கிலிருந்தும் தீட்டானவைகளிலிருந்தும் பிரிந்து, அதைச் செய்ய வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறார். 2கொரி 6:14-17.

**ஒரு பரிசுத்தமான வாழ்க்கை எப்படி இருக்குமென 2கொரி 6:11–7:1 சொல்கிறது?**

சபைக்குள் காணப்படவேண்டிய பாசத்தின் முக்கியத்துவத்தை இந்த வேதப்பகுதியில் வலியுறுத்துகிறார். 1கொரி 6:11-13. மனிதர்கள் தேவனுடன் ஒப்புரவானதற்கான ஆதாரம், அவர்கள் ஒருவரோடொருவர் ஒப்புரவாகுதலை நாடுவதே ஆகும். மனிதர்களுக்கிடையே ஒப்புரவாகுதல் உண்டாவதற்கான முகவர்களாக மாறுகிறார்கள்.

அடுத்து, ஆறு வேண்டுகோள்களின் வழியாக பரிசுத்தத்திற்கான அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளது, அவையாவன: **(1)** 'அவிசுவாசிகளுடன் அந்நிய நுகத்திலே பிணைக்கப்படாதிருப்பீர்களாக'. 2கொரி 6:14; **(2)** 'அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு' 2கொரி 6:17; **(3)** 'பிரிந்துபோங்கள்' 2கொரி 6:17; **(4)** 'அசுத்த மானதைத் தொடாதிருங்கள்' 2கொரி 6:17; **(5)** 'மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியுமற, நம்மைச் சுத்திகரித்துக்கொள்ளக்கடவோம்' 2கொரி 7:1; **(6)** 'தேவபயத்தோடே பரிசுத்தமாகுதலை பூரணப்படுத்தக்கடவோம்' 2கொரி 7:1. பரிசுத்தமுள்ள தேவன் பரிசுத்தமான வாழ்க்கையையும், விக்கிரகாராதனையிலிருந்து விலகியிருப்பதையும் எதிர்பார்ப்பதை இந்த அறிவுரைகள் காட்டுகின்றன.

மறுபுறம், கிறிஸ்தவ சபை ஒரு பரிசுத்த ஆலயமாய் விளங்குவதை வலியுறுத்துகிற ஏழு வாக்குத்தத்தங்களும் இந்தப் பகுதியில் உள்ளது: **(1)** 'நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி'; **(2)** 'அவர்களுக்குள்ளே உலாவி'; **(3)** 'அவர்கள் தேவனாயிருப்பேன்'; **(4)** 'அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்'; **(5)** 'நான் உங்களை ஏற்றுக்கொண்டு'; **(6)** 'உங்களுக்குப் பிதாவாயிருப்பேன்'; **(7)** 'நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள்' 2கொரி 6:16,17,18.

2கொரி 6:16 இலுள்ள நான்கு வாக்குத்தத்தங்களே, 2கொரி 6:17 இலுள்ள மூன்று கட்டளைகளுக்கு அடிப்படையாக உள்ளன. 2கொரி 6:17. **'ஆனபடியால்'** என்று துவங்குவது அதை உறுதிப்படுத்துகிறது. **பரிசுத்தம்** என்பது ஒருவருடைய சொந்த முயற்சியால் கிடைப்பது அல்ல, மாறாக இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் செய்கிற கிரியையால் உண்டாவது. பரிசுத்தம் தேவனிடமிருந்து உண்டானாலும்கூட, விசுவாசிகள் தங்கள் பங்கைச் செய்யவேண்டும்; விக்கிரகாராதனையையும் அசுத்தமான சகல பழக்கவழக்கங்களையும் நிராகரிக்கவேண்டும்.

---

**பரிசுத்தம் என்றால் என்ன என்பதைப்பற்றி 2கொரி 6:16-18 இலுள்ள தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நமக்கு என்ன கூறுகின்றன?**

# ஆறுதலும் மகிழ்ச்சியும்

**கொரிந்தியர்கள் மனந்திரும்பியதைக் கேட்டதும் பவுலின் உணர்வுகள் எப்படி இருந்தன? 2கொரி 7.**

'எங்களிருதயங்களில் நீங்கள் இருக்கிறீர்களே' 2கொரி 7:3; 6:11. எவ்வளவு அன்புநிறைந்த வார்த்தைகள்! அவர்களும் தன்மீது அன்பு காட்டவேண்டும் என்று விரும்பி, 'உங்கள் இருதயங்களில் எங்களுக்கு இடம் கொடுங்கள்' என்று பவுல் கூறுகிறார். 2கொரி 7:2. 'உங்கள் இருதயங்களில்' என்பது கிரேக்க மூல உரையில் இல்லை; ஆனால் பெரும்பாலான ஆங்கில மொழிபெயர்ப்புகளில் உள்ளது; இது சரியானது; ஏனெனில் சொல்லப்படுகிற பின்னணி அதற்கு ஆதரவாக உள்ளது.

கொரிந்தியர்கள் பவுலுக்கும் அவரது சக ஊழியர்களுக்கும் தங்கள் இருதயங்களைத் திறந்தார்கள். அதனால்தான் வசனம் 4 மகிழ்ச்சியின் பெருக்காய் வெடிக்கிறது. பவுல் உற்சாகமான மனநிலையில் இருந்தது தெரிகிறது: 'மிகுந்த தைரியத்தோடே உங்களுடன் பேசுகிறேன்; உங்களைக்குறித்து மிகவும் மேன்மை பாராட்டுகிறேன், ஆறுதலால் நிறைந்திருக்கிறேன், எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன்'. 2கொரி 7:4. ஆறுதலாலும் சந்தோஷத்தாலும் நிறைந்திருந்தார். நம் சபைகள் கிறிஸ்துவுக்கு உண்மையாய் தங்களை ஒப்புக்கொடுப்பதன்மூலம், தங்கள் ஊழியக்காரர்களின் இருதயங்களுக்கு எவ்வளவு ஆறுதலையும் சந்தோஷத்தையும் கொண்டுவரமுடியும்!

2கொரி 7:5-16 இல், தனது ஆறுதலுக்கும் சந்தோஷத்திற்கும் காரணத்தை பவுல் விளக்குகிறார். 'ஆறுதல் அளி' எனும் அர்த்தமுடைய **பரகலியோ** என்கிற கிரேக்க வினைச்சொல்லும், 'ஆறுதல்' எனும் அர்த்தமுடைய **பரக்லிசிஸ்** எனும் பெயர்ச்சொல்லும் 2கொரி 7 இல் மொத்தம் ஏழு முறை வருகின்றன. இந்த நிருபத்தின் இப்பகுதி, தொடங்கிய பிரகாரமே முடிகிறது; அதாவது தேவனிடமிருந்து வருகிற மிகுந்த ஆறுதலுடன் முடிகிறது. 2கொரி 1:3-7. பவுல் அடைந்த மனநிம்மதியே அவருக்கு ஆறுதலைக் கொடுத்தது. 2கொரி 7. ஏனெனில் அவர் எழுதிய கண்டிப்பான கடிதம், அவர் எந்த நோக்கத்திற்காக எழுதினாரோ அந்த விளைவை ஏற்படுத்தியிருந்தது. தீத்துவின் நேர்மறையான அறிக்கையால் இந்த நிம்மதி கிடைத்தாலும், இறுதியில் பவுல் அனுபவித்த ஆறுதலுக்கு தேவனே காரணகர்த்தா. 2கொரி 7:6. தேவன் மெய்யாகவே, 'சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருந்து, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்.' 2கொரி 1:3,4.

பவுல் **'ஆறுதலால் நிறைந்திருந்தார்'; 'அதிக சந்தோஷமாயும்'** இருக்கிறார். 2கொரி 7:4,7,13. அவரது கண்டிப்பான கடிதம் மிகுந்த துக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும், அது மனந்திரும்புதலுக்கேதுவான தேவ சித்தத்தின்படியான துக்கமாய் இருந்தது. 2கொரி 7:9-11. கொரிந்தியர்கள் 'தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தார்கள்'. 2கொரி 7:11. இந்தத் துக்கம் 'இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை' உண்டாக்குகிறது. 2கொரி 7:10. தேவனுடைய உண்மையான ஊழியக்காரரின் இருதயத்திற்கு இதைவிட வேறு எது அதிக சந்தோஷத்தைக் கொண்டுவரமுடியும்?

---

**உங்கள் வாழ்க்கையில் எப்போதாவது தேவனுக்கேற்ற துக்கத்தை அனுபவித்திருக்கிறீர்களா? அது உங்களை மனந்திரும்புதலுக்கு வழிநடத்துவதற்கான தேவனுடைய சித்தத்தின்படியான துக்கம் என்பதை எவ்வாறு அறிந்துகொண்டீர்கள்?**

# மேலும் படிக்க:

எலன் ஒய்ட் எழுதிய, 'அப்போஸ்தலர்களின் நடபடிகள்' எனும் புத்தகத்தில் 'செவிசாய்க் கப்பட்ட செய்தி' எனும் தலைப்பின்கீழ், **323–334** பக்கங்களை வாசியுங்கள். பவுலின் கண்டிப்பான கடிதம், அதை எழுதும்போது இருந்த உணர்வுகள் மற்றும் கடிதத்தைப் பெற்றவர்கள் உண்மையாகவே மனந்திரும்பிய நற்செய்தியைக் கேட்டு அடைந்த மகிழ்ச்சி ஆகியவற்றை விவரிக்கிற பகுதிகளை ஆழமாகச் சிந்தியுங்கள். பின்னர், பவுலுடைய ஊழியத்தின் நம்பகத் தன்மையைப்பற்றி அது கற்பிப்பதையும், கிறிஸ்துவுக்காக நாம் செய்யும் ஊழியத்தில் நமக்கு இதிலுள்ள பாடங்களையும் தியானியுங்கள்.

'தேவனிடத்தில் மன்னிப்பு உண்டு என்பதையும், தேவனுடைய அன்பின் மூலமாக நாம் அவரோடு ஒப்புரவாகமுடியும் என்பதையும் இந்த அண்டசராசரத்திற்கும், விழுந்துபோன இந்த உலகத்திற்கும், விழுந்துபோகாத பிற உலகங்களுக்கும் நாம் வெளிப்படுத்தவேண்டும். மனிதன் மனந்திரும்பி, நொறுங்குண்ட இருதயமுள்ளவனாகி, கிறிஸ்துவை தன் பாவ நிவாரணபலியாகவிசுவாசித்து,தேவன்தன்னோடுஒப்புரவானதைஉணர்ந்துகொள்கிறான்'.

'ஒரு திருச்சபையாக, நாம் மிகப்பெரிய வெளிச்சத்தைப் பெற்றிருக்கிறோம். இந்த உலகத்தின் நன்மைக்காகவும் ஆசீர்வாதத்திற்காகவும் ஆண்டவர் இந்த வெளிச்சத்தை நம்மிடம் ஒப்படைத்துள்ளார். ஒப்புரவாக்குதலின் ஊழியம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதர்களை தேவனோடு ஒப்புரவாகும்படி உன்னதத்திலிருந்து வரும் வல்லமையோடு, நாம் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவேண்டும்'. Ellen G. White, Special Testimonies On Education, p. 223.

தேவனோடு ஒப்புரவானபிறகு, மனிதர்கள் பரிசுத்தத்தைத் தேடவேண்டும். 'தேவ பயத்தோடே பரிசுத்தமாகுதலை பூரணப்படுத்தவேண்டும்' என்று பவுல் குறிப்பிடுவதின் அர்த்தத்தை 2 கொரி 7:1ஐச் சுட்டிக்காட்டி எலன் ஒய்ட் விளக்குகிறார். புதிதாக விசுவாசத்திற்குள் வந்தவர்கள் 'சுயசார்புள்ளவர்களாகவும், விசுவாசத்தில் வளரும் கிறிஸ்தவர்களாகவும், பலமுள்ள விசுவாசமும், தீவிரமான வைராக்கியமும் கொண்டவர்களாகவும், தேவனுக்கும் அவரது ராஜ்யத்தைப் பரப்புகிற பணிக்கும் முழு இருதயத்தோடு தங்களை அர்ப்பணிப்பவர்களாகவும் மாறுவதற்கு'[1] பவுல் உதவ முயன்றதாகக் கூறுகிறார்.

[1] EGW, The Acts of the Apostles, p. 201.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *பவுல் நம்மை நற்செய்தி என்னும் பொக்கிஷத்தைப் பெற்றுள்ள 'மண்பாண்டங்கள்' என்று குறிப்பிடுகிறார். 2கொரி 4:7. மனிதரின் பலவீனமான நிலை நற்செய்தி அறிவிப்பதற்கு தடையாக இருப்பதற்கு பதிலாக, அதை எவ்வாறு மேலும் மேம்படுத்தமுடியும்?*
2. *'புதுச்சிருஷ்டி' என்பதன் அர்த்தம் என்ன? 2கொரி 5:17. இது நம்முடைய அன்றாட வாழ்க்கையில் என்ன தாக்கத்தை உண்டாக்குகிறது? கிறிஸ்து உங்களை எவ்வாறு ஒரு புதுச்சிருஷ்டியாக மாற்றியுள்ளார்?*
3. *2கொரி 6:4,5-இல், தான் நற்செய்திக்காக அனுபவித்த பாடுகளின் நீண்ட பட்டியலை பவுல் தருகிறார். இந்தப் பாடுகளுக்கு அவரது எதிர்வினை என்ன? 2கொரி 6:6,7. உங்களுடைய பாடுகளை நீங்கள் எதிர்கொள்ள இது எவ்வாறு உதவுகிறது?*
4. *பவுல் தேவனுக்கேற்ற துக்கத்தையும் உலகப்பிரகாரமான துக்கத்தையும் ஒப்பிடுகிறார். 2கொரி 7:10. துக்கம் எவ்வாறு மனந்திரும்புதலோடு தொடர்புடையது?*

# ஜேக்கின் ஜெபப் பயணம்

***இந்தத் திருச்சபை ஸ்தாபகரின் பெயர் அவரது ஊழியத்தைப் பாதுகாப்பதற்காக மாற்றப்பட்டுள்ளது, மேலும் அவர் பணியாற்றும் பகுதியும் சொல்லப்படவில்லை.***

கிறிஸ்தவர்கள் மிகக்குறைவாக வாழும் ஒரு நாட்டில் தானும் தனது மனைவியும் வசிப்பதால், தனது அன்றாட வாழ்க்கையில் ஜெபத்தை தவறவிடக்கூடாது என்பதில் ஜேக் உறுதியாக இருந்தார். ஒவ்வொரு மாதமும் தனது ஜெப விண்ணப்பங்கள் அனைத்தையும் எழுதி வைத்து, தேவன் அவற்றிற்கு எவ்வாறு பதிலளிக்கிறார் என்று பார்க்க முடிவுசெய்தார்.

ஜேக்கும் அவரது புதிய திருச்சபையின் உறுப்பினர்கள் சிலரும், அங்கு புதிதாக வருபவர்களில் தலா ஒருவரை அல்லது இருவரைச் சீஷர்களாக்கும் பொறுப்பை ஏற்றிருந்தனர். இந்தக் குழுவினர் வாரத்தின் ஒவ்வொரு நாளும் இந்த புதிய விசுவாசிகளுக்காக ஜெபிப்பதற்காக ஒன்று கூடினர், மேலும் ஒரு நாளை உபவாசத்திற்காக ஒதுக்கினர்.

ஒரு வீட்டில் வைத்து நடைபெற்ற கூட்டத்தின் போது, உமர் என்பவரை ஒரு உறுப்பினர் ஜேக்கிற்கு அறிமுகப்படுத்தினார். உமர் பல ஆண்டுகளுக்கு முன்பே இயேசுவைக் கண்டறிந்த ஒரு சமையல்காரர். பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட ஜேக், உமருடன் பேசத் தொடங்கினார். விரைவில், இருவரும் சந்திக்க முடிவுசெய்தார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு, ஜேக்கை உமர் சந்தித்து, வேதாகமத்தின் மூலம் இயேசுவை தான் கண்டடைந்த சாட்சியைப் பகிர்ந்துகொண்டார். கடந்த 15 ஆண்டுகளாக, தன உயிருக்கு அச்சுறுதல்ல உண்டாகதபடிக்கு, மற்ற விசுவாசிகளுடன் அதிகத் தொடர்பில்லாமல் மிகவும் எச்சரிக்கையாகவே தனது விசுவாசத்தைப் பின்பற்றி வந்தார். அவருடைய குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் அவரது விசுவாசத்தைப்பற்றித் தெரியாது. உமர் ஞானஸ்நானம் பெற விரும்பினதை ஜேக் அறிந்தார். அந்தத் தருணத்திலிருந்து, ஜேக்கும் உமரும் வேதாகமத்தை ஆராய்வதற்கு தினமும் சந்தித்தனர்.

அதே மாதத்தில், வசிம் என்ற வாலிபரை ஜேக் சந்தித்தார். அவர் சில ஆண்டுகள் மேற்கத்திய நாடு ஒன்றில் அகதியாக வாழ்ந்தவர். ஏமாற்றத்துடன் தன் தாய்நாட்டை விட்டு வெளியேறி, பல கேள்விகளுடன் போராடினார். அக்கேள்விகள் அவரது கடந்த கால நம்பிக்கைகளிலிருந்து அவரை இன்னும் தூரமாக்கின. வசிம் தனியாகவே கிறிஸ்தவத்தை ஆராயத் தொடங்கினார். அதுவரை தான் அறிந்திராத ஒரு நிம்மதியை அதில் கண்டடைந்தார். தன் நாட்டிற்குத் திரும்பியதும், அவர் மற்ற உள்ளூர் விசுவாசிகளை ஆன்லைனில் தேடினார், ஜேக்கின் வீட்டுத் திருச்சபைபற்றி தெரியவந்தது.

வசிமும்ஞானஸ்நானம்பெறவிரும்பியதை அறிந்த ஜேக் அளவற்றமகிழ்ச்சியடைந்தார். ஜேக் வாரந்தோறும் வசிமைச் சந்தித்து விசுவாசத்தையும், இயேசு கிறிஸ்துவையும், நித்திய ஜீவனையும்பற்றி ஆழமாகப் படித்தார். ஜேக் தனது ஜெபப்பயணத்தின் முதல் மாத முடிவில், தேவன் அருளியிருந்த பதில்களைக் கண்டு வியப்பில் மூழ்கினார். வேதாகம வகுப்புகளை நடத்த தனக்கு உதவுமாறு கர்த்தரிடம் கேட்டிருந்தார், இப்போது இருவர் அவரிடம் வேதாகமத்தைக் கற்று வந்தனர். ஜேக் தனது ஜெபப பயணத்தின் இரண்டாவது மாதத்திற்குள் அடியெடுத்து வைக்கத் தயாராகிற நிலையில், ஆச்சரியத்தாலும் எதிர்பார்ப்பாலும் அவரது இதயம் நிறைந்துள்ளது. தனது பயணம் இப்போதுதான் தொடங்கியுள்ளது என்பதை அறிவார், மேலும் தேவன் தன்னை வழிநடத்த பெலனளிப்பதையும் உணர்கிறார்.

பாடம் **11** **செப்டம்பர் 5-11**



# உக்கிராணத்துவமும் ஊழியமும்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 2கொரி 8–9; யோவான் 3:16;17:5; லூக் 9:58; வெளி 13:8; ரோமர் 12:8; 15:26,27.

**மனன வசனம்:** நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே. 2கொரிந்தியர் 8:9.

யூதேயாவிலிருந்த தங்களது சகோதர சகோதரிகளுக்கு ஊழியம் செய்வதற்கான வாய்ப்பை கொரிந்து விசுவாசிகளுக்கு பவுல் வழங்கியதை 2கொரி 8,9 அதிகாரங்கள் காட்டுகின்றன. மனமுவந்து கொடுப்பது தேவன் நமக்கு அளிக்கிற ஒரு சிலாக்கியம் என்பதை இந்தப் பகுதி காட்டுகிறது; இதன்மூலம் கிறிஸ்துவினுடைய சுய-தியாக குணத்தை நாம் பின்பற்றமுடியும். பரலோகத்தின் மொழியே கொடுப்பதுதான். இந்த ஆச்சரியமான வார்த்தைகளைக் கவனியுங்கள்: ‘தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்’. யோவான் 3:16.

மேலும், இயேசுவை தேவன் நமக்குக் கொடுத்ததின் நோக்கத்தை யோவான் 3:16 தெளிவாகச் சொல்கிறது; ‘அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு’ என்பதாகும். இந்த வேதப் பகுதியில் உக்கிராணத்துவமும் ஊழியப்பணியும் சேர்ந்தே வருகின்றன. அவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. தன்னையும் தன் சக ஊழியர்களையும் ‘தேவ இரகசியங்களின் உக்கிராணக்காரர்’ என்று பவுல் சொல்கிறார். 1கொரி 4:1. நாமும் அவ்வாறே தேவ உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம்.

உக்கிராணத்துவம், ஊழியம் ஆகியவற்றிற்கு இயேசுவின் முன்மாதிரியே அடிப்படை என்பதை இந்த வாரம் பார்ப்போம். உக்கிராணத்துவமும் ஊழியமும் பிரிக்கமுடியாதவை. தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்றத் தேவையான நிதி உதவியையும், மனித வளங்களையும் உக்கிராணத்துவமே சபைக்கு வழங்குகிறது.

***2026*, செப்டம்பர் *12* வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்**

# இயேசுவின் முன்மாதிரி

யூதேயாவில் தரித்திர நிலையிலிருந்த சபைகளுக்காக நிதி திரட்டிவந்தார்கள்; அதை வெற்றிகரமாக முடிக்கும்படி கொரிந்து விசுவாசிகளை பவுல் ஊக்குவிப்பதின் பின்னணியில் 2கொரி 8;9 அதிகாரங்கள் அமைந்துள்ளன. அவர்கள் தங்களை அதற்கு அர்ப்பணித்திருந்தனர். 2கொரி 8:10,11;9:5; 1கொரி 16:1-4. ஆனால், அவர்களுக்கும் பவுலுக்கும் இடையே இருந்த உறவுச்சிக்கல்கள் நிலைமையை மோசமாக்கின. முதலில் அந்தச் சிக்கல்களைக் கையாண்டபிறகு, அந்தப் பணியை முடிப்பதுபற்றிப் பேசுகிறார். 2கொரி 1-7; 2கொரி 8-9.

மக்கெதோனியா விசுவாசிகளின் முன்மாதிரியை பவுல் சுட்டிக்காட்டுகிறார். 2கொரி 8:1-7. அவர்கள் கடுமையான வறுமையில் இருந்தாலும், 'மிகுந்த உதாரத்துவமாய்க்' கொடுத்தார்கள். 2கொரி 8:2. ஆம், வறுமையும் தாராள குணமும் சேர்ந்தே காணப்படமுடியும். ஆனாலும், மக்கெதோனியர்களின் இந்தத் தாராள குணம் நமக்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்த இயேசுவின் தாராள குணத்தின் பிரதிபலிப்பே ஆகும். 2கொரி 8:8-15.

**இயேசுவின் முன்மாதிரியைப்பற்றி 2கொரி 8:9 என்ன சொல்கிறது?**

வேதாகமம் முழுவதிலும் மிகவும் ஆச்சரியமான, வல்லமையான, ஆழமான பகுதிகளில் ஒன்றாக 2கொரி 8:9 உள்ளது. இயேசுவின் ஊழியச் சம்பவத்தை மிகச்சுருக்கமாக பவுல் கூறுகிறார். இதில் ஆழமான இறையியல் புதைந்துள்ளது. இது ஒரே வசனத்தில் கூறப்பட்டுள்ள மீட்பின் சரித்திரம் ஆகும்.

இந்தச் சம்பவம் நிதிச் சொற்களைப் பயன்படுத்தி விவரிக்கப்படுகிறது. ஆம், இயேசு ஐசுவரியமுள்ளவராய் இருந்தார். அவரது ஐசுவரியம் என்பது பரலோகத்தில் அவர் இருந்த நிலையைக் குறிக்கிறது. யோவான் 17:5. அவர் பரலோக மகிமையைத் துறந்து, துயரங்கள் நிறைந்த இந்த உலகத்திற்கு வந்த தன்மூலம் தரித்திரராக மாறத் தீர்மானித்தார். அவர் நிஜமாகவே தரித்திரரானார். லூக்கா 9:58. அவர் தேவனுக்குச் சமமாய் இருந்தபோதிலும், 'தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்' பிலி 2:7. 'அவர் மனுஷரூபமாய்க்காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.' பிலி 2:8.

இயேசு நம்மோடு என்றென்றும் வாழ்வதற்காக தமது சொந்த ஜீவனையே கொடுத்தார். நம்முடைய இரட்சிப்பை நோக்கமாகக் கொண்டே அவர் பலியானார். உக்கிராணத்துவமும் ஊழியமும் சேர்ந்தே செல்பவை. 2கொரி 8; 9 அதிகாரங்கள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக காணிக்கை சேகரிக்கப்பட்டதுபற்றிச் சொல்கின்றன; ஆனால், இதிலும் இயேசுவே அடிப்படையாக இருக்கிறார். கிறிஸ்து தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்ததின் அடிப்படையில், காணிக்கை கொடுப்பதிலுள்ள இறையியல் கோட்பாடுகளை இந்த வாரத்தில் பார்ப்போம்.

---

**இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதலை ஆழமாகச் சிந்தியுங்கள். இந்தத் துயரமான உலக வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட ஒரு நம்பிக்கையை நீங்கள் பெறும்படி, இவை யாவும் உங்களுக்காகவே செய்யப்பட்டன என்பதை உணரும்போது, உங்களுடைய எதிர்வினை எப்படி இருக்கவேண்டும்?**

# ஊக்கம்

**2கொரி 8:1,5; 2கொரி 9:7,9,13,15 ஆகிய வசனங்களின் மையச் செய்தி என்ன?**

2கொரி 8; 9 முழுவதும், **கொடுத்தல்** சம்பந்தமான வார்த்தைகளே உள்ளன: 'தேவன் அளித்த கிருபை'; 'தங்களைத்தாமே ஒப்புக்கொடுத்து'; 'அவனவன் தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் அன்பாயிருக்கிறார்'; 'ஏழைகளுக்குக் கொடுத்தான்'; 'நீங்கள் உதாரத்துவமாய்த் தர்மஞ்செய்கிறதினிமித்தமும், அவர்கள் தேவனை மகிமைப்படுத்தி'; 'சொல்லிமுடியாத அவருடைய ஈவுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்!' 2கொரி 8:1,5; 9:7,9,13,15. 2கொரிந்தியர் 8; 9 அதிகாரங்கள் கொடுப்பதைப் பற்றிய வார்த்தைகளுடனேயே தொடங்கி முடிகின்றன. 2கொரி 8:1; 9:15. **கொடுத்தல்** எனும் கருத்தை மனதில் வைத்து இந்த இரண்டு அதிகாரங்களையும் வாசிக்க வேண்டும். நாம் காணிக்கைகளைக் கொடுப்பதற்கான குறைந்தது நான்கு முக்கிய காரணங்களை இவை முன்வைக்கின்றன.

**1) தேவனுடைய கிருபைக்காக நன்றியுணர்வு. 2கொரி 8:1; 9:14,15.** 2கொரி 8; 9 அதிகாரங்கள் 'தேவனுடைய கிருபை'பற்றிய குறிப்புடன் தொடங்குகின்றன. 2கொரி 8:1. பிறகு, 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையை அறிந்திருக்கிறீர்களே' என்கிறார். 2கொரி 8:9. நாம் காணிக்கை கொடுப்பதற்கான முதன்மை காரணம் தேவனுடைய கிருபையும், கிறிஸ்துவின் கிருபையுமே. கிறிஸ்துவை நமக்குக் கொடுத்ததன்மூலம் தேவன் நமக்கு எவ்வளவோ செய் திருக்கிறார். நாம் பதிலுக்கு நம் காணிக்கைகளைச் செலுத்தும்போது, நம் வாழ்வில் தேவனுடைய கிருபையை அங்கீகரிக்கிறோம்.

கொடுத்தல், கிருபை என்கிற கருத்துகள் 2கொரி 8-9 இல் மீண்டும் மீண்டும் வருகின்றன. கிருபை என்பதற்கான **சேரிஸ்** எனும் கிரேக்க வார்த்தை இந்த வேதப் பகுதியின் தொடக்கத்திலும் முடிவிலும் வருகிறது. 2கொரி 8:1; 9:14,15. நாம் பெற்றுள்ள கிறிஸ்துவின் கிருபையை மற்றவர்களுக்கும் காட்டவும், நன்றியுள்ளவர்களாகஇருக்கவும் இச்சொல்லை வெவ்வேறு அர்த்தங்களில் பயன்படுத்துகிறார்.

**2) இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றுவதற்கான ஆர்வம். 2கொரி 8:9.** இயேசு ஐசுவரியமுள்ளவராய் இருந்தார்; பின்னர் தரித்திரரானார். இவை முறையே பரலோகத்தில் அவர் பெற்றிருந்த நித்திய நிலையையும், பின்னர் அவர் பூமிக்கு மனிதனாக வந்ததையும் குறிக்கிற அடையாளங்கள். அது நிகழ்வதற்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது: அவர் அனைத்தையும் கொடுத்தார். நாம் நம் காணிக்கைகளைப் பகிர்வதன்மூலம், மற்றவர்கள் கிறிஸ்துவை அறிவதற்கு உதவுகிறோம்.

**3) தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பகிரவேண்டும் என்கிற ஆர்வம். 2கொரி 9:10,11.** நாம் முதலில் தேவனிடமிருந்து பெற்றதால் மற்றவர்களுக்குக் கொடுக்கிறோம். நாம் தாராள குணம் உள்ளவர்களாகும்படி அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார்.

**4) உண்மையான அன்பு. 2கொரி 8:8,24.** கொடுப்பதே உண்மையான அன்பிற்கான தரச்சோதனையாகும். அதுவே ஒருவரது இருதயத்தில் அன்பு குடியிருப்பதற்கான முக்கியமான ஆதாரம். அதாவது, 'வார்த்தைகளால் மட்டும் அன்பு காட்டாமல், செயலில் காட்டுவது'.

---

**நீங்கள் எவ்வளவு தாராள குணத்துடன் இருக்கிறீர்கள்? சிலுவையின் வெளிச்சத்தில், உங்கள் திராணிக்குத்தக்கதாக எவ்வளவு கொடுக்கிறீர்கள்?**

# திட்டமிடுதல்

**காணிக்கை கொடுப்பதுபற்றி 2கொரி 9:7 என்ன சொல்கிறது?**

உலகம் பாவத்தில் விழுவதற்குமுன்பே, இரட்சிப்புக்கான திட்டத்தை தேவன் போட்டிருந்தார். அந்த ஆதி திட்டத்தின் ஒரு பகுதியாக, கிறிஸ்து நமக்காக மரிக்கும்படி வந்தார். வெளி 13:8. அதனால் பாவம் வந்தபோது, தேவன் அதிர்ச்சி அடையவில்லை. இயேசுவின்மூலமாக தம்மையே கொடுப்பதற்கான திட்டங்களை ஏற்கனவே வகுத்திருந்தார். 2கொரி 8; 9 அதிகாரங்களில், கொடுக்கிற செயலுடன் தொடர்புடைய அத்தியாவசியமான ஓர் இறையியல் கோட்பாடாக திட்டமிடுதல் உள்ளது. இதை குறைந்தது இரண்டு வழிகளில் காணலாம்:

**முதலாவதாக, திட்டமிடுதல் என்பதில் முன்கூட்டியே தீர்மானம் எடுப்பது ஆகும்.** 'அவனவன் தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்' என்கிறார் பவுல். 2கொரி 9:7. 'நியமித்தல்' என்பதற்கான கிரேக்க வினைச்சொல் **'ப்ரோயிரெயோ'**. இது ஒரு கூட்டுச்சொல். இதில் **'ப்ரோ'** என்பதற்கு 'முன்னதாகவே' என்றும், **'அயிரெயோ'** என்பதற்கு 'தீர்மானித்தல்' என்றும் அர்த்தம். **'ப்ரோயிரெயோ'** என்பது முன்கூட்டியே எடுக்கப்படுகிற தீர்மானத்தைக் குறிக்கிறது. மேலும், 'அவனவன்' என்று சொல்வதால், கொடுக்கப்படும் தொகை அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருக்காது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். எதைக் கொடுக்கத் தீர்மானித்தாலும், அதை ஆழமாகச் சிந்தித்துச் செய்யவேண்டும். தங்களால் கொடுக்க இயலுமென நம்புகிற தொகையை அவர்கள் கொடுக்கவேண்டும்.

**இரண்டாவதாக, திட்டமிடுதல் என்பது விகிதாச்சார நியதியை உள்ளடக்கியது.** மக்கெதோனியர்கள் 'தங்கள் திராணிக்குத்தக்கதாக' கொடுத்தார்கள். 2கொரி 8:3. இந்த விகிதாச்சாரக் நியதியை கொரிந்தியர்களுக்கும் பயன்படுத்துகிறார். அவர்கள் ஏற்கனவே செய்ய ஒப்புக்கொண்ட பணியை முடிக்கும்படி ஊக்குவித்துவிட்டு, தங்களுக்கு இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி அந்தத் திட்டத்தை நிறைவுசெய்யுமாறு வலியுறுத்துகிறார். 2கொரி 8:11. ஒருவர் தனக்கு 'இல்லாததின்படியல்ல, தனக்கு உள்ளதின்படியே' கொடுக்கவேண்டும் என்கிறார். 2கொரி 8:12. தசமபாகத்திற்கான விகிதாச்சாரத்தை 10 சதவீதம் என்று வேதாகமம் வரையறுத்துள்ள போதிலும், காணிக்கைக்கு அது பொருந்தாது. விகிதாச்சார நியதியைப் பயன்படுத்தி, 'அவனவன் தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்' 2கொரி 9:7. அதாவது, ஒவ்வொருவரும் தங்களது வருமானத்தில் எவ்வளவு விகிதத்தைக் காணிக்கையாகக் கொடுக்கவேண்டும் என்பதைத் தாங்களே தீர்மானிக்கவேண்டும். ஒவ்வொருவரும் தங்களுக்கு உள்ளதின் விகிதத்திற்கு ஏற்பக் கொடுக்கவேண்டும். திட்டமிடுதல் இல்லாமல் இதைச் செய்யமுடியாது.

**நீங்கள் எவ்வளவு ஐசுவரியமுள்ளவராக அல்லது தரித்திரராக இருந்தாலும், தசமபாகம்- காணிக்கை செலுத்துவதில் எவ்வளவு உண்மையுள்ளவராக இருக்கிறீர்கள்? உங்களால் இன்னும் அதிகமாகக் கொடுக்கமுடியும் என்று தெரிந்திருந்தும், கொடுக்காமல் பின்வாங்குவதற்கு என்னென்ன சாக்குகளைச் சொல்கிறீர்கள்?**

# மனநிலை

**மக்கெதோனியர்கள் அவ்வளவு உதாரத்துவமாக காணிக்கை கொடுக்க விரும்பிய தற்கு சாத்தியமான காரணம் என்னவாக இருக்கலாம்? 2கொரி 8:1-5.**

மக்கெதோனியர்களின் நல்ல மனநிலைதான் காரணம் என்பது தெரிகிறது.

**1. மிகுந்த மகிழ்ச்சியுடன் கொடுத்தார்கள். 2கொரி 8:2.** மக்கெதோனியர்கள் 'மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களா யிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்'. 2கொரி 8:2. 'உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்'. 2கொரி 9:7. 'உற்சாகமாய்' என்பதற்கான கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் இங்குமட்டுமே வருகிறது. இதே குடும்பத்தைச் சேர்ந்த மற்றொரு வார்த்தை ரோமர் 12:8 இல் வருகிறது: 'இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்'. இந்த வார்த்தை குடும்பத்தைச் சேர்ந்த சொற்கள் சில சமயங்களில் வேதாகமத்திற்கு வெளியே பிற இலக்கியங்களிலும், மகிழ்ச்சி மற்றும் சந்தோஷத்தைக் குறிக்கப் பயன்படுகின்றன. 2கொரி 9:7 இன் படி, உற்சாகமாய்க் கொடுப்பது என்றால் தயக்கமின்றி கொடுப்பதாகும்.

**2. மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். 2கொரி 8:2.** மக்கெதோனியர்கள் 'கொடிய தரித்திர' நிலையில் இருந்தார்கள். 'உதாரகுணம்' என்பதற்கான கிரேக்க வார்த்தை **ஹேப் லோடிடோஸ்**; 2கொரி 8,9 அதிகாரங்களில் மேலும் இரண்டு முறை வருகிறது. 'மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாவீர்கள்'. 2கொரி 9:11. அதாவது நாம் பிறருக்குக் கொடுக்கவே நமக்குக் கொடுக்கப்படுகிறது. பிறகு, 'நீங்கள் உதாரத்துவமாய்த் தர்மஞ்செய்கிறதினிமித்தம்' என்கிறார். 2கொரி 9:13. தர்மம் செய்வதில் தாராளமாக இருப்பது கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிக்கையிடுவதற்கான ஒரு வழி.

**3. 'கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்கள்'. 2கொரி 8:3.** தானாக முன்வந்து கொடுத்தார்கள். தங்கள் தேவைகள்போக மீதமிருந்ததைக் கொடுக்கவில்லை. ஏனென்றால், அவர்களிடம் வசதிகள் குறைவாக இருந்தன. கொரிந்தியர்களைச் சென்று சந்திக்க தீத்து முன்வந்ததைபற்றியும் பவுல் இவ்வாறே கூறுகிறார். தீத்து தானாக முன்வந்து கொரிந்துவுக்குச் சென்றார். 2கொரி 8:17.

**4. கொடுப்பது சிலாக்கியம் என்று கொடுத்தார்கள். 2கொரி 8:4. சமகால மொழிபெயர்ப்பு.** காணிக்கைசேகரிப்பில் தங்களையும் சேர்க்கும்படி கோரினார்கள். 'பரிசுத்தவான்களுக்கு உதவிசெய்யும் இந்தப் பணியில் பங்குகொள்ளும் சிலாக்கியம் தங்களுக்கும் கிடைக்கவேண்டும் என மிகவும் வருந்தி எங்களிடம் வேண்டிக்கொண்டார்கள்'. 2கொரி 8:4. சமகால மொழி பெயர்ப்பு.

**5. தங்களை முற்றிலும் அர்ப்பணிக்கிற செயலாக இந்தச் சேகரிப்பில் பங்கேற்றார்கள். 2கொரி 8:5.** 'அவர்கள் முதலாவது தங்களைக் கர்த்தருக்கும், பின்பு தேவனுடைய சித்தத்தினாலே எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்.' 2கொரி 8:5. ஒருவன் கர்த்தருக்கு தன்னை ஒப்புக்கொடுப்பது, பிறருக்கும் தன்னை ஒப்புக் கொடுப்பதில் முடிவடைகிறது. மக்கெதோனியர்கள் தங்கள் ஊழியப் பங்களிப்பை வெறும் நிதி உதவியோடுமட்டும் நிறுத்திக்கொள்ளாமல் மேலும் விரிவுபடுத்தினார்கள். அதாவது, கொடுப்பதும் தாராளமாக இருப்பதும் பண விஷயத்திற்கு மட்டும் பொருந்துகிற ஒன்றல்ல.

# ஒற்றுமை

யூதேயாவில் ஏழ்மை நிலையிலிருந்த சபைகளுக்காக நிதி திரட்டுகிற பணியில் கொரிந்து விசுவாசிகள் ஈடுபட பவுல் ஊக்குவித்தார். அவர்களுக்குள் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்த விரும்பினார். அவர்கள் அந்த ஊழியத்தில் பங்கேற்கவும், அதில் ஒரு பகுதியாக இருக்கவும் ஆசைப்பட்டார். எருசலேமின் யூத விசுவாசிகளைப்போல புறஜாதியாரின் சபைகளும் தேவனுடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே என்பதைக் காட்ட விரும்பினார். அதாவது, ஒரு காலத்தில் யூதர்களுக்கு அவர்கள் எதிரிகளாக இருந்தார்கள், இப்போது தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மீதமான மக்களாக மாறியதால், அவர்களில் ஒருவரானார்கள். யூதர்களும் புறஜாதியாரும் அடங்கிய ஒட்டுமொத்த கிறிஸ்தவக் குடும்பமும், வரும் தலைமுறையினருக்கு சபையின் சாட்சியாக விளங்கும்படி வல்லமையாக ஒன்றிணைந்து செயல்படுவதைக் காண பவுல் விரும்பினார்.

தீத்துவும் நன்மதிப்புப்பெற்ற வேறு இரண்டு சகோதரர்களும் இந்த நிதிப் பொறுப்பைக் கவனித்து வந்தனர். சபைமீதான இந்த அக்கறையை தீத்துவின் இருதயத்தில் தேவன் அருளினார். 2கொரி 8:16. சபைகளின் மூலமாக, தேவன் மற்ற இரண்டு சகோதரர்களையும் தேர்ந்தெடுத்தார். 2கொரி 8:18-23. 'அவர்கள் சபைகளுடைய ஸ்தானாபதிகளும், கிறிஸ்துவுக்கு மகிமையுமாயிருக்கிறார்கள்' என்று சொன்னார். 2கொரி 8:23. 'கிறிஸ்துவுக்கு மகிமை' என்று விசுவாசமுள்ள இந்த இரண்டு சகோதரர்களையோ சபைகளையோ குறிப்பிட்டுச் சொல்லியிருக்கலாம். எதுவானாலும், காணிக்கை கொடுப்பது சபையின் தலையாகிய கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைப்பதின் அடையாளமாகும். எபே 4:15.

காணிக்கையை சபையின்மூலமாக தேவனால் நியமிக்கப்பட்டவர்களிடம் கொடுக்கவேண்டும் என்பதை 2கொரி 8-9 சுட்டிக்காட்டுகின்றன. 'எல்லாச் சபைகளிலும்', 'சபைகளால் தெரிந்து ஏற்படுத்தப்பட்டவன்', 'சபைகளுடைய ஸ்தானாபதிகள்' ஆகிய சொற்றொடர்கள் அதையே உணர்த்துகின்றன. 2கொரி 8:18; 2கொரி 8:19; 2கொரி 8:23. அதனால்தான், 'உங்கள் அன்பை நிரூபித்துக் காட்டுங்கள்' என்று பவுல் கூறுகிறார். 2கொரி 8:24. *சமகால மொழிபெயர்ப்பு.*

பூமியில் தேவன் நியமித்த நிறுவனமாகிய சபைக்கு காணிக்கைகளைக் கொண்டுவருவது ஒற்றுமையை ஊக்குவிக்கிறது; அதே நேரத்தில், அது ஒற்றுமை உணர்வின் விளைவாகவும் இருக்கிறது. 2கொரி 8:13,14. நம்மை ஒன்றிணைக்கும் காரணியாக பணம் இருக்கமுடியும். மறுபுறம், தேவ மகிமையை மட்டுமே நோக்கமாக வைத்திராவிட்டால், பணம் பிரிவினையையும் உருவாக்கலாம்.

**பவுல் ஒற்றுமையை விரும்பியதை ரோமர் 15:26,27 எவ்வாறு வெளிப்படுத்துகிறது?**

இறுதியாக, இந்தப் பணசேகரிப்பை ஒரு சேவை அல்லது ஊழியம் என்றும், கிருபையின் செயல் என்றும், ஓர் ஆசீர்வாதம் என்றும், ஆராதனைச் செயல் என்றும், ஐக்கியம் என்றும் பவுல் சித்திரிக்கிறார். காணிக்கை கொடுப்பதில் இதெல்லாம் அடங்கியிருக்கிறதா? இதைப்பற்றி யோசித்துப் பாருங்கள்.

**தொலைதூர இடங்களிலுள்ள நம் சபைகளுக்கும், வெளிநாட்டு ஊழியங்களுக்கும் நாம் கொடுக்கிற காணிக்கை நமது உலகளாவிய சபையில் ஒற்றுமையை ஏற்படுத்த எவ்வாறு உதவுகிறது?**

# மேலும் படிக்க:

'இருதயத்தில் கிறிஸ்துவின் அன்பு நிறைந்தவர்கள், நமக்காகத் தரித்திரரான அவரது மாதிரியைப் பின்பற்றுவார்கள்; தமது தரித்திரத்தினால் நாம் ஐசுவரியவான்களாகும்படி அவர் தரித்திரரானார். இவர்கள் பணம், நேரம், செல்வாக்கு என தேவனுடைய கரத்திலிருந்து தாங்கள் பெற்ற சகல ஈவுகளையும், சுவிசேஷ ஊழியத்தைப் பரவச்செய்கிற ஒரு கருவியாக மட்டுமே மதிப்பார்கள். ஆரம்பகாலச் சபையில் அப்படித்தான் இருந்தது; இன்றைய சபையிலும், பரிசுத்த ஆவியின் வல்லமையால் விசுவாசிகள் உலகக்காரியங்களின் மீதான தங்கள் பற்றை அகற்றிவிட்டு, தங்கள் சக மனிதர்கள் சுவிசேஷத்தைக் கேட்கும்படி தியாகங்களைச் செய்ய விரும்பும்போது, பிரசங்கிக்கப்படுகிற சத்தியங்கள் அதைக் கேட்கிறவர்களில் வல்லமையான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்'.[1]

'கர்த்தருக்கு நம் காணிக்கைகள் தேவையில்லை. நம் காணிக்கையால் நாம் அவரை ஐசுவரியவானாக்க முடியாது. சங்கீதக்காரன், "எல்லாம் உம்மாலே வருகிறது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுக்கிறோம்" என்று சொல்லுகிறார். ஆனாலும், தேவனுடைய இரக்கங்களைப்பெற்று, நன்றியுணர்வுள்ளவர்களாக, சுய–தியாக முயற்சிகளால் பிறருக்கும் அதை வெளிப்படுத்த அவர் நம்மை அனுமதிக்கிறார். தேவனிடம் நமது நன்றியையும் அன்பையும் வெளிப்படுத்துவதற்கு நமக்கு இருக்கும் ஒரே வழி இதுதான். அவர் வேறு எதையும் ஏற்பாடு செய்யவில்லை'.[2]

மனிதனுக்குத் தேவன் அளித்த ஈவு எவ்வளவு பெரியது, அதை மற்றவர்களுக்குக் கடத்துவது எவ்வளவு அவசியமானது! கலகக்கார மனுபுத்திரரை இரட்சித்து, அவர்கள் தம் நோக்கத்தைக் காணவும், தம் அன்பைப் புரிந்துகொள்ளவும், ஈடுஇணையற்ற தாராள குணத்துடன் அவர் கொடுத்தார். 'அவரில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தந்தருளின' தேவனுக்கு, மேலான எதையும் நாம் கொடுத்துவிட முடியாது என்பதை உங்களுடைய ஈவுகள் மற்றும் காணிக்கைகளின் மூலம் காண்பிப்பீர்களா?'[3]

[1] Ellen G. White, The Acts of the Apostles, p. 71. [2] Ellen G. White, Counsels on Stewardship, pp. 18, 19.
[3] Ellen G. White, The Advent Review and Sabbath Herald, May 15, 1900.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *2கொரி 8:9 ஐ இன்னும் ஆழமாகச் சிந்தியுங்கள். உக்கிராணத்துவத்தில் இயேசுவின் மாதிரி ஏன் அவ்வளவு மிகமுக்கியமானதாக இருக்கிறது?*
2. *பரலோகத்தின் மொழி* '**கொடுத்தல்**' *என்பதை யோவான் 3:16 உணர்த்துகிறது. யோவான் 15:13; எபே 5:2,25; கலா 2:19,20; 1யோவான் 3:16 ஆகிய வேதப் பகுதிகளுக்கும் யோவான் 3:16க்கும் உள்ள பொதுவான அம்சம் என்ன, இதில் நமக்குள்ள செய்தி என்ன?*
3. *கொடுப்பதனால் கிடைக்கிற தனிப்பட்ட நன்மைகள் என்ன? 2கொரி 8–9.*
4. *இயேசுவின் சுய-தியாக மாதிரியைப் பின்பற்றுவதற்கு காணிக்கை கொடுப்பதுபோக, நீங்கள் வேறு என்ன செய்யலாம்?*

# ஆசீர்வதிக்கப்படுவீராக! பகுதி 1

**அட்வென்டிஸ்ட் மிஷன்**

கோபன்ஹேகன் விசுவாசத்திற்கு பெயர்போன இடமல்ல. சொல்லப்போனால், அது ஐரோப்பாவின் மிகவும் மதச்சார்பற்ற நகரங்களில் ஒன்று; அங்கு குடியேறுவது வித்தியாசமான ஓர் ஊழியக்களத்தை எதிர்கொள்வது என்பதை ராபும் பெத்தானியும் அறிந்திருந்தனர்; அங்கே எண்ணிக்கையை வைத்து அல்ல, உறவுகளை வைத்தே வெற்றியை அளவிடமுடியும்.

அவர்கள் 2024 இல் அந்த நகரத்திற்கு வந்தனர்; அங்குள்ள நேர்த்தியான அமைப்புகளும் வசதியான வாழ்க்கை முறைகளும் தேவனுக்கான தேவையையோ இடத்தையோ வலியுறுத்த வாய்ப்பில்லை என்பதுபோல் தோன்றியது. ஆனால், ராபும் பெத்தானியும் தெருமுனைகளில் நின்று பிரசங்கம் செய்வதற்காக அங்கு செல்லவில்லை. நட்பை வளர்ப்பதற்காகவே சென்றார்கள். இந்தத் தம்பதியினர் இறையியல் கல்லூரிக்குச் செல்வதற்கு முன்னதாக ஒரு பாரம்பரிய சபையில் ஊழியஞ்செய்து வந்தனர். அங்கே, தேவன் அவர்களுடைய இருதயங்களில் ஒரு புதிய தூண்டுதலைக் கொடுத்தார்.

“அட்வென்டிஸ்ட் வட்டத்திற்கு வெளியே உள்ள மக்களுடன் பழக தேவன் ஆர்வத்தை உண்டாக்கியதை உணர்ந்தோம், இயேசுவை நாங்கள் அறிமுகப்படுத்தக்கூடிய நண்பர்கள் எங்களுக்குத் தேவைப்பட்டார்கள்” என்று ராப் சொன்னார். பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள குவாமிஷ் என்ற இடத்தில் ஒரு புதிய சபையை நிறுவுவதற்கான முயற்சியை எடுத்தார்கள். அது ஒரு புது முயற்சியாக, அவர்களின் திறமைகளைச் சோதிப்பதாக இருந்தது; அதற்கு முன்பு அவர்கள் செய்த எதிலிருந்தும் முற்றிலும் மாறுபட்டிருந்தது. ஆனால் இந்த அனுபவத்தின் மூலம், முற்றிலும் மாறுபட்ட நம்பிக்கைகளும் உலகக்கண்ணோட்டங்களும் உடைய மக்களுடன் பழகுவதற்குக் கற்றுக்கொண்டார்கள். மற்றவர்களுடன் அர்த்தமுள்ள வழிகளில் இணைந்திருக்கிற அதே வேளையில், தங்கள் விசுவாசத்தைப் பகிரமுடியும் என்பதைக் கண்டுகொண்டார்கள்.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு மாற்று–கலாச்சாரச் சூழலில் சபையை நிறுவுவதற்கான வாய்ப்பு வந்தபோது, தாங்கள் ஆயத்தமாக இருப்பதாக உணர்ந்தார்கள். இப்போது கோபன்ஹேகனில், உறவுகளின் அடிப்படையிலான ஒரு கட்டமைப்பின் மூலம் ஊழியம்செய்ய முயலுகிறார்கள். இந்த நட்பு–மைய அணுகுமுறையை விவரிக்க BLESS என்கிற சுருக்கெழுத்தை ராப் பயன்படுத்தினார்.

B என்பது ‘ஜெபத்துடன் தொடங்குங்கள்’ (Begin with Prayer). “நீங்கள் முதலில் இயேசுவுடனான நட்பைத் தொடங்குவதே ஆரம்பம். பிறகு, மற்றவர்களை நோக்கி உங்களை வழிநடத்துமாறு அவரிடம் கேட்கவேண்டும்” என்றார். L என்பது ‘செவிகொடுங்கள்’ (Listen). “நீங்கள் முதலில் பேசக்கூடாது, கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களின் வாழ்க்கை, தேவைகள் மற்றும் தேவன் ஏற்கனவே கிரியை செய்து வருகிற இடங்கள் ஆகியவற்றை செவிகொடுத்துக் கேட்கவேண்டும்”. E என்பது ‘புசியுங்கள்’ (Eat). “ஒருவருடன் பழகுவதற்கு ஒன்றாக உணவைப் பகிர்வதை விடச் சிறந்த வழி வேறு எதுவும் இல்லை. இது நம்பிக்கையை வளர்க்கிறது”. முதல் S என்பது ’சேவை செய்யுங்கள்’ (Serve). “மக்களுக்குச் சிறிய வழிகளில் சேவை செய்வது புதிய கதவுகளைத் திறக்கிறது. மேலும் இறுதி S ‘பகிருங்கள்’ (Share). “யாராவது ஆயத்தமாக இருக்கும்போதும், தேவன் அதற்கான கதவுகளைத் திறக்கும்போதும், இயேசு நமது வாழ்க்கையில் செய்ததை அவர்களோடு பகிருங்கள்”.

**பாடம் 12** **செப்டம்பர் 12-18**



# கள்ளப்போதகர்களை எதிர்கொள்ளுதல்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 2கொரி 10:1–17; எரே 9:24; 2கொரி 11:1–15,22–28; 12:20,21; 13:5.

**மனன வசனம்:** எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. 2கொரி 10:4.

ஏற்கனவே பல பிரச்சினைகள் இருந்த நிலையில், மற்றொரு பிரச்சினையையும் பவுல் கையாளவேண்டியிருந்தது. சபையிலிருந்த கள்ளப்போதகர்கள் ஒரு பிரச்சினை. இவர்கள் அவருக்கும், அவரது ஊழியத்திற்கும் எதிராக இருந்தார்கள். அதைவிட மோசமாக, இந்தக் கள்ளப்போதகர்கள் கொரிந்து சபையின் விசுவாசிகளையும் வஞ்சித்திருந்தார்கள். அந்தப் பிரச்சினைக்கு எதிரான போராட்டம் ஓர் ஆவிக்குரிய போர் என்று பவுல் குறிப்பிடுகிறார்.

மிகைப்படுத்திப் பேசுகிறாரோ? இல்லவே இல்லை. அவர்கள் தனக்கு அல்ல, கிறிஸ்துவுக்கே எதிராக நின்றதை பவுல் அறிந்திருந்தார். தன் கீழிருப்பவர்கள்மீது தன் அதிகாரத்தையும் வல்லமையையும் நிலைநிறுத்த, தன் நற்பெயரைக் காப்பாற்றுவதில்மட்டுமே குறியாக இருக்கும் சுயநலமிக்க தலைவர் அவர் அல்ல. பிரசங்கிக்கும்படி தான் கட்டளை பெற்றிருந்த செய்தி, வாழ்வா சாவா என்று நித்திய விளைவுகள் அடங்கிய ஒரு முக்கியச் செய்தி என்பதை அறிந்திருந்தார். மேலும், தேவன்தாமே தன்னை அந்தப் பணிக்காக அனுப்பியிருந்ததையும் அறிந்திருந்தார்: ‘தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்ட பவுல்’. 1கொரி 1:1.

கள்ளப்போதனைகளைக் கையாளும்போது, திருச்சபையானது வேதவசனங்களின் அதிகாரத்தின் அடிப்படையில், அன்போடும் அதே சமயம் உறுதியோடும் செயல்படவேண்டும். ஆத்துமாக்களுக்கு நித்திய ஜீவனின் நம்பிக்கையை அளிக்கும் பொருட்டு, சுவிசேஷம் எந்தவொரு கலப்படமும் இன்றி, தூய்மையானதாகப் பாதுகாக்கப்படவேண்டும்.

***2026, செப்டம்பர் 19 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# ஆவிக்குரிய போராட்டம்

**கொரிந்தியர்களிடம் பவுல் சாந்தக்குணத்துடன் நடந்துகொண்டதை பலவீனம் என்று தவறாகப் புரிந்துகொண்டார்கள். கொரிந்து சபையிலிருந்த கள்ளப்போதகர்களை பவுல் தைரியமாகக் கையாண்டதை வெளிப்படுத்துகிற எந்த வார்த்தைகள் 2கொரி 10:1-11 இல் உள்ளன?**

2கொரி 10 ஆம் அதிகாரத்தை மிகவும் தனிப்பட்ட முறையில் பவுல் தொடங்குகிறார்: 'பவுலாகிய நான் கிறிஸ்துவினுடைய சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்'. 2கொரி 10:1. சபைக்குள் கள்ளப்போதனைகள் ஊடுருவியதை பவுல் இலேசாக எடுக்கவில்லை. தன் எதிரிகளின் குற்றச்சாட்டிற்கு கிண்டலாகப் பதிலளிப்பதுபோல 2கொரி 10:1 இல் பவுல் பேசுகிறார்; அதாவது, பவுல் தூரத்திலிருந்து கடிதங்கள் எழுதும்போது பயமுறுத்துபவர் போலவும், நேரில் பழகும்போது ஒரு பரிதாபகரமான கோழைபோலவும் பேசுவதாக அவர்கள் குற்றம்சாட்டியிருந்தனர். 2கொரி 10:10,11. அதற்கு அவர் பலவீனம்போலத் தோன்றுவதை உண்மையில் மிகுந்த சாந்தகுணமாகவும், கிறிஸ்துவைப் போன்ற தயவாகவும் பார்க்கவேண்டும் என்று பதிலளிக்கிறார்.

கள்ளப்போதகர்களை தைரியத்தோடும் துணிச்சலோடும் எதிர்கொள்ள வேண்டும். 2கொரி 10:2. ஆனால் அதை கிறிஸ்துவின் சாந்தக்குணத்துடன் செய்யவேண்டும். 2கொரி 10:1. 'நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்' என்று இயேசு சொன்னார். மத் 11:29. ஆனாலும், ஆலயத்திலிருந்த காசுக்காரர்களுடைய பலகைகளைக் கவிழ்த்து, கள்ளர்கள் என்று சொல்லி, அவர்களை தைரியமாக எதிர்கொண்டார். மத் 21:12,13. அதோடு, பரிசேயர்களை மாயக்காரர்கள் என்றும், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்றும் நேருக்கு நேராகவே சொன்னார். மத் 23:23-27. நாமும் இயேசுவைப்போல ஓர் ஆவிக்குரிய போரில் இருப்பதையும், அதற்கு தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரிக்க வேண்டியதையும் பவுல் அறிந்திருந்தார். எபே 6:12-17.

இது வாழ்வா சாவா பிரச்சினை என்பதால், 2கொரி 10 இல் இராணுவம் சம்பந்தப்பட்ட வார்த்தைகளை பவுல் பயன்படுத்துகிறார். 2கொரி 10:3-6. இது மனிதர்களுக்கு இடையேயான மோதல் அல்ல, மக்களை கிறிஸ்துவிடம் வழிநடத்துவதற்கான ஒரு தெய்வீகப் போர். தேவ வார்த்தையின் அடிப்படையில், ஒவ்வொரு தவறான வாதத்தையும் பெருமையான எண்ணத்தையும் எதிர்கொண்டு, தகர்க்க வேண்டும்; அப்போதுதான், ஒவ்வொரு எண்ணமும் 'கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்படி' சிறைப்படுத்தப்படும். 2கொரி 10:5. கிறிஸ்துவின் அதிகாரத்தோடு இந்த ஆவிக்குரிய போரில் பங்கேற்றாலும், அதன் நோக்கம் பக்திவிருத்தியை உண்டாக்குவதே தவிர, அழிப்பது அல்ல. 2கொரி 10:8. ஆவிக்குரிய தலைவர்கள் தேவ அதிகாரத்தோடு செயல்படுவதாகச் சொல்லுவார்கள். ஆனால், அந்த அதிகாரம் கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்டது; அவரைப்போல சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ள இருதயம் அவசியம். கொரிந்தியர்கள் தவறான நபர்களுக்குச் செவிகொடுத்து, அதன்மூலம் கிறிஸ்துவின்மீதான மெய்ப்பற்றைக் கெடுத்துவிடாமல் இருக்கவே கிறிஸ்து தனக்களித்த அதிகாரத்தை வலியுறுத்துகிறார்.

---

**கள்ளப் போதகர்களைக் கையாளும்போது நாம் எப்படி ஒரே நேரத்தில் சாந்தமாகவும் தைரியமாகவும் இருக்கமுடியும்? ஏன் இரண்டு பண்புகளையும் பெற்றிருக்கவேண்டும்?**

# கர்த்தருக்குள் மேன்மைபாராட்டுதல்

பவுலும் அவரது சக ஊழியர்களும் தங்கள் ஊழியத்தை ஓர் ஆவிக்குரிய போர்போல நடத்தினதையும், தேவனுடைய ஆயுதங்களைப் பயன்படுத்தினதையும் நேற்றுப்பார்த்தோம். கள்ளப்போதகர்கள் மனித அளவுகோல்களின்படி செயல்படுவதை இன்று பார்ப்போம். அவர்கள் தங்களைப்பற்றித் தகாத முறையில் பெருமைபாராட்டுகிறார்கள். பவுலோ கர்த்தருக்குள்மட்டுமே மேன்மை பாராட்டுகிறார். 'மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தருக்குள்ளே மேன்மைபாராட்டக்கடவன்' என்று எழுதுகிறார். 2கொரி 10:17.

**சுவிசேஷம் அறிவிக்கப்படுவதை போட்டி மனப்பான்மை எவ்வாறு பாதிக்கும்? 2கொரி 10:13-17.**

பவுல் தன்னைப்பற்றிப் மேன்மைபாராட்டுகிற வார்த்தைகளைப் பயன்படுத்தினார். ஆனாலும், முற்காலத்தில் ஒருவர் தன்னைப்பற்றிப் மேன்மை பாராட்டுவது பொதுவான ஒரு வழக்கம்; கேட்பவர்களைப் புண்படுத்தாதபடி சமூக ஒழுங்குமுறைகளுடன் பேசுவார்கள். பவுல் அத்தகைய சமூக ஒழுங்குமுறைகளை அறிந்து, பேசினார். அதோடு, கள்ளப்போதகர்களைப்போல தான் மேன்மைபாராட்டவில்லை என்பதையும் தெளிவுபடுத்துகிறார். கர்த்தருக்குள் மட்டுமே மேன்மைபாராட்டுகிறார். 2கொரி 10:17. இது பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு மேற்கோள்: 'மேன்மைபாராட்டுகிறவன்: பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்துகொள்கிற அறிவைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்'. எரே 9:24. எரேமியாவின் இந்தப் பகுதியை மேற்கோள் காட்டுவதன்மூலம், கிறிஸ்துவின் மீதே, அதாவது கிறிஸ்துவின் அன்பு, நியாயம், நீதி ஆகியவற்றின் மீதே கவனம் செலுத்தப்படவேண்டும் என்பதை பவுல் குறிப்பிடுகிறார்.

பவுலின் மேன்மைபாராட்டுதல் கிறிஸ்துவுக்குள் தேவன் நிறைவேற்றினவற்றால் உண்டானது. அது வேதவசனங்களின்படி அமைந்தது; அது யாரையும் புண்படுத்துவதில்லை. மறுபுறம், அவரது எதிரிகளோ தங்களை ஒருவரோடு ஒருவர் ஒப்பிட்டுப்பார்த்து, போட்டி மனப்பான்மைக்குள் தள்ளப்பட்டனர். இது முட்டாள்த்தனமாகும். 2கொரி 10:12.

கொரிந்துவிலும் அதற்கு அப்பாலுள்ள பகுதிகளிலும் சுவிசேஷம் அறிவிப்பதே பவுலுடைய ஊழியத்தின் முதன்மையான நோக்கம். இயேசுவின்மேல் பவுல் வைத்திருந்த அன்புதான் கிறிஸ்துவின் மரணம்-உயிர்த்தெழுதலில் உள்ள இரட்சிப்பின் நற்செய்தியைப்பற்றி அவரை எப்போதும் பேசவைத்தது.

தங்களைத் தாங்களே மெச்சின கொரிந்துவின் கள்ளப்போதகர்களைப் போலல்லாமல், பவுல் தேவனால் மெச்சிக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டிருந்தார். 2கொரி 10:12,18. அவர் 'தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவர்'. 1கொரி 1:1. தன் வாழ்நாளின் இறுதிவரை அந்த அழைப்பிற்கு உண்மையுடன் இருந்தார். 2தீமோ 4:7.

---

**திருச்சபைத் தலைவர்கள் அல்லது விசுவாசிகள் போட்டி மனப்பான்மையை எவ்வாறு தவிர்க்கலாம்? 2கொரி 10:12-18. உண்மையில் முக்கியமில்லாத காரியங்களில் நாம் எளிதாகச் சிக்கிக்கொள்வது ஏன்?**

# கள்ளப்போதகர்களை அடையாளம் காணுதல்

கள்ளப்போதகர்களுக்கு எதிரான பல எச்சரிக்கைகள் புதிய ஏற்பாட்டில் உள்ளன. இயேசுவே சீடர்களுக்கு எச்சரித்துள்ளார். மத் 7:15-20. அப்போஸ்தலர்களும்கூட எச்சரித்துள்ளனர். கலா 1:6-9; 1தீமோ 6:3-5; 2பேது 2:1-3.

**இந்தக் கள்ளப்போதகர்களால் தான் எதிர்கொள்ளுகிற சவால்களை 2கொரி 11:1-15 இல் பவுல் எவ்வாறு விவரிக்கிறார்?**

கள்ளப்போதகர்களின் வேலைகளை பவுல் அம்பலப்படுத்துகிறார். அதே நேரத்தில், தன் ஊழியம் கிறிஸ்துவை மையமாகக் கொண்டது என்பதையும் சுட்டிக்காட்டுகிறார். கொரிந்துவிலுள்ள சபையை ஒரு மணமகளுக்கு ஒப்பிட்டு, அவளைக் கிறிஸ்துவுக்கு ஒப்புவிக்கிற பொறுப்புடைய ஒரு தகப்பனாக தன்னை அடையாளப்படுத்துகிறார். 2கொரி 11:2. சபைமீது அவ்வளவு அன்புவைத்திருந்தார். 2கொரி 11:11. சபையிடமிருந்து நிதியுதவி பெற உரிமை இருந்தபோதிலும், அவர்கள்மீது நிதிச்சுமையைச் சுமத்த விரும்பவில்லை. 2கொரி 11:7-12.

மறுபுறம், 'அந்த மாண்புமிகு அப்போஸ்தலர்கள்' ஏவாளை வஞ்சித்த சர்ப்பம் என்கிறார். 2கொரி 11:3. கள்ளப்போதகர்களைக் கிண்டலாக இவ்வாறு குறிப்பிடுகிறார். வச 5. சமகால மொழிபெயர்ப்பு. ஏதேன் தோட்டத்திலிருந்த சாத்தானைப்போல, கொரிந்துவிலிருந்த கள்ளப்போதகர்களும் வஞ்சகமும் சீர்கேடும் செய்தார்கள். 2கொரி 11:3,4. கிறிஸ்துமீதான மெய்யான பக்தியிலிருந்தும் விசுவாசத்திலிருந்தும் கொரிந்தியர்கள் வழிவிலகிப்போகும்படி அவர்கள் வழிநடத்தக்கூடும் என்பதே பவுலின் முக்கியக் கவலையாக இருந்தது.

இவர்கள் பவுலைப் போலல்லாமல், மாறுபட்ட ஒரு செய்தியை, அதாவது வேறொரு இயேசுவையும், வேறொரு சுவிசேஷத்தையும் பிரசங்கித்தார்கள். 2கொரி 11:4. இயேசுவைப்பற்றிப் பிரசங்கிக்கிற அனைவரும் தேவன் அனுப்பிய கருவிகள் அல்ல என்பதை இது காட்டுகிறது. இயேசுவே பின்வருமாறு கூறியுள்ளார்: 'பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் எல்லாரும் பிரவேசிப்பதில்லை'. மத் 7:21. வேறுபட்ட ஒரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற எவனும் தன்மேல் சாபத்தைக் கொண்டுவருகிறான். கலா 1:6-9. ஆனால், கொரிந்துவிலிருந்த சிலரோ இத்தகைய தவறான போதனைகளைப் பொறுத்துக்கொண்டிருந்தார்கள்.

அந்தக் கள்ள அப்போஸ்தலர்கள் 'கபடுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்கள்'. 2கொரி 11:13. 'சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வான்', அவனுடைய ஊழியக்காரரும் 'நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வார்கள்'. 2கொரி 11:14,15. கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்று சொல்பவர்கள் சாத்தானின் முகவர்களாகச் செயல்படுவது பரிதாபகரமான ஒரு நிலை! இறுதியாக, 'அவர்களுடைய முடிவு அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும்'என்று கூறி பவுல் முடிக்கிறார். 2கொரி 11:15.

---

**திருச்சபைக்குள் நுழைந்த தவறான போதனைகளை அவர் எவ்வளவு தீவிரமாக எதிர்க்கிறார் என்பதைப் பாருங்கள்! இது நமக்கு என்ன பாடத்தைக் கற்றுக்கொடுக்கிறது?**

# சுவிசேஷத்தின்நிமித்தம் பாடுகள்

சாத்தானின் முகவர்களாகச் செயல்பட்ட கள்ளப்போதகர்களை பவுல் அம்பலப்படுத்தினார். 2கொரி 11:1-15. பிறகு, அவர்களது 'பாணியில்' ஒரு மூடன் பேசுவதுபோல சற்றே பெருமையாகப் பேசுகிறார். 2கொரி 11:16-21. கள்ளப் போதகர்களின் பேச்சுகளுக்குச் செவிசாய்ப்பது அறிவீனமானது என்பதை கொரிந்தியர்கள் புரிந்துகொள்ளவேண்டும். கொரிந்தியர்கள் அந்தக் கள்ளப் போதகர்களை உயர்வாகக் கருதினால், அவர்களைவிட அதிக உயர்வாக பவுலைக் கருதவேண்டும். சுவிசேஷத்திற்காக அவர் பட்ட பாடுகள் அவர் கிறிஸ்துவின் உண்மையான ஊழியர் என்பதைக் காட்டுகின்றன. 2கொரி 11:22,23.

**2கொரி 11:22–28 இல் பவுல் வலியுறுத்துகிற கருத்து என்ன?**

அந்தக் கள்ளப்போதகர்களைப்போல பவுலும் யூதப்பின்னணி உடையவர்தாம். 2கொரி 11:22. ஆனாலும் கிறிஸ்துவுக்கு அவர் செய்த ஊழியம் அவர்களைவிடச் சிறந்தது. 2கொரி 11:23. 'அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா?' என்று கேட்கிறார். அதற்கு, 'நான் அவர்களைவிட அதிகமாய் ஊழியஞ்செய்தவன்' என்று பதிலளிக்கிறார். அவர் அதிகமாகப் பிரயாசப்பட்டார்; அவர் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டார்; கொடூரமாக அடிகள் வாங்கினார்.

அவரது பாடுகளின் பட்டியல் தொடர்கின்றன: ஐந்து முறை முப்பத்தொன்பது அடிகள், தடியடிகளும், கல்லெறிதல்களும், கப்பற்சேதங்களும், ஆழ்கடலில் தவித்த ஆபத்துகளும், பயணங்களில் நேர்ந்த ஆபத்துகள், ஆறுகளாலும் கொள்ளைக்காரர்களாலும் சொந்த நாட்டவராலும் பிறவினத்தாராலும் வந்த ஆபத்துகள், நெரிசலான நகரங்களிலும், பாழான வனாந்தரங்களிலும், கடலிலும் வந்த ஆபத்துகள், கள்ளச்சகோதரர்களால் வந்த ஆபத்துகள், கடுமையான உழைப்பு, சோர்வூட்டும் பிரயாசங்கள், தூக்கமில்லா இரவுகள், பசி, தாகம், உணவுப் பற்றாக்குறை, குளிர், நிர்வாணம். இவை அனைத்தும் போதாதென்று, அனைத்துத் திருச்சபைகளைப்பற்றிய ஆழ்ந்த கவலையினால் ஏற்பட்ட மனவேதனை. 2கொரி 11:24-28.

கிறிஸ்துவின் உண்மையான ஊழியர்மட்டுமே சுவிசேஷத்திற்காக இவ்வாறு பாடுபடத் துணிவார். பவுல் தன் பாடுகளைப்பற்றிப் பெருமைப்பட நினைத்திருந்தால், அவர் சொல்வதற்கு நிறைய இருந்தன. ஆனாலும், அவரது மேன்மை அவர் கிறிஸ்துவுக்காகச் செய்தவற்றால் வந்ததல்ல, மாறாக கிறிஸ்து அவருக்காகச் செய்தவற்றால் வந்தது. மனித பலவீனத்தில் தேவனுடைய பலம் இன்னும் தெளிவாக வெளிப்படுவதை பவுல் அறிந்திருந்தார். 2கொரி 12:9,10. பவுல் தன் சாதனைகளைக்குறித்துப் பெருமைப்பாராட்டாதபடி, தேவன் அவரது சரீரத்தில் ஒரு முள்ளைக் கொடுத்து அவரைப் பாதுகாத்தார். 2கொரி 12:7. இது அவரைத் தாழ்மையுடனும், தன் பலவீனத்தை உணர்ந்து, தெய்வீக வல்லமையைச் சார்ந்திருப்பவராகவும் வைத்திருந்தது; மேலும் தேவனுடைய அதிகப்படியான கிருபையையும் இரக்கத்தையும் பெறுகிற நிலையில் அவரை நிறுத்தியது.

---

**நீங்களும் சுவிசேஷத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறீர்களா? இந்த அனுபவத்திலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்? பவுல் தன் பாடுகளைக் கையாண்ட விதம், உங்களுடைய பாடுகளை நீங்கள் கையாள உங்களுக்கு எவ்வாறு உதவக்கூடும்?**

# மனந்திருந்தாதவர்களுக்கு அழைப்பு

2கொரி 12:14-13:10 வசனங்களில், தனது மூன்றாவது வருகையைப்பற்றி பவுல் திருச்சபைக்குத் தெரிவிக்கிறார். 2கொரி 12:14; 13:1. எந்தக் கள்ள அப்போஸ்தலனையும்விட தான் குறைந்தவன் அல்ல என்பதை நிரூபித்திருந்தார்; இப்போது மனந்திருந்தாத விசுவாசிகளை சீர்பொருந்தப்பண்ணும்படி மீண்டும் கொரிந்துவிற்குச் செல்ல விரும்புகிறார். மூன்றாவது முறை அங்கு செல்லவிருந்ததின் முதன்மையான நோக்கங்களில் இதுவும் ஒன்று. திருச்சபையின் பக்தி விருத்திக்காகவே அனைத்தையும் செய்தார். 2கொரி 12:19.

**கொரிந்து திருச்சபையின் ஆவிக்குரிய நிலையை ஆபத்துக்குள்ளாக்கிய பாவங்கள் எவை? 2கொரி 12:20,21.**

2கொரி 12:20,21 வசனங்களிலுள்ள பாவங்களின் பட்டியல், பவுலின் மற்ற நிருபங்களிலுள்ள பட்டியல்களைப் போன்றதுதான். ரோமர் 1:29-31; கலா 5:19-21. 1கொரி 3:3 இல் பட்டியலிட்ட பொறாமை, வாக்குவாதம் ஆகியவற்றை இங்கும் பட்டியலிடுகிறார். தனது மூன்றாவது வருகையின்போதும் சூழ்நிலை பெரிய அளவில் மாறியிருக்காது என்றே அஞ்சுகிறார். அவர், 'நான் வந்து, உங்களை என் மனதின்படியிருக்கிறவர்களாகக் காணாமல் இருப்பேனோ?' என்று கேட்கிறார். அதேபோல், 'நானும் உங்கள் மனதின்படியிருக்கிறவனாகக் காணப்படாமலுமிருப்பேனோ?' என்றும் கேட்கிறார். 2கொரி 12:20. அப்படியிருந்தால், அவர்களிடம் 'கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும்' காண்பிப்பதற்குப் பதிலாக, 'எல்லாக் கீழ்ப்படியாமைக்குந்தக்க நீதியுள்ள தண்டனையைச் செலுத்த' வேண்டியிருக்கும். 2கொரி 10:1; 10:6.

அசுத்தம், வேசித்தனம், காமவிகாரம் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்த சபை உறுப்பினர்கள்இன்னும்மனம்மாறாமல்இருக்கக்கூடும்என்றுகவலைப்பட்டார். 2கொரி 12:21. இதுபோன்ற பாவங்களே திருச்சபையில் பிரிவினைகளை உண்டாக்குகின்றன. அடுத்து, பாவம் செய்தவர்களை நல்வழிப்படுத்துவதில் திருச்சபையின் ஒழுங்கு நடவடிக்கையை வலியுறுத்துகிறார். 2கொரி 13:1-4. பாவம் செய்வதற்கு பலவீனத்தை ஒரு சாக்குப்போக்காகச் சொல்லமுடியாது. வெற்றியான வாழ்க்கை வாழ விரும்புபவர்களுக்குத் தேவையான வல்லமை அருளப்படுகிறது. 2கொரி 13:4. கொரிந்து சபையில் சிலர் பாலியல் பாவங்களில் ஈடுபட்டிருந்தனர்; தேவ வல்லமை அவர்களது வாழ்க்கையில் செயல்படவில்லை என்பதற்கு அது சான்றாகும். அவர்கள் மனந்திருந்தி, கீழ்ப்படிதலுக்கு வழிநடத்துகிற வல்லமையை அனுபவிக்க பவுல் விரும்பினார். வேறு வழியில்லாத பட்சத்தில்தான் அவர்களைத் தண்டிக்க நினைத்திருந்தார். அவர், 'நீங்கள் ஒரு பொல்லாப்பும் செய்யாதபடிக்கு, தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறேன். நீங்கள் நலமானதைச் செய்யும்பொருட்டே விண்ணப்பம்பண்ணுகிறேன். நீங்கள் நற்சீர்பொருந்தும்படிக்கும் விண்ணப்பம்பண்ணுகிறோம்' என்று கூறுகிறார். 2கொரி13:7-9. எவ்வளவு அழகான ஜெபம்! விசுவாசத்தில் நிலைத்திருக்கிறோமா என்று அவர்கள் தங்களைத் தாங்களே சோதித்துப்பார்க்கும்படி சொல்கிறார்.

---

**விசுவாசத்தில் நிலைத்திருப்பது என்றால் என்ன? 2கொரி 13:5. நீங்கள் விசுவாசத்தில் இருக்கிறீர்கள் என்பதை எப்படி அறிந்துகொள்ளலாம்?**

# மேலும் படிக்க:

'கடந்தகாலத் தவறுகளும் பிழைகளும் மீண்டும் நடந்துவிடாதபடி, கர்த்தர் தமது மக்களைப்பாதுகாத்துவருகிறார். தவறான கொள்கைகளையும், பரிசுத்தமற்ற நடத்தைகளையும் ஆதரித்துப் பிரச்சாரம் செய்கிற கள்ளப்போதகர்கள் எப்போதும் பெருகியிருக்கிறார்கள்; அவர்கள் தவறான கோட்பாடுகளை வைத்து, மிகவும் கவர்ச்சிகரமானதும், மறைமுகமானதும், ஏமாற்றக்கூடியதுமான வழிகளில் செயல்பட்டு, சாத்தியமானால், தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்க முயற்சிக்கிறார்கள்'. **EGW, R&H, January 7, 1904.**

'நாம் விசுவாசத்தில் இருக்கிறோமா இல்லையா என்பதைக் கண்டறிய, ஜீவனுள்ள தேவ வார்த்தைகளை உன்னிப்பாக ஆராயவேண்டியதன் அவசியத்தை உணரும்படி, நம் கருத்துக்கள் சோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்பதே கர்த்தருடைய திட்டம். சத்தியத்தை விசுவாசிப்பதாகக் கூறிக்கொள்ளும் பலர், "நான் ஐசுவரியவானாயிருக்கிறேன், எனக்கு ஒரு குறைவுமில்லை" என்று கூறிக்கொண்டு, தங்களின் வசதியான வாழ்க்கையிலேயே நிலைத்துவிட்டார்கள்'. **EGW, Counsels to Writers and Editors, p. 36.**

'சத்தியம் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கும்போது, மனிதர்கள் தவறான கருத்துக்களை வளர்க்கிறார்கள்; தங்கள் கருத்துக்களை சரியென நிரூபிப்பதற்காக தங்களது கோட்பாடுகளின் வெளிச்சத்தில் தேவ வார்த்தையை வாசிக்காமல், தங்களது கோட்பாடுகளைத் தேவ வார்த்தையின் வெளிச்சத்தில் ஆராய்ந்தால், இருளிலும் அந்தகாரத்திலும் நடக்க மாட்டார்கள், தவறான கருத்துகளைத் தழுவமாட்டார்கள். பலர் வேதவசனங்களுக்கு தங்களுடைய சொந்தக்கருத்துகளை கொடுத்து, தேவ வார்த்தையை தவறாக விளக்குவதன் மூலம் மற்றவர்களை வஞ்சிக்கிறார்கள். நாம் தேவ வார்த்தையை ஆராயும்போது, தாழ்மையான இருதயத்தோடு ஆராயவேண்டும். சகல சுயநலத்தையும், விளம்பர ஆசையையும் ஒதுக்கி வைக்கவேண்டும். நீண்டகாலமாக நாம் போற்றி வரும் கருத்துகளை தவறில்லாதவை எனக் கருதக்கூடாது'. **Ellen G. White, Counsels to Writers and Editors, pp. 36, 37.**

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *தேவனுடைய சத்தியத்திற்காக ஆவிக்குரிய 'போர்களை' எதிர்கொள்ள பவுல் கையாளுகிற உத்தி என்ன? அதை நம் ஆவிக்குரிய போர்களில் எவ்வாறு பயன்படுத்தலாம்? 2கொரி 10:1–6.*

2. *முடிவு வருவதற்கு முன்பாக, கள்ளப்போதகர்கள் மக்களை சத்தியத்திலிருந்து திசை திருப்ப முயல்வார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. உங்கள் சபையில் இருக்கக்கூடிய கள்ளப்போதகர்களால் சபை உறுப்பினர்கள் ஈர்க்கப்படாமல் தடுக்க உங்கள் திருச்சபை என்ன செய்யமுடியும்?*

3. *பவுல் தனது நீண்ட பாடுகளின் பட்டியலைப்பற்றிப் மேன்மை பாராட்டுவதை ஏன் அவசியமாகக் கருதினார்? 2கொரி 11:16–33? 'கர்த்தருக்குள் மேன்மை பாராட்டுவது' என்றால் என்ன?*

4. *விசுவாசத்தில் இருக்கிறோமா என்று சபை உறுப்பினர்கள் தங்களைச் சோதித்துப் பார்ப்பது ஏன் முக்கியம்? 2கொரி 13:5. இதனால் என்ன மாற்றம் உண்டாகும்?*

# ஆசிர்வதிக்கப்படுவீர்கள்! பகுதி 2

**செவந்த்-டே அட்வென்டிஸ்ட் மிஷன்**

ராப் மற்றும் பெத்தானி ஆகியோர் டென்மார்க்கின் கோபன்ஹேகனில் சபைகளை ஸ்தாபிக்கிற ஊழியத்தைச் செய்துவந்தார்கள். ஆனால் முன்பு, பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள ஸ்குவாமிஷில் ஒரு சபையை ஸ்தாபித்தபோதுதான், மக்களுடன பழகுவதின் அடிப் படையிலான ஊழியத்தின் கொள்கைகளைக் கற்றுக்கொண்டார்கள்.

அட்வென்டிஸ்ட் குடும்பத்தில் வளர்ந்த ஒருவருடன் அவர்களுக்கு பழக்கம் ஏற்பட்டது, ஆனால் அவர் தன் கடந்தகால அனுபவங்களால், சந்தேகக் கண்ணோட்டத்தோடும், விரக்தி யோடும் காணப்பட்டார். அவருக்கு யாரும் சரியான கிறிஸ்தவ வழிமுறையைப் போதித்திருக்க வில்லை; தீர்க்கதரிசனங்களோடு சதிமிக்க ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார்கள். மேலும் இரட்சிப்பின் சமாதானத்துக்கு பதிலாக பயமும் கவலையும் காணப்பட்டன. அதனால் பெரியவரானதுமே அந்த மார்க்கத்திலிருந்தே விலகினார்.

ஆனால், ராப் மற்றும் பெத்தானியின் வாழ்க்கை முறை அவரது பிடிவாதத்தைத் தகர்க் கத்தொடங்கியது. அவர்கள் அவரோடு சேர்ந்து சாப்பிட்டார்கள், பேசினார்கள், அன்றாடம் அவருடன் பழகினார்கள். அவர் அவர்களைக் கவனித்தார். அவர்கள் சொல்வதைக் கூர்ந்து கேட்டார். “நாங்கள் செய்வதெல்லாம் உண்மை என்பதை அவரால் உணர முடிந்தது, நாங்கள் கடமைக்காக எதையும் செய்யவில்லை. நாங்கள் இயேசுவைப்போல வாழ முயற்சித்தோம். நாங்கள் உண்மையிலேயே அவர்மீது அக்கறை காட்டினோம், அவருடைய நண்பராக இருக்க விரும்பினோம் என்பதை அறிந்துகொண்டார்” என்று ராப் கூறினார்.

ஒரு தனிப்பட்ட நெருக்கடியின்போது, அவர் சபையை நாடிச்செல்லாமல், தான் நம்பிய அந்த குடும்பத்தையே நாடினார். அவர் கேள்விகளைக் கேட்டார். இறுதியில், மீண்டும் விசு வாசப்பாதைக்குத் திரும்பத் தீர்மானித்தார். ஆனால் இந்த முறை, இதற்கு முன்பு தான் அறிந் திராத ஒரு இயேசுவை நம்பினார். இப்போது தீவிரமான ஒரு கிறிஸ்தவராகவும், அர்ப்பணிப் புள்ளவராகவும், முற்றிலும் மாற்றப்பட்டவராகவும் இருக்கிறார். இதற்கெல்லாம் காரணம், அக்கறை, சேவை மற்றும் அன்றாட வாழ்க்கையின் மூலம் சுவிசேஷத்தை வெளிப்படுத்துவது ஆகியவையே காரணம். “ஒருவருடைய ஆவிக்குரிய பயணத்தில் பங்கெடுப்பதைவிட உற் சாகமானது வேறு எதுவுமில்லை. ஜெபத்துடன் ஆரம்பிப்பதும், ஒன்றாகச் சாப்பிடுவதும், சேவைசெய்வதும், சரியான நேரம் வரும்போது பகிர்ந்துகொள்ளுவதும்தான் இந்த ஊழியத் தின் அடிப்படை. இயேசு அப்படித்தான் செய்தார். இன்றுவரை இதயங்கள் மாற்றப்படுவதும் அப்படித்தான்” என்று ராப் சொன்னார்.

இப்போது கோபன்ஹேகனில், ராபும் பெத்தானியும் தங்கள் அக்கம் பக்கத்தினரிடம் பழகுகிறார்கள், உள்ளூர் நிகழ்ச்சிகளின்போது மக்களைச் சந்திக்கிறார்கள். நண்பர்களை வீட்டிற்கு அழைக்கவும், அவர்களோடு சேர்ந்து சாப்பிடவும் அவர்கள் தயங்குவதில்லை. மற்ற வர்கள் சொல்வதைக் கேட்பதும், சேவைசெய்வதும், ஆதரவு கொடுப்பதும், பகிர்ந்துகொள் வதும்தான் அவர்களுடைய முதலீடு. இன்றைய காலகட்டத்தில் மற்றவர்கள்மீது அன்புகாட்ட இதுதான் மிகச்சிறந்த வழி என்பதை தங்களின் கடந்தகால அனுபவத்திலிருந்து அறிந்து வைத்திருக்கிறார்கள். இந்தச் சபை ஸ்தாபன பயணத்தில் உண்மையான நட்பை தேவன் தங்களுக்கு ஆசீர்வாதமாகத் தரவேண்டும் என்று தினமும் ஜெபிக்கிறார்கள்.

## பாடம் 13 செப்டம்பர் 19-25



# கிருபை, அன்பு, ஐக்கியம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 2கொரி 8:9; ரோமர் 16:20; 1யோவான் 4:8–11; 2கொரி 13:11; பிலி 2:1,2; கலா 4:4–6.

**மனன வசனம்:** கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். 2கொரிந்தியர் 13:14.

பவுல் தனது நிருபங்களில் குறிப்பிடுகிற முக்கியமான விஷயங்களை மீண்டும் வலியுறுத்தி 2 கொரிந்தியர் நிருபத்தை முடிக்கிறார். ஐந்து கட்டளைகளுடன் முடிக்கிறார். 2கொரி 13:11. 'சந்தோஷமாயிருங்கள்' என்கிற **முதல் கட்டளை,** அந்த நிருபங்களின் முந்தைய வசனங்களை நினைவூட்டுகிறது. 'நற்சீர் பொருந்துங்கள்' என்கிற **இரண்டாவது கட்டளை,** கிரேக்க மொழியில் **கட்டார்டிஸோ** என்கிற ஒரே வார்த்தையாக உள்ளது; இந்த வார்த்தை இங்கும் 1கொரி 1:10 இலும் வருகிறது. 'ஆறுதலடையுங்கள்' என்கிற **மூன்றாவது கட்டளை** 2கொரி 1:3-7 இன் தொடர்ச்சி. ஒருவரை ஒருவர் தேற்றுங்கள் என்று உள்ளது. பவுல் தனது இரண்டாவது கடிதத்தை தேற்றுதலுடன் தொடங்கி தேற்றுதலுடன் முடிக்கிறார். மற்றவர்களைத் தேற்றுவதற்காகவே நாம் தேவனிடமிருந்து தேற்றுதலைப் பெறுகிறோம். 2கொரி 1:4,6. 'ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள்' ஆகிய **நான்காவது, ஐந்தாவது கட்டளைகள்** ஒற்றுமைக்கான அழைப்பாகும். 2கொரி 13:11. சந் தோஷம், சீர்பொருந்துதல், தேற்றுதல், ஐக்கியம், சமாதானம் ஆகிய சூழல் காணப்படுவதே, 'அன்பும் சமாதானமுமுள்ள தேவனுடைய' பிரசன்னம் காணப்படு வதற்கான நிபந்தனையாகும். 2கொரி 13:11. மனிதர்களின் இருதயத்தில் திரித்துவ தேவன் கிரியைசெய்வதால் இந்த விளைவு உண்டாகிறது. 2கொரி 13:14.

கிருபையும் அன்பும் ஐக்கியமும் திரித்துவ தேவன் நமக்காகச் செய்கிற கிரியையினால் உண்டாகின்றன. கிறிஸ்தவத்திற்குரிய இந்த மூன்று பண்புகளும், தேவனுடைய பிரசன்னம் காணப்படுகிற ஒரு சூழலை உருவாக்குகின்றன.

***2026, செப்டம்பர் 26 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# இயேசுவின் கிருபை

2கொரிந்தியர் நிருபம் இயேசுவின் கிருபையுடன் தொடங்கி, கிருபையுடன் முடிகிறது. 2கொரி 1:2; 2கொரி 13:14. பவுல் இந்த நிருபத்தை அவ்வாறே தொடங்கி, முடிக்கிறார். இயேசுவைப்பற்றி சிந்திப்பதையும் பேசுவதையும் அவரால் நிறுத்தவே முடியவில்லை.

'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே'. 2கொரி 8:9.

இயேசுவின் கிருபை போற்றத்தக்கது, தவிர்க்கமுடியாதது! தாம் தரித்திரராவதற்காக பரலோகத்தில் தமக்கிருந்த நித்திய வாழ்வின் ஐசுவரியத்தை விட்டு இறங்கி வந்தார். முற்கால கலிலேயாவின் தூசி நிறைந்த சாலைகளில் நடந்துதிரிந்தார். 'அவர் மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்'. பிலி 2:8. நாம் 'ஐசுவரியவான்களாகும்' பொருட்டு, அதாவது பரலோகத்தில் அவருடன் இருப்பதற்காக அவ்வாறு செய்தார். பாவம், மரணம் மற்றும் வேதனைகள் நிறைந்த உலகத்தைமட்டுமே அறிந்த நமக்கு அந்தப் பரலோக வாழ்க்கையைப் புரிந்துகொள்வது கடினம்; இயேசு நமக்காக தம் ஜீவனைக் கொடுக்கும்படி பரலோகத்தின் அரசவைகளை விட்டு இங்கு வந்ததன் அர்த்தத்தை நம்மால் கிரகிக்கவே முடிவதில்லை.

**பின்வரும் வேதப்பகுதிகள் வலியுறுத்துகிற முக்கியப் போதனை என்ன? ரோமர் 16:20; கலா 6:18; பிலி 4:23; 1தெச 5:28.**

இயேசுவின் கிருபையைப்பற்றி பவுல் அடிக்கடி குறிப்பிடுகிறார். அதில் சில முத்துக்கள் இதோ: 'இயேசுகிறிஸ்துவினால்... வரும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது.' ரோமர் 5:15. பரிபூரணமான இந்தக் கிருபையைப் பெறுகிறவர்கள், இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்கள்'. ரோமர் 5:17. 2கொரிந்தியர் நிருபத்தைப் போலவே, தனது மற்ற நிருபங்களின் தொடக்கத்திலும் முடிவிலும் இயேசுவின் கிருபையை பவுல் குறிப்பிடுகிறார். ரோமர் 1:7; 16:20; 1கொரி 1:3;16:23; கலா 1:3;6:18; பிலி 1:2; 4:23. கிருபையே அவரது சிந்தனைகளை ஆக்கிரமித்திருந்தது; கொரிந்தியர்களின் மனங்களும் அதனால் நிறைந்திருக்க விரும்பினார்.

இதுவே அனைத்து சபைகளுக்கும் அவரது விருப்பமாக இருந்தது. எபேசியர்களுக்கு இவ்வாறு கூறுகிறார்: 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக'. எபே 6:24. நாம் இயேசுவை அதைவிடக் குறைவான, அதாவது அழியாத அன்பைவிடக் குறைவான அன்போடு நேசிக்கவேண்டும் என்று அவர் விரும்புவாரா? நிச்சயமாக இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, 'மென்மேலும் அதிகதிகமான மக்களிடம் அவரின் கிருபை' சென்றடையவும், தன்னைப் போல அவர்களுக்கும் அது போதுமானதாக இருக்கவும் விரும்புகிறார். 2கொரி 4:15 (சமகால மொழிபெயர்ப்பு). 2கொரி 12:9.

---

**தேவன் உங்களுக்குக் காட்டின கிருபையை இவ்வாறு யோசித்துப் பாருங்கள். உங்கள் வார்த்தைகள், செயல்கள் அடிப்படையில் அவரது கிருபையைப் பெற எவ்வளவுக்கு தகுதியானவர்களாக இருக்கிறீர்கள்? அதற்குப் பதிலாக தேவனுடைய கிருபை உங்களுக்கு அருளுவது என்ன?**

# தேவனுடைய அன்பு

'கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.' 2கொரி 13:14. தனது இரண்டாவது நிருபத்தை இந்த வசனத்துடன் பவுல் முடிக்கிறார். குமாரன், பிதா, பரிசுத்த ஆவி என திரித்துவத்தின் மூன்று நபர்களைக் குறிப்பிடுகிறார். தேவன் எப்படிப்பட்டவர் என்பதையும், அவர் நமக்காக என்ன செய்திருக்கிறார் என்பதையும் இந்த மூவரின் கிரியைகளின் மூலமாகவே நம்மால் நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

**தேவனுடைய அன்பைப்பற்றி பின்வரும் வசனங்கள் என்ன சொல்கின்றன? யோவான் 3:16,17; ரோமர் 8:37-39; 1யோவான் 4:8-11.**

'தேவன் அன்பாகவே இருக்கிறார்'. 1யோவான் 4:8. அன்பு தேவனுடைய மிகமுக்கியமான குணமாகும். தேவன் நம்மை மீட்பதற்காகத் தமது ஒரே பேறான குமாரனைத் கொடுத்திருப்பதன்மூலமே அன்பை அறிந்துகொள்ள முடியும். யோவான் 3:16. இயேசுவை தேவன் ஒரு மீட்பின் பணிக்காக அனுப்பினார். யோவான் 3:17; இது இரட்சிப்பின் திட்டத்தின் ஒரு பகுதி. அப் 3:20,21; 1யோவான் 4:10,14. தம்மை அனுப்பியவர் பிதா என்று நற்செய்தி புத்தகங்களில் இயேசு பலமுறை குறிப்பிட்டுள்ளார். மத் 10:40; மாற்கு 9:37.

'நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்'. ரோமர் 5:8. கணவன் - மனைவிக்கு இடையேயான இனிமையான உறவிலும், பெற்றோர் - பிள்ளைகளுக்கு இடையேயான பாசத்திலும், நண்பர்களின் உண்மையான நட்புகளிலும் தேவனுடைய அன்பை நாம் ஓரளவு காணமுடிகிறது. இயற்கையிலும் நாம் தேவனுடைய அன்பைக் காணமுடியும். இதுகுறித்து எலன் ஒய்ட் இவ்வாறு கூறுகிறார்: 'மலர்கின்ற ஒவ்வொரு மொட்டிலும், துளிர்க்கின்ற ஒவ்வோர் அரும்பிலும், ''தேவன் அன்பாகவே இருக்கிறார்'' என்று எழுதியுள்ளது. நம் தேவன் கனிவானவர்; நம்மேல் ஒரு தந்தைபோல் அக்கறைகாட்டுபவர்; அவர்களுடைய மகிழ்ச்சியே அவர் விருப்பம். இனிய கீதங்களை காற்றில் மிதக்கவிடுகிற இனிய பறவைகளும், நறுமணத்தால் விண்ணை நிரப்புகிற வண்ண மலர்களும் இந்த உண்மையைத் தெரிவிக்கின்றன; காடுகளைத் இலைகளால் பசுமையாக்குகிற மரங்களும் இந்த உண்மையைத்தான் அறிவிக்கின்றன'.

நமக்காக தம் ஜீவனைக் கொடுக்கும்படி இயேசுவை அனுப்புகிற அளவுக்கு தேவன் நம்மை நேசித்திருப்பதால், 'சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கவும்' நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும். 1யோவான் 3:16.

கொரிந்தியர்கள் ஒருமனப்பாட்டுடன் வாழ பவுல் விரும்பினார். அன்பு இல்லாமல் ஒருமனப்பாடு சாத்தியமில்லை. அதனால்தான், 'அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்' என்றும், அன்பு இல்லாவிட்டால் அனைத்தும் வீண் என்றும் அவர்களுக்குப் போதித்தார். 1கொரி 8:1; 13:1-3. எனவே, நாம் எதைச் செய்தாலும் அதை தேவனுடைய அன்பினால் செய்யவேண்டும். 1கொரி 16:14.

---

**இயேசுதாமே முற்றிலுமாக நித்தியமான தேவனாக இல்லாவிட்டால், சுவிசேஷம் எவ்வாறு அர்த்தமற்றதாக இருக்கும்?**

# அன்பின் தேவன்

முற்கால அஞ்ஞான உலகில், மனிதர்களை கடவுள்கள் நேசிக்கிறார்களென் கிற கருத்தே இல்லை. கடவுள்களை கொடூரமானவர்கள், கோபக்காரர்கள் என்று கடவுள்களைச் சாந்தப்படுத்த நினைத்தார்கள். தேவன் அன்பே உருவானவர் என்கிற வேதாகமக் கருத்து, அந்த காலத்தில் ஒரு புதிய விஷயமாக இருந்தது. பவுலின் காலத்தவர்களுக்கு அது ஆச்சரியமாக இருந்திருக்கலாம், ஆனால், நம்முடைய தேவன் 'அன்பும் சமாதானமுமுள்ள தேவன்' என்று அவர் அடை யாளப்படுத்துகிறார். 2கொரி 13:11.

**2கொரி 13:11 சொல்லுகிற செய்தியிலிருந்து நாம் எவ்வாறு நம்பிக்கையைப் பெறமுடியும்? இந்த வசனம் கற்பிப்பதை நீங்கள் எவ்வாறு இன்னும் சிறப்பாக அனுபவபூர்வமாக உணரமுடியும்?**

'அன்பும் சமாதானமுமுள்ள தேவன்' என்பதை இரண்டு வெவ்வேறு வழி களில் புரிந்துகொள்ளலாம். ஒருபுறம், தேவன் அன்பின் ஊற்றாகவும், சமாதா னத்தின் ஊற்றாகவும் இருக்கிறார். மறுபுறம் அவரே அன்பாகவும் சமாதானமாக வும் இருக்கிறார். இந்த இரண்டில் ஒன்றைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்கிற கட்டாயமில்லை. அன்பும் சமாதானமும் தேவனுடைய இயல்பான குணாதிசயங்களாக இருப்பதால், அவர் அன்பும் சமாதானமும் தருகிறார்.

தேவன் 'பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன்', 'நம்பிக்கை யின் தேவன்', 'சமாதானத்தின் தேவன்', 'இரக்கங்களின் பிதா', 'சகல ஆறுதலின் தேவன்' என்று பவுல் குறிப்பிடுகிறார். ரோமர் 15:5; 15:13; 15:33; 16:20; 1கொரி 14:33; பிலி 4:9; 1தெச 5:23; 2கொரி 1:3. தேவனே இந்த எல்லா ஆசீர்வாதங்களுக் கும் ஊற்றாக இருக்கிறார். அவர் தமது மாறாத அன்பின்நிமித்தமே இவை அனைத்தையும் நமக்குத் தருகிறார்.

'சமாதானத்தின் தேவன்' என்கிற சொற்றொடர் வேதாகமத்தில் பொது வாகக் காணப்பட்டாலும், 'அன்பின் தேவன்' என்கிற சொற்றொடர் இங்கு மட் டுமே வருகிறது. 2கொரி 13:11. எனவே, இது நம் ஆழமான சிந்தனைக்குரியதாக உள்ளது.

2கொரி 13:14 இலுள்ள திரித்துவ ஆசீர்வாதத்திற்கு சில வசனங்களுக்குமுன் 'அன்பின் தேவன்' என்று பவுல் குறிப்பிட்டிருப்பது, அவர் தேவனை மூன்று நபர் களாகக் கருதுவதை உணர்த்துகிறது. 'தேவன்' என்கிற வார்த்தையை மூவரில் ஒருவரானவரைச் சுட்டிக்காட்ட அவர் பயன்படுத்திய போதிலும், தனது நிருபங் களின் பிற இடங்களில் இயேசுவையும் ஆவியானவரையும்பற்றி அவரிடம் காணப்பட்ட புரிதல். ஒரே தேவன் என்றால் மூவர் என்று ஆதிகாலத் திருச்சபை யினர் விளங்கியிருந்தது தெளிவாகிறது. பவுல் இவ்வாறு தெளிவாகச் சொல்லி வந்ததை ஒரு நூற்றாண்டுக்கு பிறகுதான் இறையியலாளர்கள் ''திரித்துவம்'' என்று சுருக்கமாகக் குறிப்பிட்டார்கள்'.

நாம் ஒரே தேவனை விசுவாசிக்கிறோம்; அன்பில் நித்தியமாக இணைக்கிற மூன்று நபர்களை அவ்வாறு ஒருமையில் அழைக்கிறோம். இந்தத் திரித்துவ தேவன் நம்மை நேசிக்கிறார்; மேலும், தேவத்துவத்தின் மூன்று நபர்களுக்கு இடையேயுள்ள அன்பைப் பிரதிபலிக்கிற வகையில் நாம் ஒருவரிலொருவர் அன்பு செலுத்தவேண்டும் என்று நமக்கு அழைப்பு விடுக்கிறார்.

# பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியம்

தேவன் நம்மீது வைத்துள்ள அன்பை இயேசுவின் கிருபை வெளிப்படுத்துகிறது; அன்பின் விளைவாகக் கிடைக்கிற ஆவியானவரின் ஐக்கியத்தையும் கொடுக்கிறது. இந்த ஐக்கியத்திற்கும் தேவனுடைய அன்பே ஆதாரம். ஏனெனில், அன்பு இல்லாவிட்டால் அங்கு ஐக்கியம் இருக்காது. பவுல் எழுதுவது போல: 'கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலுண்டாகும் யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான அன்பும் மனஉருக்கமும் உண்டாயிருந்தால், நீங்கள் ஒரே சிந்தையுள்ளவர்களாயிருந்து, ஒரே அன்புள்ளவர்களாயிருந்து, ஒருமனப்பட்டவர்களாயிருந்து, ஒரே காரியத்தை யோசிக்கிறவர்களாய் என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்'. பிலி 2:1,2.

பரிசுத்த ஆவியானவரை வெறும் வல்லமை என்று சிலர் கூறுகிறார்கள், அது உண்மையாக இருக்கமுடியாது. அப்படி இருந்தால், வெறும் 'வல்லமையை' பிதா-குமாரனுடன் சேர்த்து திரித்துவ வாழ்த்துதலில் பவுல் குறிப்பிட்டிருப்பாரா? அதில் எந்த அர்த்தமும் இல்லை. பிதாவும் குமாரனும் தனிநபர் சார்ந்த உறவின் அடிப்படையில் சொல்லப்படுகிறார்கள். 2கொரி 1:3; 11:31. அதேபோல மனிதர்களோடு ஆவியானவருக்குள்ள உறவும் அவர் ஒரு நபர் எனக் காட்டுகிறது. ரோமர் 8:15,16; யோவான் 14:16,17,26; 15:26.

'ஆவியின் ஐக்கியம்' என்ற சொற்றொடரை இரண்டு வழிகளில் புரிந்துகொள்ளலாம். பிலி 2:1. இது ஆவியானவர் நமக்கு ஒருவருக்கொருவர் இடையே அருளுகிற ஐக்கியத்தைக் குறிக்கலாம்; அல்லது ஆவியானவர்தாமே நம்மோடு வைக்கிற ஐக்கியத்தைக் குறிக்கலாம். வேதாகம விரிவுரையாளர்கள் பலர், இந்த இரு அர்த்தங்களும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல என்று வாதிடுகின்றனர். உண்மையில், ஒருவருக்கொருவர் இடையே உண்டாகிற ஐக்கியமானது ஆவியானவரோடு நாம் கொண்டுள்ள ஐக்கியத்தின் விளைவே ஆகும்.

**ஆவியானவரைப்பற்றி கொரிந்தியர்களுக்கு பவுல் என்ன போதித்தார்? 1கொரி 2:10,11; 3:16; 12:11; 2கொரி 3:6,17.**

ஆவியானவரின் கிரியைகளைப்பற்றி பவுல் கூறுவதற்கு நிறைய உள்ளன. கொரிந்தியர் நிருபங்களில் பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய நாற்பதுக்கும் மேற்பட்ட குறிப்புகள் உள்ளன. பரிசுத்த ஆவியானவர் சபையின் பக்தி விருத்திக்கு உதவுகிறார். 1கொரி 14:12. மக்களை ஊழியத்திற்குத் தகுதிப்படுத்துகிறார். 1கொரி 2:4,5. தேவனுடைய ஆழங்களை நமக்கு வெளிப்படுத்துகிறார். 1கொரி 2:10,11. அவற்றை நமக்குப் போதிக்கிறார். 1கொரி 2:13. நமக்குள் வாசம்பண்ணுகிறார். 1கொரி 3:16; 6:19. நாம் நீதிமான்களாக்கப்படுவதற்கு கிறிஸ்துவுடன் இணைந்து கிரியை செய்கிறார். 1கொரி 6:11. சபைக்கு ஆவிக்குரிய வரங்களை அருளுகிறார். 1கொரி 12–14. இரட்சிப்புக்கென்று நம்மை முத்திரிக்கிறார். 2கொரி 1:22. இருதயங்களில் பிரமாணத்தை எழுதுகிறார். 2கொரி 3:3. கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனை அளிக்கிறார். 2கொரி 3:6. பாவத்திலிருந்து விடுதலையைத் தருகிறார். 2கொரி 3:17. நிச்சயமாகவே, பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் நம்மால் வாழமுடியாது.

---

**தேவன் நம்மீது வைத்துள்ள அன்பை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு, பரிசுத்த ஆவியானவரின் தெய்வீகத்தன்மையை அறிந்துகொள்வது ஏன் முக்கியமானது?**

# நம் திரித்துவ தேவன்

2கொரி 13:14 ஐ வாசிக்கும்போது, கிறிஸ்துவே கிருபையின் ஆதாரம், தேவனே அன்பின் ஆதாரம், பரிசுத்த ஆவியானவரே ஐக்கியத்தின் ஆதாரம் என்று ஒருவர் நினைக்கலாம். ஆனால், அது உண்மை அல்ல.

**2கொரி 13:14 இல் கூறப்பட்டுள்ள கிருபை, அன்பு, ஐக்கியம் ஆகிய மூன்றும் திரித்துவத்தின் மூன்று நபர்களுக்கும் பொதுவானவை என்பதை பின்வரும் வசனங்கள் எவ்வாறு காட்டுகின்றன? 1கொரி 1:3,4,9; 10:16; 2கொரி 1:2,12; ரோமர் 8:35; 15:30; கலா 2:20; எபே 3:19.**

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் நம் இரட்சிப்பிற்காக இணைந்து செயல்படுகிறார்கள். கிருபை, அன்பு, ஐக்கியம் ஆகியவை ஒரு நபரிடமிருந்து மட்டுமல்ல, திரியேக தேவதுவத்தின் மூன்று நபர்களிடமிருந்தும் வருகின்றன. ஆனாலும், இரட்சிப்பின் வரலாற்றில் ஒவ்வொருவருக்கும் தனித்துவமான பணிகள் உள்ளன. பவுல் இதை நன்கு அறிந்து, தனது நிருபங்களில் இந்த உபதேசத்தை வலியுறுத்துகிறார். உதாரணமாக, கலா 4:4-6 இல், இரட்சிப்பின் திட்டத்தில் தேவத்துவத்தின் மூன்று நபர்களுடைய அற்புதமான பங்களிப்பை இரத்தினச் சுருக்கமாக பவுல் விவரித்திருக்கிறார். பிதாவாகிய தேவன் இயேசுவை அனுப்பினார். பிதாவே அந்த இரட்சிப்பின் திட்டத்தின் ஆதாரம் என்பதை இது உணர்த்துகிறது. கலா 4:4. குமாரன் ஸ்திரீயினிடத்தில் பிறந்தார். குமாரன் மனிதனாக வந்ததையும், ஆதியில் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறியதையும் இது சுட்டிக்காட்டுகிறது. கலா 4:4; ஆதி 3:15. குமாரன் நம்மை மீட்டெடுத்து, சாத்தான் யாரைப்பற்றி பொய் சொன்னானோ, அந்த பிதாவோடு நமக்கு இருக்கவேண்டிய சரியான உறவுக்குள் நம்மை மீண்டும் வழிநடத்தினார். ஆதி 3:5. பரிசுத்த ஆவியானவர், நாம் தேவனுடைய பிள்ளைகள் என்கிற நம் அடையாளத்தை பரிசுத்த சட்டப்பூர்வமாக உறுதிப்படுத்துகிறார். கலா 4:6.

பவுலின் நிருபங்களில் திரித்துவம்பற்றி இன்னும் பல குறிப்புகள் உள்ளன. இந்த மூவரும் இணைந்து செயல்பட்டு, சபையை ஊழியத்திற்குத் தகுதிப்படுத்துகிறார்கள், 1கொரி 12:4-6; நமக்கு ஆவிக்குரிய பெலனைக் கொடுக்கிறார்கள், எபே 3:14-19; சபை உறுப்பினர்களிடையே ஆழமான ஒற்றுமையை ஏற்படுத்துகிறார்கள்; இந்த ஒற்றுமை தேவத்துவத்திற்குள் இருக்கிற அதே ஐக்கியத்தைப் பிரதிபலிக்கிறது. எபே 4:4-6. தேவன் திரித்துவ நிலையில் இருப்பது மட்டுமல்லாமல், அந்த மூவரும் நம் இரட்சிப்பிற்காக இணைந்து செயல்படுகிறார்களென பவுல் கூறுகிறார். எபே 1:3,13,14. நாம் பிதா, குமாரன், பரிசுத்தாவியின் பரிபூரணத்தால் நிறையப்படவேண்டும் என்று எபேசியர் நிருபத்தில் பவுல் ஆணித்தரமாகக் குறிப்பிடுகிறார். எபே 3:19; 4:13; 5:18.

கொரிந்தியர்களுக்கான தனது நிருபத்தை அதைவிட சிறப்பாக அவர் நிறைவு செய்திருக்கமுடியாது. 2கொரி 13:14. அதாவது, பிரபஞ்சத்தின் மூன்று உன்னத நபர்களான மூவரும் நம்மோடு இப்போதும் இனிவரும் காலங்களிலும் இருப்பார்கள் என்கிற வாக்குத்தத்தமே அது.

---

**சபை உறுப்பினர்களுக்கிடையேயான ஐக்கியம், தேவத்துவத்திற்குள்ளாக இருக்கிற உன்னத உறவை எவ்வாறு பிரதிபலிக்க வேண்டும்?**

# மேலும் படிக்க:

'இயேசு கிறிஸ்துவின் கிருபையினால்மட்டுமே கல்லான இருதயத்தை சதையான இருதயமாக மாற்றமுடியும், அதை தேவனுக்காக உயிர்ப்பிக்கவும் முடியும். ஆத்துமாவை நீதியுள்ளதாக்கவோ, இருதயத்தைப் பரிசுத்தப்படுத்தவோ மனிதர்களுக்கு எந்த வல்லமையும் இல்லை. மகா வைத்தியருடைய வல்லமையின் மூலமாகவே அன்றி, ஒழுக்கக்கேடு என்னும் நோயைக் குணப்படுத்தமுடியாது. கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்த, பரலோகத்தின் உன்னத ஈவாகிய பிதாவின் ஒரேபேறான குமாரனால்மட்டுமே கெட்டுப்போனவர்களை மீட்கமுடியும்'. Ellen G. White, in The Advent Review and Sabbath Herald, January 7, 1904.

'"தேவன் அன்பாகவே இருக்கிறார்". 1 யோவான் 4:16. அவரது சுபாவமும், அவரது பிரமாணமும் அன்பே ஆகும். அது எப்போதுமே அப்படித்தான் இருந்தது; எப்போதும் அப்படித்தான் இருக்கும். "நித்தியவாசியும்... மகத்துவமும் உன்னதமுமானவர்" மாறாதவர், அவரது "நடைகள் நித்திய நடைகள்", அது மாறாதது. அவரிடத்தில் "யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை". ஏசாயா 57:15; ஆபகூக் 3:6; யாக் 1:17. சிருஷ்டிப்பின் வல்லமையின் ஒவ்வொரு வெளிப்பாடும் அளவற்ற அன்பின் வெளிப்பாடே. தேவன் சர்வ மகத்துவர் என்பதே சிருஷ்டிக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளுக்கும் ஆசீர்வாதத்தின் பரி பூரணமாக உள்ளது.... நன்மைக்கும் தீமைக்கும் இடையே மாபெரும் போராட்டம் பரலோகத்தில் முதன்முதலில் தொடங்கிய காலத்திலிருந்து, அந்தக் கலகம் இறுதியாக துடைத்தழிக் கப்படுகிற காலம் வரையிலான வரலாறு, தேவனுடைய மாறாத அன்பின் நிரூபணமாகவும் இருக்கிறது'.[1]

'தேவன் எப்படி ஒரு நபராக இருக்கிறாரோ, அதேபோல பரிசுத்த ஆவியானவரும் ஒரு நபராக இருக்கிறார்.... பரிசுத்த ஆவியானவருக்கு ஒரு ஆளுமை இருக்கிறது; இல்லையென்றால், நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் என்று அவர் நம் ஆவியுடனேகூட சாட்சிகொடுக்கமுடியாது. அவர் ஒரு தெய்வீக நபராகவும் இருக்கவேண்டும்; இல்லையென்றால், தேவனுடைய மனதிலுள்ள ரகசியங்களை அவரால் ஆராய்ந்து அறியமுடியாது'.[2]

[1] Ellen G. White, Counsels to Writers and Editors, p. 36. [2] Ibid, pp. 36, 37.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *'பரலோகத் திரித்துவத்தில் ஜீவனுள்ள மூன்று நபர்கள் உள்ளனர்; ஜீவனுள்ள விசுவாசத்தால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்கள் பிதா, குமாரன், மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகிய இந்த மூன்று மகா வல்லமைகளின் நாமத்தினாலேயே ஞானஸ்நானம் பெறுகிறார்கள்; மேலும், பரலோகத்திற்குக் கீழ்ப்படிகிற பிள்ளைகள் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்க்கையை வாழ்வதற்கு எடுக்கிற முயற்சிகளில் இந்த வல்லமைகள் அவர்களோடு இணைந்து செயல்படும்.'*

2. *'ஆச்சரியக் கிருபை' என்கிற புகழ்பெற்ற கிறிஸ்தவப் பாடல் உள்ளது. இயேசுவின் கிருபையில் அவ்வளவு ஆச்சரியமான விஷயம் என்ன? கெட்ட குமாரனின் உவமையில் தேவனுடைய அன்பு சித்திரிக்கப்படுகிறது. அதில் வரும் தகப்பன் அன்புள்ளவர் என்பதை நாம் எப்படி அறிந்துகொள்ளலாம்? 'ஆவியானவரின் ஐக்கியம்' தங்களுக்குள் இருப்பதை உள்ளூர்ச் சபைகள் எவ்வாறு நிரூபிக்கமுடியும்?*

# மதுக்கடையில் தொடங்கிய ஆலயம்

**ரிக் காஜியுரா**

“மோசமான வரலாறுடைய ஒரு கட்டிடத்தில் நாங்கள் கடவுளை ஆராதிக்கச் செல்வோம் என்று நினைக்க இந்த கிறிஸ்தவர்கள் ஏமாந்தவர்களாக இருக்கவேண்டும்” என்று அந்தக் கிராமமக்கள் ஏளனம் செய்தனர்.

கென்யாவில் உள்ள குளோபல் மிஷன் ஊழிய முன்னோடியான லீனஸ், அசாதாரணமான ஓர் இடத்தை ஆலயமாகத் தேர்வுசெய்திருந்தார். அது முன்பு மதுக்கடையாக இருந்த ஒரு சிறிய அறை. ஒரு குளோபல் மிஷன் ஊழியராக அவரது ஊழியமும் அசாதாரணமானதாகவே இருந்தது. அவர் வேறொரு சபையில் போதகராக இருந்து, செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் போதகராக மாறியவர்.

சுவிசேஷக் கூட்டங்களில் கலந்துகொண்டு, ’தீர்க்கதரிசனக் குரல்’ வேதாகமப் பாடங்களைப் படித்த பிறகு லீனஸ் அட்வென்டிஸ்ட் ஆனார். “அவற்றில் சத்தியம் இருப்பதைக் கண்டுகொண்டேன்” என்று கூறினார். ஞானஸ்நானம் பெற்ற உடனேயே, அந்தச் சத்தியத்தை தனது முன்னாள் உறுப்பினர்களுக்குச் சொல்ல ஆரம்பித்தார்.

360 பேரை தீர்க்கதரிசனக் குரல் பாடத்திட்டத்தில் லீனஸ் சேர்த்தார். ஒவ்வொரு வீடாகச்சென்று, அவர்கள் அனைவரும் அந்தப் படிப்பை முடிக்கும் வரை அவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார். அவர்களில் 15 பேர் ஞானஸ்நானம் பெற முன்வந்தனர்.

ஜெனரல் கான்ஃபரன்ஸ் தலைவர்கள் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள், அந்தப் புதுக்குழுவினரை வழிநடத்துகிற பொறுப்பை லீனஸிடம் வழங்க ஆசைப்பட்டார்கள். ஆனால் மக்களை அணுகுவதில் லீனஸிடம் இருந்த திறனை அறிந்து, அவரை குளோபல் மிஷன் ஊழியராக்கினர். “நாட்டின் உட்பகுதியில் இருப்பவர்களையும் ஆதாயம்பண்ணும்படி என்னிடம் கேட்டுக்கொண்டனர்” என்று லீனஸ் கூறினார்.

லீனஸ் அந்த புதிய நகரத்திற்கு வந்தபோது, அங்கு அட்வென்டிஸ்டுகள் எவரும் இல்லை. வீடுவீடாகச் சென்று அட்வென்டிஸ்ட் விசுவாசத்தைப்பகிர்ந்துகொண்டார். மிகுந்த முயற்சிக்குப் பிறகு, ஒருவர் அந்தச் செய்தியை ஏற்றுக்கொண்டார். “நான் அந்த மனிதரிடம், ‘என் கையைப் பிடியுங்கள், நாம் இருவரும் சேர்ந்து மற்றவர்களைச் சென்றடைவோம்’ என்று கூறினேன்”. லீனஸ் தொடர்ச்சியாக சுவிசேஷக் கூட்டங்களை நடத்தினார், அதில் பல மக்கள் கலந்துகொண்டனர். அவர்கள், “உங்கள் சபை எங்கே இருக்கிறது?” என்று கேட்டபோது, தங்களின் கூட்டங்கள் ஒரு கடையில் நடப்பதாக லீனஸ் அவர்களிடம் கூறவேண்டியிருந்தது.

அந்தக் கடை ஒரு காலத்தில் மதுக்கடையாக இருந்தது என்பதை அறிந்தவர்கள், ‘இல்லை, இல்லை! எங்களால் அங்கே தேவனை வழிபட முடியாது. அது சாத்தியமே இல்லை‘ என்று கூறினர். லீனஸ் சோர்வடைந்தார், ஆனால் விரைவில் தேவனுக்கு ஒரு திட்டம் இருந்ததை உணர்ந்துகொண்டார். ‘நாங்கள் ஒரு மதுக்கடையில் சபையைத் தொடங்க தேவன் விரும்பினார், அப்போதுதான் எங்களை ஆதரிக்கும்படி அவர் தமது வல்லமையையும் மக்களையும் பயன்படுத்த முடியும்‘ என்றார்.

லீனஸ் ஓர் ஆலயம் வேண்டுமென ஜெபித்தார். இறுதியாக, அதற்கான நிலம் கிடைக்கவும், கட்டிடத்தைக் கட்டவும் தேவன் அவருக்கு போதுமான உதவி கிடைக்கச் செய்தார். தற்போது, 10 உறுப்பினர்கள் ஒவ்வொரு வாரமும் ஓய்வுநாளில் அந்தப் புத்தம் புதிய ஆலயத்தில் கூடுகிறார்கள்.

தேவனுடன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இருந்த உறவை பாவம் உடைத்தது. ஆனால் விழுந்துபோன அந்தத் தம்பதியர் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ள அவர் விட்டுவிடவில்லை. முதலில் அவர்களைத் தேடிச்சென்றார். ஆதி 3:9. பின்னர் உலகைப் பாவத்திலிருந்து இரட்சிக்கும் ஒருவரது பிறப்பைப்பற்றி தீர்க்கதரிசனம் உரைத்தார். ஆதி 3:15. ஏதேன் தோட்டத்தில் மனிதன் வீழ்ச்சியடைந்த அந்த இடத்திலேயே, தீர்க்கதரிசனம் இயேசுவை உயர்த்திக் காட்டியது. அவரே தங்களின் ஒரே நம்பிக்கை என பாவிகளுக்கு அவரைக் காட்டியது.

எலன் ஒய்ட் எஸ்டேட் வழங்கும் 'தீர்க்கதரிசன ஈவு' என்கிற தலைப்பிலான இந்த காலாண்டு பாடம், விழுந்துபோன மனிதர்கள் தேவனுடன் முகம்முகமாய் பேசுகிற சிலாக்கியத்தை இழந்த நிலையில், அவர்களுக்குத் தமது சித்தத்தையும் வழியையும் தெரிவிப்பதற்காக தேவன் உருவாக்கிய அற்புதமான ஒரு வழியைப்பற்றி ஆராய்கிறது.

தேவன் எவ்வாறு தீர்க்கதரிசிகளை அழைக்கிறார், அவர்களின் உண்மைத்தன்மையை எவ்வாறு சோதிக்கலாம் என்பதைப் பார்ப்போம். பழைய, புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுக்கு இடையேயுள்ள ஒற்றுமைகள் வேற்றுமைகளைப் பார்ப்போம்.

## பாடம் 1 – சிருஷ்டிகர் பேசுகிறார்

*ஞாயிறு* : **ஏதேனில் பேசிய விதம் (ஆதி 2:15-17)**

*திங்கள்* : **தேவனிடமிருந்து ஒளிந்துகொள்தல் (ஆதி 3:1–8)**

*செவ்வாய்* : **மனிதர்களை தேவன் தேடிவருகிறார் (ஆதி 3:9)**

*புதன்* : **தோட்டத்திலிருந்து வெளியேற்றப்படுதல் (ஆதி 3:14–24)**

*வியாழன்* : **தேவனுடைய தூதுவர்கள் (எபிரெயர் 1:1; ரோமர் 1:19,20)**

### மனன வசனம் - எபிரெயர் 1:1,2

**ஓய்வுநாள் முத்து:** தேவனோடு நாம் முகம்முகமாகப் பேசவேண்டும் என்பதே அவரது திட்டம், ஆனால் பாவம் அதைக் கெடுத்துவிட்டது. நம்முடன் மீண்டும் பேசுவதற்கு, தம் தூதுவர்களை தேவன் தேர்ந்தெடுக்கிறார், அவர்களை தீர்க்கதரிசிகள் என்கிறோம்.

## பாடம் 2 – ஒரு தீர்க்கதரிசியின் அழைப்பு

*ஞாயிறு* : **ஆபிரகாம், உடன்படிக்கையின் பாதுகாவலர் (கலா 3:6–9)**

*திங்கள்* : **எலியாவின் செய்தி (1இராஜா 18:19-39)**

*செவ்வாய்* : **எலியா, சுவிசேஷத் தீர்க்கதரிசி (ஏசா 6:1-8)**

*புதன்* : **தானியேல், உண்மையுள்ள ஞானதிருஷ்டிக்காரர் (தானி 15:13,14)**

*வியாழன்* : **யோவான் ஸ்நானகன், ஒரு ஜனங்களை ஆயத்தப்படுத்துதல்**

### மனன வசனம் - ஏசாயா 6:8

**ஓய்வுநாள் முத்து:** இன்று தீர்க்கதரிசனக் குரல் பெரும்பாலும் நிராகரிக்கப்படுகிறது அல்லது அலட்சியத்திற்கு ஆளாகிறது. தேவனுடைய தீர்க்கதரிசிகள் சொல்கிற செய்திகளுக்குச் செவிகொடுக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

# செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபை 28 மூலஉபதேசங்களின் சுருக்கம்

📖 *www.Adventist.org/beliefs என்கிற முகவரியில் முழு விளக்கத்தைக் காண லாம்.*

**1. பரிசுத்த வேதாகமம்**
தேவனுடைய சித்தத்தைப் பரிசுத்த வேதாகமம் தெள்ளத்தெளிவாக வெளிப் படுத்து கிறது. சங் 119:105; நீதி 30:5,6; ஏசா 8:20; யோவான் 17: 17; 1தெச 2:13; 2 தீமோ 3:16,17; எபி 4:12; 2 பேதுரு 1:20,21.

**2. திரித்துவம்**
தேவன் ஒருவரே. சம நித்தியமான தன்மைகளை உடைய பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவரின் ஒருங்கிணைப்பே தேவன். ஆதி 1:26; உபா 6:4; ஏசா 6:8; மத் 28:19; யோவான் 3:16; 2கொரி 1:21,22; 13:13, 14; எபே 4:4–6; 1பேதுரு 1:2.

**3. பிதா**
அனைத்துச் சிருஷ்டிகளையும் படைத்து, ஆட்சி செய்கின்றவர் நித்திய பிதாவா கிய தேவனே. ஆதி 1:1; உபா 4:35; சங் 110:1,4; யோவான் 3:16; 14:9; 1கொரி 15:28; 1தீமோ 1:17; 1யோவான் 4:8; வெளி 4:11.

**4. குமாரன்**
நித்திய குமாரனாகிய தேவனே இயேசு கிறிஸ்துவாக அவதரித்தார். அவராலே தான் மனித இனத்தின் இரட்சிப்பும் நிறைவேறிவருகிறது. ஏசா 53:4,6; தானி 9:25–27; லூக் 1:35; யோவான் 1:1–3, 14; 5:22; 10:30; 14:1–3, 9, 13; ரோமர் 6:23.

**5. பரிசுத்த ஆவியானவர்**
சிருஷ்டிப்பு, மீட்பு ஆகியவற்றில் பிதா குமாரனோடு நித்திய ஆவியாகிய தேவன் இணைந்து செயல்பட்டார். ஆதி 1:1,2; 2சாமு 23:2; சங் 51:11; ஏசா 61:1; லூக் 1:35; 4:18; யோவான் 14:16–18, 26; 15:26; 16:7–13; அப் 1:8; 5:3; 10:38; ரோமர் 5:5.

**6. சிருஷ்டிப்பு**
தேவன் தமது சிருஷ்டிப்புச் செயலின் மெய்த்தன்மையை வேதாகமத்தில் வெளிப் படுத்தியுள்ளார். ஆதி 1-2; 5; 11; யாத் 20:8–11; சங் 19:1–6; சங் 33:6,9; சங் 104; ஏசா 45:12,18; அப் 17:24; கொலோ 1:16; எபி 1:2; எபி 11:3; வெளி 10:6; 14:7.

**7. மனித இயல்பு**
ஆணும் பெண்ணும் தேவ சாயலில் படைக்கப்பட்டனர். அவர்களுக்கு தாங்களே சிந் தித்துச் செயல்பட சுதந்தரமும் இருந்தது. ஆதி 1:26–28; 2:7,15; 3; சங் 8:4–8; சங் 51:5,10; சங் 58:3; எரே 17:9; அப் 17:24–28; ரோமர் 5:12–17; 2கொரி 5:19, 20.

**8. மாபெரும் போராட்டம்**
கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையே நடக்கும் இந்த மாபெரும் போராட்டத் தில் மனித இனம் முழுவதும் சம்பந்தப்பட்டுள்ளது. ஆதி 3; 6–8; யோபு 1:6–12; ஏசா 14:12–14; எசே 28:12–18; ரோமர் 1:19–32; 3:4; 5:12–21; 8:19–22; 1கொரி 4:9.

**9. கிறிஸ்துவின் வாழ்வும் மரணமும் உயிர்த்தெழுதலும்**
கிறிஸ்து இவ்வுலக வாழ்வில் தேவசித்தத்திற்குப் பரிபூரணமாகக் கீழ்ப்படிந்து, துன்பம் அனுபவித்து, மரித்து, உயிர்த்தெழுந்ததன்மூலமாக, பாவத்திற்கான நிவா ரணத்தை ஏற்படுத்தினார். ஆதி 3:15; சங் 22:1; ஏசா 53; யோவான் 3:16; 14:30.

**10. இரட்சிப்பின் அனுபவம்**

தேவன் நம்மேல் அளவற்ற அன்பும் இரக்கமும் வைத்திருக்கிறார். அதனால், பாவமறியாத கிறிஸ்துவை நமக்காகப் பாவமாக்கினார். ஆதி 3:15; ஏசா 45:22; 53; எரே 31:31–34; எசே 33:11; 36:25–27; ஆபகூக் 2:4; மாற்கு 9:23,24; யோவான் 3:3–8,16.

**11. கிறிஸ்துவில் வளர்ச்சி**

இயேசு தம்முடைய சிலுவை மரணத்தினால், தீயசக்திகளை வென்றார். 1நாளா 29:11; சங் 1:1,2; 23:4; 77:11,12; மத் 20:25–28; 25:31–46; லூக் 10:17–20.

**12. திருச்சபை**

இயேசுகிறிஸ்துவை இரட்சகராகவும் ஆண்டவராகவும் அறிக்கைபண்ணுகின்ற விசுவாசிகள் அடங்கிய ஒரு சமுதாயம்தான் திருச்சபை. ஆதி 12:1–3; யாத் 19:3–7; மத் 16:13–20; 18:18; 28:19,20; அப் 2:38–42; 7:38; 1கொரி 1:2; எபே 1:22,23.

**13. மீதான சபையும், அதன் பணியும்**

தேவனுடைய கற்பனை களைக் கைக்கொண்டு, இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தைக் காத்துக்கொள்ள மீதமான சபை அழைக்கப்பட்டுள்ளது. தானி 7:9–14; ஏசா 1:9; 11:11; எரே 23:3; மீகா 2:12; 2கொரி 5:10; 1பேதுரு 1:16–19; 4:17; யூதா 3,14.

**14. கிறிஸ்துவின் சரீரத்தில் ஒற்றுமை**

கிறிஸ்துவுக்குள் நாம் புது சிருஷ்டிகள்; இனம், கலாச்சாரம், கல்வி, தேசம், 'உயர்ந்தவர்–தாழ்ந்தவர், ஏழை–பணக்காரர், ஆண்– பெண்' என்கிற வித்தியாசம் நம்மைப் பிரிக்காது. சங் 133:1; மத் 28:19,20; யோவான் 17:20–23; அப் 17:26,27; ரோமர் 12:4,5.

**15. ஞானஸ்நானம்**

இயேசு கிறிஸ்துவுடைய மரணத்தின்மேலும் உயிர்த்தெழுதலின்மேலும் உள்ள விசுவாசத்தைத் திருமுழுக்கின் மூலம் நாம் அறிக்கைசெய்கின்றோம். மத் 28:18,19,20; அப் 2:38; 16:30–33; 22:16; ரோமர் 6:1–6; கலா 3:27; கொலோ 2:12,13.

**16. திருவிருந்து**

இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தை வெளிப் படுத்துவதற்கு, அவர் சரீரத்தையும் இரத்தத்தையும் சுட்டிக்காட்டுகிற திருவிருந் தில் நாம் பங்குபெறுகின்றோம். மத் 26:17–30; யோவான் 6:48– 63; 13:1–17; 1கொரி 10:16,17; 11: 23–30; வெளி 3:20.

**17. ஆவிக்குரிய வரங்களும் ஊழியங்களும்**

அன்பின் ஊழியத்தில் ஒவ்வொரு அங்கத்தினரும் பணிபுரிவதற்கென்று தேவன் ஆவிக்குரிய வரங்களை எல்லாக் காலங்களிலும் வழங்கிவருகின்றார். அப்போஸ் 6:1–7; ரோமர் 12:4–8; 1கொரி 12:7–11, 27,28; எபே 4:8,11–16; 1தீமோ 3:1–13.

**18. தீர்க்கதரிசன வரம்**

பரிசுத்த ஆவியின் வரங்களில் ஒன்று தீர்க்கதரிசன வரம் என்று வேதாகமம் சாட்சியிடுகின்றது. எண் 12:6; 2நாளா 20:20; ஆமாஸ் 3:7; யோவேல் 2:28,29; அப் 2:14–21; 2தீமோ 3:16,17; எபி 1:1–3; வெளி 12:17; 19:10; 22:8,9.

**19. தேவனுடைய பிரமாணம்**

தேவபிரமாணத்தின் மேன்மையான நியதிகளைப் பத்துக்கற்பனைகளில் காணலாம். யாத் 20:1–17; உபா 28:1–14; சங் 19:7–14; 40:7,8; மத் 5: 17–20; 22:36–40.

**20. ஓய்வுநாள்**

நம் தயாளமுள்ள சிருஷ்டிகர் இவ்வுலகப் படைப்பின் ஆறு நாட்களுக்குப் பின் ஏழாவது நாளில் ஓய்ந்திருந்தார். ஆதி 2:1–3; யாத் 20:8–11; 31:13–17; லேவி 23:32; உபா 5:12–15; ஏசாயா 56:5,6; 58:13,14; எசேக் 20:12,20; மத் 12:1–12; மாற்கு 1:32.

**21. உக்கிராணத்துவம்**
நேரம், வாய்ப்புகள், திறமைகள், உடைமைகள், ஆசீர்வாதங்கள், வளங்கள் ஆகியவற்றைத் தேவனுக்காக நிர்வகிக்க வேண்டிய உக்கிராணக்காரர்களாக இருக்கின்றோம். ஆதி 1:26–28; 2:15; 1நாளா 29:14; ஆகாய் 1:3–11; மல் 3:8–12; மத் 23:23; ரோமர் 15:26,27; 1கொரி 9:9–14; 2கொரி 8:1–15: 9:7.

**22. கிறிஸ்தவ நடத்தை**
நினைவிலும் உணர்விலும் செயலிலும் பரலோக நியதிகளின்படி நடக்கிற பிள்ளைகளாயிருப்பதற்கு நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். ஆதி 7:2; யாத் 20:15; லேவி 11:1–47; சங் 106:3; ரோமர் 12:1,2; 1கொரி 6:19,20; 10:31; 2கொரி 6:14–7:1; 10:5.

**23. திருமணமும் குடும்பமும்**
ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்குமிடையேயான திருமண வாழ்வு, வாழ்நாள் முழுவதும் நிலவவேண்டிய தோழமையாகும். ஆதி 2:18–25; யாத் 20:12; உபா 6:5–9; நீதி 22:6; மல் 4:5,6; மத் 5:31,32; 19:3–9, 12; மாற்கு 10:11,12; யோவான் 2:1–11; 1கொரி 7:7,10,11; 2கொரி 6:14; எபே 5:21–33; 6:1–4.

**24. பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் கிறிஸ்துவின் ஊழியம்**
சிலுவையில் பாவநிவாரண பலியாக மரித்த இயேசு அதன் பலனை விசுவாசிகளுக்குக் கொடுப்பதற்காக, அங்கே நமக்காகப் பரிந்துபேசிவருகிறார். லேவி 16; எண் 14:34; எசே 4:6; தானி 7:9–27; 8:12,14; 9:24–27; எபி 1:3; 2:16,17; 4:14–16; 8:1–5; 9:11–28; 10:19–22; வெளி 8:3–5; 11:19; 14:6,7; 20:12; 14:12; 22:11,12.

**25. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை**
கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, சபையின் பாக்கியமான நம்பிக்கையாகவும், நற்செய்தி ஊழியத்தின் உச்சக்கட்டமாகவும் இருக்கின்றது. மத் 24; மாற்கு 13; லூக் 21; யோவான் 14:1–3; அப் 1:9–11; 1கொரி 15:2,51–54; 1தெச 4:13–18; 5:1–6; 2தெச 1:7–10; 2:8; 2தீமோ 3:1–5; தீத்து 2:13; எபி 9:28; வெளி 1:7; 14:14– 20; 19:11–21.

**26. மரணமும் உயிர்த்தெழுதலும்**
நம்ஜீவனான கிறிஸ்து வரும்போது, உயிர்த்தெழுந்த நீதிமான்களும் உயிரோடிருக்கும் நீதிமான்களும் மகிமை யடைந்து, பரலோகம் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். யோபு 19:25– 27; சங் 146:3, 4; பிர 9:5,6; தானி 12:2,13; ஏசா 25:8; யோவான் 5:28,29; 11:11–14; ரோமர் 6:23; 16; 1கொரி 15:51–54; கொலோ 3:4; 1தெச 4:13–17; தீமோ 6:15,16; வெளி 20: 1–10.

**27. ஆயிரம் வருட அரசாட்சியும் பாவத்தின் முடிவும்**
முதல் உயிர்த்தெழுதலுக்கும் இரண்டாம் உயிர்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் கிறிஸ்து தம் பரிசுத்தவான்களோடு ஆயிரம் வருடம் பரலோகில் ஆட்சி செய்வார். எரே 4:23–26; எசேக் 28:18,19; மல் 4:1; 1கொரி 6:2,3; வெளி 20; 21:1–5.

**28. புதிய பூமி**
நீதிவாசம்செய்கிற இடமாகப் புதிய பூமி இருக்கும். தம்மால் மீட்கப்பட்டவர்களுக்கு ஒரு நிரந்தரமான வீட்டைத் தேவன் அங்கு வழங்குவார். நித்திய வாழ்விற்கும், அன்புக்கும், மகிழ்ச்சிக்கும், அவருடைய பிரசன்னத்தில் கற்பதற்கும் ஏற்ற ஒரு பூரண சூழ்நிலை அங்கு நிலவும். ஏசா 35; 65:17–25; மத் 5:5; 2பேதுரு 3:13; வெளி 11:15; வெளி 21:1–7; 22: 1–5.

Translated by ***Marshall Isaac and Ezra David;*** Printed by ***Oriental Watchman Publishing House, Pune;***
Published by ***Pr Franklin Solomon, SEIU of SDA, Chennai***